648

# பூஞ்செடிகள்

648
3-60

J16
N60
108938

மு. அருணாசலம்

# பூஞ்செடிகள்

மு. அருணாசலம்

பாரி நிலையம்
59, பிராட்வே · சென்னை 1.

முதற் பதிப்பு: ஏப்ரல், 1960 - சார்வரி வருஷப்பிறப்பு

J16
N60

விலை ரூபா மூன்று

ARCHIVES LIBRARY
108938
MADRAS-600 008

சாது அச்சுக்கூடம்,
மயிலாப்பூர், சென்னை – 4

# பதிப்புரை

நம் தமிழ் மொழியில் புதுப் புதுத் துறைகளில் நூல்கள் பல வெளிவருகின்றன. எனினும் அவற்றில் பல்வேறு குறைகள் காணப்படுகின்றன. புதிய துறைகளில் நூல் எழுதுவோரில் பலர் அத்துறைகளில் பயிற்சி பெற்றவர்கள் அல்லர். இவர்கள் பெரும்பாலும் தாம் படித்தவற்றையும் கேட்டவற்றையும் பயன்படுத்தி எழுதுபவர்கள். இவர்கள் எழுதும் நூல்களில் மக்கள் எதிர்பார்க்கும் பயன் இருப்பதில்லை. ஒரு சிலர் தாம் பயின்ற பயிற்சி கொண்டு எழுதினாலும், அவர்கள் முறையாக எழுதமாட்டாமையால் அவற்றில் தெளிவு இல்லாது போய்விடுகிறது. ஆசிரியர் மு. அருணாசலம் அவர்கள் எழுதும் நூல்களில் இவ்வகைக் குறைகள் காண முடியாது. பல ஆண்டுகாலமாகத் தாம் செய்து செய்து பார்த்துக் குறிப்பு எடுத்து வைத்துத் தாம் பெற்ற அனுபவத்தை ஒரு நூலாக்கித் தருகிறார்கள். அவர்கள் பொருள்களை வகைப்படுத்தி எழுதும் முறையும் நாம் மிக எளிதாகப் பின்பற்றிப் பயன்படுத்தக் கூடிய வண்ணம் அமைந்திருக்கிறது. அதனால் அவர்கள் எழுதும் நூல்கள் அனைவருக்கும் மிகுந்த பயன் உள்ளவைகளாக விளங்குகின்றன.

பூஞ்செடிகள் என்ற இந்நூல் அவர்கள் முன்னர் எழுதிய "காய் கறித் தோட்டம்", "பழத் தோட்டம்" என்ற நூல்களைப்போல் பயிர்த் தொழில் பற்றிய நூல். இதன் உதவிகொண்டு நம் வீடுகளில் சிறு சிறு பூந்தோட்டங்கள் அமைக்கலாம். மண் தரை காணாத பட்டணத்து மாடிகளில்கூட மலர்த் தோட்டம் உண்டாக்கலாம். நம் வீட்டில் அன்றன்று மலர்ந்த மலர் சூடி மகிழலாம். இன்று நம் பள்ளிகளில் பயிர்த்தொழில் ஒரு பாடமாக வைக்கப் பெற்றுள்ளது, அங்கு பயிலும் மாணவர்களும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களும் தமிழ் நாட்டின் தட்ப வெட்பத்திற்

கும் மண்வாசிக்கும் ஏற்ப என்ன பயிரிடுவது என்று அறியாது மயங்குகின்றனர். அவர்களுக்கு இது ஒரு சிறந்த வழிகாட்டியாக விளங்கும்.

இந்நூலைப் படிப்பவர்கள் இது மணம் தரும் மலர்களைப் பற்றிய நூலாக இருப்பதை மட்டும் காணமாட்டார்கள். இந்நூலே இலக்கிய மணம் கமழும் ஓர் இலக்கிய மலராக இருப்பதை உணர்வார்கள். ஆசிரியர் அங்கு அங்கு எடுத்துக் காட்டும் இலக்கியக் குறிப்புகளும் மேற்கோள்களும் நமது முன்னோர் இயற்கையை எத்தனை நுட்பமாக அறிந்து அனுபவித்தார்கள் என்பதையும், நாம் இன்று எத்தனை அறியாமையோடு வாழ்கின்றோம் என்பதையும் காட்டுகின்றன. இந்நூல் நம் அறியாமையைப் போக்கி, செடி கொடிகள் வளர்ப்பதில் நமக்கு ஆர்வத்தை ஊட்டி ஊக்குவிக்கும் என்று நம்புகிறோம்.

ஆசிரியர் மு. அருணசலம் அவர்கள் திருச்சிற்றம்பலத்தில் ஆதாரக் கல்வி நிலையம் ஒன்று நடத்திவருகிறார்கள். தம் முழு நேரத்தையும் இந்நிலையத்தின் கல்விப் பணிக்கே செலவிடுகிறார்கள். அவர்கள் தற்போது எழுதும் நூல்களும் பெரும்பாலும் ஆதாரக் கல்வி பற்றியவையே. அவைகளை அவர்களே வெளியிடுவது வழக்கம். அப்படி இருந்தும் "பூஞ்செடிகள்" என்ற இந்த அருமையான நூலை எங்கள் நிலைய வெளியீடாக வெளியிட இசைந்தார்கள். அவர்கள் மகன் விவசாயப் பட்டம் பெற்ற திரு. சிதம்பரநாதன் அவர்கள் எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி அவர்கள் தோட்டத்தில் பூத்த மலர்களைப் படம் பிடித்து இந்நூலில் பயன்படுத்த உதவினார்கள். அன்புருவான தந்தைக்கும் மகனுக்கும் எங்கள் நன்றியும் வணக்கமும் உரியன.

சென்னை-1 }<br>
2—7—60 }

பாரி நிலையத்தினர்.

# பொருள் அடக்கம்

பக்கம்

குறிஞ்சிப் பாட்டும் புஷ்பவிதியும் ... 6— 8

1. முன்னுரை ... 9—20

மலர்தந்த மையல் - இன்றைய விபரீதநிலை - இந்நூல் - இந்நூலின் நோக்கம் - சில பெயர்கள் - சில பூக்கள் - முடிவுரை.

2. தோட்டவேலை ... 21—31

தட்பவெட்பநிலை - பருவகாலம் - மண் சாரம் - நீர்விடுதல் - உரம் - கருவிகள் - பாத்தி அமைப்பு - தானாக முளைக்கும் செடிகள் - பொதுக்குறிப்பு - நடைமுறை வேலைகள்.

3. மல்லிகை—முல்லை ... 32—41

அடுக்கு மல்லிகை - இருவாட்சி - கஸ்தூரி மல்லிகை - குண்டு மல்லிகை - சாதி மல்லிகை - செம்முல்லை - நித்தியமல்லிகை - பிச்சி - மஞ்சள்மல்லிகை - மன்மதபாணம் - ராமபாணம் - முல்லை - வனமுல்லை.

4. செம்பரத்தை ... 42—51

வகைகள் - ஒற்றை - அடுக்கு இதழ் - சிறுமர வகைகள் - பூச்சிகள் - சுருள் செம்பரத்தை.

5. ரோஜா ... 52—60

மண் சாரம் - பதியன் - பராமரிப்பு - கத்தரிப்பு - நோய்கள் - தொட்டியில் பயிரிடுதல் - வகைகள் - சாமானிய ரோஜா - பட்டு ரோஜா - வெள்ளை ரோஜா - பொத்தான் ரோஜா.

பக்கம்

6. போகன்வில்லா ... 61— 68

பூவின் விசித்திர அமைப்பு - தொட்டியில் பயிரிடுதல் - வகைகள் - சிறிய செடிகள் - குத்து (நடுத்தரச்) செடிகள் - பெரிய படர் கொடிகள் - அபூர்வ வகைகள்.

7. சிறிய செடிகள் ... 69— 86

காசித்தும்பை - வருஷக் காசித்தும்பை - காந்தள் - காலியாப்ஸிஸ் - கானுவாழை - கெய்லார்டியா - செவ்வந்தி - ஜப்பான் செவ்வந்தி - தங்கக்கம்பி - டயாந்தஸ் - பெட்டூனியா - பெண்டாஸ் - மலம்போடியம்.

8. சிறு பூண்டுகள் ... 87—100

அந்தி மல்லிகை - கனகாம்பர வகை - டூரீனியா - நரி வெங்காயம் - நித்திய கல்யாணி - நிலச்சம்பங்கி - பூம்பசலை - மைக்கேல்மஸ் டெய்ஸி - லில்லி - வாடா மல்லிகை - வெர்பீனு

9. பருவகாலப் பூக்கள் ... 101—112

காஸ்மாஸ் - சீமைக் காஸ்மாஸ் - கோழிக் கொண்டை - சால்வியா - சூரியகாந்தி - துலுக்கச் சாமந்தி - பிளாக்ஸ் - பூவெண்டை - ஜினியா.

10. குத்துச் செடிகள் ... 113—139

சீமை அகத்தி - அலரி - இரவுராணி - பகல் ராணி - உண்ணிப்பூ - எலிப் பச்சிலை - கார்டேனியா - கொக்குமந்தாரை - கொடிப்பட்டி - சீமைக்கொஞ்சி - செண்டுமல்லிகை - சுகந்தி - டர்னேரா - டுராண்டா - தங்கப் பட்டி -

பக்கம்

சொர்ணப்பட்டி - தாழை-நந்தியாவர்த்தம் - சிவப்பு நந்தியாவர்த்தம் - பட்டி - பூமருது - பூமாதுளை-மயில் கொன்றை-மருதோன்றி - மனோரஞ்சிதம் - வனஜாம்பரம் - வெட்சி.

11. கொடிவகைகள் ... 140—150

ஆண்டிகோனு - காக்கணங்கொடி - கொடிப் பாதிரி - சம்பங்கி - சமுத்திர சோகம் - சிறுநெல்லிக் கொடி - பூவள்ளி - மயிர் மாணிக்கம் - மாதவி - மாலதி - ரங்கூன் மல்லிகை - வாத்துக் கொடி.

12. பூக்கும் மரங்கள் ... 151—160

கப்பல் அலரி - கனகா - சண்பகம் - சரக் கொன்றை - திருவாத்தி - பவழமல்லிகை - பன்னீர் - பூமருது - பொன்னலரி - மந்தாரை - மரமல்லிகை.

13. பிற செடிகள் ... 161—168

மருவம் தவனம் - மாசிப் பச்சை - துளசி - திருநீற்றுப் பச்சை - நன்னாரி - விளா மிச்சை - வெட்டிவேர் - நீர்வாழ் பூக்கள்.

14. தொட்டியில் பயிரிடுதல் ... 169—177

தொட்டியின் அனுகூலம்-அமைப்பு-விதைத் தொட்டி - பிற தொட்டிகள் - தொங்கு தொட்டிகள்.

15. பிற குறிப்புக்கள் ... 178—189

கத்தரிப்பு - தலை கிள்ளல் - நோயும் புழு பூச்சிகளும் - பூக் காட்சி - மேஜை அலங் காரப் பூக்கள் - சிறு தோட்டங்களுக்கு ஏற்றவை - பிற குறிப்புக்கள்.

பொருள் அகராதி ... 190—196

# குறிஞ்சிப் பாட்டு

சங்க நூலாகிய பத்துப் பாட்டில் எட்டாவது, கபிலர் பாடிய குறிஞ்சிப் பாட்டு. அதனுள், ஒரு பெண் தான் தினைப்புனம் காத்து, சுனையில் நீராடி, பாடல் பாடி, தாழ்ந்த தொங்கும் கூந்தலைப் பிழிந்து உலர்த்தி, உட் சிவந்த கண்ணையுடையவளாய், பூக்களிடத்து வேட்கை மிக்கவளாய், மலைச்சாரலிடத்தே பலகாலுந் திரிந்து பறித்து வந்து பாறையிலே குவித்த பூக்கள் என்னென்ன என் பதை முறையாகச் சொல்லுகிறாள் (வரி 61 - 96):

வள் இதழ்
ஒண்செங் காந்தள், ஆம்பல், அனிச்சம்,
தண்கயக் குவளை, குறிஞ்சி, வெட்சி,
செங்கொடு வேரி, தேமா, மணிச்சிகை,
உரிது நாறு அவிழ் தொத்து உந்தூழ், கூவிளம்,
எரிபுரை எறுழம், சுள்ளி, கூவிரம்,
வடவனம், வாகை, வான்பூங் குடசம்,
எருவை, செருவிளை, மணிப்பூங் கருவிளை,
பயினி, வானி, பல்இணர்க் குரவம்,
பசும்பிடி, வகுளம், பல்இணர்க் காயா,
விரிமலர் ஆவிரை, வேரல், சூரல்,
குரீஇப் பூளை, குறுநறுங் கண்ணி,
குருகிலை, மருதம், விரிபூங் கோங்கம்,
போங்கம், திலகம், தேங்கமழ் பாதிரி,
செருந்தி, அதிரல், பெருந்தண் சண்பகம்,
கரந்தை, குளவி, கடிகமழ் கலிமா,
தில்லை, பாலை, கல்இவர் முல்லை,
குல்லை, பிடவம், சிறுமா ரோடம்,
வாழை, வள்ளி, நீள்நறு நெய்தல்,
தாழை, தளவம், முள்தாள் தாமரை,
ஞாழல், மௌவல், நறுந்தண் கொகுடி,
சேடல், செம்மல், சிறுசெங் குரலி,

கோடல், கைதை, கொங்குமுதிர் நறுவழை,
காஞ்சி, மணிக்குலைக் கட்கமழ் நெய்தல்,
பாங்கர், மராஅம், பல்பூந் தணக்கம்,
ஈங்கை, இலவம், தூங்குஇணர்க் கொன்றை,
அடும்பு, அமர்ஆத்தி, நெடுங்கொடி அவரை,
பகன்றை, பலாசம், பல்பூம் பிண்டி,
வஞ்சி, பித்திகம், சிந்து வாரம்,
தும்பை, துழாஅய், சுடர்ப்பூந் தோன்றி,
நந்தி, நறவம், நறும் புன்னாகம்,
பாரம், பீரம், பைங்குருக் கத்தி,
ஆரம், காழ்வை, கடி இரும் புன்னை,
நரந்தம், நாகம், நள்ளிருள் நாறி,
மா இருங் குருந்தும், வேங்கையும், பிறவும்,
அரக்கு விரித்தன்ன பருஏர்அம் புழகுடன்,—

இங்குக் கூறப்பெற்றுள்ள பூக்களின் தொகை 99.

## புஷ்பவிதி

16ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த கமலை ஞானப்பிரகாசர் என்ற சைவப் பெரியார் பாடிய சிறு நூல். பூக்களை மரம், கொடி, நீர், செடி என நான்கு வகைப்படுத்தித் தொகுத்துக் கூறுகிறுர்.

## கோட்டுப்பூ வகை (மரம்)

வன்னிபலா எலுமிச்சை நாரத்தை கோங்கு
மந்தாரை ஊமத்தை மாவிலிங்கை நொச்சி
பன்னியகில் சந்துமகிழ் மாதுளைமா அசோகு
பாதிரிவெள் ளெருக்கு இலந்தை பலாசுநுணு நறவம்
புன்னைவிளா மருதுகொன்றை நெல்லிகுராச் செருந்தி
பொன்னின்ஆவிரைகிளுவை குருந்துவில்வம் நாவல்
மன்னுதாதகி குளஞ்சி அலரிவெட்சி பவள
மல்லிகை சண்பகம் ஞாழல் கோட்டுப்பூ வகையே.

## கொடிப்பூ வகை

மருவாருங் காந்தள் காட்டு மல்லிகை முல்லை மௌவல்
கருவார் வெற்றிலையே தாளி கருமுகை கருங்காக்கொன்றை
முருகாரும் வெண்காக்கொன்றை குருக்கத்தி முதலாவுள்ள
இருவாட்சி கொகுடி பிச்சி இவையெலாம் கொடிப்பூ ஆமே.

## நீர்ப்பூ வகை

செய்ய தாமரை சேர்ந்தபொற் றாமரை
துய்ய தாமரை சொல்லிரண் டுற்பலம்
ஐய செம்மைய வெண்மைய ஆகிய
நெய்தல் மற்றிவை நீரின் மலர்களே.

## நிலப்பூ வகை (செடி)

பட்டிநா யுருவி பூளை பச்சைசெவ் வந்தி தும்பை
வெட்டிவேர் மருக்கொழுந்து கரந்தையே விஷ்ணுகாந்தி
மட்டவிழ் துழாய் செங்கீரை மத்தைசெம் பரத்தை வங்கம்
இட்ட கொக்கிறகு அனிச்சம் வலம்புரி இவை நிலப்பூ.

இங்குக் கூறப்பெற்றுள்ள பூக்களின் தொகை 78.

# பூஞ்செடிகள்

## முன்னுரை

" பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி "—தாயுமானவர்

### மலர் தந்த மையல்

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது தமிழில் வழங்கும் பழஞ்சொல். கோயில் தோறும் பூவுக்காக நந்தவனம் வைத்திருக்கிறோம். ஒவ்வொரு தலத்திலும் தல விருட்சம் என்று ஒரு மரமோ செடியோ ஏற்படுத்தி அதை வணங்கிவருகிறோம். அற்பமான தர்ப்பைப் புல்லிலிருந்து மிகப் பெரிய மரமாகிய மருத மரம் வரையில், யாவும் தல 'விருட்சம்'; யாவும் வணங்கத் தக்கவை. இறைவனுக்குப் பூவேனும் பச்சிலேயேனும் இட்டு வணங்குவது தமிழருடைய புராதனமான வழிபாட்டு முறை. 'நொச்சியாயினும் காந்தையாயினும், பச்சிலேயிட்டு வழிபடும் தொண்டர், கருவிடைப் புகாமற் காத்தருள் செய்யும், திருவிடை மருத!' என்பர் பட்டினத்து அடிகள். சிவபெருமானுக்கு உவந்த மாலே தாளி அறுகு என்று திருவாசகம் கூறும். யாரும் வெறுக்கும் எருக்கு விநாயகப் பெருமானுக்கு உவப்பானது. வழிபாட்டுக்கான பூக்களேப் பயிரிடுவதற்குக் கோயில்தோறும் நந்தவனங்கள் அமைத்தோம். நந்தவனங்கள் பயிரிடவும் பராமரிக்கவும், பண்டைச் சோழ மன்னர்களும் அரசியரும், ஏராளமான நிலமும் பொருளுமான மானியங்கள் பல அளித்திருக்கிறார்கள். நந்தவனங்களில் என்ன பூக்கள்

பயிரிடவேண்டும், அவை எப்படி யெப்படி வழிபாட்டுக்கு உதவும் என்பதைத் தனி விதியாகக் கூறுவது **புஷ்ப விதி** என்ற நூல். 55 செய்யுட்கள் கொண்ட இச் சிறுநூல், பூக்களைக் கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ (புதர்ப்பூ) என்று வகைப்படுத்திக் கூறுகிறது. அறிவு வளர்ச்சி மிகுந்துள்ள இந்தக் காலத்திலும் அந்த அளவுக்கு அதுவே சிறந்த பாகுபாடாக இருக்கிறது.

பழந் தமிழ் மக்களுடைய ஐந்திணை ஒழுக்கத்துக்கு ஐந்து மலர்களை அடையாளமாக வைத்தோம். இவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன. போர்ச் செயல்களின் அங்கங்களுக்கு அடையாளமாக வெட்சி முதல் வாகைவரை ஏழு மலர்களைக் குறிப்பிட்டோம்! வெட்சி, கரந்தை, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை என. தெய்வங்களுக்கு மலர்களாக செந்தாமரையையும் வெண்தாமரையையும், ஆத்தி தும்பை கொன்றையையும், அறுகு எருக்கையும், கடம்பு துளவத்தையும் அமைத்தோம். மன்மதன் கையிலே ஐந்து மலர்ப் பாணங்களை அளித்தோம்—தாமரை, மா, அசோகு, முல்லை, நீலம் என்பன. பெண்களுடைய தொடர்பால் மலராத பூக்கள் மலரும் என்பது ஓர் இலக்கிய சம்பிரதாயம். பெண்கள் சுவைத்தால் மகிழ் மலரும்; நட்புச் செய்தால் ஏழிலைம்பாலை மலரும்; நிந்தித்தால் பாதிரி மலரும்; நகைத்தால் முல்லை, ஆடினால் புன்னை, அணைத்தால் குரவம், உதைத்தால் அசோகு, பாடினால் குருக்கத்தி, பார்த்தால் மரவம், நிழல்பட்டால் சண்பகம்—தளிர்த்துப் பூக்கும் என்று சொல்வார்கள். நம் பண்டை அரசர்கள் ஆத்தியும் வேம்பும் பனையும் தொண்டையும் அடையாள மாலைகளாகக் கொண்டார்கள்.

பூவையும், பூக்களால் தொடுத்த மாலையையும் குறிப்பிடத் தமிழில், பேச்சிலும் இலக்கியத்திலும், வழங்குகின்ற சொற்களுக்கு எண்ணிக்கையில்லை. பூ என்றால் காலையில்

அரும்பு, பகலில் போது, மாலையில் மலர் என்று திருக்குறள் கூறும். அரும்பு என்றாலே அதன் பல பேதங்களைக் குறிப்பிட மொக்கு, முகை, அரும்பு எனப் பல சொற்கள் உள்ளன. பூவைக் குறிப்பிட பூ, புஷ்பம், போது, மலர், அலர் என்பனபோன்ற பல சொற்களுள்ளன. ஒவ்வொன்றின் பொருளும் வேறு. மாலையைக் குறிப்பிட இன்னும் பல சொற்கள் : அணியல், அலங்கல், ஆரம், ஒலியல், கண்ணி, கோதை, சரம், தாமம், தார், தெரியல், தொங்கல், படலை, மாலிகை, வாசிகை முதலியன. கழுத்திலணியும் மாலைக்குத் தார் என்பது பெயர். நெற்றியிலணியும் மாலைக்கு இலம்பகம், சூட்டு என்ற பெயர்கள் ; முடிமாலையின் பெயர் கரோடிகை; தலையில் அணியும் மாலையின் பெயர் தொடையல் ; பின்னிய மாலை பிணையல் ; கோத்த மாலை கோவை.

'குமரவேளின் குன்றின்மிசை, தெற்றின மாலைகள் போல மலர் நிறைந்தும், கோத்த மாலைகள்போல நிறம் மாறுபட்டும், தொடுத்த மாலைகள்போல இடையிட்டும், தூக்கிக் கட்டின மாலைகள்போல நெருங்கியும் பூக்கள் மலர்ந்து பொலியும்' என்று பூக்கள் பூத்திருந்த அழகை ஒரு புலவர் மிகவும் அனுபவித்து ஒரு பரிபாடல் பாட்டில் பாடுகிறார்.

## இன்றைய விபரீத நிலை

இவ்வாறு நம் முன்னோருக்கு மலர்களிடத்து எல்லையற்ற ஈடுபாடு இருந்தபோதிலும்கூட, இன்று நம்முடைய வாழ்க்கையில் பூஞ்செடிகளைப் பற்றிய நினைவே இல்லாமல் போய்விட்டது. வேண்டுமானால் கடையில் கொஞ்சம் வாங்கிக்கொண்டால் போகிறது என்ற எண்ணம் மலிந்து, தாங்களே செடி வளர்த்து மலர் எடுக்கும் பழக்கத்தையும், அதனால் வரும் சிறந்த இன்பத்தையும், நம்மவர்கள் கைவிட்டார்கள். மில்லரிசி தோன்றிக்கையால் குத்தின சத்துள்ள

அரிசியைப் போக்கிவிட்டது போலவும், மில் துணி தோன்றிக் கையால் நூற்று நெய்து உடுத்தின துணியைப் போக்கிவிட்டது போலவும், போலியான வனஸ்பதி நெய் என்ற தீமை விளைந்து நல்ல நெய்யைப் போக்கிவருவது போலவும், கனகாம்பரம்போன்ற காட்டுமிராண்டிப் பூக்கள் தோன்றி மல்லிகை முல்லையைப் போக்கி வருகின்றன. காகிதப்பூவைத் தலையிலணியும் பிராணி நிலையிலுள்ளவர்களைப்பற்றி நாம் இங்கு பேசவேண்டாம்.

முல்லை நறுமலரோ !
முருகவிழ்க்கும் தாமரையோ !
மல்லிகைப் பூவோ !
மருக்கொழுந்தோ ! சண்பகமோ !

என்று நம் தாய்மார் இன்று தாலாட்டுப் பாடலாம். ஆனால் முல்லையைப் பார்த்தவர்கள் எத்தனை பேர்? இன்று உண்மையான முல்லையைக் கண்ணால் கண்டவர்கள் தமிழ் நாட்டில் பதினாயிரத்தில் ஒருவர்கூட இருக்க மாட்டார்கள். இந்திய நாட்டின் சின்னமான தாமரை—நாமகளையும் திருமகளையும் தாங்கிநிற்கிற இரண்டு தாமரையும்—இன்று அஸ்தமித்து வருகின்றது. குவளை என்றால் அல்லிதானே என்று கேட்கிறார்கள்.

குறிஞ்சிப் பாட்டைப்பற்றி நம் புலவர் பெருமக்கள் குவியல் குவியலாக ஆராய்ச்சிகளைக் குவிப்பார்கள். மேடையிலே முழங்குவார்கள். ஆனால் இன்று, கபிலர் சொன்ன பாடலிற் குறிப்பிட்ட மலர்கள் யாவை என்று கண்டோர் இலர். காண ஆவல் கொண்டவர்?

என்னுடைய தலைமுறையில் பெரும் விபரீதமான மாறுதல்களைக் கண்டு வருகிறேன். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னே எங்குப் பார்த்தாலும் அழகான பல பூந்தோட்டங்கள் இருந்தன. எண்ணற்ற பூஞ்செடிகள், அலங்காரச் செடிகள், புல்வெளிகள் முதலியன மலிந்திருந்

தன. அந்தத் தலைமுறையின் மக்கள் பொழுதுபோக்குக்காகவும் தாம் பெற்ற இன்பத்துக்காகவும் இவற்றையெல்லாம் வளர்த்துப் பராமரித்தார்கள்: பணத்துக்காக அன்று.

கால நதியின் போக்கு வேறு திசையில் திரும்பியிருக்கிறது. கண்ணுக்கு விருந்தாய், கற்பனைக்கும் எட்டாத நிற பேதங்கள் கொண்ட செடி கொடிகள் வளர்ந்த இடங்களில் தார்ச்சாலைகளும், புறாக்கூடுபோன்ற காங்கிரீட் கட்டிடங்களும் எழும்பிவிட்டன. செடி கொடிகளைப் பற்றிப் பேசுபவர் இல்லை. இந்தத் தலைமுறையில் தோட்டம் பற்றிய ஊக்கமோ, அறிவோ, ஆராய்ச்சியோ, அதில் மகிழ்ச்சியோ, உடையவரைக் காண்பது அரிது. இது நாகரிகம் கீழ்நோக்கிச் செல்லும் நிலை. இந்த நிலை மாறாவிட்டால் நாட்டின் பொது வாழ்க்கை பாழ்; அது மிருக வாழ்க்கையே. மலர்களையே வாழ்க்கையின் அடையாளங்களாகக் கொண்ட பழந் தமிழரின் சந்ததியினர் நாம் என்று கூறிக்கொள்ளும் தகுதி நமக்கு இல்லை.

நம் மக்கள் தோட்டவேலை செய்து அதில் இன்பம் காணத் தெரியவேண்டும். வசதியுடையவர் மட்டுமே தோட்டம் போடுவது என்று முன்பு இருந்த நிலை மாறிவிட்டது. வசதியுடையவர் பெரிய தோட்டங்களும், புல்வெளிகளும், அலங்காரங்களும் அமைக்கலாம். வசதியில்லாதவர் அதே இன்பத்தை நாலு பூஞ்செடி வளர்ப்பதில் அடைய முடியும்.

## இந்நூல்

அந்த இன்பம் காண்பதற்கான சில வழி வகைகளைச் சுட்டிக்காட்டுவது மட்டுமே இச்சிறு நூலின் நோக்கம். நடுத்தரமான எந்தத் தோட்டத்திலும் சாதாரணப் பகுத்தறிவோடு யாரும் பயிரிடக்கூடிய முக்கியமான சில செடிகளை மட்டுமே இங்கு சொல்லியிருக்கிறேன். பூந்தோட்டம் பற்றிய எல்லாச் செய்திகளும் இங்கு சொல்லப் பெறவில்லை. உதாரணமாக, தோட்டம்போடுவோர் அறிய

வேண்டிய எண்ணற்ற வேலை முறைகள் உள்ளன ; இவை செடிகளின் வாழ்க்கை, தோட்டம் அமைத்தல், இனப் பெருக்க முறைகள், விதை எடுத்தல், விதைத்தல், நீர் பாய்ச்சுதல், எருவிடுதல், களையெடுத்தல், நோய் புழு பூச்சி நீக்குதல் முதலியன. இவை பற்றிய விரிவான குறிப்புக்கள் இந்த நூலில் தரப்படவில்லை. முன்னமே வெளியான காய்கறித் தோட்டம், பழத்தோட்டம் என்ற என் புத்தகங் களில் இவ்வேலைமுறைகளை விரிவாய்க் கண்டுகொள்ளலாம்.

பூந்தோட்டம் பற்றிய அனேகச் செய்திகள் இங்கு சொல்லப்பெறவில்லை. பல பூ மர வகைகள், சில செடி கொடி வகைகள் இங்கு சொல்லவில்லை. விரிவஞ்சி ஓரள வோடுதான் நிறுத்திக்கொள்ளவேண்டியிருக்கிறது. நீர்வாழ் செடிகளான தாமரை, செங்கழுநீர், நீலோற்பலம், அல்லி வகைகள்—எதையும் இங்குச் சொல்லவில்லை ; சிறுகுளம் அமைப்பது எல்லோருக்கும் இயல்வது அல்ல ; ஆதலால்.

எல்லோரும் விரும்பும் மருக்கொழுந்து ஒரு பூஞ்செடி வகை அல்லவென்றாலும், அதன் சிறப்புப்பற்றியே இந் நூலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதையொட்டி நன்னாரி போன்ற சில அற்பச் செடிகளும், அவற்றின் சிறப்பான மணம்பற்றி ஒரு தனிப் பகுதியாக இந்நூலில் சேர்க்கப் பட்டுள்ளன.

அலங்காரத் தழையுள்ள செடி ஒன்றையும்பற்றி இங்கு கூறவில்லை. உதாரணமாக, யாவரும் விரும்புகிற குரோட் ட்ன் செடிகள், அலங்காரப் பனை வகைகள், கோலியஸ், பெர்ன் வகைகள், வர்ணச் சேம்பாகிய கலேடியம் வகை கள்—இன்னும் இவைபோன்ற எத்தனையோ அலங்காரச் செடிகள் அறியத்தக்கன உள்ளன. நேரவசதியிருப்பின், பலவிதத் தோட்ட அமைப்புக்களைப் பற்றியும், தழையலங் காரச் செடிகளைப் பற்றியும், பூ அலங்காரம், தழையலங் காரம் பற்றியும் தனிப் புத்தகம் ஒன்று எழுதி வெளியிடக் கூடும்.

## இந்நூலின் நோக்கம்

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னே சென்னையில் நான் இருந்தபோது மிக்க ஆர்வத்தோடு தோட்டவேலையில் ஈடுபட்டிருந்தேன். செய்த வேலைகளைப்பற்றியும், கண்டறிந்தவை பற்றியும் விரிவான குறிப்பு எழுதிவைத்திருந்தேன். தோட்டவேலைபற்றி மிக்க விரிவான ஒரு தமிழ்க் களஞ்சியம் வெளியிட வேண்டுமென்பது என் ஆசை. ஆனால், கால நதியின் கதியினால் அந்த ஆசை நிறைவேற வில்லை. எனினும், அக்குறிப்புக்களில் சிலசில பகுதிகள் தனி நூலாக பின்பு வெளிவந்தன. **காய்கறித் தோட்டம்** ஒரு விளக்கமான நூல்; நான்கு பதிப்புக்கள் வெளியாகி யிருக்கின்றன. **பழத்தோட்டம்** மிகப் பெரிய விரிவான நூல். அதில் ஒரு பகுதியான **வாழைத்தோட்டம்** என்பது விரிந்த தனி நூலாகவும் வெளிவந்திருக்கிறது.

இப்போது அந்தக் குறிப்புக்களின் மற்றொரு பகுதி **சில பூஞ்செடிகள்** என்ற பெயருள்ள தனி நூலாக வெளி வருகிறது. முந்தி எழுதிவைத்துள்ள பகுதிகளை இப்போது திருத்தி வெளியிடுகின்றமையால், இதில் கூறியது கூறல், முறைபிறழ்வு போன்ற அமைப்புக் குறைபாடுகள் இருக்கக் கூடும். எனினும், இந்தத் துறையில் செயல் முறைக்கு ஏற்ற விளக்கமான தமிழ் நூல் இன்று இல்லை. இந்தக் குறையை எனது புத்தகம் நீக்கும் என்பது உறுதி. சில புத்தகங்கள் வெளிவந்துள்ளன. ஆனால் எவரும் தாமே ஒன்றைச் செய்துபார்த்துத் தம் அனுபவத்தை வெளியிட்ட தாகிய நூல் இன்று தமிழில் இல்லை. செய்து பார்ப்பவர் எழுதுபவர் அல்லர்; எழுதுபவர் செய்யத் தெரியாதவர்; கையில் பேனா பிடிப்பாரேயன்றி மண்வெட்டி பிடித்தறி யாதவர். ஆனால் நான் இரண்டும் பிடித்தறிந்தவன். இந்தப் புத்தகத்தில் கூறியுள்ள செய்திகள் அனைத்தும் நானே வழக்கமாய்ச் செய்து அனுபவத்தில் கண்டவை. இவை

தமிழ் நாட்டின் பருவகால நிலைக்கும் ஏற்றவை என்பது தெளிவு. இங்குக் கூறியுள்ளவை யாருக்கும் நன்ருக விளங்கும்; யாரும் தெளிவாக அறிந்து செய்யலாம். யாருக்கும் செயல்முறையில் பயன்படும்.

மேலும், ஒருபுறம் அனேகர் பூந்தோட்டம் அமைக்கும் ஆசையிருந்தும், என்னசெய்வதென்று தெரியாமல் திகைக்கிருர்கள்; பள்ளிக்கூடங்களில் என்ன பூஞ்செடி பயிரிடுவது என்று ஆசிரியர் அனேகர் கேட்கிருர்கள். மறுபுறம், விற்பனையாளரிடம் எல்லா விதைகளும் கிடைக்கின்றன; ஆனல் பணம் கொடுத்து வாங்கினுலும் எல்லா வகைகளும் பயன் தருவதில்லை; கொஞ்சம் ஊக்கத்தோடு முயல் பவருக்கு ஏமாற்றம். இந்த நிலைமைக்குப் பரிகாரம் தேவை.

இந்தத் துறைகளிலெல்லாம் செயல் முறைக்குப் பொருத்தமான வழிகாட்டி, செடி வளர்த்தல் எவ்வளவு எளிது என்பதையும் காட்டி, அதன்மூலம் சிறந்த இன்பத்தைப்பெறத் துணைசெய்வதே இந்தப் புத்தகத்தின் நோக்கம்.

## சில பெயர்கள்

செடிகள் வகைகள் பலவற்றுக்கு இங்கு ஆங்கிலப் பெயர்களே குறிப்பிட்டிருக்கிறேன். காரணம் இச்செடிகள் சமீபகாலத்தில் நம்மிடையே பழக்கத்துக்கு வந்துள்ளன. சென்னை நகரம்போன்ற இடங்களில் தோட்டங்களில் ஆர்வம் காட்டுகிற சிலரிடம் சில பெயர்கள் வழங்குகின்றன. பெயரைச் சொன்ன மாத்திரத்தில் குறிப்பிட்ட செடியின் ஞாபகம் எல்லோருக்கும் வரும். **போகன்வில்லா** என்ற செடிவகைகளை இங்கு உதாரணமாய்க் குறிப்பிட விரும்புகிறேன். சுமார் நாற்பதுவருஷ காலத்துக்கு முன்னிருந்து இவை நம் நாடெங்கும் பழக்கமாகி விட்டன. இவை வெப்பப் பிரதேசத்துக்குரிய செடிகளா யிருப்பதால் தமிழ் நாடெங்கும் நன்கு செழிக்கின்றன. பிரெஞ்சுக்காரரான டி-போகன்வில்லா என்பவர்மூலம் இவ்

வகைச் செடி பிரசித்திபெற்று அவர் பெயரோடு எங்கும் வழங்கி வருகின்றது. **ராஜ மல்லிகை** என்பது இவற்றுக்கு வழங்கத்தக்க பெயர் என்று டி. கே. சி. அவர்கள் இருபது ஆண்டுகளுக்கு முன் சொன்னார்கள். எனக்கு அப்பெயர் வழங்குவது தெரியாது. அப்படி வழங்குவது பொருத்த மாகலாம். ஆனால் ' ராஜ மல்லிகை ' என்ற பெயர் யாருக் கும் பழக்கமாகிறவரையில் எல்லோருக்கும் தெரிந்த போகன்வில்லா என்ற பெயரை நாம் வழங்கவேண்டுமே யன்றி விட்டு விடுவதற்கில்லை.

இச்செடியின் பிரிவுகளுக்கு வழங்கும் பெயர்களும் இப்படியே பிறமொழிச் சொற்கள். பார்மோசா என்பது ஒருவகை; சீனத் தீவாகிய பார்மோசாவின் பெயரைக் கொண்டது. இதை மாற்றுவது அவசியமில்லை. ஸ்கார்லட் குவீன் (சிவப்பு ராணி) என்பது இப்பெயரில்தான் வழங்கு கிறது. சிவப்பு என்று கூறினால் மட்டும் விளங்கிவிடும்; ஆனால் காலக் கிரமத்தில் தான் இம்மாற்றம் ஏற்பட வேண்டும். பர்ப்பிள் கிங், பிங்க் பியூட்டி என்பன வேறு சிவப்பு ரகங்கள். இவற்றின் பெயரில் சிவப்பு என்பதற் குரிய சொல் இருந்தபோதிலும், தமிழில் எளிதில் சொல்லி விட முடியாது. நாளடைவில் தான் தமிழ்ப் பெயர் ஏற்பட வேண்டும்; பழக்கமாகவேண்டும். அதுவரையில் ஒரு செடி யைப்பற்றிப் பேசவேண்டுமானால் மேலே கண்டபடி உள்ள இதன் ஆங்கிலப் பெயரைக் குறிப்பிடாமல் முடியாது.

**இரவு ராணி** என்ற செடியின் பெயரும் இங்கே குறிப் பிடத்தக்கது. வேறு கதியில்லாமல் இந்தப் பெயர் குவீன்-ஆப்-தி-நைட் என்ற ஆங்கிலத்தின் நேர் மொழிபெயர்ப் பாய் உள்ளது. இச்செடி வெப்பநாட்டுக்குரிய செடி. நம் நாட்டுப் புராதனச் செடிகளில் ஒன்று என்று கருதுவதில் தவறில்லை. நான் அப்படித் தான் கருதுகிறேன். 'நள்ளிருள் நாறி' என்று இலக்கியங்கள் கூறும் இருவாட்சி, மல்லிகை இனமாகும்; இரவு பன்னிரண்டு மணிக்கு மலர்வது. ஆனால்

இப்பூவோ இரவு எட்டு மணிக்குள் மலர்ந்து தோட்ட மெங்கும் பரிமளம் வீசுகிறது. இதற்குரிய தமிழ்ப் பெயர் யாரேனும் அறிந்து சொல்வார்களானல் மிக்க உபகாரமா யிருக்கும்.

பெயர்களைப் பற்றிச் சொல்லும்போது மற்றொரு விநோதம் குறிப்பிடவேண்டும். தமிழ் மக்களுக்கு முன் காலத்தில் மல்லிகையினிடத்தில் ஈடுபாடு அதிகம். இப்புத்த கத்திலும் மல்லிகை - முல்லை யினத்தில் பதின்மூன்று வகை கள் பற்றிய குறிப்புக் காணப்படும். நம்மவர்களுக்கு மல்லிகையிடமுள்ள ஈடுபாட்டினல் புதியது எதையும் மல்லிகை என்ற சொல்லைக் காட்டி வழங்கும் ஒரு வழக்கம் ஏற்பட்டிருந்தது. சில எடுத்துக் காட்டுக்கள்: அந்தி மல்லிகை, செண்டு மல்லிகை, நாகமல்லிகை, மர மல்லிகை, ரங்கூன் மல்லிகை, வாடா மல்லிகை.

ஆங்கிலேயருக்கு ஆப்பிள் பழத்தினிடம் இருந்த ஈடு பாடு காரணமாக எந்தப் பழமாக இருந்தாலும் ஆப்பிள் என்ற விகுதி சேர்த்து வழங்கும் வழக்கம் இங்கு நாம் அறியத்தக்கது. உதாரணம்:—கத்தரிக்காய்—எக்-ஆப்பிள்; விளா—உட்-ஆப்பிள்; தக்காளி—கோல்டன் ஆப்பிள்; ஊமத்தை—தார்ன் ஆப்பிள்.

### சில பூக்கள்

இயற்கையாகப் பூக்கின்ற பூக்களிலே அனேகம் மிக்க அழகுடையனவாய்க் காணப்படுகின்றன. உதாரணம்: ஊமத்தை: மிகவும் அழகான பூவுடையது. ஆறுமுகக் கள்ளி: மணமுடைய மிகப் பெரிய அடுக்கிதழ்ப்பூ; எவ் வளவோ கவர்ச்சிகரமானது. அலங்காரமான சிவப்புப் பூவுடைய சப்பாத்திக் கள்ளி; எருக்கு; குளம், குட்டை யில் பயங்கரமான களையாகப் படர்ந்திருக்கிற மிக அழகிய பூவுடைய நெய்த் தாமரை என்னும் குதிரைக் குளம்பு; வேலிகளில் கொள்ளை கொள்ளையாகப் பூத்திருக்கும்

தாதுவளை; பீர்க்கு; சாதாரணமான ஆவாரை (ஆவிரை); பாற்சோற்றிக் கீரை; செவ்வகத்திதான் என்ன அழகுடையது! மிகச் சிறந்த மல்லிகை போன்ற நறுமணம் கமழும் நுணாமரமும் இவ்வகையைச் சேர்ந்ததே. இவற்றைப் பூவுக்காகப் பயிரிடுவோர் யாருமில்லை. ஆதலால் இவற்றைக் குறித்து இச்சிறு புத்தகத்தில் யாதும் கூறவில்லை. நித்திய கல்யாணி என்பதும் இவ்விதமானது. நன்கு பூக்கும் என்பது தவிர, துர்நாற்றமுடையது. சென்னைப் புறத்தில் இது மயானத்துக்குரியது, சுடுகாட்டு மல்லிகை என வழங்கும். எனினும் இதுபற்றிச் சுருங்கிய குறிப்பு இங்குத் தரப்பட்டுள்ளது.

## முடிவுரை

இந்நூலில் கூறியுள்ள பயிர் முறைகள் யாவும் எனது அனுபவமேயாயினும், முடிந்த முடிவாக இங்கு எதையும் சொல்லவில்லை. தெரியாதவர்களுக்கும் அச்சமுடையவர்களுக்கும் இது வழிகாட்டுகிற கைகாட்டி. அவரவருடைய அனுபவமே அவரவருக்கு அறிவு தரவல்லது. எனினும், பெரிய நர்சரிகள் (செடி வளர்ப்பு - விற்பனைச் சாலைகள்) பூக் காட்சிகள் இவற்றை அடிக்கடி பார்வையிட்டு வருவதாலும், அவைபோன்ற இடங்களில் வேலைசெய்யும் படிப்பில்லாத சாமானியத் தோட்டக்கார ஆட்களைச் சந்தித்துப் பேசிப் பழகுவதாலும், கணக்கிலடங்காத அறிவும் செய்திகளும் பெறமுடியும். சொந்த அனுபவத்துக்கு அடுத்தபடி பயனுள்ளது இவ்வாறு பெறும் அறிவு. கற்றலினும் கேட்டல் சிறப்பு என்பார்களல்லவா? தோட்டம் போடுபவர் எந்த நிலையிலும் தம் கண்ணையும் காதையும் திறந்து வைத்துக் கொண்டு, காண்பவற்றைக் கூர்ந்து காணவும், கேட்பவற்றை ஆழ்ந்து சிந்திக்கவும் வேண்டும்.

இந்தப் புத்தகத்தில் கண்டுள்ள படங்கள், என்னுடைய தோட்டத்தில் பூத்திருந்த பூக்களிலிருந்து எனது

புதல்வன் சிதம்பரநாதன் எடுத்தவை. சர்வகலாசாலையின் விவசாயத்துறைப் பட்டம்பெற்ற அவனுடைய கருத்துக் களும் இப்புத்தகத்தில் ஆங்காங்கு இடம்பெற்றுள்ளன.

தொடக்கத்தில் காட்டிய குறிஞ்சிப் பாட்டில் கபிலர் 99 பூ வகைகளை ஒருசேரக் குறிப்பிட்டிருக்கிறார். அவை யாவை என்று யாரும் ஆராய்ந்து தெரிய முற்பட்டதில்லை. இவற்றுள் நான் அறிந்தவை 62. மற்றவை ஆராய்ந்து அறியவேண்டும். இந்த நிலையில் இந்தச் சிறு புத்தகத்தில் கூறப்பெற்றுள்ள தனிப் பூ வகைகளை எண்ணிப் பார்த்த போது 135 இருந்தமை காண மிக்க மகிழ்ச்சி. இவற்றிலும் அதிகமான வகைகளையும் குறிப்பிட முடியும்; அவை இப் புத்தகத்தின் நோக்கத்துக்கு அப்பாற்பட்டன.

# 2

# தோட்டவேலை

தோட்டத்தில் நிழலே கூடாது. முக்கியமாய்ப் பூஞ் செடிகளுக்கு நிழல் ஆகாது. நிழலுள்ள இடத்தில், பூஞ் செடிகள் ஒருவேளை வளர்ந்தாலும், பூக்கமாட்டா. அப் படியே, பெருமரங்களின் வேர் வெகு விரைவில் மண்சாரம் அவ்வளவையும் இழுத்துவிடும். தூங்குமூஞ்சி, சவுக்கு முதலியன எல்லாம் இப்படி. ஆகவே மரமில்லாத இடத்தில் தோட்டம் அமைக்க வேண்டும். மரம் இருந்தால் நீக்கத் தான் வேண்டியிருக்கும். தூங்குமூஞ்சி போன்ற மரநிழல் சில தொட்டிச் செடிகளுக்குப் பொருந்தும்; பொதுவாகத் தரையில் பயிரிடுவதற்கு இந்நிழலும் இடையூறு.

இங்குக் கூறப்பெற்றுள்ள பூஞ்செடிகளைப் பயிரிடும் வேலை அவரவர் தாமே கவனிக்கவேண்டுவது. தாம் செய் வதால் வரும் இன்பம் பெறுவதற்காகவே இத்தோட்ட வேலை. ஆகவே, தாம் செய்யாமல் கூலி கொடுத்து ஆள் வைத்து வேலை செய்துகொள்வோம் என்று எண்ணுபவர் களுக்கு இங்குச் சொல்லப்பட்டுள்ளவை யாவும் முழுப் பயன் தரமாட்டா.

### தட்பவெப்ப நிலை

எல்லாப் பூஞ்செடிகளும் எல்லாவிதமான சீதோஷ்ண நிலைகளிலும் நன்கு பயிராகும் என்று கருதக்கூடாது. சில செடிகள் அதிகம் குளிர் விரும்பும். சில அதிக வெப்பம் விரும்பும். சிலவற்றுக்குக் காலை வெயில் மட்டும் நன்மை. கடலோரம் இருப்பது சில செடிகளுக்கு உவந்தது. கடற் காற்று சில செடிகளுக்கு ஆகாது. சமவெளியில் சில் வகைச் செடிகள் நன்கு வளரும். வேறு சில கடல் மட் டத்தைவிட அதிகமுயர்ந்த இடத்தில்தான் வளர்ந்துபூக்கும்.

பூஞ்செடிகள் பயிரிடுவதில் இந்த இயல்புகளைக் கொஞ்சமாவது அறிந்திருக்க வேண்டும்.

### பருவகாலம்

பருவத்தையறிந்து பயிர் செய்தல், முக்கியமாகப் பூந்தோட்டத்தைப் பொறுத்தவரையில், மிகவும் அவசியம். வெப்பம் நிறைந்த தஞ்சை ஜில்லா போன்ற கீழ்க் கடற்கரையோரப் பகுதிகளில் எல்லாச் செடி கொடிகளும் நிரம்பப் பூக்கும் பருவம் தை மாசி முதல் வைகாசி ஆனி வரை. சில பூஞ்செடிகள் ஆவணி புரட்டாசியில் இரண்டாம் முறையாக மலர்வதுமுண்டு. இப்பருவகாலத்தையனுசரித்து, நாம் தோட்டவேலையை அமைத்துக்கொள்வது இன்றியமையாதது. பருவமல்லாத காலத்தில் பூக்கள் சிறிதளவு பூக்கும் என்பது உண்மை. ஆனால் அவற்றை அப்படிப் பூக்கச் செய்யும் முயற்சி ஆராய்ச்சிக்காரருக்கும், நிபுணருக்கும் உரியதன்றி, சாதாரணமாய்த் தோட்டத்தில் பூக்களைப் பார்க்க விரும்பிப் பயிரிடத் தொடங்குபவருக்கு உரியதன்று.

விதை விதைக்கவும், பதியன் போடவும் பருவ காலம் மிகவும் முக்கியமானது. ஐப்பசி மாதத்தில், முதல் மழைத் தூற்றலுக்குப் பின் மழையில் அடிபடாமல் விதைத்தால், எல்லா விதைகளும் நன்கு முளைத்துச் சேதமில்லாமல் வளரும். உதாரணம்: காசித்தும்பை, காலியாப்ஸிஸ், சீமைக்காஸ்மாஸ், கோழிக்கொண்டை, சால்வியா, சீனச் சூரியகாந்தி, டுரீனியா, துலுக்கச் சாமந்தி, பிளாக்ஸ், பூவெண்டை, மலம்போடியம் போன்றவை. இவற்றைப் பருவத்துக்கு முந்தி விதைத்தால் முளைப்பது அருமை; அனேகமாய் விதையெல்லாம் நஷ்டந்தான். இதுவே பதியன், வளைப்புப் பதியன், தூறு பிரித்தல் போன்ற வேலைகளுக்கும் பொருந்தும். புதிதாய்த் தோட்டவேலை கற்றுக்கொண்டு செய்பவர்கள், விதைக்கும் பருவமாக

மேலே குறிப்பிட்ட பருவத்தில் இவ் வேலைகளைச் செய்வது உசிதம். இந்தப் பருவத்தில் வேலைகள் பூரண வெற்றி தரும். முந்தி விதைத்தால் கால் பங்குகூட வெற்றிதராது. பிந்தி விதைத்தால் பாதி வெற்றி கிடைப்பதும் கஷ்டம்.

பிற வேலைகளுக்கும் பருவகாலம் முக்கியமானது. பழமையான செடிகளுக்கு எருவிடுதல்: பூப்பதற்குமுன் அதாவது புரட்டாசியிலிருந்து கார்த்திகை வரையில். கத்தரிப்பு: ஆவணி - புரட்டாசி. இவ்வேலைக்கான பருவங்கள் யாவும் அவரவர்தம் அனுபவத்திலும் செடிக்கு ஏற்றபடியும் கண்டறிய வேண்டியவை.

## மண் சாரம்

இயல்பாக வளமுடைய மண்ணில் பூந்தோட்டம் மிகவும் சிறப்பாக இருக்குமென்பது உண்மை. ஆனால் சாமானியமான எந்த மண்ணையும், சீர்திருத்திப் பக்குவமாக்க முடியும். பூந்தோட்டம் பெருந்தோட்டமன்று, குறைந்த பரப்புடையதாகவே யிருக்கும். ஆகவே, அதன் மண்ணை உயர்தரமாக்குவது, முயன்றால் கஷ்டமன்று.

களிமண்ணில் கரித்தூள், சுண்ணம்பு, மணல், தழை உரம் சேர்த்துப் பக்குவப்படுத்த வேண்டும். பள்ள நிலமாய் இருந்தால், ஆறு குளம் முதலியவற்றின் வண்டல் மண்ணும் பிற எல்லா வகைக் குப்பையும் சேர்த்து நிரப்பி மேடாக்கலாம். மணலை மாற்றுவது இன்னும் எளிது. அதற்கு முக்கியமாக வேண்டுவது தழையுரம். மாற்றி மாற்றித் தழை யுரப் பயிர்செய்தால் போதும். வேர்க்கடலை, காவாளை, உளுந்து, பயறு முதலியன பொருத்தமானவை. கப்பி மண்ணில்கூட வேர்க்கடலை முதலியவைகளைப் பயிரிட்டுத் திருத்திக் கொள்ளலாம். பொதுவாகத் தோட்டத்தில் தழை, தொழு உரம் முதலியன நிரம்பச் சேர்த்துச் சொற்ப அளவு சாம்பலும், கரித்தூளும் கலந்து, வருஷமொருமுறை மேல்மண் கீழ்மண்ணாகவும், கீழ்மண் மேல்

மண்ணாகவும் கலக்கும்படி ஆழக் கொத்திப் புரட்டிவிடுவது மிகவும் நல்லது. தவிர, தனித்தனிச் செடியாக நாம் பயிரிடப் போவதால், ஒவ்வொரு செடிக்கும் அதற்குரிய சிறப்பான எரு வைப்போம். ஆதலால் தோட்டமுழுமையும் சுமாரான அளவுக்கு வளப்படுத்திக் கொண்டால் போதுமானது.

மண்ணிலிருந்து செடி வளர்ச்சியினால் சத்து எப்போதும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. நம்முடைய வேலை, கூடுமான வரையில் மண்ணிலிருந்து வரும் தழை, சருகு, பூ, காம்பு முதலிய வேண்டாத பொருள்கள் யாவையும், மீண்டும் மண்ணிலே சேரும்படி செய்வதாகும். எதையும் வேண்டாமென்று தோட்டத்துக்கு வெளியே எறியக் கூடாது. சகல குப்பையும் கலப்பு உரம் (கம்போஸ்டு) ஆக்க வேண்டும்.

## நீர் விடுதல்

நல்ல நீரே பயிர்களின் ஜீவன். கந்தக நீர், உவர் நீர் முதலியன பயிர்களுக்கு ஏற்றவை அல்ல. ஆகவே நல்ல நீரில்லாதபோது, கிடைத்தநீரைத் தொட்டி முதலிய அகன்ற பாத்திரத்தில் நிரப்பிச் சில மணி நேரம் காற்றாட வைத்திருக்கவேண்டும். திறந்த காற்றும் வெயிலும் படுவதால், தண்ணீர் சூடடைந்து அதன் தீய தன்மைகள் சில ஓரளவு மாறிவிடும்.

பொதுவாக, செடிகளுக்கு நீர் பாய்ச்சும்போது தரையிலும்சரி, சட்டியிலும் சரி, குளிர, விட வேண்டும். மேல் மண் நனைந்தும், அடிவேர் நனையாமலும் இருக்கும்படி விடக்கூடாது. இது காயப் போடுவதைக் காட்டிலும் கெடுதலானது. அதிகத் தண்ணீர் இருக்கும்பட்சத்தில் மேல் மண்ணை வாரத்துக்கொருமுறை ஒரு கிளறியால் கிளறிவிட வேண்டும். புதிதாய்த் தெளித்த விதைக்கும், நாற்றுக்கும் பூவாளியால் நீர் தெளிக்க வேண்டும்.

பெரிய இலையுடைய செடிகள், அதிகப்பரப்புக் காரண மாக, அதிகம் மூச்சுவிடுவதால், அதிக நீரை வெளிப்படுத்தி இழக்கின்றன. ஆகவே இவற்றுக்கு அதிக நீர் தேவையா யிருக்கும். கள்ளிச் செடிகளுக்கு இலையின்மேல் ஒரு படல மிருந்து நீர் ஆவியாய்ப் போவதைத் தடுக்கிறது. ஆகவே இவற்றுக்கு நீர்த் தேவை குறைவு. இவ்விதமாக, நீர்த் தேவையை இனந்தெரிந்து பொதுப்படச்சொல்லுவது முழு மையும் பொருத்தமாயிராது. அவரவர் நீண்ட நாள் அனு பவத்தால்தான் இது அறியமுடியும். இதுபற்றி நெடுகிலும் கூறியுள்ள குறிப்புக்களை வழிகாட்டியாகவே கொள்ள வேண்டும்.

## உரம்

சட்டியில் பயிரிடும் மண்ணில் முக்கியமான அம்சம் செம்மண்ணும், தழை உரமும். இவை இரண்டும் தொட் டிப் பயிருக்கு உயிர் என்பதை மறக்கக்கூடாது.

**குதிரைச் சாணம் :** பொதுவாகச் சட்டிப் பயிருக்கும் பூக்கின்ற எச்செடிக்கும் மிகமிகச் சிறந்த உரம் நன்ருய் மட்கின, சூடே இல்லாத, குதிரைச் சாணம். புதுச்சாணம் செடியைச் சுட்டு எரித்துவிடும். ஆனுல் புதிய குதிரைச் சாணத்தைச் செம்மண், தழை, மணல் ஆகிய மூன்ருேடு தனித்தனி அடுக்காக மூன்றடி உயரம் அடுக்கி, ஒன்று விட்டு ஒருநாள், நீர் தெளித்து வந்தால் மூன்று மாதத்தில் நன்ருய் மட்குவதோடு மிகச்சிறந்த கலவை உரமும் ஆகும்.

**மாட்டுச் சாணம் :** ஒரு வருஷம் மடித்த சாணம் சிறப் பானது. புதுச்சாணத்தில் புழு நிரம்ப உண்டாகும்; அத ஞல் கெடுதல். மற்றப்படி நிரந்தரமாக மண்ணுக்கு நலம் செய்வது மாட்டுச் சாணம்தான். ஆனுல் இது பூஞ்சண நோய் பரவ இடம் கொடுக்கும்.

**ஆட்டுச் சாணம் :** தூளாக்கி ஒரு குழியிலிட்டு நிரப்பித் தண்ணீர் விட்டு வைத்திருந்தால் மாட்டுச் சாணத்திலும்

சிறந்த உரமாய் இருக்கும். தொட்டிப் பயிருக்கு ஏற்றது; திரவ உரம் தயாரிக்கவும் உதவும்.

**பிற:** கோழியெச்சம், மீன் எரு, எலும்புத்தூள் முதலியன சிறந்த எருக்கள். கோழியெச்சம் திரவ உரத்துக்கு நல்லது; மற்றச் சாணத்தில் பாதி அளவு இதில் போதுமானது. எலும்புத்தூள் பலன் கொடுக்க நிரம்ப நாளாகும்; ரோஜாபோன்ற பயிருக்கு இது மிகவும் நல்லது.

**தழையுரம்:** உதிர்ந்த சருகு, கத்தரித்த கிளைகள், முள் முதலியன நீக்கிச் சொற்பச் சாணமும் மண்ணும் கலந்து ஈரம் காயாமல் மடிக்கவைத்தால் இவை பயிர் வளர்ச்சிக்கேற்ற சிறந்த உரமாகின்றன. பெரு மர நிழலில் இப்படி மடிக்கவைப்பது மிகவும் நன்று. தாவரப்பொருள் எதையும் இதற்குப் பயன்படுத்தலாம். நம் கவனத்துக்குத் தகுந்தபடி, ஆறுமாதத்திலிருந்து ஒரு வருஷத்துக்குள் தழை எரு மட்கிவிடும். தழை அலங்காரச் செடிகளுக்கு இது மிகவும் ஏற்றது.

**திரவ உரம்:** தோட்டத்தில் ஒரு மூலையில் ஒரு பானையைப் புதைத்துவைக்க வேண்டும். அதில் கால்பாகம் இருக்கக் கூடிய அளவு ஒரு கோணிப்பையில் நன்கு மட்கின குதிரைச் சாணம், மாட்டுச் சாணம் போன்ற ஏதாவதொன்றைக் கட்டிப் போட்டுவிட வேண்டும். கோழி, புறா எச்சமாய் இருந்தால் இதில் பாதி போதும். இந்தச் சாணத்தில் கரையாத பாகம் தண்ணீரில் கலக்காமல் இருப்பதற்காகவே கட்டிப்போட வேண்டும். பானை நிரம்ப நீர் விட்டுவைத்து 24 மணி நேரம் ஆனவுடனே தெளிந்த நீரை மட்டும் எடுத்து உபயோகிக்கலாம். மூன்று நாள் இருப்பது நல்லது. இதுவே திரவ உரம். ஆனல் இதை 2-3 மடங்கு நல்ல தண்ணீரோடு கலந்து உபயோகிக்க வேண்டும். நன்ருக வளர்ந்து வரும் பயிருக்கு இது மிகவும் பயனுடையது. இந்தத் திரவ உரத்தில் செடி வளர்ச்சிக்கான நைட்ரஜன் சத்து நிரம்ப உண்டு. பூக்கிற பருவத்தை

அடையும் செடிகளுக்கு இந்தத் திரவத்தோடு திரவ ரூபத்தில் உள்ள சூபர்பாஸ்பேட்டும் சிறிது சேர்த்துக் கொள்ள வேண்டும். அல்லது இதே பானையில் அளவாக சூபர் பாஸ்பேட்டையும் கட்டிப்போட்டிருந்து, திரவ உரத்தை எடுத்துக்கொள்ளலாம்.

## கருவிகள்

அதிகக் கருவிகளை இங்குச் சொல்வது அவசியமல்ல. தேவையான அளவு பூந்தொட்டிகள்—மண்ணால் ஆனவை; 2 அங்குல அளவு முதல் 12 அங்குல அளவுவரை. விதை விதைப்பதற்காக அகலமான ஆழமில்லாத சல்லடைபோன்ற மண் சட்டிகள். தண்ணீர் ஊற்ற நாகத்தோண்டி, நாக வாளி, பூ வாளி பெரியது, சிறியது, பித்தளைப் பீச்சுங்குழல், கத்தி, பெரிய கத்தரி, சிறிய கத்தரி, வில்கத்தரி, களைக் கொட்டுகள், பாரை, மண்வெட்டி, அரிவாள், விரல்போல் அமைந்த பல அளவுள்ள கிளறிகள். பிற முக்கிய கருவிகள் - கூடை, தட்டுக்கூடை, கயிறு, முளை, அடி அடையாள மிட்ட நாடா என்பன.

## பாத்தி அமைப்பு

பாத்திகள் அமைப்பது, அமைந்த தோட்டத்தின் வடிவத்தையும், அவரவர் விரும்பும் செடி வகையையும் பொறுத்தது. வட்டமோ, சதுரமோ, கோணமோ, எப்படியும் போட்டுக்கொள்ளலாம். எப்படியாயினும் பாத்தி அதிக அகலம் இருக்கக் கூடாது. உச்ச அகலம் நான்கு அடி. நீளம் வசதி போல. அகலம் குறைவாய் இருந்தால் தான் பாத்தியினுள் கால் வைக்காமல் களை எடுக்க, கிளறி விட, எருவிட, நீர்விட, புழு பூச்சி போக்க, கன்று நட, கன்று பெயர்த்தெடுக்க, நிமிர்த்துக் கட்ட, பூ கத்தரிக்க—முடியும். அடிக்கடி மிதித்தால் மண் இறுகி, வேரோட்டம் தடைப்பட்டு வளர்ச்சி குன்றும். சுவர் இருந்தால் அதன் ஓரம் அகலக் குறைவான பாத்தி இரண்டு அடி அகலம்

அமைத்து, பொறுக்கான செடிகளைப் பயிரிட்டுச் சுவரே தெரியாமல் மறையும்படியும் செய்யவியலும். சுவரின் நிழலும், அவ்விடமுள்ள குளிர்ச்சியும், இவ்வகைச் செடிகளுக்கு மிகவும் நன்மையானவை. சுவரின் முக்கிய அனுகூலம், அது காற்றைத் தடுக்கும் என்பது.

சிறு பாத்திகளைச் சூழ்ந்து கல் பதித்தல் அழகு தரும். முழுக்கல்லை முக்கால் பகுதி புதைத்து, மூலை வாட்டத்தில் நிறுத்தி, வெளியே தெரியும் பகுதியில் சுண்ணும்பு அடித்து வைத்தால் பாத்தி பார்க்கப் பிரகாசமாய் இருக்கும். பொன்னுங்கண்ணி, மான்செவிப் பசலை போன்றவை வளர்த்துக் கத்தரித்தும் விடலாம். இதில் இரண்டொரு காரியங்கள்: எப்போதும் நீர்விடவேண்டும்; அடிக்கடி பராமரிப்பு, கத்தரிப்பு இல்லாவிட்டால் பார்க்க விகாரமாகி விடும்; பாத்தியெங்கும் கிளைகள் பரவிவிடும். மேலும் புழு பூச்சிகளுக்கு இடம் கொடுக்கும். மற்றப்படி இவை பெரிதும் ஏற்றவை. தவிர, இவ்விரண்டும் உண்பதற்கான கீரை தருவதால், மிகவும் பயனுடையவை.

### தானுக முளைக்கும் செடிகள்

இவைகளைக் களை என்பதில் தவறில்லை. அகற்றத்தான் வேண்டும். ஆரம்பத்தில் அகற்ருவிட்டால், பின் இவை வளர்ந்து பூக்கிற சமயம், வேண்டாதவற்றைக் களைய மனம் வராது. இதில் ஓர் எச்சரிக்கை வேண்டும். சில சமயம், நாம் மிக முக்கியமென்று கருதி விதை எடுத்துவைத்து விதைக்கும்போது, செடிகள் முளைப்பது குறைவு. ஆனல், பூக்கும் செடியிலிருந்து விதைகள் தாமே கீழே விழுந்து எப்பொழுதும் முளைத்துக்கொண்டேயிருக்கும். எவ்வளவு தான் கவனமாய் நாம் விதை எடுத்துச் சேமித்து வைத்தாலுங்கூட, சில நம்மை ஏமாற்றிக் கீழே விழுந்து முளைத்து விடும். அல்லது நாம் விதைக்கும்போது முளைக்காமலே போகும். உதாரணம்: காசித்தும்பை, கெய்லார்டியா,

சீமைக்காஸ்மாஸ், பெட்டுனியா, மலம்போடியம் போன்றவை. இப்படித் தாமாக முளைத்து வளரும் செடிகளை வேண்டாமென்று களைந்து எறியக்கூடாது. எடுத்துத் தனியே, பாத்தியிலேனும் சட்டியிலேனும், அவ்வப்போது பயிராக்கி வரவேண்டும். ஓதுப்புறமாக நட்டுவைத்தாலும் குற்றமில்லை.

இதனால் பல வகை லாபம் உண்டு. சில சமயம் நாம் முயன்று விதைக்கும் விதை முளைக்காமல் போவதால் இச் செடிகள் பயன்படும். மேலும் தாய்ச் செடி காய்ந்து போனவுடனே இச் செடிகள் வளர்ந்து பூக்குமாதலால் பூக்கும் காலம் தொடர்ந்து நீடித்துவரும். தவிர, வெர்பீனு போன்ற சில செடிகளில் விதை சேகரிப்பது கஷ்டம். தாமாக முளைப்பவற்றை எடுத்துப் பயிரிடுவது எளிது. இப்படித் தாமாக விழும் விதைகளில் வேற்று மகரந்தச் சேர்க்கையினால் புது ரகச் செடிகள் உற்பத்தியாவதும் உண்டு. வெர்பீனுவில், தானே இப்படிப் புது ரகம் கிடைக்கிறது.

### பொதுக் குறிப்பு

பின்னே சொல்லப்பட்டுள்ள எல்லாச் செடிகளும் ஒரே மாதிரியான இயல்புடையவையல்ல. நம் நாட்டுச் செடிகளும் உள்ளன, பிற நாட்டுச் செடிகளும் உள்ளன, வெப்பம் விரும்புவனவும் குளிரை விரும்புவனவும் உள்ளன. எல்லா மண்ணிலும் எல்லாம் பயிராகும் என்று எண்ணுதல் பிழை. பொதுவாக மணல்பாங்கான செம்மண் எல்லாச் செடிகளுக்கும் ஏற்றது. அனேக இடங்களில் செம்மண் கிடைக்க வழியே இல்லை. வேறு ஏற்பாடுதான் செய்ய வேண்டும். எலும்புத் தூளும் பூக்கிற செடிகளுக்குப் பொதுவாக ஏற்றது. குப்பைக் கழிவுகளைச் சேர்த்து மடிக்கவைத்த கம்போஸ்டுரம், பொதுவாகத் தரையில் அமைக்கும் பாத்திகளுக்கும், தொட்டிப் பயிருக்கும் சிறப்பானது. சாம்பலும், சொற்ப அளவு கரித்தூளும் மண்ணில் இருப்பது நலம்.

மண்ணின் புளிப்பைக் கரித்தூள் எடுத்துவிடும். மிருதுவான வேருள்ள அனேகசெடிகளுக்கு மண்கெட்டியாக இருக்கக் கூடாது. களிப்புமண்ணைப் பொலபொலப்பாக்கத் தேங்காய் மட்டை, நார் முதலியன நல்லவை; மடிக்கவைத்து மண்ணுடன் கலக்க வேண்டும். அதிகம் பூக்கிற செடிகளுக்கு—பருவகாலப் பூக்கள் யாவும், ரோஜா போன்ற மற்றவை—நன்கு மடித்த குதிரைச் சாணம் சிறப்பானது. மாட்டுச் சாணமே மண்ணுக்கு நிரந்தர உரம்தருவது. முந்தியதையும் பார்க்க இது மண்ணுக்குக் குளிர்ச்சியானது. ஆனால் இதுவும் நன்கு மட்கியதாகவே இருக்கவேண்டும். தழை முதலியன ஏராளமாய்ச் சேகரித்து, சாணம், மண்ணுடன் கலந்து மடிக்க வைத்திருப்பது அவசியம். எந்த நாற்று வளர்வதற்கும் மட்கிய தழையுரம் இன்றியமையாதது. சிறப்பாக, மட்கிய தழையுரமும் மட்கிய மாட்டுச்சாண உரமும் இட்ட இட்ட இடத்தில் மிக மிகச் சொற்ப அளவு அம்மோனியம் சல்பேட்டு நல்ல பலன்தரும். சாணத்தோடும் சாம்பலோடும் கலக்கவும், கெட்டி மண்ணைப் பொலபொலப்பாக்கவும், தழையுரம் அவசியம். சிலசமயம் இடிந்துபோன கட்டிடங்களுடைய சுண்ணாம்புக் காரையைத் தூளாக்கிக் கொஞ்சமாக மண்ணுடன் கலந்து கொள்வதும் பயனுடையது.

## நடைமுறை வேலைகள்

பூஞ்செடி வைத்துப் பராமரிப்பதில் முறையாகக் கவனிக்கவேண்டிய வேலைகள் அனேகம் உள்ளன. இவை தடை இன்றி நடைபெற்றால்தான் செடிகள் நம் விருப்பம் போல் குறைவறப் பூத்துக் கொண்டிருக்கும்.

தினந்தோறும் தவறாமல் எல்லாச் செடிகளையும் ஒரு முறையேனும் சுற்றிப் பார்க்கவேண்டும். தோட்டவேலையைப்பற்றி தினக் குறிப்பு எழுதி வைத்தல் மிகவும் பயனுடையதாகும்.

பூந்தோட்டம் மிகவும் சுத்தமாய் இருக்கவேண்டும். உதிர்ந்த பூ, காய்ந்த பூ, தழை, சருகு, வெட்டிய கிளை, காய்ந்த செடி முதலியன உடனுக்குடன் எருக்குழிக்குப் போகவேண்டும். செடியின் அடியிலும், நடைபாதை வரப்பெங்கும் குப்பையின்றிச் சுத்தமாக இருக்கவேண்டும். எல்லாச் செடிகளுக்கும் வாரம் ஒரு முறையேனும் பீச்சுங் குழலால் நீர் அடித்தல் மிகவும் அவசியம். வெயில் நேரத்தில் அடிக்கக்கூடாது. காலையிலும், மாலையிலும் அடிக்கவும். வெயில் காலத்தில் இது மிகவும் அவசியம். இலைகளை நீர் கழுவுவதால் இலை சுத்தமாகிச் செடி நன்ருகச் சுவாசிக்க உதவியாக இருக்கும். தண்ணீர் விடும்போது, கண்டும் காணுமலும் விடக்கூடாது; குளிர நீர் விட வேண்டும். மாலையில்தான் நீர் விடவேண்டும். பெரிய செடிகளுக்குக் கால்வாய்மூலம் நீர் பாய்ச்ச வேண்டும். அடிக்கடி மேல் மண்ணைக் கிளறிவிட வேண்டும். மண் கெட்டிப்படவோ, வெடிப்புக் காணவோ, கூடாது. புதிதாய்த் தெளித்த விதைபற்றி மிகுந்த கவனம் வேண்டும். எறும்பு இழுக்காமல் பார்க்கவேண்டும்.

செடியில் வேண்டாத இலைகள், கொழுந்துகளையும், பூச்சிகளையும், அகற்றவும். அவசியமானபோது, செடி சாயாதபடி பக்கத்தில் கொம்பு வைத்துக் கட்டவும். இறுக்கிக் கட்டாமல் ∞ வடிவத்தில் கட்டுப் போடவும். கடும் வெயில் ஆகாத செடிகளுக்கு நிழல் போடவும். பூஞ்செடிகளில் புழு பூச்சிகள் கண்டால் எச்சரிக்கையா யிருக்கவும். மண்ணிலிருக்கும் புழு, வண்டு, முட்டை, எறும்பு, கறையான் முதலியவற்றைக் கவனித்துப் போக்கவும். கருவிகளை எப்போதும் துடைத்து எண்ணெயிட்டுச் சுத்தமாய்க் கெடாத வகையில் வைத்திருக்கவும். பயிர்களின் தேவைகளை எதிர்பார்த்து, கம்போஸ்டு உரம் தயாரித்தல், பிற எருச் சேகரம் போன்ற வேலைகளை உடனுக்குடன் கவனிக்கவும்.

# 3

## மல்லிகை - முல்லை

முல்லையும் மல்லிகையும் ஒரே குடும்பம். இரண்டும் தமிழ் நாட்டுக்குரிய நறுமணமுடைய பழமையான சிறந்த பூ வகைகள். இரண்டும் தமிழர் இலக்கியத்திலும், இலக்கணத்திலும், நித்திய வாழ்விலும் மிக்க இடம்பெற்றுள்ளன. திருமாலுக்குரிய நிலத்தின் பெயர் முல்லை நிலம்; காட்டுக்கே முல்லை என்பது பெயர்: அங்கு முல்லை அதிகமாகப் பூத்தலால். ஐந்திணைகளுள் இரண்டாவது முல்லைத் திணை. பெண்ணின் கற்புக்கு முல்லை உவமையாகக் கூறப் பெறுகிறது. முல்லைக் கொடியின் அழகில் ஈடுபட்ட பாரி வள்ளல் தன் தேரையே அக் கொடி படரக் கொடுத்துவிட்டான் என்ற கதையை நம் பண்டைய இலக்கியங்கள் பாராட்டிக்கூறும். முல்லையைப் பெயராகவுடைய இரண்டு சிவஸ்தலங்கள் வடக்கிலும் தெற்கிலுமாக உள்ளன - வட திருமுல்லைவாயில், தென் திருமுல்லைவாயில் என.

மல்லிகை என்பது இப்படியே வட மொழியிலும், தென் மொழியிலும் பிரசித்தியடைந்தது. மல்லிகையில் வண்டு ஊதுவதுபற்றி நளவெண்பாவில் புகழேந்தி குறிப்பிட்டது பெரிய விவாதத்துக்கு இடமாகிவிட்டது. மல்லிகை இல்லாமல் இன்று நம் வாழ்க்கையில் எந்தச் சுபகாரியமும் நடைபெறாது.

மல்லிகை முல்லை என்று இருவேறு பெயர்கள் தமிழில் வழங்கியபோதிலுங்கூட, தாவர சாஸ்திர ரீதியாக இரண்டும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த செடிகள், கொடிகள். ஆதலால் இங்கு இவற்றைக் குறித்துப் பொதுவாகவே பேசுவோம்.

பொதுவாக இந்தக்குடும்பத்தில் செடிகளும் உள்ளன, கொடிகளும் உள்ளன. யாவும் மிக்க நறுமணமுடைய

பூக்கள் தரும். சாதாரணமாய்த் தமிழ் நாட்டில் ஏதேனும் ஒருவகை மல்லிகையிராத தோட்டமே இராது. பூசைக்கும், பெண்கள் குழந்தைகள் தலையிலணிவதற்கும் இப் பூவைப் பயிராக்குகிறோம். யாவும் வெண்ணிறப் பூக்கள். வெண்ணிறத்துக்கே முல்லை எடுத்துக்காட்டு. ஒற்றை இதழ், அடுக்கிதழ் என இதழ் வகைகள் இரண்டு. மஞ்சள் நிறம் அபூர்வம். சிலவகைச் செடிகள் மிக்க கோணல் மாணலாய் வளரும். பொதுவாய்ச் செடியின் தோற்றம் கவர்ச்சிகரமா யிருப்பது அபூர்வம்.

எல்லா வகைகளுக்கும் வளமிக்க இரு மண்பாடான நிலமே ஏற்றது. பூத்த பிறகு கத்தரித்துவிடுதல் நலம்; சில வகைகளுக்கு அவசியம். பூக்கள் புதுக்கொழுந்தின் நுனியில் பல ஒன்று சேர்ந்த கொத்தாகத் தோன்றும். கத்தரித்தபின் நல்ல எருவிட்டு, கொத்தி இரண்டொரு நாள் உலர்ந்தபின் நிரம்ப நீர் பாய்ச்சினால் உடனே அதிகத் தளிர்கள் உண்டாகி ஏராளமாய்ப் பூக்கும். பொதுவாக இவை யாவும் வருஷ முழுமையும் கொஞ்ச அளவில் பூக்குமாயினும், வருஷ மிருமுறை பூக்கிற பருவமாய்க் கொண்டவை. ஆவணி - புரட்டாசி, தை - பங்குனி என்பன பருவங்கள்.

பூ விற்பனைக்காகத் தோட்டம் போடுபவர்கள், பூத்து முடிந்தவுடனே கிளைகளை நறுக்கிவிட்டு, அடியில் தீமூட்டிக் கொளுத்தி விடுவார்கள். தழைகள் யாவும் தீய்ந்து கருகிய பின், இரண்டு நாள் பொறுத்து, நிரம்ப எருவிட்டு நீர் பாய்ச்சுவார்கள். மல்லிகை அப்போது தளிர்த்து நிரம்ப அரும்பு கட்டும்.

வகைகள் யாவும் பதியன் போட்டு உண்டாக்கலாம். வளைத்துப் பதியன்போட்ட மாத்திரத்திலேயே வேர்விட்டு விடும். நறுக்கித் தனிச் செடியாக்கிப் பயிரிடலாம். தூறிலிருந்து கிளை வெடித்துக் கொடியோடும். தரையில் ஓடினால் ஓடிய இடமெல்லாம் வேர்; இதைப் பிரித்து எடுத்துப்

பயிரிடுவதே புதுச் செடி உண்டாக்கும் எளிய வழி. சில வகைகள் காய்ப்பதுண்டு; உருண்டையான கருநிறப் பழம்.

மல்லிகை முல்லை ஒவ்வொன்றும் திட்டமான ஒரு நேரத்தில்தான் பூக்கும். இந்த நேரம், வகைக்கு வகை மாறுபடும். ஒன்று பூக்கிற நேரத்தில் மற்றது பூக்காது.

பின் வருபவை முக்கியமான சில வகைகள்.

### அடுக்கு மல்லிகை

அடுக்கிதழ் உடைமையால் இப்பெயர் பெற்றது. மூன்றடுக்குடைய பெரிய பூ. 20 இதழ் உண்டு. அகன்ற இதழ், அழகானது; மணம் நிறைந்தது. பூக்கும் நேரம் விடியற்காலை 5 மணி. இது கருநிறமுடைய பெரிய இலைகளை யுடைய செடி. செடியாகவுமிராமல், சுமாராய்ப் படரும்; அதிகமாய்ப்படரும் கொடியல்ல. வருஷ முழுமையும் பூக்கு மானாலும், இரண்டு பருவங்கள் அதிகம் பூக்கும். நுனிக் கிளையில் மட்டுமே பூக்கும். கொத்தாகப் பூக்கும். பூத்த வுடன் பூத்து முடிந்த கிளைகளைக் கத்தரித்து எருவிட்டுக் கொத்துவது அவசியம். விற்பனைக்காகப் பெரிய அளவில் பயிரிடப்பெறும்.

மௌவல் என்று இலக்கியங் கூறும் மல்லிகை விசேடம் இதுவே. சிலர் காட்டு மல்லிகை இரட்டை மல்லிகை என்றும் கூறுவார்கள்.

### இருவாட்சி

பின்னல் கூறப்போகும் முல்லைக் கொடிக்கு இன மான ஒரு முல்லைவகை. சிறப்பான மணமுடைய ஒரு கொடி. கரும்பச்சை நிறமுள்ள சிறிய இலைகள். இது பந்தலில் படரும். சிறிய வெண்ணிறப் பூக்கள். நடு இரவில் பூப்பதால், நள்ளிருள் நாறி என்ற பெயரில் குறிஞ்சிப்பாட்டு இதைக் குறிப்பிடும். இருள்-நாறி இருவாட்சியாகத் திரிந்தது. பழமையாக வழக்கத்தில் உள்ளது. மணம் மிகவும்

அதிகமானது. வசந்தி, நவமல்லிகை என்பன இதற்குரிய பெயர்கள். சிலப்பதிகாரம் இதை **மயிலை** என்று வழங்கும்.

### கஸ்தூரி மல்லிகை

மல்லிகையொத்த பெரிய இலைகளையுடைய பலமற்ற சிறுகொடி ; சுமாராயப் படரும். மிகவும் வெளுத்த இலைகள். கொஞ்ச அளவில் எப்போதும் பூத்துக்கொண்டிருக்கும். பாலாடை நிறமுள்ள சிறிய பூ. பூவின் வாசம் கஸ்தூரிபோலக் காரமாயிருப்பதால் இந்தப் பெயர். உச்சி வெயில் ஆகாது. சற்றே பாதுகாப்பான இடம் தேவை. பூ ஐந்து இதழ்கள். பூக்கும் நேரம் காலை. **மகரந்த மல்லிகை** எனவும் வழங்கும்.

### குண்டு மல்லிகை

எல்லோருக்கும் தெரிந்த செடி. மல்லிகை யினத்தைச் சேர்ந்தது. ஆனல் கொடியாகப் படராமல் குத்துச் செடியாயிருக்கும். மிகவும் பெரிய பூ. தூய வெண்ணிறத்தில் பெரிய ரோஜாமலர் போலிருக்கும். எழு அடுக்கு இதழ்கள் இருப்பதால் 'ஏழுசுற்று மல்லிகை' என்றும் சொல்வார்கள். **குட மல்லிகை, செண்டு மல்லிகை** என்றும் பெயர்கள் வழங்கும். வளைப்புப் பதியன் உடனே வேர் விடும். ஐப்பசி, மார்கழி மாதங்களில் பதியன் போடலாம். 30 நாளில் வேர் பிடிக்கும். நறுக்கி எடுத்து வளமிக்க மண்ணில் ஆழக் குழி தோண்டி எருவிட்டு அதில் நடவும். அதிகத் தண்ணீர் கூடாது. தண்ணீர் அதிகமானல் பூக்காது. அதிகக் காய்ச்சலும் ஆகாது. ஏனெனில் புதுக் கொழுந்துகளில் தான் அரும்புகள் உதிக்கும். காய்ச்சலிருந்தால் கொழுந்து குறைந்து விடும். அரும்பு கருகிவிடும். அதிகம் தழைக்கவிடாமல் வளர்த்தால் நிரம்பப் பூக்கும் ; நிழல் கூடாது. மேல் வேரைக் கொத்தி விடுதலும், ஆண்டுக்கொரு முறை தளிர்க்காத கொடிகளைக் கத்தரித்து விட்டுப் புதுத் தளிர்கள்

விடும்படி செய்தலும் மலர்வதை அதிகப் படுத்துவதற்கான வழிகள்.

செம்மண்ணும் மட்கிய குதிரைச் சாணமும் சமஅளவு கலந்த உரம் சிறப்பானது.

அரபு மல்லிகை, பேரா மல்லிகை என்பன இதற்கு வழங்கும் பிற பெயர்கள்.

### சாதி மல்லிகை

மல்லிகை என்று பழங்காலத்தில் சாதாரணமாய்க் கூறப்பெறுவது இந்த மல்லிகையே. எல்லாவற்றிலும் இவ் வகை உயர்வானது என்ற கருத்துப்படவே இதற்குச் சாதி மல்லிகை என்ற பெயர் அமைந்தது. சிறு பந்தலில் சுமாராகப் படரவல்ல மென்மையான சிறு கொடி. இலை சாம்பல் நிறத்தில் முழு இலையாக இராமல் பல பின்னப் பட்டதாக இருக்கும்; அழகான துண்டு இலைகள் இருக்கும். இலை அமைப்பும் கொடியின் தோற்றமும் அழகானவை. கொடி மெலிந்து தொங்கும்; இரண்டு பருவங்களில் அதிகம் பூக்கும். ஆடி - ஆவணி, தை - பங்குனி. வட்டமான பூக்கள். ஓர் அங்குலக் குறுக்களவு இருக்கும். பெரிய அகன்ற 5 இதழ்கள். மேற்புறமும் கீழ்ப்புறமும், தூய வெண்ணிறம். குறுகலான சிறு அரும்பு, வெண்ணிறத்தில் கூர்மையாய்த் தோற்றும். மிகச் சிறந்த மணமுடையது. பயிரிடுவது எளிது; கவனமான கத்தரிப்பு நல்லது. இப்பூவின் சிறப்பியல்பு, பூவின் விரிந்த வெண்ணிற இதழ் பின்புறம் நோக்கி வளைந்திருப்பது. பூக்கிற நேரம் மாலை.

### செம்முல்லை (தளவு)

இலக்கியங்களில் தளவு, தளவம் எனக் கூறப்பெறும் சிறுசெடி; குத்துச் செடி. முரட்டுச் செடியாக வளரும், சற்றே படரும். நன்மணம் உடையது. வளைப்புப் பதியன் போடலாம். கருநிறமான தடித்த சிறு இலைகள். கொழுந்துகளின் நுனியில் பிரகாசமான வெண்ணிறங்கொண்டபூக்கள்

10-20 வரை உண்டாகும். சாமானியமாய் எளிதில் பயி ராகும். "மழைத்துளியை எதிர்கொண்ட முல்லையின் அரும்பு மலர்ந்த மணமும், தேன் மணக்கும் வண்ணம் நெருங்கித் தோன்றும்" என்று ஒரு குறுந்தொகைப் பாட்டு இதைச் சிறப்பித்துக் கூறும். தடித்த இலை, முல்லை போன்றது. பூவின் மேற்புறம் வெண்ணிறம். அடிப்புறம் சிவப்பு; இதுபற்றியே செம்முல்லை என்ற பெயர் வந்திருக்கக்கூடும். பூக்கும் நேரம் காலை 6 மணி. பூவில் 12 இதழ்கள். அரும்பானது மென்மையாய்க் கூராயிருத்தல் பற்றி இதையே **ஊசி மல்லிகை** என்றும், **ஈர்க்கு மல்லிகை** என்றும் சொல்வதுண்டு. இதுவே இலக்கியங் கூறும் கொகுடியாதல் கூடும். **செப்பு மல்லிகை** என்பதுவும் இதுவே. **தங்க மல்லிகை** என ஆங்கிலத்தில் சொல்வார்கள். இதழ்கள் மெலிந்து நீண்டவை. பம்பாய் மல்லிகை என்றும் கல்கத்தா மல்லிகை என்றும் இதுவே நம் நாட்டில் வெவ்வேறு இடங்களில் வழங்குகிறது.

### நித்திய மல்லிகை

இந்தக் காலத்தில் மல்லிகை என்றாலே இந்த மல்லிகை தான். சிறு மல்லிகை என்றும் சொல்லப்பெறும். நித்தமும் ஓயாது அதிகம் பூப்பதால் இந்தப் பெயர். பந்தலில் வெகுதூரம் அடர்ந்து பரவி மிகப் பலவருஷகாலம் பூத்துக் கொண்டே யிருக்கக்கூடிய பெருங் கொடிவகை. பூக்கிற நேரம் இரவு 7 மணி. 8 இதழுடைய நறுமணமுள்ள பூ. கொடி அதிகம் ஓடினால்தான் நன்கு பூக்கும். ஆதலால் மிகப் பெரிய பந்தல் அவசியம். படர விடும்போது அடிப்புறம் அதிகம் தளிர்கள் வராதபடி ஒடித்துவிட்டு, உச்சியில் பந்தல் மட்டத்தில் புதுத் தளிர்கள் வரும்படி பார்க்கவேண்டும். எப்போதும் அதிகம் பூக்குமாயினும், தை - பங்குனி, ஆடி - ஆவணி மாதங்களில் மிகுதி. ஆகவே இதற்கு ஒரு மாதம் முன்பே தண்ணீரைக்குறைத்து, நன்கு எருவிட்டுக் கொத்துவது அவசியம். கோணல் மாணலான கிளைகளையும், பெரும்

கிளைகளையும் பூக்காமல் அப்படியே நின்றுவிடும் கிளைகளை யும் பலமற்ற கிளைகளையும் கத்தரித்தால் போதும். மற்றப் படி கத்தரிப்பு அவசியமில்லை. விற்பனைக்காகப் பூ தரக் கூடிய வகைகளில் இது முக்கியமானது. இதன் இலை முப்பிளவான பச்சைநிற இலை.

### பிச்சி

பண்டைத் தமிழ் நூல்களிலே மிகவும் சிறப்பாகக் கூறப்பெற்றது பிச்சி. பித்திகம் பித்திகை என்று இலக்கி யங்களில் வழங்கும். திருநெல்வேலி நாகர்கோவில் பகுதி களில் பிச்சி என்ற பெயரே இன்று வழங்குகிறது. மற்ற இடங்களில் இதையும் சாதிமல்லிகையையும் ஒன்ரு கவே கருதுவார்கள். இதன் பூவும் சாதிமல்லிகை போலவே அகலமான ஐந்து இதழ்; சிறந்த மணம். இலை பல பின்ன இலை. சிறு பந்தலில் அளவாய்ப் படர்ந்து அதிகம் பூக்கும். பராமரிப்பு அதிகம் தேவை. பழைய கொடிப் பகுதிகளை அடிக்கடிக் களையவேண்டும். கத்த ரிப்பு முக்கியம். பூக்கும் நேரம் மாலை 6 மணி. சுமாரான அளவில் எப்போதும் பூக்கும். மிகச் சிறந்த மணமுடை யது. சாதி மல்லிகையிலிருந்து இதை வேறு பிரித்துக் காட்டும் அம்சம் இதன் நிறம். இதன் உட்புறம் வெண்மை; வெளிப்புறம் கரும் ஊதா; அரும்பில் இவ்வேறுபாடு சிறப் பாய்த் தெரியும். இதுபற்றி இலக்கியங்களில் இது கருமுகை எனவும் கூறப்பெறும். ஓரங்குல நீளமுள்ள மெலிந்த கூர்மையான அரும்பு. 'பெருந்தண் மாரிப் பேதைப் பித்திகத்து, அரும்பே முன்னும் மிகச் சிவந் தனவே' என்ற குறுந்தொகைப் பாடல், பிச்சி சிவந்த அரும்பு, மாரியில் மலரும் என்று குறிப்பிடுகிறது.

### மஞ்சள் மல்லிகை

மரம்போன்ற அழுத்தமான பெருங்கொடி; வெகு தூரம் நீண்டு உறுதியாய்ப் படரும். நுனிக்கிளை நேரே

செங்குத்தாய்க் கீழ்நோக்கி பல அடி நீண்டு தொங்கும். கொடியின் உறுதிக்கு ஏற்றவாறு இது சமவெளிகளில் அதிகமாய்ப் பூப்பதில்லை. நித்திய மல்லிகைபோன்ற பின்னமான சிறிய மூவிலை கொண்டது. சற்றே மங்கலான நிறமுடைய இலை. மற்ற மல்லிகைகளோடு சேர்த்து இதைப் பயிரிடக்கூடாது; அவற்றை இது அமுக்கிவிடுமாதலால்.

### மன்மத பாணம்

ஒரு விசேஷமான மல்லிகை வகை. மல்லிகைபோன்ற பெரிய இலைகள், சற்றே வெளுப்பானவை. குத்துச் செடியாகவும், சொற்ப அளவு கொடியாகவும் இருக்கக்கூடியது. எந்தப் பருவமும் பூக்கும். 7-8 இதழ்கள். பூக்கிற நேரம் காலை 7 மணி. இதழ்கள் ஓரங்குல நீளமிருக்கும். தூய வெண்ணிறம். சுமாராய்ப் பூக்கும். வளைப்புப் பதியன் போட்டுச் செடி உண்டாக்கலாம். சொற்பப் பராமரிப்பில் நன்ருகப் பயிராகும். **படர் மல்லிகை** என்பது இதன் மற்ருெரு பெயராகும்.

### ராம பாணம்

இது முற்கூறிய மன்மத பாணம் போன்றதே. பெரிய இலைகள், வெளுத்த நிறம். நன்ருகத் தழைக்கவல்ல சிறு கொடி. அதிக மென்மையாயிராமல் சற்று உறுதியுடையது. எப் பருவத்திலும் அதிகமாய்ப் பூக்கும். சொற்ப காலத்தில் நிரம்பப் பூக்கும். அரும்புகள் காலை 7 மணிக்கு இதழ் விரியும். தூய வெள்ளைநிறம். நல்ல மணம். இதழ்கள் $1\frac{1}{2}$-2 அங்குல நீளம். நீண்ட கூர்மையான அரும்பைக் கருதி, இதற்கு ராம பாணம் என்ற பெயர் வந்ததுபோலும். பூவிலிருந்து இதழ்கள் நீண்டு தொங்குவது சிலந்திப் பூச்சி போல விசித்திரமாயிருக்கும். வளைப்புப் பதியன் எளிதில் வேர்பிடிக்கும். கவனமான கத்தரிப்பு நல்லது. தொட்டியிலும் நன்குப் பயிராகிப் பூக்கும். அதிகம் பயிரிடத் தகுந்தது.

## முல்லை

தமிழ் நாட்டில் பூக்களில் தாமரைக்கு அடுத்தபடி சிறப்பான இடம் முல்லைக்குரியது. முல்லையின் பெயர் களில் கற்பு என்பது ஒன்று. வட்டமான தடித்த மங்கலான நிறமுடைய சிறு இலைகளுடன் உறுதியாக வளரக்கூடிய கொடி. பந்தலிலும் படரும், குத்துச் செடியாகவும் வளரும். அதிகம் படராது. வருஷமொருமுறை கத்தரிப்பது முக்கியம். ஏறக்குறைய வருஷம் முழுமையும் பூக்கவல்லது. சிறிய பூக்கள், மணம் சிறப்பானது. எனினும் அதிகம் பூக்காமையால், உண்மையான முல்லைக்கொடி எப்படியோ நம்மிடையே மிகவும் அருகி வருகிறது. நந்தவனம் போன்ற இடங்களில்தான் இதை அருமையாகப் பார்க்க முடியும். எனினும் பயிரிடுவது மிக்க எளிது. வளைப்புப் பதியன் எளிதில் வேர்விடும். பிரித்தெடுத்து வைத்தால் நன்ருயும் வளரும். பூக்கிறதில்தான் கஷ்டம். கவனித்துக் கத்தரிப்பு, எருவிடுதல், கொத்துதல் இருந்தால்தான் நன்கு பூக்கும்.

## வனமுல்லை

வனமல்லிகை முதலான பல பெயர்களில் இது வழங்கு கிறது; காவேரித் தண்ணீர் பாயும் இடமெங்கும், வாய்க் கால் வரப்புக் கரைகள் எங்கும், இது வேலியிலும் புதரி லும், முள்ளிலும், கள்ளியிலும், காரையிலும், சூரையிலும், மரத்திலும் படர்ந்து கணக்கின்றிப் பூத்திருப்பதை இன்றும் காணலாம். சிறப்பாக ஆடி - புரட்டாசி மாதங் களில் இது அமோகமாய்ப் பூத்து வயற்புறமெங்கும் சுகந்த மான மணம் கமழச் செய்கிறது. இப்படித் தானுக இது பூத்துக் குலுங்குவதைப் பார்க்கும்போது, பாரிவள்ளல் இது படரத் தன் தேரையே அளித்துவிட்டான் என்ற செய்தி உண்மையே மிகையல்ல என்றே நாம் ஒப்புக் கொள்வோம். மிகவும் மெலிந்தது; ஆனல் உறுதியானது.

கருநிறக் கொடி. மிகவும் சிறிய கருநிற இலைகள். தானாக வளர்ந்திருக்குமிடத்தில் மிக்க செழிப்பாக வளர்ந்திருக்கிறது. எட்டின உயரம் படர்ந்து, எல்லாச் செடிகளுக்கும் மேலே தலையை நீட்டிப் பூக்கிறது. இருபதடி வளர்ந்த கள்ளியின் உச்சியில் இதைக் காணலாம். பூ நுனிக்கொழுந்தில். கொத்தான பூக்கள். மாலை 7 மணிக்குப் பூக்கின்றன. மெலிந்து நீண்ட 9 இதழ்கள். மிகவும் அழகுடையன. புதர்களில் இது பூத்திருப்பது, இரவு நேரத்தில், கரிய இலைகளின் மத்தியில் வெண்ணிறமாக மிக்க அழகாகவும், பிரகாசமாகவும் தோற்றும். இவ்வளவு சிறப்பாயிருந்தும் இதை யாரும் விரும்பிப் பயிரிடுவதில்லை. தன்னிச்சையாய்க் காட்டுச் செடியாகவே வளர்கிறது.

இதன் சிறிய இலைகளை மென்று தின்றால் நண்டுத் தெறுக்காலின் விஷம் நீங்குமென்று சொல்வார்கள்.

எருமை முல்லை என்பது நூல்களில் பயிலும் ஒரு வகை. மேலும் சில வகைகள் உள்ளன. சிறப்பின்மை கருதி இங்கு அவை விடப்பட்டன.

## 4

# செம்பரத்தை

செம்பருத்தி என்றும் சொல்லப்பெறும். செம்பருத்தி என்ற பருத்திச் செடியிலிருந்து வேறு பிரித்துக் காட்டும் பொருட்டு செம்பரத்தை என்ற பெயரையே இங்கு உபயோகிக்கிறோம். மிகச் சாதாரணமாய் எல்லா நந்த வனங்களிலும், பூந்தோட்டங்களிலும் காணலாம். சாதா ரண உயரம் 8-10 அடி. சில வகைகள் 10 அடிக்குமேலும் வளரும். அடியிலிருந்தே அனேகக் கிளைகள்விட்டுப் பெரிய புதராக வளரும். வருஷ முழுவதும் விடாமல் பூத்துக் கொண்டே யிருக்கும். பூக்கள் காலையில் மலர்ந்து மாலையில் வாடி உதிரும். பூசைக்கு உபயோகமாகும். நம் நாட்டில் இது காய்ப்பதில்லை. நறுக்குப் பதியன் அல்லது வளைப்புப் பதியன் போட்டு எளிதில் செடி உண்டுபண்ணலாம். தனிச் செடிகளாக நட்டுக் கத்தரித்து விடுவதற்கும் தொட்டியில் பயிரிடுவதற்கும் தகுந்தது. பராமரிப்பின்றியே நன்றாய் வளரும். கிரமப்படி சிறிது தண்ணீர் பாய்ச்சி எருவிட்டு வந்தால் ஏராளமாய்ப் பூக்கும்.

**பெயர் :** பல பாஷைகளிலும் இதற்குப் பற்பல அழ கான பெயர்கள் வழங்குகின்றார்கள். ஹரிவல்லபா, அர்க் கப்பிரியா, சூர்யா, தாசானி முதலியன இதன் பெயர்கள். ஹிந்தியில் இதற்கு **ஜெபகுசுமம்** என்று பெயர் வழங்கும். இதன் வேர், இலை, பூ, மொக்கு முதலியன யாவும் நாட்டு வைத்திய முறையில் உபயோகமாகின்றன. ஆங்கிலத்தில் இப்பூவுக்கு ஷூ பிளவர் என்ற பெயர் உண்டு. ஷூ என்றால் செருப்பு. சென்னையில் செருப்பைச் சப்பாத்தி என்பார்கள். அது காரணம்பற்றி இவ்வழகிய பூவைச் சப்பாத்திப் பூ என்றும் சொல்கிறார்கள் !

**விதை :** செம்பரத்தை, பொதுவாய்க் காய்க்கக்கூடியதாயினும், நம் நாட்டில் காய்ப்பது அபூர்வம். ரோஜாநிறச் சிறிய வகைமட்டும் காய்ப்பதுண்டு. விதை வெண்டை விதைபோலிருக்கும். விதை மூலம் புது ரகங்கள் உண்டு பண்ணுவது சாத்தியம்.

**பூவின் பிரகாசம் :** சில ரகப் பூக்களின் மேற்புறத்தில் வெல்வெட்போன்ற ஒரு பளபளப்பும் பிரகாசமும் காணப்படும். இந்தப் பிரகாசம், குறிப்பிட்ட ரகத்தை மிகவும் உயர்ந்த ரகமாக்கும். பின் கூறப்படும் ஒற்றையிதழ் ரோஜாநிறப் பெரிய பூவில் இந்தப் பிரகாசம் காணப்படும். வேறு ரகங்களிலும் இது உண்டு.

சிவப்புச் செம்பரத்தை குளிர்ச்சி, கூந்தல் வளரச் செய்யும் என்று நம்மவர் கருதுவார்கள். பூவை உலர்த்தித் தேங்காயெண்ணெயில் போட்டு வைப்பதுமுண்டு.

## வகைகள்

எண்ணற்றன. பூக்களின் பெரிய அளவையும், எக்காலத்திலும் பூக்குந் தன்மையையும் கருதினால், சிறிய தோட்டம் முதல் பெரிய தோட்டம்வரை, பயிரிடுவதில் இதற்குச் சமமானசெடி வேறில்லை எனக் கூறலாம். மணம் இல்லை, பூத்த அன்றே வாடி விடுகிறதென்பதே இதனிடமுள்ள குறை; பூத்துச் சில நாள் மட்டும் வாடாமல் இருந்தால், பூ உலகத்திலேயே இதற்குச் சமமான பூ இல்லை. வெள்ளை, மஞ்சள், காவி, சிவப்பு, ரோஜா, நீலம் எனப் பல வகைகள். ஒற்றை அடுக்கு என்பன வேறு. மத்தியில் கறுப்பும், வெண்ணிறமு முடையவை, இல்லாதவை என வேறு. முக்கியமான சில வகைகளைப் பற்றிய குறிப்பைப் பின்னே காணலாம்.

## ஒற்றை

**சிமிக்கிச் செம்பரத்தை :—** இலைக் கணுவிலிருந்து தனித் தனிப் பூக்களாகக் கீழ்நோக்கித் தொங்கும். ஏராளமாய்ப்

பூக்கும். சிவப்பு நிறமுடைய பூ. இதழ்கள் கீழே போய் மேல்நோக்கி வெளிப்புறமாய் வளைந்து இருக்கும். ஐந்து ஒற்றையிதழ்கள், நடுவில் மகரந்தக் காம்பு ஊசலாடும். இது சிமிக்கி என்ற அணிகலன்போல் உள்ளதால் இதற்குச் சிமிக்கிச் செம்பரத்தை என்ற பெயர் வந்தது. இதிலும் இரண்டு விதங்கள் உள்ளன. ஒன்று முழுச் சிவப்பானது. மற்ருென்று உட்புறம் சிவப்பு, வெளிப்புறம் சிறிதுவெள்ளை கலந்தது; ஓரம் கத்தரித்து விட்டதுபோல் வளைவு நெளிவுள்ளது. இரண்டும் சிறிய பூக்கள். நீண்டகிளைகள்; வெகு தூரம்வரை நீண்டு வளைந்து தரையில் கவிந்து இருக்கும். இது மிகவும் பழமையான வகை.

**வெள்ளை :** இந்த வகையைச் சேர்ந்த செடிகள் மெல்லிய சிறு செடிகள். சிறிய வெளிரான இலைகளுடையவை. வருஷம் முழுவதும் பூக்கும். ஆனல் அதிகமாய்ப் பூக்க மாட்டா. வெள்ளைப் பூவிலும், கூடப் பல ரகங்கள் இருக்கின்றன. ஒன்று அகலமான இதழுள்ள பெரிய பூவுடையது. நடுவில் மட்டும் கரும் சிவப்பு. பூ நேரே மேல்நோக்கித் தூக்கிநிற்கும். மற்ருென்று இதனிலும் சற்றே பழுப்பு நிறமுள்ள இதழ் உடையது. நடுவில் தூயவெள்ளை. பூ முற்றிலும் விரிந்து அகன்றிராமல் சிறிது சுருங்கியிருக்கும். இவ்விரு வகைகளும் கத்தரித்து விடுவதற்கேற்றவை. மழைக்கால ஆரம்பத்தில் கத்தரித்து எருவிட்டுக் கொத்தவும். வளைத்துப் பதியன் போட்டால் சுலபத்தில் வேர் பிடிக்கும்.

**மஞ்சள் :** மிக அழகான பூ. தூய மஞ்சள் நிறமுள்ள பெரிய இதழ்களுடையது. பூ நன்ருய் விரிந்து இருக்கும். மேலே தூக்கி நிற்கும். நடுவில் மட்டும் கரும் சிவப்பு. பதியன் எளிதில் பிடிக்கும். வளைத்தும்போடலாம். கருமையான தடித்த இலைகளுடையது. ஏராளமாய்ப் பூக்கும். எருவும் தண்ணீரும் அதிகம் தேவை. இவ்வகை அதிகம் உயர்ந்து வளராமல் புதராகக்கிளைத்துத் தாழ்ந்து தொங்கும்

இயல்புடையது. ஒற்றைத் தண்டுடைய செடியாக இது வளராது.

**காவி** :—வெளுத்த சிறிய இலைகளுடையது. உயர்ந்து வளரும். பருவத்தில் எப்பொழுதும் மற்றவற்றுக்குப் பிந்தியே பூக்கும். பூ நடுத்தரமான அளவு, காவி நிற இதழ் கள், நடுவில் கரும் சிவப்பு. பொழுது விடிந்து சற்றுநேரம் கழித்து இதழ்கள் விரியும். பயிராக்குவது எளிது. கத்தரித்துவிட்டால் அடர்ந்த குத்துச்செடியாக இருக்கும்.

**ரோஜா நிறம்** :—மிகச் சிறந்த பெரிய பூக்களில் ஒன்று. மற்றெல்லா ரகங்களையும்விடப் பூ பெரியது, செடி பெரியது. ரோஜாவிலும் பார்க்க அழகான நிறமுடையது. மேன்மை யான கவர்ச்சி நிறைந்த பூ. ஏராளமாய்ப் பூக்கும். இலை கள் பெரியவை. செடி மரமாக வளரக் கூடியது. 10–12 அடி சாதாரணம். எளிதில் வேர் பிடிப்பது இல்லை. எல்லா ரகங்களிலும் இதுவே கடைசியாய் இதழ் விரியும்; காலை சுமார் 8 மணிக்கு. இதில் சிறிய ரகம் ஒன்று உண்டு. அதன் பூக்களும் இலைகளும் சிறியவை, செடியும் சிறியது. 6 மணிக்கே மலர்ந்துவிடும். இந்த ரகம் சாமானியமாய்க் காய்ப்பதுண்டு. வெண்டை போன்ற விதை.

**வெண் சிவப்பு** :—பல ரகங்கள். யாவும் சிறிய செடிகள். சிறு பூக்கள். எளிதாகப் பயிரிடலாம்.

**சிவப்பு** :—நம் மனத்தில் சிவப்பு நிறத்தில் எத்தனை நிற பேதங்களைக் கற்பனை செய்ய முடியுமோ, அத்தனையும் அத்தனை ரகங்களாகச் செம்பரத்தையில் காணலாம். நன்றாய்ப் பயிராகும் ரகங்கள் நான்கு உள்ளன.

முதலாவது சாமானியம். இதழ்கள் சற்றுப் பின்புறம் வளையும். பின்புற ஓரத்தில் வெள்ளை காணப்படும். செடி அதிக உயரம் வளராமல் அடர்த்தியாய்த் தழைக்கும். விரை வில் வளரும். ஏராளமாய் எப்பொழுதும் பூக்கும்.

இரண்டாவது இது போலவே. ஆனால் நிறம் இன்னும் கரும் சிவப்பாய் அதிகக் கவர்ச்சியாய்க் காணப்படும்.

சிறந்த வகை. இவை இரண்டும் நன்கு வளரவல்ல நடுத்தரச் செடிகள்.

மூன்ருவது பெரிய செடி, கரிய இலைகள், அதிகஉயரம் வளரும், ரத்த நிறமுடைய பூக்கள். எப்பொழுதும் ஏராளமாய்ப் பூக்கும். இந்த மூன்றும் நடுத்தர அளவுள்ள பூக்கள்.

நான்காவது ரகம் குழாய்ச் செம்பரத்தை. மிகவும் பெரிய பூ, மிகவும் பெரியசெடி. இதழ்கள் பின்புறம் வளையாமல் நேரே நிற்கும். மிகச் சிறந்த ரகம். கிளைகள் நீண்டு நேரே நிற்பதோடு, செடியும் அதிக உயரம் வளரும்.

இந் நான்கு ரகங்களையும் பதியன் போட்டால் எளிதில் வேர் பிடிக்கும். அதிகப் பராமரிப்பு இல்லாமலேயே நன்கு வளர வல்லவை.

**சிவப்பு இலைச் செம்பரத்தை**:—சாதாரணச் சிவப்பு நிற ஒற்றையிதழ்ப் பூவுடையது. அவ்வளவு சிறப்பானதன்று. ஆனல் இதன் இலைமட்டும் சிவப்பு நிறம் படர்ந்து காட்சியளிக்கும்.

**நீலச் செம்பரத்தை**:—சிறிது மங்கலான நீல நிறமுள்ள ஒற்றையிதழ்ப் பூக்களோடு கூடிய மிகவும் மெலிந்த சிறு செடி. வெயிலில் நன்ருய்ப் பயிர் ஆகாது. மிகச் சிறிய கருமையான இலைகள், கிளைகள் மிக மெல்லியவை. வருஷமிருமுறைதான்—ஆவணி தைப் பருவங்களில்—பூக்கும். பூவின் நடுவில் கருஞ் சிவப்பு நிறம். மகரந்தக் காம்பும் தாளும் வெள்ளை நிறமாயிருக்கும். தொட்டியில் கவனமாய்ப் பயிரிட்டால் நன்கு வளரும். ஸிரியா-செம்பரத்தை என்றும் சொல்லப்படும். பதியன் போடலாம். சிறிய செடி, 5 அடி உயரம். இது மிகவும் அபூர்வமானது. வெள்ளை வண்டுகள் இதற்கு மிக்க ஆபத்து விளைவிக்கும்.

## அடுக்கு இதழ்

செம்பரத்தைகளில் அடுக்கு வகைகள் மிகவும் சிறப்பானவை. அழகிலும், நிறக் கவர்ச்சியிலும் இவை தோட்

டத்தில் இணையற்றுப் பொலியும். மற்றபிரிவைப் போலவே இதிலும் எண்ணற்ற ரகங்கள் உள்ளன. அடுக்குப் பூக்களில் முக்கியமாக இரண்டு பிரிவுகள் குறிப்பிடத்தக்கன. பூ பெரியதாய் வட்ட வடிவ இதழோடு கூடியது ஒன்று. இதில் எல்லா இதழ்களும் சம அளவாய் அடுக்காய் இருக்கும். மற்ற வகை இதழ்கள் சுருண்டது; அடுக்காய் இராமல் பல பூக்கள் ஒன்ருகக் கொத்தாய்த் திரண்டது போலிருக்கும்; இதில் ஐந்து பெரிய மகரந்தக் கம்பிகள் தனிப்படக் காணப்படும்.

**பழைய சிவப்பு :**—நந்தவனங்களில் காணப்படும் பெரிய செடி, பெரிய பூ. பூ, அடுக்கான முதல் பிரிவு. கரும் சிவப்பு நிறம். எப்போதும் ஏராளமாய்ப் பூக்க வல்லது.

**பட்டுச் செம்பரத்தை:**—12 அடிக்கு மேலும் அதிக உயரம் வளரக் கூடிய மிகவும் உறுதியான செடி அல்லது மரம். மிகவும் அதிகமாய்ப் பூக்கும். ரோஜாவுக்கும் சிவப்புக்கும் இடைப்பட்ட நிறம். இதன் கிளைகள் பெரிய கோயில்களிலுள்ள அடுக்குத் தீபம் போல் அடிமரத்திலிருந்து வளைந்து தொங்கும். நுனியில் பூ. கருமையான இலைகள் எப்பொழுதும் நன்ருய்ப் பூக்கும். பதியன் மிக்க எளிதில் வேர் பிடிக்கும். பருத்திக் கரு வண்டு இதில் அதிகம்.

**அரத்தச் செம்பரத்தை :**—மிகவும் கருமையான நிறமுடைய பூக்கள், ஏராளமாய் எப்பொழுதும் பூக்க வல்லது. சிறிய பூ. விரைவில் உயர்ந்து வளரும் சிறு மரம். ஆனல் மெலிந்திருக்கும். கவனிப்பு அதிகம் தேவையில்லை.

**பெருஞ் சிவப்பு :**—மேற் கூறியவை யன்றி வேறு எண்ணற்ற சிவப்பு வகைகளும் உள்ளன. ஒன்று மிகவும் பெரிய பூ. பிரகாசமான நிறம், அடுக்கிதழ். இதழின் வெளிப்புற ஓரம், ஒரு பாதி வெண்ணிறம் ஓடும். இதே போல சிறிய பூவுடைய ரகம் ஒன்றும் உண்டு. இந்த இரண்டு ரகங்களும் மெலிந்த செடிகள், அதிகக் கவனிப்பின்மேல்தான் செழித்து வளரும்.

**இரு நிறம்** :—சிவப்பு-வெள்ளை நிறம் கலந்து தனியிதழ்கள் முறுக்கியபடி இருக்கும். விசித்திரத் தோற்றமுடையது, மெலிந்தது, வெண்ணிற் இலை. கவனிப்புத் தேவை. வெள்ளை வண்டு பேராபத்தானது.

**மற்றவை**:—சிவப்பில் இவையன்றி வேறு அனேக ரகங்களும் உள்ளன.

**ரோஜா நிறம்** :—மிகவும் பெரிய பூ, அதிகமாய் எப்போதும் பூக்கும். பூவின் இதழ்கள் வெண்மை கலந்த ரோஜா நிறம். நடுவில் சிறிது அதிகச் சிவப்பு. பல அடுக்கிதழ்கள். சிறிய இலைகள், மற்றவற்றை விடச் சிறிது வெண்மையானவை. மேற் சொன்னவைகளைப் போல் அதிகத் தூரம் கவியாது, நாலடி உயரம் வரை கிளைக்க விடாமல் வளர்த்துப் பிறகு கிளைக்கச் செய்தால், நன்ருய் அடர்ந்து தழைக்கும். செடி அழகானது.

**காவி** :—மிகவும் அழகான பெரிய கவர்ச்சிகரமான காவி நிறப்பூ. வருஷ முழுவதும் ஏராளமாய்ப் பூக்கும். இதழ்கள் பல அடுக்குகளையுடையவை, மிக மெல்லியவை, செடி வெண்ணிறமானது. ஆனல், நன்ருய்ச் செழித்து வளர வல்லது. எளிதில் பதியன் பிடிக்கும், வளர்ச்சி கோணல் மாணலானது.

**பழ மஞ்சள்** :—மிகப் பெரிய கவர்ச்சிகரமான மஞ்சள் நிறப் பூ, தடிப்பான பழம்போன்ற மஞ்சள் இதழ்கள். செம்பரத்தை ரகங்கள் பலவற்றுள்ளும் இதுவே மிகவும் அழகுடைய பூ. ஏராளமாய்ப் பூக்கும். பதியன் எளிதில் பிடிக்கும். தக்கபடி பராமரித்தல் வேண்டும், பராமரிப்பு இல்லாவிட்டால் பூக்கள் அரும்பாகவே வெம்பிக் கொட்டிவிடும். கத்தரித்து அழகான குத்துச்செடியாக வளர்க்க முடியும்.

**சுத்த மஞ்சள்** :—மிகவும் மெலிந்த செடி, பெரிய அடுக்கிதழ்ப் பூ, சுத்தமான மஞ்சள் நிறம், நடுவில் கறுப்பு. அதிக கவனிப்புத் தேவை. பூச்சி அதிகம்.



செம்பரத்தை (பழ மஞ்சள்)
(48-ம் பக்கப் படம்)



வெள்ளை ரோஜா
(60-ம் பக்கப் படம்)



போகன் வில்லா
(66-ம் பக்கப் படம்)



**காசித் தும்பை (அடுக்கு)**
(71-ம் பக்கப் படம்)



**காணு வாழை**
(75-ம் பக்கப் படம்)

**சிவப்பு - மஞ்சள் :**—அருமையான புது ரகம். மொக்கு சிவப்பாய்த் தோன்றும், விரிந்தவுடன் இதழ்கள் உட்புறம் பழ மஞ்சள் நிறமாயும், வெளிப்புறம் சிவப்பாயும் தோன்றும். உயர்ந்து வளரும், அதிகக் கவனிப்புத் தேவை. வேர்க்கறையான் ஆபத்தானது.

**அடுக்கு மஞ்சள் :**—முன் கூறிய பழ மஞ்சள் போன்றது. அதைவிடச் சிறிய செடி, சிறிய பூ. காவி கலந்த தோற்றம், கூட்டுப்பூ அல்லாமல் தனிப் பூவாக இருக்கும். இலை சுருட்டும் புழுவும், வெண்ணிற வண்டும் அதிகம். வருஷத்துக்கு ஒரு முறை கத்தரித்து விட்டால் நன்கு தழைத்துப் பூக்கும்.

### சிறு மர வகைகள்

மேற் கூறியவற்றுள் சில வகைகளை மிக எளிதில் சிறு மரம் போல், புதராக இராமல் ஒற்றை அடிமரத்தோடு வளர்ந்து உயர்ந்து உச்சியில் நிரம்பப் பூக்களைத் தாங்கி நிற்கும்படி செய்யலாம். அதற்குப் பின்வரும் வகைகள் (யாவும் முன்னமே கூறப் பெற்றவை) ஏற்றன:

**ரோஜா நிறம் :**—ஒற்றை 3–10 அடி உயரம் வரை கூட எளிதில் வளர்க்கலாம், மிகவும் எழில் மிகுந்த பூ.

**ஒற்றைச் சிவப்பு :**—சிவப்பில் நான்காவது பெரிய வகை, உயரம் 15 அடி, எளிதில் மரம் போல் வளர்க்கலாம், மிகவும் பெரிய பூ, ஏராளமாய்ப் பூக்க வல்லது.

**பட்டுச் செம்பரத்தை :**—15 அடி வரை வளரும், மிக்க எளிதில் பருத்த மரமாகி விடும், அளவில்லாமல் பூக்கிற அடுக்குப் பூ, எளிதில் பதியன் பிடிக்கும்.

**அரத்தச் செம்பரத்தை ;**—15 அடி, மிக்க எளிதில் உயர்ந்து மரமாகி விடும். ஆனல் மெலிந்த மரம், பூ ஏராளம், பதியன் மெதுவாய்த் தான் வேர் பிடிக்கும்.

இவற்றோடு முற்கூறிய **பழைய சிவப்பு, பெருஞ் சிவப்பு** என்ற இரண்டும் சேர்க்கத் தக்கவை. இவை 8 அடிவளரும்.

இப்படிப்பட்ட சிலவகைகளை ஒரு மரம் போல ஒரே அடி மரம் உடையனவாக வளர்த்தல் முடியும். கூடுமான வரையில் நேரான அடி மரம் உடைய செடியைத் தேர்ந்தெடுக்கவும். தூறிலிருந்து விடும் கிளைகளையும் அடிமரத்தில் கிளைக்கும் தளிர்களையும் கத்தரித்து எறியவும். பற்றுக் கோடாக ஒரு தடித்த கொம்பு நட்டு அதனுடன் சேர்த்துக் கட்டவும். ஒரே கிளையாக வளர்க்கவும். விரும்பிய உயரம் வளரட்டும். 5 அடி அல்லது 6 அடி வளர்ந்த பின் உச்சியில் நாலு இலை இருக்கும்படியாகக் கிள்ளி விடவும். உடனே உச்சியில் பத்துக் கிளைகள் உண்டாகும். அவற்றில் தேவையானவை மட்டும் வைத்துக் கொள்ளவும். உச்சியைத் தவிர்த்துக் கீழே பக்கக் கிளைகள் கிளம்பினுல் அவ்வப் போது களையவும். களையும்போது அடிமரத்தோடு ஒட்டிக் களையவும். இவ்விதம் செய்தால் உச்சியில் தழைத்த மரம் போன்றபகுதி மட்டும் நிற்கும். இவ்வாறு வளர்ந்த மரங்கள் நடை பாதையின் பக்கத்தில் 4 அடி தள்ளி நட்டு இருப்பது மிக்க அழகு தரும். சிறு செடிகளையும் பூண்டு களையும் இவற்றின் பக்கத்தே அமைக்கலாம்.

### பூச்சிகள்

எல்லா வகைச் செம்பரத்தைக்கும் வெண்ணிறச் சிறு வண்டு அல்லது சிறு பூச்சி யொன்று வருகிறது. பயறு அளவில் இருக்கும், பறக்கும். இரவில் வந்து இலையின் மேல்புறம் அரிக்கும்; பகலில் வந்து கீழ்ப்புறத்தை அரிக்கும். அடுக்கு மஞ்சள், பெரிய சிவப்பு ஒற்றை, பட்டுச் செம்பரத்தை - இவற்றில் எந்நேரமும் பூவையும் மொக்கையும் அரிக்கும். முக்கியமாக நீலச் செம்பரத்தையிலும், இருநிறச் செம்பரத்தையிலும் இலையே இல்லாதபடி தின்றுவிடுகிறது. பகலில் பார்த்தால் சில பூச்சிகள் மண்ணின் கீழே ஒளிந்துகொள்ளும். பூச்சி கொழுந்தில் இராது, கொஞ்சம் முற்றின இலையைத்தான் தின்னும். டீ. டீ. டி. மருந்துத்தூள் தெளிப்பதும் மருந்து நீர் அடிப்பதும்

ஒழிக்கும் முறை. மற்றப்படி, பூச்சியைப் பார்த்துக் கையால் நசுக்குவதே சரியான முறை.

இப்பூச்சிகள் காணப்படும் பிற வகைகள் :—நீலம், மஞ்சள் ஒற்றை, காவி ஒற்றை, ரோஜா நிற ஒற்றை, மஞ்சள் அடுக்கு என்பன. தினமும் முறையாகச் செடிகளும் இலைகளும் நனையும்படி பீச்சுங்குழலால் நீர் அடித்தால் இத் தொந்தரவுகள் சற்றே குறையும். பருத்தியில் விழுகிற மற்றொரு பெரியவண்டு பூவைத் தின்றுவிடும். சிவப்பும் கறுப்புமாய் $1\frac{1}{2}''$ நீளமுள்ள பெரிய வண்டு; கையால் பிடித்துக் கொல்லவும்.

### சுருள் செம்பரத்தை

செம்பரத்தை யினத்தைச் சேர்ந்த அழகான செடி. 6-8 அடி உயரம், கோணல் மாணலாய் வளரும். எளிதில் பயிராகும், நறுக்கு அல்லது வளைப்புப் பதியன், ஆண்டு முழுமையும் ஏராளமாய்ப் பூக்கும். பூக்கள் ரத்தச் சிவப்பு நிறம், மிகவும் பிரகாசமானவை. பலநாள் உதிராமலே இருக்கும். பூவின் இதழ்கள் விரியாமல் சுருட்டிக் கொண்டு விறைப்பாய் நிற்கும், சுருண்ட இதழ்களின் நடுவில் மகரந்தம் தங்கிய கம்பி தலையை நீட்டிக் காட்டும்.

செடி இலையுதிர்க்காது, என்றும் பசுமையாய் இருக்கும். கத்தரித்து விட்டால் அடர்த்தியாய்த் தழைத்துப் பூக்கும்.

பூத்த பூ மிளகாய்ப் பழம் போலிருக்கும். அதுபற்றி இதை மிளகாய்ப் பூ, மிளகாய்ச் சப்பாத்திப்பூ என்றும் சொல்வார்கள்.

**வகைகள் :**—பல உள்ளன. மேற்கூறியது, மூன்றங்குல நீளமுள்ள பூ, ஏராளம். நிறம் இரத்தச் சிவப்பு. இரண்டாவது அதே நிறத்தில் 1″ நீளப் பூவுடைய சிறு செடி. இது அதைவிட மிகவும் சிறிய செடி. பூவில் சிவந்த இதழ் பாதியும் பச்சை நிறப் புறவிதழ் பாதியுமாக இருக்கும். இவை அன்றி, ரோஜா நிறத்தில் சிறு பூவுடைய வேறு வகைகளும் உள்ளன.

## 5

# ரோஜா

"பூவெனப்படுவது பொறி வாழ் பூ" என்று தாமரையை நாம் கொண்டாடுவதுபோல, பிற நாடுகளிலும் வட இந்தியாவிலும் ரோஜாவை மிகவும் போற்றிக் கொண்டாடுகிறார்கள். சில வகை ரோஜாக்கள் நம் நாட்டில் கடும் வெப்ப நிலையிலுங்கூட, மிகவும் நன்றாய் வளர்ந்து பூக்கின்றன. தஞ்சாவூர் ரோஜா தமிழ் நாடெங்கும் மிகவும் பிரசித்தி பெற்றது. எந்த விதமான நிலையிலும் சில செடிகளையேனும் வளர்த்து அவை நன்கு பூக்கச் செய்வது முடியும்.

நம் நாட்டுக்குத் தாமரை அடையாளப் பூவாக இருப்பதுபோல, இங்கிலாந்து நாட்டுக்கு ரோஜா அடையாளப் பூ. அந்நாட்டு அரச பரம்பரையினர் பல நூற்றாண்டுகளுக்கு முன்னே இரண்டு கட்சிகளாகப் பிரிந்து தங்களுக்குள் சண்டையிட்டபோது ஒரு சாரார் சிவப்பு ரோஜாவையும், மற்றவர் வெள்ளை ரோஜாவையும் அடையாளமாகக் கொண்டதனால் அந்தச் சண்டைக்கு "ரோஜாப் போர்" என்று பெயர் வந்தது என்று இங்கிலாந்து நாட்டு வரலாறு கூறும். ரோஜாவில் கவனம் செலுத்துவதற்கு எல்லா நாடுகளிலும் ரோஜாச் சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மொகலாயர் மூலம் இந்த நாட்டுக்குள் வந்த ரோஜா அத்தர் செய்யப் பயன்படுகிறது என்பதை நாம் அறிவோம்.

இவ்வளவு சிறப்பான இந்த ரோஜா ஆதியில் வெப்பம் குறைவான குளிர் நாட்டுக்குரிய செடியாக இருந்தபோதிலும், காலக் கிரமத்தில் இது நம் வெப்ப நாட்டிலும் பழகிச் சுமாரான அளவுக்குப் பூத்து வருகிறது.

### மண் சாரம்

நீர் தேங்காத செம்மண் நிலம் சிறப்பானது. இது இல்லாவிட்டாலும், தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில்,

வெப்பம் மிகுந்த கடற்கரையோரங்களில்கூட, இரு மண் பாடான நிலத்தில் சில வகைகளைப் பயிரிட்டு நன்கு பூக்கச் செய்ய முடியும். முழு ஆழம் வரையில் கொத்தி மேல் மண்ணைப் புரட்டிக் கீழ் மண்ணாக்கி எருவிட வேண்டும். இரண்டு பங்கு மட்கின குதிரைச் சாணமும் ஒரு பங்கு செம் மண்ணும் கலந்து, கொத்தி விடுதல் சிறப்பானது. நீர் நன்கு வடிய வேண்டும். தொடர்ந்து ரோஜாப் பத்தி நடுவதாயிருந்தால், மூன்றடி ஆழமும் அகலமும் உள்ள நீண்ட கால்வாய்போல வெட்டி, அதில் மேற்கூறிய எருவுடன் கால் பங்கு மண்ணும் கலந்து நிரப்பி நடலாம். 4 அடிக் கொன்றாக நடவும்.

### பதியன் போடுதல்

மழைக்காலத்தில் எளிதாக நறுக்குப் பதியன் போட்டுச் செடி உற்பத்தி செய்யலாம். வளைப்புப் பதியன் போடுவது மிகவும் எளிது. ஆறு வாரத்தில் வேர் பிடித்துக் கத்தரித்து எடுத்து விடலாம். பதியன் ஒரு சாண் நீளம் இருக்கலாம்; முற்றின கிளையாயிருக்கவேண்டும்; இளங் கிளை வேர் பிடிக்காது. தளிர்த்து வேர் பிடிக்க 3 மாதமாகும். பதியனுக்கு நிழல் வேண்டும். பதியன் பாதி மண்ணிலும், பாதி வெளியிலும் இருக்கலாம். பதியனைச் சாய்த்து ஊன்றவேண்டும். வேர் பிடித்துப் பெயர்க்கும் வரையில் தவறாமல் தினமும் நீர் விட வேண்டும்.

சில வகைகள் வளர்ப்புப் பதியன்தான் போட வேண்டும், நறுக்குப் பதியன்கள் வேர் பிடிக்க மாட்டா. வெப்ப நிலை குறைவாயுள்ள இடங்களில் விதையிலிருந்து உண்டாக்குவதும், குறுத்தொட்டுவதும் உண்டு.

**பராமரிப்பு** :—நன்றாய் வளர்ந்து வரும் காலத்தில் நிரம்ப எரு விட வேண்டும். நன்றாய்ப் பூப்பதற்கு மட்கிய குதிரைச் சாணமே சிறந்தது. செடியிலிருந்து அரை அடி தூரம் சுற்றி இடம்விட்டு, அதன் பிறகு ஒரு சாண் அகலத்

துக்கு எருவைப் பரப்பிக் கொத்தி மண்ணுள் செலுத்த வேண்டும்.

தாராளமாய்த் தினந்தோறும் நீர் பாய்ச்சவேண்டும். களையை நீக்குவதும் மேல் மண்ணைப் புரட்டிவிட்டு, புழு பூச்சியில்லாமல் பார்ப்பதும், அவசியம். வாரந்தோறும் தவருமல் திரவ உரம் இடுவது முக்கியம். இரண்டு வருஷத்துக்கொரு முறையேனும் 9–12'' ஆழம் வரையில் மேல் மண்ணை முழுமையும் அகற்றி, மட்கிய குதிரைச்சாணம், செம்மண், மணல் ஆகிய கலவை போடவேண்டும். அடிக்கடி இலையில் பீச்சுங்குழலால் நீர் அடித்துக் கழுவுவது நல்லது. செடியைச் சுற்றித் தண்ணீர் நிற்காதபடி அடியில் மண் அணைக்கவேண்டும். தண்ணீர் நின்ருல் பட்டை அழுகிச் செடி சாகும். வேரில் தண்ணீர் கட்டக் கூடாது. கட்டினுல் வேர் அழுகி செடிபூக்காது. இரண்டு வருஷத்துக்கொருமுறை புதுச் செடி நடவும்.

எருவிடும்போது சூப்பர் பாஸ்பேட், அம்மோனியம் சல்பேட் இவற்றை ஒரு செடிக்கு 2 அவுன்ஸ் அளவாக எடுத்து, மடித்த சாண எருவிட்டு அதில் இவற்றை நீரில் கரைத்துவிடுவது நல்ல பலன் தரும். எலும்புத்தூளும் இதே அளவு சாண உரத்துடன் கலந்து வைத்துக்கொள்ளலாம்.

## கத்தரிப்பு

கத்தரிப்பு என்பது மிகவும் அவசியமான ஒரு வேலை. பழங் கிளை பூக்காது. புதுக்கொழுந்தாக இருந்தால்தான் பூக்கும். ஆதலால் பழங்கிளைகளைக் கண்டிப்பாய் அடியோடு கத்தரிப்பது முக்கியம். பூத்துக் காய்ந்த கிளை, பலவீனமான கிளை, தளிர்க்காமலிருக்கும் கிளை, அதிக நெருக்கமான கிளை - இவற்றைக் கத்தரித்து நீககவேண்டும். பொதுவாக, செடியின் மையத்தில் கத்தரித்து நாற்புறமும் கிளைகள் வரச் செய்வது நல்லது. கத்தரிக்கும்போது ஒவ்வொரு கிளையும் அது பிரியும் அடிப்பாகம் வரையில் கத்தரிக்க வேண்டும்.

உறுதியான செடிக்குக் கத்தரிப்புக் குறைவாக இருக்கலாம். பலமற்ற செடிக்குக் கத்தரிப்பு அதிகம் வேண்டும்.

கத்தரித்த பின் ஆரோக்கியமான பலமுள்ள கிளைகளே மிச்சமிருக்கவேண்டும். இருப்பவை யாவும் மேல்நோக்கி வளர்பவையாய் இருக்கவேண்டும். கத்தரித்து 6–8 வாரத்தில் செடி நன்கு பூக்கத் தொடங்கும். இளஞ்செடிகள் இன்னும் சீக்கிரத்திலும் பூக்கும்.

### நோய்கள்

பழுப்பு நிறமான பெரிய வண்டு ஒன்று, அவரை விதையளவு உள்ளது, இரவில் வந்து இலை முழுமையும் தின்றுவிடும். மண்ணில் முட்டையிடும். மண்ணை அடிக்கடி கிளறிவிட்டு முட்டையையும் புழுவையும் போக்க வேண்டும். இரவில் விளக்கு வைத்துக்கொண்டு ஒவ்வொரு வண்டாகப் பிடித்துக் கொல்லவேண்டும். இதுதான் எளிதான முறை. வண்டு பொதுவாக இலையின் அடிப்புறத்திலேயே மேய்ந்துகொண்டிருக்கும். இரண்டு மூன்று இரவு தொடர்ச்சியாகப் பிடித்தால், இந்த வண்டுகள் அனேகமாய் அழிந்துவிடும். இவற்றின் முட்டையிலிருந்து வரும் புழுக்கள் வேரைத் தின்று வாழும். ஆதலால் மண்ணைக்கிளறி புழுக்களை அழிப்பதும் முக்கியமானது.

செம்பரத்தைக்குச் சொன்ன சிறிய வெள்ளைநிற வண்டு பறந்துவந்து இலையைத் தின்றுகொண்டிருக்கும். இரவில் இலையின் மேல் புறத்திலும், பகலில் கீழ்ப்புறத்திலும் அரித்துக்கொண்டிருக்கும். டீ. டீ. டி. மருந்தினால் இது அழிந்துவிடும். இது பறக்கிற வண்டு; அரிசி அளவு இருக்கும். ஏராளமாய் வரும். ஓரிலைகூட இல்லாதபடி தின்றுவிடும். நுனிக்கொழுந்திலும் இருக்காது, முற்றின இலையிலுமிருக்காது. அரும்பையும் பூவையும்கூட இது அரித்துவிடும்.

பச்சைப்புழு, கம்பளிப்பூச்சி போன்றவைசில, இலையின் மேலும் கீழும் இருந்து இலையை அரித்துத் தின்றுவிடுகின்

றன. இவற்றையும் பார்த்து ஆரம்பத்திலேயே கையால் பிடித்துக் கொல்லுதல் எளிது. டீ. டீ. டி. மருந்தை நீரில் கரைத்துத் தெளித்தல் பயனுடையது. பச்சைக் கிளைகளை வெட்டின இடத்தில் தார் பூசிவிட்டால் கிருமிகள் அங்கு நுழைவது குறைகிறது. அடிச் செடியில் தண்ணீர் கட்டாமல் பார்த்து செடியின் அடியில் பட்டையின்மேல் சாணம் பூசி வைத்தால் பட்டையை அரிக்கும் பூச்சிகளின் வேலை குறையும். பலவகையான பூஞ்சணங்களுக்கு ஓரளவு பரிகாரம், மயில்துத்தக் கலவை நீர் தெளிப்பது. இந்த நோய் கண்ட இலை கொழுந்து முதலிய பாகங்களைக் கத்தரித்து எடுத்து எரித்து விடுவது நோய் பரவாமல் தடுக்க நல்லவழி. செடிப்பேனும் டீ. டீ. டி. மருந்தினல் நீங்கும். வேர்க் கறையான் மிகவும் ஆபத்தானது. அடிக்கட்டையில் தார்பூசி வைப்பது நல்லது. அதனேடுகூட இரண்டுமாதத்துக் கொருமுறை கொஞ்சம் டீ. டீ. டி. கரைத்து மண்ணில் விட்டுக் கொத்திவிட்டால் கறையான் அந்த இடத்தை விட்டு ஓடிவிடும். தழை, குப்பை சேர்ந்து கறையானுக்கு இடங் கொடுக்காதபடி பார்க்கவேண்டும். அடிக்கடி மீன் எண்ணெயைச் சவுக்காரநீர் கரைத்துக் குழலால் அடிப்பது, எல்லாப் பூச்சிகளையும் கட்டுப்படுத்தும்.

## தொட்டியில் பயிரிடுதல்

மிகவும் எளிது. தொட்டியிலேயே விளைப்புப் பதியன் போட்டு அதையே வளர்த்து வரலாம். பதியனுக்கு 6" தொட்டி போதும். செடி வளர்ந்து தொட்டியில் வேர் நிரப்ப நிரம்ப, 8, 10, 12 என்று பெரிய தொட்டிகளாக மாற்றிக்கொண்டே போகலாம். மிகப் பெரிய (18"—20") மாட்டுத் தொட்டியில் முடிவாகப் பயிரிடலாம். தொட்டியினடியில் நிரம்பக் கற்களும், மணலும் போட்டு நன்கு நீர் வடியச்செய்யவேண்டும். ஆண்டுக்கொருமுறை செடியைத் தொட்டியிலிருந்து எடுத்து, ஆரோக்கிய மில்லாத அல்லது

காய்ந்துபோன இரண்டொரு வேர்களைக் கத்தரித்து விட்டு தொட்டியை நன்கு அலம்பிச் சுத்தம் செய்து, செடியின் வேரிலுள்ள மண்கட்டியைக் கலைக்காமல் மீண்டும் அதே தொட்டியிலேயே நன்கு எருவிட்டு நடலாம். 6 மாத மானவுடனே தொட்டியின் மேல்மண்ணை 4 – 6" ஆழம் வரையில் ஒரு கிளறியால் கிளறி எடுத்து விட்டு, நன்கு மடித்த எருக் கலவையைப் போட்டு நிரப்புவது அவசியம். தொட்டியைத் தரையில் வைக்கும்போது ஒரு கல்லை வைத்து, அதன்மேல் வைப்பது நல்லது. தண்ணீர் வடியவும் புழுக்கள் உட்புகாதிருக்கவும் இது ஏற்றது. தவிர, இரண்டு வாரத்துக் கொரு முறை சாணமும் அம்மோனியம் சல்பேட்டும் அல்லது பிண்ணாக்கும் அம்மோனியம் சல் பேட்டும் சேர்ந்து ஊறவைத்ததிலிருந்து தயாரித்த திரவ உரம் விடுவது மிகவும் அவசியம். இவ்வாறு கவனம் செலுத்திப் பாதுகாத்தால், ரோஜா பல வருஷங்கள் தொட் டியிலேயே நிரம்பப் பூக்கும்படி செய்யமுடியும்.

### வகைகள்

ரோஜாவில் எண்ணற்ற ரகங்கள் உள்ளன. உலகப் பிரசித்தியடைந்துள்ள பூ ஆனமையால் ரகங்கள் யாவற் றையும் வகைப்படுத்தி யிருக்கிறார்கள்.

(1) **கலப்பு நிரந்தரம்** :—செழுமையாக வளர்ந்து பூக்கிற சிறந்த வகை. பல நிற பேதங்களுள்ளன. ரகங்கள் யாவும் சிறந்த மணமுடையவை. பூ இதழ்கள், யாருக்கும் பழக்க மான சாமானிய ரோஜா போல, உட்குழிவாய்க் கிண்ணம் போலமைந்தவை. வளமான இருமண்ணில் நன்கு வள ரும். பொதுவாய் அதிகம் கிளைக்க மாட்டா. கிளை போத் தாக வேரிலிருந்து உதிக்கும்; நீண்டு உறுதியாக வளர்ந்து பூக்கும். பூத்தபின் உரம் அதிகம் தேவை. கத்தரிப்பு அதிகம் தேவை. கத்தரித்தபின்தான் பூக்கும்; இந்த வகை யில் தனித் தனியான ரகங்கள் பல உள்ளன.

(2) **டீ-ரோஜா** :—பொதுவாய் யாவும் மெலிந்த செடிகள், கிளைத்துப் படரும் இயல்புடையவை. இலைகள் பக்க வாட்டில் போய் நுனியில் அரும்பு வைக்கும். அரும்புகள் நீண்டிருக்கும். தொடர்ந்து பூக்காவிட்டாலும் நிரம்பப் பூக்கும். பூவின் மணம் தேயிலை டப்பியிலிருந்து வீசும் தேயிலை மணம். ஆகவேதான் டீ ரோஜா என்ற பெயர். எண்ணற்ற ரகங்கள்.

(3) **கலப்பு டீ ரோஜா** :—மேற்கூறிய இரண்டின் கலப்பு. ஒவ்வொன்றின் தன்மையும் பாதி பெற்றுள்ள ரகங்கள்.

(4) **கொடி ரோஜா** :—டீ ரோஜாவைப்போன்ற வகைகளில் சில, தாமாகவே கொடிபோலப் படரும் தன்மை பெற்றுவிட்டன. இவற்றைத் தனிப்படுத்திப் படரவிட்டுத் தனிக் கொடிகளாக வளர்த்திருக்கிறார்கள். சுமாரான அளவு பந்தலில் படர்ந்து பூக்கும். பழக்கமில்லாதவர்களுக்கு ரோஜாக் கொடி என்பது வியப்பாகத்தானிருக்கும். பயிரிடும் முறை முதலியன மற்றவை போலவே, நிரம்ப எருவும் கத்தரிப்பும் முறையாகவேண்டும். இவ்வகை தொடர்பாகப் பூத்துக்கொண்டே யிருக்கும். பூக்கள் கொழுந்து நுனியிலும், பக்கத்தில் தளிர்க்கும் கொழுந்துகளிலும் கொத்தாக உண்டாகும். நிறங்கள் பொதுவாக வெள்ளையிலிருந்து மஞ்சள் வரை. சிறிது ரோஜா சாயல் வரக்கூடும்.

அனேக ரகங்கள் உள்ளன; இன்னும் சில வகைகளும் சொல்வார்கள். அனைத்தையும் நாம் இங்குக் கூறுவது அவசியமில்லை. ரோஜா பயிரிடுதல் எவ்வளவு விரிவான முறைகளைக் கொண்டது என்பதைக் குறிப்பிடவே இந்த வகைகளை இங்குச் சொன்னோம். பொதுவாக நம் மக்கள் ரோஜா என்ற பெயரில் அறிவது ஒரே வகை; அதுவே மேற்கூறிய தஞ்சாவூர் ரோஜா, எட்வர்ட் ரோஜா என்ற பெயர்களில் வழங்குவது. ஆனால் மேற்கூறிய நான்கு வகைகளிலும் எண்ணற்ற ரக பேதங்கள் உள்ளன. இதைப்

படிப்பவர்கள் அத்தனையும் அறிந்துகொள்வது அவசிய மில்லை. எனினும், பொதுவாக ரோஜா என்ற பெயர் சொன்ன மாத்திரத்தில் நம்மவருக்கு நினைவு வரக்கூடிய சில ரகங்களை மட்டும்கீழே குறிப்பிடுகிறோம். எல்லா வகை களும் தொட்டியில் பயிரிடுவதற்கேற்றவை.

### சாமானிய ரோஜா

மேலே சொன்ன தஞ்சாவூர் ரோஜா என்பதுதான் தலையிலணியவும் மாலை கட்டவும் எங்கும் உபயோகமாவது. எட்வர்ட் ரோஜா என்பது இதற்குச் சாமானியமாக வழங் கும் பெயர்; அத்தர் செய்வது முதலான எல்லாக் காரியங் களுக்கும் பயன்படுவது இந்த ரோஜாவே. இதுவே ஆதிரோஜா என்றால் உண்மை. சொந்த உபயோகத்துக் காகப் பயிரிடுபவர்கள் இந்த வகையையே பயிரிடுவார்கள். தரையில் பயிரிட்டால் நிரம்பப் பூக்கும். மற்றக் கலப் புச் சாதி வகைகளை ஒட்டுவதற்கும் புதுரகம் உற்பத்தி செய் வதற்கும் தாய்க்கன்றாக உபயோகப்படுவது இந்த ரோஜாவே. ரோஜா என்ற பெயரில் வழங்கும் நிறம் இந்த வகைப் பூவின் நிறத்தைக்கொண்டே வந்தது. இதன் மணம் தான் ரோஜா மணம் என்பது. இதில் ஒற்றையிதழ், அடுக் கிதழ் என்ற வகைகளும் மிகப் பெரிய பூவுடைய வகை களும் சிறப்பாக உள்ளன. இது அன்றாடம் காலையில் இதழ் விரிந்து மாலையில் இதழ் உதிர்ந்துவிடும். இதழ்கள் கிண்ணம்போல் அமைந்தவை.

### பட்டு ரோஜா

நிரம்பப் பூக்கின்ற ஒருவகை. சாதாரணமாக வள முள்ள நீர் தேங்காத எந்த மண்ணிலும் நன்றாகப் பயி ராகும். ரத்தச் சிவப்பு நிறமுள்ள பெரிய பூக்கள் ஏராள மாய்ப் பூக்கும். செடி மிகவும் மெலிந்தது. மெலிந்த கிளையின் நுனியில் ஒரே சமயத்தில் அனேக பூக்கள் இருப் பது பார்க்க அலங்காரமாயிருக்கும். பூ பல நாள் வாடாமல்

இருந்து உலர்ந்துபோகும்; உதிராது. குத்துச் செடியாகப் பயிரிடுவதற்கேற்றது. இரண்டு பருவங்களிலும் நிரம்பப் பூக்கும். பூத்து முடிந்தபின் கத்தரித்து விடவேண்டும். பெரிய தொட்டியிலும் நன்கு பலன் தரும்.

### வெள்ளை ரோஜா

தனக்கென்ற சிறப்பான தனி மணமுடைய பசுமையான ஒரு வகை. விரிந்த இதழ்களுடைய பெரிய பூ. சாதாரண ரோஜாவைப் போலவே உறுதியாகப் பெரிய செடியாக வளரும். தகுந்த பராமரிப்பிருந்தால், நீண்ட காலம் நன்கு பூத்துக் கொண்டிருக்கும். தக்க உரம், நீர், கத்தரிப்பு என்பன முக்கியமானவை.

இது தனி ரகம். இதுவன்றி, டீ ரோஜாவில் ஒரு ரகம் வெள்ளையாக நிரம்பப் பூக்கும். இது ரோஜா மணமில்லாமல் தேயிலை மணமாகவே இருக்கும். நன்கு செழித்துவளர்கிறது; நிரம்பப் பூக்கிறது. அரும்பில் சற்றே ரோஜா நிறச் சாயல் தெரியும்; மலர்ந்தபின் இந்த நிறம் மாறும். இதுவும் உறுதியாக, எளிதில் பயிராகத்தக்கது.

### பொத்தான் ரோஜா

இது டீ ரோஜாவின் பேதங்களில் ஒன்று. மிகச் சிறிய செடி. மிகச் சிறிய அளவாக உள்ள பூ பூப்பதால் பொத்தான் என்ற பெயர் பெற்றது. பூக்கள் ஏராளம். சிறிய செடியாயிருப்பதால் பெரிய ரோஜாப் பாத்தியின் ஓரத்திலே இதை வைத்துக் கத்தரித்து விடுவதுமுண்டு. நெருக்கமாக நட்டு வளர்த்துக் கத்தரிக்கலாம்.

# 6

## போகன் வில்லா

அதிக வெப்பத்தில் நன்கு வளர்ந்து பூக்கக்கூடிய ஒரு பெருஞ்செடி. எண்ணற்ற வகைகள் உள்ளன. சில அதிக உயரம் படரும். படர்வதென்றல் உச்சியிலிருந்து செழுமையான நீண்ட போத்து அதிக உயரம் எழுந்து நிற்றல்; சாமானியமான கொடிகள் படருவது போலப் பற்றிப் படருவதல்ல. சிலவகைகள் அதிக உயரம் படராமல் 4–5 அடிக்குள் அடங்கிநின்று பூக்கும். நுனிப் போத்தில் பூக்கள் தோன்றும். பார்க்க மிகவும் கவர்ச்சிகரமாய்ப் பளிச்சென்று ஒளிவிடக்கூடிய எண்ணற்ற பூக்கள். வருஷ முழுவதும் பூத்துக்கொண்டிருக்கும். பூத்திருக்கும் எந்தச் செடியைப் பார்த்தாலும் நெருப்புப்பற்றி எரிகிறது என்றே சொல்லத் தோன்றும்.

இது தென்னமெரிக்காவுக்கு உரிய செடி என்று சொல்வார்கள். டி-போகன்வில் என்ற பிரஞ்சு நாட்டு மாலுமி ஒருவர் கொண்டுவந்து பயிரிட்டுப் பரப்பினர். அதுகாரணமாக இந்தச் செடிக்குப் போகன்வில்லா என்ற பெயர் ஏற்பட்டது. சுமார் 30 வருஷங்களில் இது தமிழ்நாடு மூலை முடுக்குகள் எங்கும் பரவியிருக்கிறது. ஓரளவுக்கு எந்தக் கவனமும் தேவையில்லாதபடி எந்த மண்ணிலும் நன்றய்ப் பயிராகிப் பூக்கிறது. சாதாரணமாய்ப் பதியனிலிருந்தே உண்டாகிறது. நறுக்குப் பதியன் வளைப்புப் பதியன் இரண்டும் பயன்படும். இச் செடிக்கு வளர்ச்சி மிக மிக அதிகம். வெயிலும் அதிகம் வேண்டும். நிழல் அதிகம் இருந்தாலும் ஈரம் அதிகம் இருந்தாலும் நன்கு பூக்காது.

வேலிக்கு வைப்பதற்கும் பாதை விளிம்பில் நடும் சிறு வேலிக்கும் பெரிதும் தகுதியானது. சம தூரத்தில் நட்டு ஒழுங்காகக் கத்தரித்து வளர்க்கும் பட்சத்தில் வேலியாக

இது அமைந்து பூத்திருப்பது கண்கொள்ளாக் காட்சியாயிருக்கும்.

கொறுக்காப்புளி, நுணா, வேம்பு போன்ற பெருமரங்களின்மீதும் இதைப் படரவிடலாம். மரம்முழுமையும் ஏறிப் படர்ந்து மரத்தில் இலையேதெரியாதபடி மூடி மரத்தின் உச்சியில் போய் நெருப்புச் சுவாலைபோலக் கவிழ்ந்துநிற்கும்.

தனிச் செடியாகவும் வளர்க்கலாம். குத்துச் செடியாக வளர்க்காமல் ஒற்றை அடிமரமுடைய சிறு மரம் போல் வளர்த்து 6 அடி உயரத்தில் கிளைக்கச்செய்து, தொடர்ந்து கிளைகளையும் அளவுப்படிக் கத்தரித்துக் கொண்டே வந்தால் சிறுமரம் போலவும் நின்று அடக்கமாய்ப் பூத்துக்கொண்டிருக்கும். இந்த முறை புல்வெளிகளின் விளிம்பில் வைத்துப் பராமரிக்க மிக்க அழகு தரும்.

போகன்வில்லாச் செடி ராட்சதன்போல வளர்ந்து பூக்கக்கூடியது. ஆதலால், அதன் அருகே சிறு செடிகள் பயிராக்கமுடியாது. சாதாரணமாக இது தழையுதிர்ப்பதில்லை. ஆகவே எப்போதும் நிழலாகத்தான் இருக்கும். மேலும் இச்செடி தன் பூமிகுதியினாலும் பிரகாசத்தினாலும் கவர்ச்சி முழுமையும் தன்னிடத்தில் இழுத்துக்கொள்ளும். ஆதலால் இதனருகே, எவ்வளவு சிறந்தவையாக இருந்தாலும், வேறு செடிகள் சோபிக்கமாட்டா. எனவே, போகன்வில்லாவை மற்றவற்றோடு கலக்காமல் தனிச் செடியாகவே பயிரிடவேண்டும். அல்லது தோட்டத்தின் ஒதுப்புறமாகவே பயிரிடவேண்டும்.

போகன்வில்லா வாயில்புறத்துக்கு வெளியே இருபுறமும் தனிச் செடியாகப் பயிரிடலாம். பந்தலில் வளைத்துக் கட்டிப் பந்தல்போல நிழலுக்காகவும் பயிரிடலாம். நிழலும் இருக்கும், பூவின் கவர்ச்சியும் கிடைக்கும்.

### பூவின் விசித்திர அமைப்பு

தாவரநூல் முறைப்படி, இதில் 'பூ' என்று நாம் கூறும் பகுதி விசித்திரமானது. இது பூவுக்குரிய மூன்று புறவிதழ்

கள் மிகுந்த பிரகாசமான நிறத்தோடு, அளவில் பூவை விடப் பல மடங்கு பெரியதாய்ப் பூவைச் சூழ்ந்து மூடி யிருக்கும். இந்தப் புறவிதழ்களின் தொகுதியே நம் கண் ணில் பட்டுப் பூ என்கிறோம். ஆனால் உண்மையில் பூ என் பது இவ்வளவு கவர்ச்சியற்றது; மிகவும் சிறியதாய் வெண்ணிறத்தில் இந்தப் புறவிதழுக்குள்ளே காணப்படும். பயிரிடுவோர் அனேகருக்கு இந்த விசித்திரமே தெரியாது.

## தொட்டியில் பயிரிடுதல்

சில வகைகள் தொட்டியிலேயே அடங்கி வளர்ந்து நன்கு பூக்கும். 18" தொட்டி ஏற்றது. நாட்டுப்புறங்களில் இதை, மாட்டுக்குத் தண்ணீர் காட்டும் தொட்டி என்பார் கள். இரண்டாய் அறுத்த பீப்பாய், பெரிய தார்ப் பீப்பாய், சிமிட்டித்தொட்டி முதலியன உபயோகிக்கலாம். தொட்டி நிரப்பவேண்டிய முறைப்படி தொட்டி நிரப்பலாம். கலவை யில் உரத்தைச் சற்றுக் குறைத்துப் பழைய தோட்ட மண்ணைக் கொஞ்சம் கூட்டிக்கொள்ளவேண்டும். பொது வாக, வேர்பிடித்த செடி பிறகு அழுகும் என்ற பயமில்லை. செடி நட்டு நன்கு வேர் பிடித்து வளரத் தொடங்கியது முதல் கவனமான கத்தரிப்பு மிகவும் அவசியம். புதர்போல வளர்க்க முயலவேண்டும். நீண்ட போத்தாக வளரும் கிளைகளைக் கத்தரிக்கவேண்டும். அலங்கோலமான கிளைகளை அடிக்கடிக் கவனித்து நீக்கவும். நன்றாய்ப் பூக்கவேண்டும் என்று விரும்புகிற பருவத்துக்கு இரண்டுமாதம் முன்ன தாக, தண்ணீர்விடுவதைக் குறைத்துப் பாதிக்காய்ச்சலோடு செடியை வளர்த்தால் கொஞ்சநாளில் இலைகள் உதிர்ந்து போகும்; போனதும் மீண்டும் குளிரத் தொடர்ந்து தண் ணீர் விட்டுக்கொண்டு வந்தால் ஏராளமாய்ப் பூ வைக்கும். இந்தவிதமாக ஒரே செடியை அதே தொட்டியில் பல வருஷங்கள் தொடர்ந்து பூத்துக்கொண்டிருக்கச் செய்வது மிகவும் எளிது. தொட்டியின் சாரம் முழுமையும் தீர்ந்து

போயிருக்கும் என்று தோற்றுகிற சமயத்தில் 4–6 அங்குல ஆழத்துக்கு மேல் மண்ணை முழுமையும் அகற்றிவிட்டுக் கலப்புரமண் நிரப்பவும். கலப்புரமண் என்று இங்கே கூறுவது ஒரு தட்டு மட்கின குதிரைச் சாணம், ஒரு தட்டு மட்கின மாட்டுச்சாணம், ஒரு தட்டு தோட்டத்துப் பழமண், ஒருதட்டில் பாதிசெம்மண் பாதிமணல் ஆகியவை நன்கு சேர்த்த கலவையை. வருஷத்தில் நான்கு முறை இப்படி மேல் மண்ணை மாற்றலாம். இதனோடுகூட, பூக்கத் தொடங்கியதும் இரண்டு வாரத்துக் கொருமுறை திரவ உரம் இடுவதும் பயனுடையது.

தொட்டியில் பயிரிடுவதுபோலவே சில வருஷ முயற்சியினால் போகன்வில்லாச் செடியில் உருவங்கள் அமைப்பதும் உண்டு. சென்னை நகர சபையார் ஆண்டுதோறும் நடத்திவருகிற பூக்காட்சியில் இப்படிப்பட்ட உருவங்களைக் காணலாம். சிங்கம்போலவும் யானைபோலவும் அன்னம் போலவும் தேர்மீது அர்ச்சுனனுக்குக் கண்ணன் கீதை உபதேசிப்பது போலவும், போகன்வில்லாச் செடியில் அமைந்த உருவங்களை அங்குப் பார்க்கலாம். கம்பியினால் நினைத்த உருவத்தை முதலில் பின்னிக்கொண்டு அதற்குள் இந்தச் செடியை அடங்கி வளர்ந்துவரும்படி சிறப்பான கவனத்தோடு வளைத்தும் கத்தரித்தும் விட்டு வளர்க்கிறார்கள். இச் செடிகள் தழையும் பூவுமாக உருவத்துக்குள் அமைந்திருப்பது விசித்திரமாய்த் தோற்றுவதில் வியப்பில்லை. போகன்வில்லாச் செடியில் சில வகைகள் மட்டுமே இதற்குப் பயன்படும்.

### வகைகள்

எண்ணற்ற வகைகள் உள்ளன. ஆரம்பத்தில் இருந்தது ஒரே ஊதா நிறம்தான். ஆனால் சென்ற 40 ஆண்டுகளுக்குள்ளாக எண்ணற்ற வகைகள் ஏற்பட்டிருக்கின்றன. யாவும் ஊதா - சிவப்பு ஆகிய இரு நிறங்களின் கலப்

யும் பேதங்களுமே. தனி மஞ்சள் வெள்ளை அபூர்வம். சில, பெரிய செடியாக உயர்ந்து வளர்ந்தால்தான் நன்கு பூக்கும். சில மட்டும் சிறு செடிகளாகவே நன்கு பூக்கும். எல்லா வகைகளிலும் பூத்த பூ செடியிலேயே பலநாள் உதிராமலிருக்கும். பொதுவாய், பூ வாடுவதென்பது இல்லை.

### சிறிய செடிகள்

பின்வரும் வகைகள் சிறிய செடிகளாகவேயிருந்து நன்கு பூக்கக்கூடியவை. இவை தொட்டியில் பயிரிடுவதற்கும் ஏற்றவை.

**பழைய ஊதா :** மங்கலான ஊதா நிறப் பூவுடைய செடி. மிகவும் பழமையானது. இதுவே ஆதிவகை. கோணல்மாணலாக வளரும். சென்னையிலுள்ள பழைய தோட்டங்களின் வேலிக் கால்களில் படர்ந்துகிடக்கும். ஏராளமாகப் பூக்கும். சாமானிய வகையாயினும் எளிதில் வேலி முழுமையும் மூடிப் படரும். பெரிய செடியாக வளராமல் சிறு செடியாக இருக்கும். தொட்டியில் பயிரிடுவதற்கு ஏற்றது.

**பிரேசர் :** செங்கல் நிறப் பூவுடைய சிறு செடி. எந்தக் காலத்திலும் நிரம்பப்பூக்கும். பூங்கொத்து அழகானது. தற்போது இது அபூர்வமாய் இருக்கிறது. தொட்டியில் பயிரிட ஏற்றதாயினும், பெரிய செடியாக வளர்ப்பதுமுண்டு.

**பார்மோசா :** மிக மிக மங்கலான கத்தரிப்பூ நிறம். நிறமே மிகுந்த அழகுடையது. நுனிக்கிளைகளில் அளவின்றிப் பூத்திருக்கும். மற்றெல்லாவற்றிலும் பார்க்க, இதன் நிறம் துண்டாக வேறுபட்டுத் தெரியும். பூவிலும் சிறிது பசுமை கலப்புண்டு. தொட்டியில் பயிரிட ஏற்றதாயினும், நடுத்தர மரமாகவும், பெரிய கொடிபோலவும் வளர்க்க முடியும். ஆறடி உயரத்தில் ஒற்றைமரமாக வளர்த்தால், உச்சியில் நன்கு தழைத்துப் பூக்கிறது. மற்ற பூக்களுக்கும் இதன் பூக்களுக்கும் ஒரு வேறுபாடு. எல்லாப் போகன்

வில்லாவிலும், பூத்த பூக்கள் பூத்துச் சிலநாள்வரை செடியிலே இருந்து, பின் நிறம் குன்றாமல் அப்படியே உதிர்ந்து விடும். ஆனால் இதன் பூக்கள் பூத்துச் சிலநாள் ஆனபின் உலர்ந்து சருகாகிக் கிளையைவிட்டு எளிதில் உதிரமாட்டா. இந்த நிலையில் கிளைகள் பார்க்க விகாரமாயிருக்கும். மற்றப்படி இது மிகவும் அழகான பூ.

**ரோஜா நிறம்** (பிங்க் பியூட்டி): மிகச் சிறிய செடி. சிறந்த முறையில் தொட்டியில் பயிராகும். நன்கு பூக்கும். $1\frac{1}{2}$ அடியிலிருந்து 6 அடிவரை பூத்துக்கொண்டேயிருக்கும். சாதாரணமாக நம் தோட்டத்தில் விதைவிடக்கூடிய செடி இது ஒன்றுதான். இதுவே, இதற்குள்ள மற்றொரு சிறப்பு. விதை மாவுகோதுமை போலிருக்கும். எளிதில் முளைக்கும். சோதனை மனப்பான்மையுடையவர்கள் இதில் வேற்று மகரந்தச்சேர்க்கை உண்டுபண்ணிப் புதுவகைகள் உற்பத்தி செய்வது சாத்தியம்.

**மஜேண்டா**: மிகப் பெரிய பூவுடைய சிறிய செடி. கப்பான சிவப்பு-ஊதா நிறம். மூன்றடியில் மிக அதிகமாகப் பூக்கக்கூடியது. தொட்டிக்கேற்ற சிறந்த ரகம். அபூர்வமானது.

### குத்து (நடுத்தர)ச் செடிகள்

இந்தத் தலைப்பில் கூறும் செடிகள் யாவும் நடுத்தரமான குத்துச் செடிகளாக அல்லது புதர்போல வளர்ப்பதற்கு ஏற்றவை.

**பெரிய ஊதா** (பர்ப்பிள் கிங்): முதலில் சொல்லிய பழைய ஊதா போன்ற நிறம். ஆனால், நிறம் அதிகம் கப்பு. இன்னும் பெரிய பூ; பெரிய செடி. பூக்கள் நெருக்கமாகப் பெருங்கொத்தாய் இருக்கும். படர் கொடியாகவும் இதை வளர்க்க முடியும்.

**பட்டுச் சிவப்பு** (பட்): ஊதா கலந்த பட்டுப் போன்ற சிவப்பு நிறம். மிகப் பெரிய பூக்கள். மிகவும் ஏராளமாய்ப்

பூக்கும். பெரிய செடியாகவும் வளரும்; மரம் என்று கூடச் சொல்லலாம். அதிகம் வளர்ந்த பின் எவ்வளவு கத்தரித்தாலும் தாங்கிப் பூத்துக்கொண்டிருக்கும். சிறந்த வகை. பூ கத்தரித்து எடுத்து அலங்கரிப்பதற்கு நன்ருக இருக்கும். மரமாக வளர்ப்பதற்கும் தக்கது.

**பிற வகைகள் :** ரிபல்ஜென்ஸ், ஹோப், மாக்னிபிகா, மைசூர் ராஜா.

## பெரிய படர்கொடிகள்

இவை யாவும் 15 அடி உயரம் வளர்ந்துதான் பூக்க வல்லவை. சிறு செடியாக வளர்த்து நன்கு பூக்கச்செய்ய முடியாது. மரங்களின்மேல் படரவிடுவதற்கும் வாயில்புறப் பந்தலுக்கும் பொருத்தமானவை. பெருங் கிளைகளானபடியால் காற்றினுல் இவை முறிந்துபோவதுண்டு.

**ரத்தச் சிவப்பு** (ஸ்கார்லட் குவீன்) : முதன்முதலில் சொல்லிய பழைய ஊதாவுக்கு அடுத்தபடியாக மிகவும் பழமையான செடி ; பழமையான வகையும் இதுவே. இது ஒன்று தான் சிறிதும் ஊதாக் கலப்பில்லாத ஏறக்குறைய சுத்தமான சிவப்பு நிறங்கொண்டது. அதிக விரைவில் வளர்ந்து அதிக விரைவில் பூக்கக்கூடியது. எங்கும் பரவியிருக்கிறது. இதன் உண்மையான பூ மஞ்சள் நிறமுடையது.

**ஆரஞ்சு நிறம் :** (லூயி வாதன்): இதுவும் சற்றுப் பழமையான வகை. நன்கு பூக்கிற பெருஞ்செடி. மேற் சொன்ன ரத்தச் சிவப்புக்கு ஜோடியானது. பூ, மஞ்சள் நிறத்தில் தொடங்கி சிவப்புக் கலந்த ஆரஞ்சு நிறத்தில் முடியும். சீக்கிரத்தில் அதிக இடம் அடைத்துப் படரும்.

**மஞ்சள் :** மேற்கூறிய ஆரஞ்சு போன்றது. ஆனுல் முழு மஞ்சள் நிறம். நன்கு பூக்கும்.

**விஜயலக்ஷ்மி :** சிறிய மங்கலான செந்நிறப் பூவுடையது. பூக்கள் ஒன்றைவிட்டு ஒன்று மிக்க தூரத்தில் இருக்கும். செடி மெலிந்தது. உயர்ந்த கிளையில்தான் பூ. சிறப்பான வகையல்ல.

**ஹட்ஸன் :** சற்று மெலிந்து உயர்ந்து வளரக்கூடிய பெரிய செடி. பூக்கள் நெருங்கியிராமல் தூரமாக இருக்கும். சிறிய பூக்கள். நிரம்பப் பூத்தாலும் கொஞ்சமாகத் தான் தெரியும். கெட்டிச் சிவப்பு நிறம்.

**மரமாகப் பயிரிடுவதற்கு ஏற்ற வகைகள் :** பார்மோஸா, பர்ப்பிள் கிங், ஆரஞ்சு நிறம், ரத்தச் சிவப்பு நிறம், பட்டுச் சிவப்பு, மேரி பாமர், ஹட்ஸன்.

## அபூர்வ வகைகள்

**வெள்ளையும் சிவப்பும் (மேரி பாமர்) :** பெரிய செடி ; நிரம்பப் பூக்கவல்லது. பூ சில கிளைகளில் சிவப்பும், சில கிளைகளில் வெள்ளையுமாக இருக்கும் ; சில கிளைகளில் இரண்டும் கலந்திருக்கும். பெரிய பூ. வெள்ளையானது சுத்த வெள்ளை. சிவப்பென்பது ரோஜா நிறம். இதில் பதியன் போட்டால் சில சமயம் எல்லாம் சிவப்பாயிருந்து வெள்ளைப் பூ வராமலே போவதுமுண்டு.

**வெள்ளை :** இதில் இரண்டு ரகங்கள் உள்ளன. எங்கும் உயர்ந்ததாய்க் கருதப்படுவது நடுத்தரமான செடி. 10–15 அடிக்குள் படர்ந்து பூக்கும். இலைகள் சிறியவை ; மங்கலான பச்சை. இதன் பூக்கள் ஆரம்பத்தில் அழுக்குப் பச்சை கலந்த வெள்ளை நிறமாகத் தோன்றி, பூ உதிரும் சமயம் நல்ல வெள்ளை நிறமடையும். இஷ்டப்படி வெட்டி விடுவதற்கு ஏற்றது.

இதில் மற்றொரு ரகம், ஓங்கிப் படரவல்ல நீண்ட போத்துக்களையுடையது. இது பெரிய படர்கொடிவகை. 15 அடிக்கு மேலும் ஏறிக்கொண்டே போகும். இலைகள் பெரியவை, பச்சைநிறமுடையவை. பூக்களும் சற்றுப் பெரியவை. ஆரம்பம் முதலே நல்ல வெள்ளைநிறமுடையவை.

**வெள்ளை இலை :** அபூர்வமான ரகம். இதன் இலைமட்டும் வெள்ளையும் பச்சையும் கலந்த இரு நிறமுடையது. பார்க்க அழகானது. நடுத்தரமான செடி.

# 7

# சிறிய செடிகள்

சுமார் பத்துச் செடி வகைகள் இந்தப் பகுதியில் கூறப்பெறுகின்றன. இவற்றுள் செவ்வந்தி, பெண்டாஸ், தங்கக்கம்பி, மைக்கேல்மஸ் டெய்ஸி, காந்தள் என்ற ஐந்தும் வருஷ முழுமையும்,நிரந்தரச் செடியாகவே இருக்க வல்லவை. செவ்வந்தி, காந்தள் தவிர மற்றவை எப் போதுமே பூக்கும்; இவை இரண்டும் பருவக் காலத்தில் மட்டுமே பூக்கும். டயாந்தஸ், பெட்டூனியா இரண்டும் ஏறக்குறைய இரண்டு வருஷம் இருந்து, எப்போதும் நன்கு பூக்கும் செடிகள். மற்றச் செடிகள் யாவும் பருவக்காலப் பூக்கள்: இவற்றை வருஷ மொருமுறை புதுவிதை போட்டே உண்டாக்க வேண்டும். ஆயினும் பூ மாற மாற, புது விதை போட்டு வருஷ முழுமையும் இவை பூக்கும்படி செய்யலாம். இவ்விதப் பொது இயல்புகள் பற்றியே இவை இங்கு ஒருசேரக் கூறப்பெற்றுள்ளன.

### காசித்தும்பை

சாதாரணமாய் இரண்டு அடி உயரம் வளர வல்ல ஒரு சிறந்த பருவகாலப் பூஞ்செடி. பூசைக்கேற்றது. செடி யானது, கீரைத்தண்டுபோல் சதைப்பற்றுள்ள தண்டாகவே இருக்கும். கொஞ்சமும் ஈரம் தாங்காது. நன்ருய் எரு விட்ட வளம்மிகுந்த பொல பொலப்பான மண் தேவை. நிழல்கூடாது. மரவேர் பக்கத்தில் இருக்கக்கூடாது. இது கீரைத்தண்டு போன்ற செடியாகையால், நீர் கொஞ்சமும் தேங்காமல் வடியக்கூடிய நிலமாய் இருக்கவேண்டும். வளரும் பருவத்தில் தண்ணீர் தாராளமாய் விடவேண்டும். விதைத் தொட்டியில் நாற்று விடலாம். தரையிலும் விட லாம். மூட்டம் போடவேண்டும். தண்ணீர் கட்டாமலும்

எறும்பு அரிக்காமலும், விதை அழுகாமலும் பார்க்க வேண்டும். புது விதை சிறப்பு. 5 நாளில் முளைத்துவிடும். முளைத்து ஆறு இலை விட்டவுடன் பெயர்த்து நடலாம். தரையில் நடுவதானால் ஓரடிக்கொன்றாக நடவும்.

நீண்ட பாத்திகளாக நாலு வரிசைகளுக்கு மேற்படாமல் நட்டு வளர்ப்பது மிக்க அழகு தரும். சில சமயம் செடி அதிகம் தழைத்துக் கிளைவிட்டு வளர்ந்தால் இவ்வளவு நெருக்கம் கூடாது என்பதே பொருள். முடிந்த அளவு கலைத்து நடுவதும் நலம். அதிகம் நெருங்கவிட்டால் பெரிய பூக்கள், அதிகம் பூக்கள் உண்டாகமாட்டா. நடும்போது ஆழ நடுதல் அவசியம். புது இலைகள் இரண்டு மூடும்படியாக நடலாம்.

பெரிய பூ தேவை என்றால் ஒரு கிளையும் கிளைக்கவிடாமல் கிள்ளி எடுக்கவேண்டும். அப்போது இலைக் கணுத்தோறும் பெரிய அளவுள்ள, பிரகாசமுள்ள பூக்கள் உண்டாகும். அடி இலைகளையும், பழுத்த இலைகளையும் அகற்றிவிடலாம். கீழ் ஈரம் எப்போதும் தேவை. வெப்பம் அதிகமானால் பூவாளியால் இலைகளை நனைப்பதோடுகூட, பீச்சுங்குழலாலும் நீர் அடிக்கவும். செடிகள் மிகவும் அதிகமாய்ப் பூக்கும். மிகவும் அதிகமான உரம் தேவை. ஆதலால் இரண்டு வாரத்துக்கொருமுறை திரவ உரம் விடுதல் நலம்.

நோய் வருவது குறைவு. பூஞ்சண நோய் வந்தால் மயில்துத்தக் கலவை மருந்து தெளிப்பது பயனுடையது.

விதைத்த அறுபது நாளில் பூக்கும். மூன்று வாரம் பூத்துக்கொண்டிருக்கும். பின் தானே அழுகிவிடும். பருவ மழைபெய்தவுடன் விதைப்பது நல்லது. மீண்டும் மீண்டும் சித்திரை தொடக்கம் வரையில் விதைத்து வரலாம்.

காலையில் மலர்ந்த பூ, இரண்டு மூன்று நாள் உதிராமல், வாடாமல் இருக்கும். வாடியபின் பூ இதழ் உதிர்ந்து காயாகும். காய்முற்றி, தோல் வெடித்து விதை சிதறும்.

சிதறப் போகும் சமயம், காயின் தோல் வெண்ணிறமாய் இருக்கும். விரலால் அழுத்தினுல், உடைந்து விதை சிதறும். பிஞ்சில் அமுக்கிவிடாமல், முற்றியதாய் விதை எடுத்து உலர்த்திவைக்கவேண்டும். உலர்ந்த விதைகள் பழுப்பு நிறம்; அந்தந்த வருஷமும் முளைக்கும். விதை கடுகைவிடச் சற்றுப் பருமனுய், கொஞ்சம் தட்டையாயிருக்கும். உட னுக்குடன் விதை போட்டால் நன்கு முளைக்கும்.

காசித்தும்பை என்ற பெயரின் பொருள் விநோதமானது. காசிக்கு யாத்திரை செய்பவர், காசியில் தம் கையாலேயே நந்தவனம் அமைத்து, அதில் பூவெடுத்துப் பூஜைசெய்வது சிறந்த புண்ணியம் என்ற நம்பிக்கையுண்டு. மிகவும் குறைவான நாளில் பூக்கின்ற செடி இந்தச் செடி. பூவின் அமைப்பு தும்பைபோல் இருப்பதால் காசித்தும்பை என்று பெயர் ஏற்பட்டதாம்.

இது நம் நாட்டின் பழமையான பூஞ்செடிகளில் ஒன்று. பூ ஒருவித மணமுடையது. பூவின் அமைப்பும் விசித்திரமானது. இதன் இதழ்களில் ஒன்று வால் போலக் கீழே தொங்கும்.

### வகைகள்

**ஒற்றை இதழ் :** இவ்வகைக் காசித்தும்பை பழங்கால முதற்கொண்டு நம் நந்தவனங்களில் காணப்பட்டு வந்தது. முக்கியமாகச் சொல்லத்தக்கவை – சுத்த வெள்ளை, மங்கலான சிவப்பு, மங்கலான ஊதா, ரோஜா என்ற நான்கு ரகங்கள். இவை யாவும் உயர்ந்து வளரும் நான்கு அடி வரை. நிரம்பக் கிளைத்து அடர்ந்து வளரும்—ஏராளமாய்ப் பூக்கும். நல்ல தோட்ட மண்ணுக இருக்கும் பட்சத்தில், தானே விதை சிதறி முளைத்துப் பூத்துக்கொண்டிருக்கும். ஒற்றையிதழுடைய வகை பெரிய செடி. 6 அடி உயரங் கூட வளரும்.

**அடுக்கிதழ் :** இவை சிறப்பான புது ரகங்கள். கிளைக்க விடாமல் முற்கூறியபடி கிள்ளி வளர்க்கவும். தொட்டியில்

பயிரிட மிகவும் பொருத்தமானவை. 9–10 அங்குலத் தொட்டி ஒன்றுக்கு ஒரு செடி வீதம் நடலாம். நிறங்கள் எண்ணற்றன. சுத்த வெள்ளை, வெள்ளையில் செம்புள்ளி, ஊதாப் புள்ளி, நீலப்புள்ளி, மங்கலான ஊதா, நீலம், கரு ஊதா, சிவப்பு, காவி, கருஞ்சிவப்பு, ரத்தநிறம்—என. பெரிய வெள்ளை அல்லது ரோஜாநிறப் பூ, பெரிய ரோஜா வெனவும் சொல்லக்கூடிய அழகோடிருக்கும். ஒரே சமயத்தில் ஒரு முழச்செடி முழுமையும் பெரிய கவர்ச்சியான நிறமுடைய பூவாயிருப்பது கண்கொள்ளாக் காட்சி. அடுக்கிதழ் வகை சிறிய செடி. ஒரு முழ உயரமே இருக்கும்.

விதையெடுப்பதில் ஒரு கவனம் வேண்டும். எண்ணற்ற வகைகள் இருந்தாலும், கவனக்குறைவால் சில ரகங்கள் தாமே விதை எடுத்துச் சேமிக்கப்படாமல் அழிந்து போகும். ஆகவே ஒவ்வொன்றிலும் அனேகஞ் செடிகளைப் பயிரிட்டு, ஒவ்வொன்றிலும் பார்த்து விதை எடுத்து வைத்து, ஒவ்வொன்றையும் விதைத்து வளர்க்கவேண்டும்.

### வருஷக் காசித்தும்பை

மேலே கூறியவை யாவும், பருவகாலப் பூஞ்செடிகள். மூளைத்துச் சில மாதமே இருந்து பின் அவை மடிந்து போகும். ஆயினும் இவைகளே சிறந்தவை. மற்றப்படி இந்த வருஷக் காசித்தும்பை என்பது வருஷ முழுமையும் இருந்து எப்போதும் பூக்கின்ற அற்பச்செடி. 18 அங்குல உயரம். மெலிந்த செடி, பிரகாசமான ரோஜா நிறமுடைய ஒற்றை இதழ்ப் பூக்கள், ஏராளமாய்ப் பூக்கும். பூ முந்திய காசித் தும்பைகள் போன்று கீழ் வால் இல்லாமலும், இதழ்கள் குவியாமலும், முழுமையும் விரிந்திருக்கும்.

விதை போட்டும், பதியன் போட்டும் இந்த வகையை எளிதில் உண்டாக்கலாம். 18 அங்குலத்துக் கொன்றாக நடலாம். முழு வெயில் இல்லாமல் சிறிது மறைப்பு இருப்பது சிறப்பு. 10 அங்குலத் தொட்டியில் நன்கு வளர்ந்து

பூக்கும். கோணல் மாணலான கிளைகள் கண்டால் கிள்ளி விடவேண்டும். அப்போது செடி நெருக்கமாய்த் தழைத்து வளரும். நீர் தேங்கினல் உடனே அழுகிவிடும்.

### காந்தள்

உயரமான மெலிந்த தண்டுடைய கொடி என்று கூறலாம். இலை யுதிர்க்கும் இயல்புடையது. மழைக்காலத்தில் ஏராளமாய்ப் பூக்கும். பூக்கள் பாதி சிவப்பு நிறம், பாதி மங்கலான மஞ்சள்நிறம். நேரம் ஆக ஆக, பூ முழுதும் கவர்ச்சி மிக்க சிவப்பு நிறமாக மாறும். பார்வைக்கு மிகப் பகட்டான அழகிய கொடி. மழைக்காலம் நெருங்கியதும், இலைகள் காய்ந்துபோகும். வேரிலுள்ள கிழங்கு அடுத்த பருவகாலம் வரை வளர்ச்சியின்றி உறங்கும். தரையிலும் வளர்க்கலாம். தொட்டியில் வளர்ப்பதானல் மூங்கில் கூடுபோல் பண்ணி அதன்மீது படரவிடவேண்டும்.

சதைப்பற்றுள்ள பெரிய கிழங்குகள், மஞ்சள் கிழங்கு போல் பரவும். முளையுள்ள பாகங்களைத் தனித் தனியே நறுக்கிநடலாம். நிரம்ப எருவிட்ட வளமிக்க மண்வேண்டும். தண்ணீர் தேங்காமல் வடியவேண்டும். தரையில் ஒரு கொடியைப் படரவிடலாம். நன்ருய்த் தழைத்துப் பூ பல நாள் வரையில் புதுமை மாருமல் அழகாகவே இருக்கும். கிழங்கு விஷமுள்ளது. சில சமயம் ஏழைமக்கள் வள்ளிக் கிழங்குபோல் இதையும் தின்றுவிட்டுத் துன்புறுவர். கார்த்திகையில் பூக்கும். கார்த்திகைக் கிழங்கு (அல்லது பூ) முதலியன இதற்கு வழங்கும் பெயர்களாகும்.

வைத்தியத்தில் கிழங்கு உபயோகமாகிறது. பல அரிய குணங்களுடையது. மேனுட்டில் இதற்கு அதிகக் கிராக்கியுண்டு. சாதாரணமாயுள்ளது செங்காந்தள். வெண்காந்தள் என்பது வெண்ணிறம் கலந்த பூக்களை யுடையது.

இரண்டிலும் பூவின் அமைப்பு விநோதமானது. ஐந்து இதழ் உடையது. இதழ்கள் நீண்டு உட்புறம் வளைந்து

இருக்கும். ஓர் இதழ் குறுகியும், மற்றவை நீண்டும் இருப்பது, கைவிரல்களை வளைத்துக் காட்டியதுபோல் இருக்கும். ஓரிதழ் கட்டைவிரல் போலவும் மற்ற நான்கும் மற்ற நான்கு விரல்கள் போலவும் தோற்றும். அதுபற்றி, 'காந்தளங் கைத்தலம்', 'கைவிரிந்தன காந்தளும்', 'கைபோல் விரிந்தன கமழ்குலைக் காந்தள்', 'செங்காந்தள் மெல்விரல்' என்றெல்லாம் இலக்கியத்தில் சிறப்பிக்கப்பெறும்.

### காலியாப்ஸிஸ்

இரண்டடி உயரம் வளர்ந்து அழகாய்ப் பூக்கின்ற மிகவும் மென்மையான சிறு செடி. விதை போட்டுப் பயிராகும். விதைத் தொட்டியில் விதை தெளித்து, வள மிக்க மண்ணில் பெயர்த்து நடலாம். ஆறு இலை விட்டவுடன் பெயர்க்கவும். வேர் விரைவில் மிக அதிக இடம் அடைப்பதால், தொட்டியில் நன்றாய் வளர்வதில்லை. தரையில்தான் நடவேண்டும். சிலவகை அதிக உயரம் வளரும். உயரம் ஒரு சாண் என்றாலும், வளத்தின்மேல் மூன்றடி வளர்வதும் உண்டு. சில ஓரடியிலேயே நிற்கும். நடும் தூரம் உயரத்துக்குத் தகுந்தாற்போல்.

மிகவும் பிரகாசமான நிறம்கொண்ட பூ, நீண்ட காம்பின் நுனியில் வந்து காற்றில் ஆடுவது மிக்க அழகாயிருக்கும். இலைகள் ரோமம் போல் மென்மையாய்க் கருநிறமாய் இருக்கும். இடையில் காணப்படும் பிரகாசமான பூவின் கெட்டி மஞ்சள் நிறம் மிக்கக் கவர்ச்சியுடையது. தனித் தனிச் சிறு பாத்திகளாய் நட்டால் நன்றாயிருக்கும்.

### வகைகள்

**சிவப்பு :** கருஞ்சிவப்பான பூ, முழுமையும் ஒரே நிறம். செடி 15 அங்குல உயரமே வளரும்.

**பெருமஞ்சள் :** 2 அடி வளரும் பெரிய செடி. பெரிய மஞ்சள் பூ. நடுவில் கால்பாகம் மட்டும் கருஞ்சிவப்பு.

மற்றவை யாவும் மஞ்சள் நிறப் பூக்கள். உயரம் 15 - 24 அங்குலம் வரை. பூவில் நடுப்பகுதி சிவப்பு நிறமாக, கால்பாகம், அரைபாகம், முக்கால் பாகம் என்று விதம் விதமாய்க் கருஞ் சிவப்பு படிந்து இருக்கும். அனேகமாய் யாவும் மஞ்சள்—சிவப்பு என இருநிறமாயிருக்கும்.

### கானுவாழை

மஞ்சள் இஞ்சி இனத்தைச் சேர்ந்த ஒரு கிழங்குச் செடி. கிழங்கும் இலையும் மஞ்சள் போன்றவை. ஆறு அடி வரை வளரக் கூடியது. இலையின் நிறம் இருவகை. ஒன்று சாதாரண வாழைபோன்ற பச்சை, மற்றது சிவப்பு நிறம். பருவமென்றில்லாதபடி தக்க பராமரிப்பின்மேல் எப்போதும் மிக்க அழகோடு ஏராளமாய்ப் பூக்கக்கூடியது. இந்தச் செடி ஆதியில் இந்தியாவின் காடுகளில் தானுக வளர்ந்த ஒரு காட்டுச் செடி. அதன் பூ மஞ்சள், சிவப்பு நிறங்கள். அதன் அழகுபற்றி இப்போது அது அபி விருத்தி செய்யப்பெற்று எல்லா நாடுகளிலும், தோட்டங் களில் பயிரிடுகிற இன்றியமையாத ஓர் அலங்காரப் பூ வர்க்கமாகிவிட்டது. தரையிலும் பயிராகின்றது, தொட்டி யிலும் பயிராகின்றது. (கொட்டைவாழை என்றும் பெயர்.)

கானுவாழைக்கு நிரம்ப வெயில் வேண்டும். நிழல் ஆகாது. இரண்டடி நீளம், அகலம் ஆழமுள்ள அதிகமான எருவிட்ட குழிவேண்டும். சித்திரை, வைகாசி, ஆனி தவிர மற்றெல்லா மாதங்களிலும் புதிதாய்ப் பயிரிடத் தொடங்க லாம். மாரிக்குமுன் ஆவணி, புரட்டாசியில் தொடங்குவது சிறப்பு. மழையின்போது பயிரிடவேண்டாம். பழைய செடிகளின் கிழங்குகளை எடுத்து, பழைய வேர் முதலியவற் றையும், உலர்ந்து அழுகிப்போன பகுதிகளையும் சீவி எறிய வும். 4 அங்குல நீளமுள்ளதாய் ஒரு முளையேனும் உடைய தாய்க் கிழங்குகளை நறுக்கவும். நன்கு கொத்தி நிரம்ப எருவிட்ட குழிகளில் இரண்டடிக்கொரு துண்டாகக்

கிழங்கை நடவும். கிழங்கைச் சுற்றி அரையங்குலம் தனி மணல், நடவேண்டிய ஆழம் 3 அங்குலம். நாலு நாள் கழித்து நிரம்ப நீர் விடவும். கடும் வெப்பமாய் இருந்தால் தழை முதலியன போட்டு மூடி வைக்கவும். விரைவில் முளைக்கும். ஒன்றுவிட் டொருநாள் நீர் விடவும். வளர வளர அதிக நீர் தேவை. வளரும்போது நீர் பாய்ச்சுகையில் கொஞ்சமாய் மேல் மண்ணை மட்டும் நனைத்தால் போதாது. ஆழ நீர் இறங்கும்படி அதிக நீர் விடவேண்டும். வகைக்குத் தகுந்தபடி $2\frac{1}{2}$ மாதத்திலிருந்து 4 மாதத்துக்குள் யாவும் பூக்கத் தொடங்கும். பூத்து முடிந்தபின் வாழை மரம் வெட்டுவதுபோல் பூத்த செடியை வெட்டிவிட வேண்டும். ஆனால் தரை மட்டத்தோடு வெட்டவேண்டும். இரண்டுவாரத்துக் கொருமுறை திரவ உரம் நல்லது. காரமான மட்கிய உரம் எதுவாயினும் நல்ல பயனைத்தரும்.

சில வகைகள் பூக் கனம் மிகுந்தவை. அவை காற்றில்லாமலே சாய்ந்து ஒடிந்துவிடும். ஆகவே பக்கத்தில் கொம்பு ஊன்றிக் கட்டுவது மிகவும் முக்கியம்.

கானுவாழை விதையினின்றும் முளைக்கும். உருண்டையான மிளகளவுள்ள கருநிற விதை, சில வகைகளில் உதிக்கும். விதை நீரில் ஊறுது. ஆகவே மேல் ஓட்டை உடைத்து விதைப்பது வழக்கம். வேற்று மகரந்தச் சேர்க்கையால் விதையிலிருந்து புதுரகச் செடிகள் உண்டாக்க முடியும்.

தொட்டியில் பயிரிட்டுப் பூக்கச் செய்வதும் எளிது. 18" தொட்டியொன்றில் இரண்டு முளைகள் நடலாம். முறை மேலே கூறியது போலவே.

கருஞ்சிவப்பு, ரோஜா, சிவப்பு, தனி மஞ்சள், காவி என்பன மிகச் சிறந்த ரகங்கள். சாமானிய மட்டரகம், மஞ்சள் நிறத்தில் சிவப்புக்கோடும் புள்ளியுமுடையது.

இதில் குள்ள ரகமொன்றும் உண்டு. இது $2\frac{1}{2}$ அடி உயரம் வளர்ந்து பூக்கும். மஞ்சள் அல்லது சிவப்புப் பூ.

வெள்ளை இலையுடைய அலங்கார ரகமொன்றும் உண்டு.

கானு வாழைப்பூ கத்தரித்தெடுத்து வீட்டுக்குள் மேஜைமேல் வைத்து, அலங்காரம் செய்வதற்கு மிகவும் ஏற்றது. அரியும்போது நீண்ட காம்பு இருக்கும்படி அரியவும். அரிந்த காம்பில் காற்றுப் படாதிருந்தால் பூ நெடு நேரம் வாடாது. அரிந்த இடத்தை நீரிலோ நனைத்த துணியில் சுற்றியோ வைக்கவும்.

### கெய்லார்டியா

இரண்டடி வளர்ந்து அளவில்லாமல் பூக்கின்ற ஒரு பருவகாலப் பூஞ்செடி. கிளைக்காமல் குத்துச்செடியாக வளரும். சாம்பல் நிற இலைகள். நீண்ட காம்பின் நுனியில் பூ: அனேக நிறங்கள். ஒவ்வொரு பூவிலும் பலநிறங்கள் இருக்கும். மஞ்சள், சிவப்பு, காவி, வெண்சிவப்பு, வெண் மஞ்சள் ; மஞ்சள் மட்டும் தனி நிறமாகவும் உண்டு.

விதையிலிருந்து செடி தயாராகின்றது. விதைகள் பழுதில்லாமல் முளைக்கும். விதைத் தொட்டியில் விதைத்து, நாற்றுப் பிடுங்கி, இரண்டடிக்கொன்ருக நடவும். மெது வாக நெடுநாள் வளரும். செடி சாயாதபடி அடியில் சிறு கொம்பு நட்டுக் கட்டுவது நல்லது. நெடுநாள் பூத்துக்கொண் டிருக்கும். நாமே விதை எடுத்துக்கொள்ளலாம். பூ காயக் காயக் காம்பைக் கத்தரித்துவிட்டால், செடி பின்னும் அதிக நாள் பூக்கும்.

சில விதைகள் ஆண்டு முழுமையும் பூக்கும், சில பருவ காலம் மட்டும். மாற்றி மாற்றி விதைத்து வந்தால் ஆண்டு முழுமையும் பூக்கச் செய்யலாம். 12" தொட்டியில் வளர்ப் பது பொருத்தம். பாதையோரம் பயிரிடச் சிறந்தது. பருவப் பூஞ்செடிகள் குறைந்து போகின்ற கோடைக் காலத்தில், கவனிப்பும் நீரும் இருக்கும்பட்சத்தில் இதைக் குறைவின்றிப் பூக்கச் செய்யலாம். செண்டு கட்டுவதற் கும், மேஜையலங்காரத்துக்கும் இப் பூக்கள் சிறந்தவை. செவ்வந்தி போன்ற சொற்ப மணம் உண்டு.

சில பூக்கள் சூரியகாந்தி அளவு இருப்பதும் உண்டு. செடி இரண்டு வருஷப் பயிர்.

### செவ்வந்தி

மிகவும் முக்கியமான பழைய பூக்களில் ஒன்று. பெயர் சாமந்தி எனவும் வழங்கும். இது பூக்கும் பருவத்தில் எல்லாக் கோயில்களிலும் சுவாமி அலங்காரத்துக்கு இதையன்றி வேறு பூ காண்பதற்கு முடியாது. சிவபெருமானுக்கும் திருவாரூர்த் தியாகராஜருக்கும் சிறப்பானது. திரிசிராப்பள்ளித் தலபுராணம் ஒன்றுக்குச் **செவ்வந்திப் புராணம்** என்றே பெயர். செவ்வந்திப் பெருமான் எனவே இறைவனைப் பாடல்கள் துதிக்கும்.

இந்தச் செவ்வந்தி வகை கெட்டி மஞ்சள் நிறமானது. பருவகாலத்தில் மட்டும் பூக்கும். அடுக்கிதழ் கொண்ட சிறிய பூக்கள். மணம் மிகுந்தவை. இச் செவ்வந்திக்கு விதை இல்லை. இந்த வகைப் பூ தமிழ்நாடெங்கும் வியாபார ரீதியில் ஏராளமாய்ப் பயிரிடுகிறார்கள். பூக்கின்ற காலத்தில்–ஐப்பசி முதல் மாசி முடிய–புன்செய்க் காடுகளில் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில், செவ்வந்தித் தோட்டம் விற்பனைக்காகப் போட்டுள்ள இடங்களில் காணும் காட்சி கண்ணுக்குப் பெருவிருந்தாய் இருக்கும்.

இந்தச் செவ்வந்தியை இரண்டுவிதமாக உற்பத்தி செய்வது உண்டு. செடிகளின் அடித்தூறிலிருந்து புதுக் கொழுந்துகள் வெடிக்கும். அன்றியும் பாத்தி நெடுகிலும், வேரோடும் இடமெங்கும் புதுக் கொழுந்துகள் உண்டாகும். இவற்றை வேரோடு பெயர்த்தெடுத்துத் தனிச்செடியாகப் பயிரிடுவது எளிய முறை. தக்க பருவத்தில் நுனிக்கிளையை ஒடித்துப் பதியன் போட்டால் கொழுந்துகள் உடனே வேர்பிடித்து, எளிதில் வளர்ந்து பூக்கும். இதுவும் எளிய முறையே.

விற்பனைக்காகத் தோட்டம் போட்டிருப்பவர்கள் பூத்து முடிந்தவுடன் பூத்த கிளைகளை நறுக்கிவிட்டு, செடிகளைப் பிடுங்கி, ஈரம்படக்கூடிய இடத்தில், ஒரு தனிப் பாத்தியாக நட்டு, அதிக ஈரம் காட்டாமலும், காய்ந்துபோகாமலும் வைத்துப் பாதுகாப்பார்கள். பங்குனியிலிருந்து ஆடிவரை இப்படிப் பாதுகாக்க வேண்டியிருக்கும். ஆடியில் இவற்றுக்கு நீர் பாய்ச்சி, புதுக்கன்றுகள் வெடிக்கச் செய்து அவற்றைப் பெயர்த்து நட்டுக்கொண்டே போவார்கள். ஒரு செடிக்கும் அடுத்த செடிக்கும், இடையில் ஒரு முழத் தூரம் இருக்கலாம். செடி வருஷமொருமுறைதான் பூக்கும். ஆயினும் நிரந்தரமாய் உயிர்வாழ்ந்திருக்கக்கூடியது.

அதிகம் வளராமல் தலையைக் கிள்ளிக்கொண்டிருந்தால் தான் நிரம்பக் கிளைத்துப் பூ அதிகம் பூக்கும். உயர்ந்து வளரவிடக்கூடாது. அதிக உயரம் இரண்டு அடி. நெருக்கமில்லாமல் வளர்த்தால் உயர்ந்து வளராது.

பூமாத்திரமன்றி செடியுடன் இலையும் மணமுடையது.

நாட்டுச் செவ்வந்தியில் சிறப்பான மற்றொரு ரகமும் உண்டு. இது மஞ்சள் செவ்வந்தியளவில் வெண்ணிறமான பூ. மையம் மட்டும் (அதாவது மகரந்தம் தாங்கிய பகுதி) ஒரு பைசா அகலத்தில் மஞ்சள் நிறமாயிருக்கும். சுற்றியுள்ள இதழ்கள் வெண்ணிறம். அழகிய பூ. பயிரிடுவது மஞ்சள் ரகம் போலவே.

### ஜப்பான் செவ்வந்தி

ஜப்பான் செவ்வந்தி என்பதுதான் சாமானியமாய் விற்பனைக்காக அன்றி, அழகுக்காகவும், இன்பத்துக்காகவும், தோட்டம் அமைக்கிறவர்கள் பயிராக்கும் செவ்வந்தி வகை. இதில் பொதுவாக மணம் இராது. பல்வேறு நிறங்களில் செடிகள் பூக்கும். பெரிய பூக்கள். தாமரை எப்படி இந்திய மக்களின் வாழ்க்கையில் கலந்துவிட்டதோ அவ்விதம் இந்தச் செவ்வந்தி ஜப்பானிய மக்களின் வாழ்க்கையில் ஒன்றிக் கலந்திருக்கின்றது.

ஆயிரம் வருஷங்களுக்கு முன்னே அந்த நாட்டின் சக்கர வர்த்தி தனியே இப் பூக்காட்சி நடத்தியிருக்கிறாராம்.

இந்தச் செடிக்கு விதையுண்டு. ஆயினும் முன்னே கூறியது போன்ற பதியனிலிருந்து பயிரிடுவதுதான் எளி தான வழி. களிப்பு மண்ணும், நீர்க்கட்டும், செவ்வந்திக்கு ஆகா. புளித்தமண் கூடாது. ஆகவே மணல் இட்ட, தழை யுரம் நிரம்பச் சேர்ந்த மண் சிறப்பானது. மண்ணில் கரித் தூள் இட்டு வைப்பது மிகவும் பயனுடையது. பங்குனி மாதக் கடைசியில் வேர் பிடித்த பதியன்களை எடுத்துப் பாத்தி கட்டி, அதில் முழத்துக்கொன்றாக நட்டுவைக்கவும். ஐப்பசித் தொடக்கத்தில் பூக்கத்தொடங்கும். ஆனால் இதற்குமுன் ஆடி ஆவணியில் மழைபெய்து, வெப்பம் குறைந்திருக்கும்போது, தொட்டியிலோ, தரையிலோ, பயிர் செய்யவேண்டிய இடத்தில் இவற்றைப் பெயர்த்து நடத் தொடங்கலாம். அரையடி நீளமுள்ள தளிர்களைக் கத்தரித்து எடுத்து, அவற்றின் அடியில் இரண்டு மூன்று இலைகளை நீக்கிவிட்டு, மிருதுவான மணல் நிறைந்த மண் ணில் பதியன் போட்டால் விரைவில் வேர்விட்டுப் பிழைத் துக்கொள்ளும். நன்கு தளிர்த்து வரும்போது, பெயர்த் தெடுத்துத் தொட்டியில் நடலாம். நடும்போது முதலில் சிறு தொட்டியிலும், வளர வளரப் பெரிய தொட்டியிலும் மாற்றிக்கொண்டே போகவும். நிரம்ப எருக் கலந்த மண் தேவை. ஆனால் முன் சொன்னபடி களிப்பும், கொழ கொழப்பும், ஆகமாட்டா. தொட்டியில் செடி அதிகக் கூட்டமாகிவிடாதபடி பார்க்கவேண்டும். மண் சற்றே பொரபொரப்பாய் இருக்கும்படி செய்து அதிகமாக நீர் விட்டு வரலாம். செடி மெலிந்து, வளர்ச்சி குன்றிப் போனால் நன்கு நீர் வடியவில்லை யென்பது பொருள். தொட்டி மாற்றி மணலில் போடவேண்டும்.

செவ்வந்தி, மண்ணில் சாரம் அதிகம் இழுப்பது. ஆத லால் சிறந்த எரு முதலில் தருவதுடன், செடி வளரும்

போது, இரண்டுவாரத்துக் கொருமுறை திரவ உரம் இட வேண்டும். பெரிய பூவாகவேண்டும், அதிகச் செடியோ அதிகப் பூவோ வேண்டாம் என்று எண்ணும்போது, பக்கத்தில் வெடிக்கும் கிளைகளைக் கத்தரிக்க வேண்டும். தூறில் கிளை வெடிக்காதபடியும் பார்க்கவேண்டும். செடி ஒரு சாண் உயரம் வளர்ந்தது முதலே பக்கக்கொம்பு கட்டுப் பாதுகாப்பது முக்கியம். செடி இரண்டடிக்கு மேற் போகாமல் வளர்ப்பது அவசியம்.

பயிரிடும்போது ஒரு செடிக்கு இருபது பூ வரையில் இருக்கும்படியும் விடலாம். பூ ஒன்று 4 அங்குல குறுக்களவு இருக்கும். இதன்பொருட்டுச் செடி ஒரு முழம் உயர்ந்ததும் தலையைக் கிள்ளி விட்டால் பக்கத்தில் கிளைக்கும். ஒரே பருவத்தில் நிரம்பப் பூக்கும். இவற்றில் சில பெரிய பூக்கள் போது மென்று கருதினுல், நெருக்கமாய் உள்ளவற்றில் பெரிய மொக்குகளை மட்டும் நிறுத்தி மற்றவற்றை நீக்கி விடலாம். பொருட்காட்சிக்கென வளர்க்கும் போது எல்லாக் கிளைகளையும் அகற்றி, ஒரே கிளையாக வைத்து, ஒரே பூ பூக்கும்படி செய்யவும். இது மிகவும் பெரிய பூவாக இருக்கும். சிலசமயம் நாம் உச்சியில் வளர விட்டிருக்கும் ஒற்றைப் பூ கோணல் மாணலாய் இருக் கும். இதன்பொருட்டு உச்சியில் தோன்றும் பூ சரியான வடிவம் உடையதாயிராத போது, அதைக் கிள்ளிவிட்டு, பக்க அரும்பு இரண்டொன்று வளர விடலாம். இந்த இரண்டும் பெரிய அளவாயும், நல்ல வடிவமாயும் அமையும்.

**வகைகள் :**—மிகப்பல உள்ளன. புதிதாய்ப் பழகுகிறவர் களுக்கு இவ்வளவும் அறிவதிற் பயனில்லை. நிறங்களை ஒட் டிச் சிலவகைகளை மட்டும் அறிவது போதுமானது. இவற் றுள் நீலவகை (மங்கலான ஊதா நிறம் கலந்தது) மிகவும் சிறப்பானது. பெரிய பூ. வெள்ளை, மங்கலான மஞ்சள், அதிக மஞ்சள் என்ற நிறங்களுடைய பூக்களும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

### தங்கக் கம்பி

ஆங்கிலத்தில் இப்பெயர் கொண்ட சிறு செடி. அழகு பெற வளராது. ஆயினும், நன்கு பூக்கும். கதிர் போன்ற அமைப்புடைய தங்க நிறப்பூக்கள், ஆதலால் இந்தப் பெயர். சிறு பூண்டு போல வருஷ முழுமையும் இருந்து எப்போதும் பூக்கும். 2 அடி உயரம். எந்த மண்ணிலும் நன்கு பயிராகும். வெயிலும், சொற்ப நிழலும், தகுந்தவை. செவ்வந்தி போல மண்ணில் வேர் விட்டுக் கிளைத்துக் கொண்டே போகும். இக்கிளைகளை வேருடன் பெயர்த்தெடுத்துப் புதுச் செடி உண்டாக்கலாம்.

### டயாந்தஸ்

பலரகச் செடிகளைத் தன்னுள் அடக்கிய ஒரு பெருங் குடும்பம். யாவும் பூண்டென்று சொல்லத் தக்க சிறு செடிகள், 12 அங்குல உயரம். எல்லா ரகங்களும் ஏராளமாய்ப் பூக்கும். ஒற்றை, அடுக்கு இரண்டும் உண்டு. எண்ணற்ற நிற வேறுபாடுகள். தனி நிறங்களிலும், கலப்பு நிறங்களிலும், கோடுகள் உள்ளவையும், ஓரம் புது நிறம் கட்டிய பூக்களும் உண்டு. யாவும் ஆண்டு முழுமையும் வளர்ந்து, எப்போதும் பூக்க வல்லவை. சில ரகங்களை மட்டும் தேவையான போது பருவத்தில் புது விதை போட்டுத் தயாரிப்பது நல்லது. முப்பட்டையான கருநிறச் சிறு விதைகள். செடிகளுக்குத் தண்ணீரில் அதிகக் கவனம் வேண்டும். அதிகத் தண்ணீர் ஆகாது.

முதலில் விதை விதைத்து அதிக நீர் விடாமல் காப்பாற்றிக் கன்று $1\frac{1}{2}''$ வளர்ந்தவுடன் பெயர்த்து நட வேண்டும். தொட்டியில் பயிரிடுவதானல் 9 அங்குலத் தொட்டி போதும். பல முறை தலையைக் கிள்ளி வருதல் நல்லது. விதை போட்டுப் பயிரிடும் பட்சத்தில் ஒவ்வொரு செடியின் பூவும் ஒவ்வொரு விதமாயிருக்கும். பூக்கிறகாலம் அதிக நீண்ட காலம். பூத்து வாடிய பூவை உடனுக்குடன்

களையவும்; இச்செடி இன்னும் அதிக நாள் பூக்கும்படியும் செய்யலாம். இது இரண்டு வருஷப் பயிர்.

### பெட்டுனியா

எளிதில் பயிராகிற ஒரு சாதாரணச் சிறு செடி. தோட்டத்துக்கு நிரம்ப அழகு தர வல்லது. செடி ஒழுங்கின்றிப் படர்ந்து வளரும் இயல்புடையது. மிருதுவானது. செடியிலும், இலையிலும் ஒரு பிசு பிசுப் புண்டு. சூரிய வெப்பத்தை விரும்புகிற செடி. பூக்கள் மிகவும் பெரியவை. 4 அங்குலக் குறுக்களவில் பிரகாசமான நிறமுடையதாய் இருக்கும். சாமானிய ரகங்கள். தூயவெள்ளை முதல், ஊதா வரையில் அனேக நிறங்களில் காணலாம். எல்லாம் சிவப்பு நிற பேதங்கள். அடுக்கிதழ் உடைய ரகங்களும் உள்ளன. இவற்றைத் தரையில் பாத்திகளிலும், பூஞ்சட்டிகளிலும், தொங்கு தொட்டிகளிலும் பயிரிடலாம். செடி சுமார் ஒரு முழ உயரம் வளரும். தனிக் கிளையாக வளர விடாமல் நுனியைக் கிள்ளி விட்டு அடியிலிருந்தே கிளைக்கச் செய்வது மிகவும் முக்கியம். வெள்ளைச் சிவப்பு ரகங்கள் வருஷ முழுமையும் வாழ்ந்து பூக்கும். அதிக எருக் கொடுத்தால் போதும். விதையிலிருந்து சுலபமாய் முளைத்து வளரும். விதை மிக மிகச் சன்னமானது. டூரீனியா விதை போல். முழு உருண்டை. பொடி மணலினும் சிறு அளவுள்ளது. தானே வெடித்து விதைகளைச் சிதறிவிடும். சிதறு முன் பார்த்துப் பக்குவமாய் எடுத்து உலர்த்தி வைக்க வேண்டும். விதை எடுக்கும்போது மேக வர்ணமாய் இருக்கும். எடுத்துக் காற்றில் பட்டவுடன் பழுப்பு நிறமாய் மாறும். விதை விதைப்பதில் அதிகக் கவனம் வேண்டும். பல சமயம், செடியிருந்த இடத்தில் விதைகள் தாமே விழுந்து முளைத்து வளரக் காணலாம். இவற்றை எடுத்து வளர்ப்பது எளிது.

நான்கு இலை விட்டவுடன் எடுத்து 4 அங்குலத் தொட்டியில் வளர்த்து, ஒரு சாண் வளர்ந்ததும், 10" தொட்டியில் தனிச் செடியாக நட்டு வளர்க்கவும். மணல் அதிகமுடைய காரமான எரு தேவை. தண்ணீர் விடுவதில் அதிகக் கவனம் வேண்டும். அதிகத் தண்ணீர் கண்டால் செடி அப்படியே அழுகிவிடும் ; மழை நீர் அதிகம் விழுந்தால் கூட இலைகள் அழுகிவிடும். நீர் விடும்போது இலைகளின்மேல் தண்ணீர் விழாதிருப்பது நலம்.

கிளைக்க ஆரம்பிக்கின்ற தருணத்தில் இரண்டு மூன்று தடவை கூடத் தலையைக் கிள்ளி விடுவது நல்லது. இதனால் அதிகம் கிளைக்கும். அதிகம் பூக்கும். சில சமயம் நிமிர்த்துக் கட்ட வேண்டியிருக்கும். தொட்டி யோரத்தில் ஒரு சாண் உயரமுள்ள மூங்கில் சிம்புகளை 3 அங்குலத்தொன்றாக ஊன்றி அவற்றின் உச்சியில் ஒரு சணல் கயிற்றைப் பின்னினால் செடியின் கிளைகள் கயிற்றில் தாங்கி நிற்கும்.

பெட்டூனியாவில் உள்ள மிகவும் சிறப்பான அம்சங்கள் இரண்டு: எல்லா ரகங்களும் மிக்க நறுமணம் உடையன. அவை மலர்ந்தவுடன், அரைமணி நேரம் நல்ல மணம் வீசிக் கொண்டிருக்கும். தவிர, பூத்த பூ 5 நாள் வரை வாடாது. பிறகு தான் வாடியுதிர்ந்து காய் உண்டாகும். ஆதலால், பிற செடிகளில் பூக்கள் இல்லாத போதுகூட எந்த நேரமும் 25-30 பெரிய பூக்கள் ஒரு செடியில் இருப்பது மிக்க அழகாய் இருக்கும்.

மற்றொரு சிறப்பு, இதன் பிரகாசம். காரிருளில் வெண்ணிறமான பூக்கள் மிக்க பிரகாசமாய்த் தோற்றமளிப்பது இரவில் கவர்ச்சிகரமான காட்சி.

பெட்டூனியாவுக்கு எந்த நிலையிலும் கொடியதொரு பூஞ்சண நோய் வரும். நன்றாய்ப் படர்ந்து வரும் கிளையின் நடுவில் எங்கேனும் திடீரென்று ஓரிடம் காய்ந்து போகும். உடனே அக்கிளை முழுமையும், கிரமமாய்க் காய்ந்து போகும். இது எப்போது எந்தச் செடிக்கு வருமென்று

சொல்ல முடியாது. இதற்கு எந்தப் பரிகாரமும் இருப்பதாய்த் தெரியவில்லை. அளவாய்த் தண்ணீர் விட்டு வந்தால் இந்த நோய் வருவது குறைவாயிருக்கும்; மடிக்காத உரம் கூடாது. மேல் மண்ணைக் கிளறுக.

பெட்டூனியா கிளைகள் வேர் பிடிப்பதும், பதியன் போட்டுச் செடி உற்பத்தி செய்வதும் உண்டு. அடுக்குப் பூ வகைகள் நம் நாட்டில் காய்த்து விதை தருவதில்லை. பதியன் போடுவது எளிது. அடுக்கில் பல நிறங்கள், கோடுகள், புள்ளிகள், ஓரவளைவு முதலான பல பேதங்களுள்ளன.

### பெண்டாஸ்

இரண்டடி உயரம் வளரும் சிறுசெடி. 3 அங்குல நீளமுள்ள நுனிக்கிளைகளை நறுக்கிப் பதியன் போட்டு உற்பத்தி செய்யலாம். வருஷ முழுவதும் பூத்துக் கொண்டிருக்கும். பூக்கள் வெட்சிப் பூவைப் போலக் கொத்துக் கொத்தாக, கிளை நுனியில், செடியின் உச்சியில் இருக்கும். தொட்டியில் பயிரிட ஏற்றது. இரண்டு வருஷங்களான பின், செடிகளைப் பிடுங்கி எறிந்துவிட்டு பதியன் போட்ட இளஞ் செடிகளை மறுபடியும் வைப்பது நலம். பூக்களில் சுத்த வெள்ளை, வெள்ளையும் சிறிது சிவப்பும் கலந்தது, மங்கலான நீலம், அதிகச் சிவப்பு, ரோஜா நிறம் என ஐந்து வகை. எல்லா வகைகளும் நிரம்பப் பூக்கும். சிவப்பு வகை மற்றவற்றைவிட வெண்மையான செடி. மெதுவாகவேவளரும். பூக்கள் பிரகாசமான நிறம். எல்லா வகைப் பூக்களும் பூத்த பின் சில நாள் வரையில் உதிராமல் இருக்கும்.

### மலம்போடியம்

2 அடி உயரம் வளரக் கூடிய சிறு செடி. விதை தெளித்துப் பிடுங்கி வரிசையாக நட்டால் சுவர் வைத்தது போல் வளர்ந்து விடும். இரண்டு மாதத்துக்கு மேலும்

பூக்கும். சிறு சிறு பூக்கள் செடியே தெரியாதபடி தனித் தனியாக நின்று மூடிக்கொண்டிருப்பது மிக்க கவர்ச்சி யாய் இருக்கும். எளிதில் விதை யெடுத்துப் பயிரிடலாம்.

இரண்டடி உயரமும் மூன்றடி அகலமும் அடைக்கும். பருவமென்று இல்லாமல் எக்காலமும் பூக்கும். தோட்டத் தில் பொதுவாய் வெள்ளை சிவப்புப் பூக்களே அதிகமாக இருக்கும். இவற்றினிடையில் இந்த மஞ்சள் பூ பெரிதும் விரும்பத் தக்கது. தானே ஏராளமாய் விதை தூவி முளைக் கும். அவற்றை எடுத்துப் பயிரிடலாம். நமக்கு வேண் டாம் என்று எறியக் கூடாது. செடிக்கு நோய் வருவது இல்லை. மூன்றும் மாதத்தில் பூத்து முடியும். முடியும்போது பிடுங்கி எறிந்துவிட்டு இளஞ்செடி நடலாம். இது உடனே பூக்கத் தொடங்கும்.

# 8

## சிறு பூண்டுகள்

இந்தப் பகுதியில் சேர்க்கப்பட்டுள்ள செடி வகைகள் ஒரே இனமல்ல, ஒரே மாதிரியல்ல. ஆயினும் சில பொது இயல்புகளை யொட்டி இவை இங்கு ஒருசேரக் கூறப் பெற்றுள்ளன. இவை யாவும் வருஷ முழுமையும் இருக்கக்கூடிய செடிகள். நிலச் சம்பங்கி தவிர மற்றவை வருஷ முழுமையும் பூக்கும். எங்கும் பயிரிடலாம். தனியிடம் என்பது வேண்டியதில்லை. பயிரிடுவதில் கஷ்டமுமில்லை. அந்தி மல்லிகை, கனகாம்பர வகைகள், டுரீனியா, நித்திய கல்யாணி, பூம்பசலை, லில்லி, வெர்பீனு போன்றவை, தங்கள் விதையைத் தாமே சிதறிப் புதிது புதிதாக முளைத்துக் கொண்டிருக்கும். பொதுவாய் இவற்றின் பூக்கள் மாரியிலும் கோடையிலும் தோட்டத் துக்கு மிக்க பிரகாசத்தைத் தரும். பயிரிடும் எளிமை பற்றியே இவை இங்கு ஒரு சேரக்கூறப் பெறுகின்றன. யாவும் மிகச் சிறு செடிகள்; விதை சிதறித் தாமே எங்கும் உண்டாகும். அவற்றில் தேவையானவற்றை மட்டும் வைத்துக் கொள்ளலாம். லில்லி தவிர மற்றவற்றில், உச்சியைக் கிள்ளிவிட்டுக் கிளைக்கச்செய்து நிரம்பப் பூக்க வைக்கலாம். சிறு பூண்டுகளாயிருப்பினும் தோட்டத்தில் மிக்க அழகு தரும். அந்திமல்லிகையும் லில்லியும் கிழங்குப் பயிர்கள்; மற்றவை சிறு செடிகள்.

### அந்தி மல்லிகை

காட்டுச் செடியாக எங்குப் பார்த்தாலும் தோட்டங் களில் தன்னிச்சையாய் முளைத்துக்கிடக்கிற சிறு பூஞ்செடி. அடியில் கிழங்கு உண்டு. சில கிழங்குகள் தேங்காயளவு பெரியவை; மேலே கறுப்புத்தோல்; உட்புறம் வெண்மை யானது. கிழங்கு மருந்துக்கு உபயோகமாகிறது. செடி

வருஷ முழுதும் இடைவிடாது ஏராளமாய்ப் பூக்கும். 2, 3 அடி உயரம்; நீண்டபிரகாசமானபூக்கள் மாலை 4 மணிக்குப் பூக்கும். காலையில் மூடிவிடும். அந்தி நேரம் மலர்வதால் அந்தி மல்லிகை. இரண்டொருநாளில் காயுண்டாகும். காயி லிருந்து கறுப்பு விதை முற்றி விழுந்து தானே முளைக்கும். விதையின் மேற்புறம் ருத்ராக்ஷம்போன்ற அமைப்பு, விதை எளிதில் முளைத்து வளரும். முளைத்தவுடனேயே அடியில் கிழங்கு உண்டாகும். ஈர நைப்பு மட்டுமிருந்தால் போதும், செடி வளர்ந்து பூக்கும். பெரிய செடிகளைத் தரை மட்டத் தில் வருஷம் ஒரு முறை ஒடித்து விட்டால் பிறகு நன்றாய்த் தளிர்த்துச் செழிக்கும். சிறிது எருவிருந்தால் நல்லது.

ஆங்கிலத்தில் இதற்குப் 'பெரு நாட்டு விநோதம்' என்றும், 'நாலு மணிப் பூ' என்றும் பெயர்களுள்ளன. செடி மரமில்லாத, வெறும் சதைப்பாங்கான தண்டுடை யது. கணுவுக்குக் கணு தனித்து நிற்கும். பத்ராட்சி என்பது இதற்கு சென்னையில் ஒரு பெயர். கிழங்கும் விதையும் விஷமுடையன.

### வகைகள்

பூக்களில் பல நிறங்களுள்ளன. சிவப்பு வெல்வெட்டுப் போன்ற அழகான பிரகாசமுடைய சிவப்பு நிறப் பூ. செடியும் சிவப்பு நிறமானது. மஞ்சள் அதே மாதிரி அதிக மஞ்சள் நிறம். வெள்ளையில் நீலக்கோடுடைய பூ மற்றொரு வகை சிவப்பில் வெள்ளைக் கோடு போட்டது, நீலத்தில் வெள்ளைக் கோடுடையது எனப் பின்னும் பல வகைகள் உள்ளன.

புதிய ரகங்கள் பல இப்போதுஉண்டாகியிருக்கின்றன, உதாரணம் ஒரு மஞ்சள் வகை. மகரந்தச்சேர்க்கை காரண மாக இவ்வகையில் பூக்கும்போது ஒரே செடியில் ஒரு பூ மஞ்சள், ஒரு பூ 4 இதழ் மஞ்சள், 1 சிவப்பு, ஒன்றில் 3 இதழ் மஞ்சள், 2 சிவப்பு—இப்படியே 5 இதழும் சிவப்பு, ஒன்றில்



டூரீனியா
(91-ம் பக்கப் படம்)



டேபிள் ரோஸ்
(94-ம் பக்கப் படம்)



**பெட்டூனியா**
(83-ம் பக்கப் படம்)



**சொர்ணப் பட்டி**
(126-ம் பக்கப் படம்)



**வெட்சி (ருக்குமணி)**
(137-ம் பக்கப் படம்)

சிவப்புப் புள்ளிகள் எனப் பல மாதிரி காணப்படுவது விசித்திரமா யிருக்கும். நூறு பூ பூத்தால் நூறும் நூறு விதமாயிருக்கும்.

## கனகாம்பர வகைகள்

இந்த வகையில் பல சிறு செடிகள் அடங்கும். இவையெல்லாம் 3 அடிக்குக் குறைந்த உயரமுள்ளவை, மெல்லிய சிறு செடிகள்; என்றும் பசுமையானவை, வருஷமுழுதும் பூத்துக்கொண்டிருக்கும். பூக்கள் கதிர்போல கிளைகளின் நுனியில் மேலே நீட்டிக்கொண்டிருக்கும். எல்லா வகைகளிலும் பூ பல நாள் வரையில் வாடாமலும் உதிராமலுமிருக்கும். எந்த நிலத்திலும் பயிராகும். மிக்க எளிதில் வளரும். அதிகத் தண்ணீர் வேண்டியதும் இல்லை. பெரும்பாலானவை விதை போட்டும், சில பதியன் போட்டும் பயிராக்கப்படும். சிறிது கசங்கினுல் துர்நாற்றம் வீசும். இச்செடிகளுக்கு எவ்வித நோயும் வராது. சில சமயங்களில் முசுக்கட்டைத் தொந்தரவு உண்டு. பூச்சிகளைப் பார்த்து அகற்றவும். இந்த வகைகள் எல்லாம் தொட்டியிலும் பயிரிடத்தக்கவை.

காவி நிறமான பூக்கள். காகிதம் போல் இருக்கும். சென்னையில் இதற்குக் கிராக்கி அதிகம்.

1. **கனகாம்பரம் :** பூ மலர்ந்தபின் ஒரு வாரம் வரையில் செடியிலேயே வாடாமலிருந்து பிறகு உதிரும். காய் உண்டாகி முற்றி வெடித்து விதைகளைச் சிதறும். விதைகள் தாமே முளைத்துப் பயிராகும். ஐந்து ஆறு இலை விட்டவுடனேயே பூக்க ஆரம்பிக்கும். ஒரு வருஷத்துக்கு மேற்பட்ட செடிகள் விகாரமாயிருக்கும். அவற்றைப் பிடுங்கிவிட்டுப் புதிய செடிகளைப் பயிரிடுவது நலம். பூக்கள் மணமற்றவை. பூ விஷமுடையதெனக் கருதப்படுகிறது. கனகாம்பரப் பூ, காகிதப் பூ; இதற்கேற்பட்டுள்ள மோகம் நம் நாகரிகம் இழிந்துள்ள நிலைக்கு ஓர் அளவுகோல்.

2. **ரோசாம்பரம் அல்லது ரசனும்பரம்:** பூ ரோஜா நிற முள்ளது. மிக மெல்லியது. கனகாம்பரத்தைவிட அழகானது. இலை அதைவிட மிருதுவாயும், பட்டுப்போன்ற அமைப்புள்ளதாயும் இருக்கும். பூ பல நாள் வாடாமலிருக்கும். விதை தானே விழுந்து முளைக்கும். செடி கனகாம்பரத்தை விடச் சிறியது. முழத்துக்கொன்றாக நட்டு அடிக்கடித் தண்ணீர்விட்டு மூன்று மாதத்துக்கு ஒருமுறை கத்தரித்து விடவும். வருஷம் ஒரு முறை செடிகளைப் புதுப்பிக்கவும். தொட்டிக்கும் ஏற்றது.

3. **மஞ்சாம்பரம்;** நல்ல மஞ்சள் நிறமுள்ள பூ. கனகாம்பரத்தைப் போலவேயிருக்கும். மிக்க அடர்த்தியாய்த் தழைத்து அதிகம் பூக்கும். விதை உண்டாகாது. பூங்கதிரில்லாத நுனிக் கிளைகளை 3 அங்குல நீளம் நறுக்கி மணலில் நட்டுத் தண்ணீர் விட்டுவந்தால், 15 நாளில் வேர்விட்டுத் தளிர்த்துவிடும். எளிதில் பயிராகும். கத்தரித்துவிட்டால் நன்றாய்த் தழைக்கும். பொதுவாய் மஞ்சள் பூ குறைவு ஆதலால், இச் செடி தோட்டத்துக்கு அழகு தரும். தொட்டிக்கும் ஏற்றது.

4. **நீலாம்பரம்:** நீல நிறமுள்ள அற்பமான பூ. செடி விதையிலிருந்து உண்டாகும். குச்சியாய் விகாரமான தோற்றமுள்ளது. எல்லா விதத்திலும் கனகாம்பரத்தையொத்தது.

5. **மரகதாம்பரம்:** பச்சை நிறப் பூவுடைய செடி. நீலாம்பரம் போன்றது. நன்கு தழைத்து வளர்ந்து நிரம்பப் பூக்கும். பூ அற்பமாயினும், மங்கலான பச்சை நிறமாதலால், மிக்க அபூர்வமானது.

6. **நீர்முள்ளி** (டிசம்பர் பூ): திடல்களில் தானே முளைத்துக் கிடக்கும் காட்டுச் செடி. தடித்த இலையுடையதாய் நிரம்பக் கூர்மையான முள்ளுடையதாய் இருக்கும். நவம்பர்—பிப்ரவரி மாதங்களில் பூக்கும். பூ ஏராளம். தானே உண்டான செடிகள் மிகுதியாய்ப் பெருங்காடாய் இருக்கும்

ஆதலால், பூக்களும் அச்சமயம் மிக்க அதிகமாயிருக்கும். கெட்டிமஞ்சள் நிறம். மணமற்றது. பலநாள் வாடாது. பெண்கள் தலையிலணிய உபயோகிக்கிறார்கள். விதையி லிருந்தே உண்டாவது.

7. **வெள்ளை :** இந் நிறப் பூவுடைய செடிகள் இரண்டு வகை உள்ளன. இரண்டிலும் விதை யுண்டு. ஒன்று கனகாம்பரம் போன்ற சிறு செடி; மற்றது நீர் முள்ளி போன்ற முள்ளுடைய செடி. இரண்டும் நிரம்பப் பூக்கும்.

கனகாம்பர வகையில் இங்குக் கூறிய வகைகளன்றி, வேறு புது வகைகளும் விற்பனைத் தோட்டக்காரர்கள் உண்டாக்கியிருக்கிறார்கள். பயிர்முறை எல்லாம் ஒன்றே. நிறங்களில் மட்டுமே வேறுபாடு. சில விதை, சில பதியன்.

8. **புள்ளிக் கனகாம்பரம் :** ஒரு வேற்று வகை. ஆறு தெளிவான இதழ்களையுடைய பெரிய பூ. இதழ்கள் முழுவதும் சிறிய ஊதா நிறப் புள்ளி போட்டிருக்கும். பூவின் மத்திய பாகம் வெள்ளை. ஓர் இதழுக்கு நேரே உள்ள மத்தியபாகம் மட்டும் முழு ஊதா நிறமாயிருக்கும். பூக்கள் கதிர்போ லிராமல் நாலைந்து சேர்ந்து சிறு கொத்தாயிருக்கும். 4 அடி உயரம் வளரக்கூடிய சிறு செடி. கிளை வெட்டி அல்லது பதியன் போட்டுச் செடி உண்டாக்கலாம். எப்போதும் பூக்கும். தொட்டியில் பயிரிட ஏற்றது. அற்பச் செடி.

## டூரீனியா

ஒரு சாண் உயரமே வளரக்கூடிய மிகச் சிறிய செடி. வெண் பசுமையான சிறு இலைகள். கருநீல நிறத்தில் புனல் போன்ற அமைப்போடு தொங்குகிற அழகான பூ இதழ்கள். அடிப்பாகம் மஞ்சள். மேல்பாகம் கறுப்பு நிறம். சிவப்புச் சாயல் கொண்டது. கண்சிமிட்டுவது போலக் கவர்ச்சிகரமானது. ஆண்டு முழுமையும் புதுச்செடிகள் தாமே உண்டாகிப் பூக்கும்.

மிக மிகச் சன்னமான விதை. பொடியான மணல் போன்றது. கவனமாகப் பார்த்துச் செடிகளை உற்பத்தி செய்துவிட்டால், பின்பு தோட்டத்தில் எங்கும் தானே விதை தூவித் தானே வளர்ந்து பூத்துக் கொண்டிருக்கும். தொட்டி, தொங்கு தொட்டி, பாதையோரம்—ஆகியவற்றுக்கு ஏற்றது.

வகைகள் பல உள்ளன. முன்னே கூறியது தான் சாமானியமான சிறந்த வகை. புனல் போன்ற ஐந்து இதழுடைய பூ. பூ சமமட்டமாய் நிற்கும். கீழ்ப்புறம் மூன்று இதழ்கள், கருநிறம் ; நடு இதழின் மத்தியில் ஒரு மஞ்சள் திட்டு விழுந்திருக்கும். மேலிதழ்கள் இரண்டும் நீலநிறமாயிருக்கும். இதுவே சிறப்பான வகை. முழுமையும் வெண்ணிறமான மற்றொரு வகை யுண்டு.

ரசாயன உரம் எதுவும் இதை உடனே கொன்றுவிடுகிறது. ஆகவே, தொட்டியில் பயிரிடும்போது எவ்வளவு கொஞ்சமாய்க்கூட ரசாயன உப்புக்கள் போடவும் கூடாது, கரைத்துவிடவும் கூடாது.

### நரிவெங்காயம்

இது யாரும் பயிரிடாமலே வாய்க்காலோரங்களில் தானே முளைத்துப் பயிராகும் ஒரு பூண்டு. பெயரே இது வெங்காயம் போன்ற ஒரு கிழங்கு என்பதைத் தெரிவிக்கும். பெரிய கிழங்கு பந்து அளவிருக்கும். இலைகள் அகன்று மிகவும் நீண்டவை. நீர்வளம் அதிகமாயிருக்கக் கூடிய எந்த இடத்திலும் பயிரிடலாம். பெரிய வெண்ணிறப் பூக்கள் ஒன்றன்பின் ஒன்றாய்ப் பூத்துக்கொண்டிருக்கும். பூ மிகுந்த நறுமணமுடையது. பூவின் அமைப்பே அழகானது. பெரிய சிலந்தி கால் விரித்தாற்போலிருக்கும். பெரிய தொட்டியில் கூட இதைப் பயிரிடலாம். வளரத் தொடங்கிய பின் கலைக்கக் கூடாது. பக்கத்தில் வெடிக்கும்

கிளைக்கிழங்குகளைப் பெயர்த்து விருத்தி செய்யலாம். இலைகள் மருந்தாகப் பயன்படும்.

### நித்திய கல்யாணி

அருமையான பெயர்; செடியோ தொட்டால் துர்நாற்றம் வீசும். 2 அடி உயரம் வளரும். வருஷ முழுதும் பூத்துக்கொண்டேயிருக்கும். 4 ஒற்றையிதழுடைய பூ. பூ உதிர்ந்ததும் மெல்லிய நீண்ட காயுண்டாகும். அது நிறையக் கறுப்பு விதை. விதை விழுந்து செடி தானுகவே முளைக்கும். வறண்ட இடத்திலேதான் பயிராகும். சென்னையில், பிரேதம் புதைத்த இடத்தில் அங்குள்ள மக்கள் இச்செடியை நடுவார்களாகையால் 'சுடுகாட்டு மல்லிகை' என்ற பெயருமுண்டு. வெள்ளை, சிவப்பு என இருவகை. மிகுந்த கவர்ச்சியிருப்பினும், பயிரிடும் தோட்டங்களில் வைக்கத் தகுதியற்றது.

### நிலச்சம்பங்கி

இதன் வெண்ணிறமான தடித்த இதழ்களையுடைய மணம் நிறைந்த பூ சாமானியமாய் யாரும் அறிந்தது. சம்பங்கியொத்த மணத்தோடு கொடியாக அன்றிக் கிழங்காகப் பயிரிட்டு நிலத்திலேயே உண்டாவதால் இந்தப் பெயர். சுகந்தராஜா என்ற பெயரும் வழங்கும். பூ 3 அங்குல நீளம் வரை உண்டு. கிழங்கை வெங்காயம்போல் பிரித்தெடுத்து எளிதில் பயிர் செய்யலாம். விசேஷப் பராமரிப்பின்றி நன்கு வளரவல்லது. இலைகள் அல்லது தாள்கள் 6 அங்குல உயரம் வரை வளர்ந்து வளைந்து சரிந்துவிடும். சாம்பல் நிறத்தாள்கள். நீண்டு குறுகியவை. பூக்கள் ஒற்றையிதழ் அல்லது அடுக்கிதழ். நீண்ட காம்பின்மேல் ஒன்றின்மேல் ஒன்ருக வரும். காம்பு 2 அடி இருப்பதுமுண்டு. கிழங்கை எடுத்துத் தரையில் சாணுக்கொன்ருய் ஓரங்குல ஆழத்தில் நட்டு, தூளான கம்போஸ்டு உரத்தை

மேலே போடவும். நடும்போது பெரிய நடுக் கிழங்கை மட்டுமே பூமிக்குள் நடலாம். சுற்றியுள்ள சிறு கிழங்குகள் இரண்டு வருஷம் வளர்ந்தபின்தான் பூக்கவல்லனவாகும். அரும்புவைத்துக் காம்பு வளர்ந்து வரும்போது, காற்றால் ஒடிந்து விழுந்துவிடாதபடிப் பக்கத்தில் கம்பு ஊன்றி நடுவது அவசியம். ஒரு காம்பில் 20 பூ வரையில் உண்டாகும். காய்ந்து ஒடிந்துபோன இலைகளைக் கத்தரித்து விடவும். பூ பெரியதாய் இருக்க, செடி வளரும் பருவத்தில் திரவ உரம் இடுவது நன்று. இச் செடி ஏராள உரத்தை இழுக்கக்கூடியது.

பூத்து முடிந்து காம்பு காய ஆரம்பித்தபின் நறுக்கி எறிந்துவிட்டு, சில நாள் பொறுத்துக் கிழங்கை எடுத்துத் தனியே சேமித்துவைத்து, பருவகாலத்தில் மறுபடியும் பயிரிடத் தொடங்குவதும் நல்லது. எளிதில் தொட்டியில் பயிரிட்டுப் பூக்கவைக்கலாம். 10 அங்குலத் தொட்டி பொருத்தம்.

## பூம்பசலை (டேபிள் ரோஸ்)

கோழிப்பசலைக்கு இனமான ஒரு சிறு செடி. தரையோடு படரும். அதிகம் படர்வது ஓரடி. சதைப்பற்றான கொடி, இலை. கணக்கில்லாமல் வெயில் கண்டபோதெல்லாம் பூக்கக்கூடியது. நிழலில் பூக்காது. பூ இரண்டங்குலம் வரை குறுக்களவுடையது. மிகவும் பிரகாசமான நிறங்கள். தரையில் பாய்விரித்தாற்போல் படரவைப்பதற்கும், தொங்கு தொட்டிகளில் படரவிடுவதற்கும் ஏற்றது.

மிக எளிதில் பயிராகும். ஈரமான வளமிகுந்த மிருதுவான மண் தேவை. இரண்டங்குல மண் போதும். ஆழத்தில் வேர் போகாது. மண் உலரக்கூடாது. மழையில்லாத போது நீர்விட்டு வளர்த்தால் கவர்ச்சிகரமாய் பூக்கும். விதையிலிருந்தும், கொழுந்து ஒடித்துப் போட்டும் உற்பத்தி

செய்யலாம். எங்கும் பிரசித்தமாயுள்ள சிவப்பு அடுக்கிதழ் வகையில் மட்டும் விதை உண்டாவதில்லை.

பூத்த பூ பார்வைக்கு வடிவத்தில் ரோஜா போலக் காணப்படும். இதுபற்றி எங்கும் டேபிள் ரோஸ் என்ற பெயர் வழங்குகிறது. 1956–57இல் இது நாடெங்கும் பிரசித்தி அடைந்துவிட்டது. காலை 9–10 மணிக்குப் பூக்கத் தொடங்கும். மாலை 2–3 மணிக்கு முன்னதாகப் பூ வாடிச் சுருண்டுவிடும்.

**வகைகள் :** பல உள்ளன. சாமானியமாய்ப் பிரசித்தி அடைந்தது, **கெட்டி ஊதா**—ரோஜா கலப்பு நிறத்தில் பெரிய பூவாக உள்ள செடி. இது வருஷ முழுமையும் இருக்கும். அடுக்கிதழ்கொண்ட பெரிய பூ. சிவந்த பட்டுக் கம்பளம் விரித்தாற்போல் தரையில் பூத்திருக்கும். விதையில்லை. கொழுந்தை நறுக்கிப் பதியன் போடவும். ஆழமில்லாத விதைத் தொட்டி போன்றவற்றுக்கும், தொங்கு தொட்டிக்கும், நடைபாதை விளிம்புகளுக்கும் பெரிதும் ஏற்றது. இது காலை பத்துமணிக்குப் பூக்கிறபடியால் சிலர் இதைப் பத்துமணி ரோஜா என்கிறார்கள்.

**சிவப்பு ஒற்றையிதழ் :** முந்தியதை யொத்தது. ஆனால் ஒற்றையிதழ். விதையிலிருந்து உண்டாகும். ஆண்டுக்கொருமுறையே பூக்கும். வடிவில் கிண்ணம்போன்ற பெரிய பூ. இது விதையிலிருந்தும் பதியனிலிருந்தும் உண்டாகும். செடி வருஷ முழுமையும் இருக்கும்.

**பிறவகைகள் :** மஞ்சள்,சிவப்பு, வெள்ளை, காவி, ஆரஞ்சு முதலான நிறங்களில் ஒற்றையிதழ்கள். எண்ணற்ற கலப்பு வகைகள் உள்ளன.கோடிட்ட இதழுடையனவும் உள்ளன. யாவும் விதையிலிருந்து உண்டாகும். பதியன் பிழைப்பதில்லை. பூ உலர்ந்தவுடன் அவ்விடம் மூடிய ஒரு சிறு நெற்று உண்டாகும். அதை அமுக்கினால், தேங்காய் மூடி உடைவதுபோல் உடைந்து இருபாகமாகிவிடும். கீழ்ப்பாகத்தில் விதை தங்கும். கருநிற விதை, கீரைபோன்றது. அதனினும்

மிகமிக நுட்பமானது. புது விதையிலிருந்து இவ்வகைகள் உண்டாக்கவேண்டும்.

இச்செடியின் மேற்கூறிய காவி ரகம் புன்செய்க் காடுகளில் களைபோலப் படர்ந்துகிடக்கவும் காணலாம்.

### மைக்கேல்மஸ் டெய்ஸி

ஒரு சாண் உயரத்துக்குள்ளாக வளர்ந்து பூக்கக்கூடிய ஒரு சிறு பூண்டு. வருஷ முழுமையுமிருந்து பூக்கக்கூடியது. தூறில் கிளைகள் கிளைத்துக் கொத்தாக நிற்கும். இக்கிளைகளை வேருடன் தனியே பிரித்தெடுத்துப் பயிரிடவும். ஒற்றையிதழ்ப் பூக்கள். பொதுவாய் வெள்ளை, நீலம் என இரு தனிநிறச் செடிகள். பூவானது நடுவில் வட்டமாயும் அதைச் சுற்றிப் பிரிந்துசெல்லும் கிரணம் போன்ற இதழுடையதாயும் இருக்கும். நீண்ட காம்பில் பூ. நிரம்பப் பூக்கும். குளிர்நாட்டில் மேற்கூறிய நிறங்களைவிட வேறு பல நிறங்களும் உள்ளன. நம் நாட்டில் ரகங்கள் குறைவு.

தரையிலும் தொட்டியிலும் நன்கு பயிராகும். விதை போட்டுப் பயிரிடுவது வழக்கமில்லை. புதிய கிளையைப் பெயர்த்தெடுத்து முக்காலடித் தொட்டியில் போடவும் அல்லது தரையில் ஓரடிக்கொன்ருய் நடவும். நீர்வடியக் கூடிய மணல் குறைவான மண்ணில் செடி நன்ருகப் பயிராகும். நட்டு மூன்று மாதத்தில் பூ. தூறில் கிளைகள் எப்போதும் வெடித்தபடி யிருக்கும். பெரிய செழுமையான செடி வேண்டுமென்ருல் இக்கிளைகளைக் களையவேண்டும். நடும்போது நன்ருக வேர்பிடித்த ஒரே அளவான கிளைகளை நட்டால்தான் ஒரே சமயத்தில் யாவும் பூக்கும். இருவாரங்களுக்கொருமுறை திரவ உரம் விடுதல் அவசியம். பூத்து முடிந்ததும் பூக் காம்புகளைக் கத்தரிக்கவும். மண்ணை நன்ருகக் கிளறிவிட்டு, உரமிட்டுக் கிளறி, செடிகளுக்கு அடியில் இரண்டு மூன்று கிளைகளுக்கு மேல் விடாமல் வெட்டி எறியவும். இவ்வாறு செய்தால் செடிகள்

ஆரோக்கியமாய் வளர்ந்து நன்ருகப் பூக்கும். வருஷ முழுமையும் இப்படியே செய்துவரலாம் அல்லது இரண்டு முறை பூத்தான பின், செடிகளைப் பெயர்த்து விட்டுப் புதிதாக நடலாம்.

இதில் சிலவகைகள் அடியில் தாழைபோல் தூறுகட்டியிருக்கும். ஒவ்வொரு செடியாகக் கொஞ்ச வேருடன் பிய்த்தெடுக்கலாம். மற்ருெருவகை இன்னும் எளிதானது. தொட்டியில் பயிரிடும்போது விரைவில் தொட்டிமுழுதும் வேராகி விடும். அலங்காரப் பனைச்செடிகளின் வேர்போல அப்படியே தொட்டியிலிருந்து கீழே கொட்டி ஒரு வாளி நீரில் அலசினல் மண் தங்கிச் செடியும் வேரும் மிஞ்சும். சிக்கலில்லாமல் கயிற்றை அவிழ்ப்பது போல் உருவினல், தனித்தனிச் செடியாக மிக நீண்ட வேர்த்தண்டுடன் ஒரு சிறு சட்டியிலிருந்து சுமார் பத்துச் செடிகளாவது பிரிந்து வரும். தனியே நடலாம்.

### லில்லி (அல்லி அன்று)

ஆங்கிலத்தில் இப் பெயரில் வழங்கும் செடிகள் மிகப் பல. அவற்றுள் இங்குக் கூறுவது ஒருவகை மட்டுமே. இது முற்கூறிய நிலச்சம்பங்கியை அனேக விதத்தில் ஒத்தது. வெங்காயம் போன்ற சிறு கிழங்கு: பிரித்தெடுத்துப் பயிரிடத் தக்கது. இலைகள் அதைவிட மிகவும் சிறியன. செடி 4 அங்குல உயரமே. தாள் ஒன்று 9 அங்குல நீளம். பிரகாசமான கரும் பச்சை நிறம். வருஷ முழுமையும் பூக்கும். நிலச்சம்பங்கி போலன்றி, இதன் பூ ஒவ்வொன்றும் தனித்தனியாக தாள் அளவுள்ள சிறு காம்பில் வந்து புனல்போல் நிற்கும். ஆறிதழ்ப் பூ. காலையில் மலர்ந்து மாலையில் வாடிவிடும். இவற்றில் சில காய்க்கும். சில காய்ப்பதில்லை. விதை கருநிறமாய் அகன்று மெலிந்திருக்கும். முப்பிளவுள்ள காயாகக் காய்த்து, ஒரு பிளவுக்குள் பலவிதைகளிருக்கும். வகைகள் சிறப்பாக மூன்று.

**மஞ்சள் :** நிரம்பப் பூக்கும். பிரகாசமான மஞ்சள். காய்க்கும். விதையிலிருந்து மிக எளிதில் செடிகள் தாமே உண்டாகும். கிழங்கு பிரித்தும் எளிதில் பயிரிடலாம். விதைச்செடி பூக்க 2–3 வருஷமாகும்.

**வெள்ளை :** சுமாராய்ப் பூக்கும் ; காய்க்கும். விதையிலிருந்து செடி உண்டாகும்.

**சிவப்பு :** ரோஜா நிறமுள்ளது, சுமாராய்ப் பூக்கும். காய்ப்பதில்லை. இதன் பூ சில நாள் வாடாமலிருக்கும்.

### வாடாமல்லிகை

முழ உயரம் வரையில் மிக்க அடர்த்தியாய் வளருகிற சிறிய செடி. ஒருமுறை பூத்தபின் செடி காய்ந்துபோகும். ஆனால் விதைகள் விழுந்து எங்கு பார்த்தாலும் முளைத்துக் கொண்டேயிருக்கும். இப்படி முளைத்தவை தாமே வளர்ந்து வருஷ முழுவதும் பூக்கும். பூக்கள் உருண்டையானவை. கிளைகளின் நுனியெங்கும் உண்டாகிச் செடியை மூடிவிடும். 4 இலை விட்ட செடிகளைப் பிடுங்கி முழத்துக் கொன்றாக நடலாம். சிவப்பு ஊதா நிறமுள்ள வகையே அதிக அழகானது, எங்கும் காணப்படுவது. வெண் சிவப்பு நிறம், வெள்ளை, ஆரஞ்சு முதலிய பல நிறங்களும் உள்ளன. நிலவளத்தைப் பொறுத்துச் செடி 4 அடி உயரம் வளர்வதும் உண்டு.

### வெர்பினா

இது பொடுதலையினத்தைச் சேர்ந்த மிகவும் சாமானியமான ஒரு செடி. அறுகம் புல்போலத் தரையிலே படர்ந்து செல்லும் இயல்புடையது. ஒரு சாண் உயரம். ஆண்டு முழுமையும் இருந்து பூத்துக்கொண்டிருக்கும். தரையில் படருமிடந்தோறும் வேர்விட்டுக் கொண்டே போகும். இப்படி வேர் விட்ட பகுதியைப் பிரித்தெடுத்துத் தனிச் செடி உண்டாக்குவது எளிது. சில சமயம் செடி உள்ள

இடத்தில் விதை விழுந்து புதுச்செடிகள் தாமே முளைத்து வரவும் காணலாம். இப்படி முளைத்து வரும் செடியில் புது நிறப் பூக்களும் உண்டாதல் கூடும். தரை முழுமையும் படர்ந்து இடத்தை மறைக்க வெர்பீனு மிகவும் சிறந்த செடி. நெருங்கிக் கிளைத்துத் தழைக்கும் பொருட்டுத் தலையைக் கிள்ளிவிடுவது நல்லது. தொட்டியில் பயிரிடவும், தொங்கு தொட்டியில் பயிரிடவும், தரையில் கம்பளம் விரித்தாற்போல் படரும்படி வளர்க்கவும், இது மிகவும் தகுதியான செடி.

நிறங்கள் எண்ணற்றன. ஏறக்குறைய எல்லா நிறங்களையும் இதனுள் காணமுடியும். ஊதா, வெள்ளை, ரோஜா நிறம், சிவப்பு, கருஞ் சிவப்பு, நீலம், மங்கல் ஊதா, கருஊதா, கோடிட்ட ரகம் என்பன அதிகம். இவற்றுள் சில ரங்கங்கள் அதிகம் பூக்கும். சில அதிகம் பூக்கமாட்டா. உதாரணமாக நீலம் நன்ருக வளர்வதும் பூப்பதும் இல்லை. பூக்கள் கொத்தாகச் செடியிலிருந்து, 4 அங்குல உயரத்தில் தலை தூக்கி நிற்பது மிக்க அழகு. கொத்து பெரியதாய், சில சமயம் 4 அங்குலக் குறுக்களவு உள்ளதாயும் இருக்கும். தனிப் பூ சிறியது. பூத்த பூ பல நாள் இருக்கும். ஒவ்வொன்ருக வாடிவிடும். பூத்த கிளைகளைக் கத்தரித்து விடுதல் நலம்.

ஏராளமாகப் பூக்கின்ற காரணத்தால் இதற்கு ஏராளமான எரு வேண்டும். படருமிடமெங்கும் எரு விடுதல் அவசியம். நீர் கட்டக்கூடாது. கொஞ்சம் காய்ச்சலிருந்தால் குற்றமில்லை. நம்மிஷ்டம் போல் படரச் செய்ய, ஓடும் நுனிக் கிளையை ஒரு மூங்கில் முள் கவையினுல் தரையில் செருகி வைப்பது நலம். திரவ உரம் இரண்டு வாரத்துக் கொருமுறை விடுவதும் நல்லது.

மேலே கூறிய ரகம் வெர்பீனுவில் புதிதான கலப்பு வகை. இது நீரைப் பாசி மூடுவதுபோல நிலத்தை மூட வல்லதாகையால் பாசி வெர்பீனு என்று சொல்வார்கள்.

நன்கு பிரிக்கப்பட்ட பிளவுண்ட இலைகள்; சுத்தமான பச்சை நிறம், சிறிய பூங்கொத்துக்கள். கொடியில் மயிர் அடர்ந்திருக்காது.

மற்றொரு வகை உண்டு. இது பிளவு படாத நீண்ட இலைகளையுடையது. இலைகள் சற்றே வெளுத்தவை. தண்டு முழுமையும் சிறு மயிரடர்ந்திருக்கும். இதன் பூ ஒவ்வொன்றும் மற்ற வகையைவிடப் பெரியதாகையால் பூங்கொத்துக்கள் மற்றதைவிடப் பெரியனவாகவே யிருக்கும். சாதாரணமாக முக்கியமான மூன்று கெட்டி நிறங்கள். ரத்தச் சிவப்பு, கருஊதா, தூயவெள்ளை என்பன.

ARCHIVES LIBRARY
No. 108938
J16 N60

# 9

# பருவ காலப் பூக்கள்

இப்பகுதியில் பருவ காலப் பூ என்பது குறித்த ஓர் இயல்புள்ள செடிகளை. இவை யாவும் பொதுவாக அந்தந்த வருஷம் விதையிலிருந்து உண்டாகும். மாரிப் பருவத்தை யொட்டி விதையிலிருந்து முளைத்து வளர்ந்து அந்தப் பருவத்தில் மட்டும் பூத்துச் சித்திரை வைகாசியில் அழிந்து போகும். இவற்றின் வாழ்வே 3 முதல் 6 மாதங்களில் முடிவடைகிறது. எளிதாகப் பயிராகிப் பூக்கின்றன. ஆனால் மிகவும் அழகு நிறைந்த பூக்கள். உருவம், நிறம், சில சமயம் மணம், வளர்க்கிற முறை—இவை வெவ்வேறு விதமானவை. சொற்ப முயற்சியில் அளவில்லாத கவர்ச்சி தர வல்லவை. தொட்டியிலும், தரையிலும் பயிரிட முடியும். பூத்திருக்கும் காலம் சொற்பமாயினும், கொஞ்ச அளவு தொடர்ந்து பூத்திருக்கும்படி செய்ய முடியும். சொந்தத் தோட்டமென்று வேண்டியதில்லை. எங்கிருந்தாலும், மாடியில்கூட, திறந்த இடமிருக்கும் பட்சத்தில், தொட்டியில் இவற்றைப் பயிரிட்டு இன்பமடையலாம். விசாலமான தோட்டமிருந்தாலுங்கூட, நிரந்தரமான செடிகள் வளர்ந்து பலன் தருகிற வரையில், பருவகாலப் பூக்கள் கண்ணுக்குப் பெருவிருந்தாயிருக்கும்.

வரப்பு, பாதை விளிம்பு, பாத்தி, சுவரோரம், தொங்கு தொட்டிகள், படிகள் முதலான எந்த நிலைக்கும் இவை நன்கு பயன்படுகின்றன.

பருவகாலப் பூக்களின் வெற்றிக்கு முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய சில அம்சங்கள் பின்வருவனவாகும்.

விதைகளைக் கூடியவரையில் விதைத் தொட்டியில் கலக்க விதைத்து நீர் அளவாக விட்டு, அதிக வெயில் படாமல் இளம் நாற்றுக்களைத் தொட்டியோடு நிழலில் வைத்துக்

காலை வெயில் மட்டும் படும்படி செய்து காத்தல். நாற்றுக்கள்நெருக்கமாகுமுன், அவற்றைக் கலைத்துப் பெயர்த்து நடுதல். செடிகள் நாற்புறமும் தழைத்து வளரத்தக்க விதமாய்த் தாராளமாய் ஒன்றுக்கொன்று இடம்விட்டு நடுதல். பூக்கள் பூத்து முடிந்தவுடன் அவற்றைக் களைந்துவிடுதல்; பூத்து உலர்ந்த பூ செடியிலேயே இருந்தால், பிற்பட்டுச் செடி பூப்பது குறைவாகிறது. அவசியமானபோது செடியின் தலையைக் கிள்ளிவிட்டுக் கிளைக்கச்செய்து, அதிகக் கிளைவிட்டு அதிகம் பூக்கும்படி செய்தல்.

### காஸ்மாஸ்

இறகு போன்ற மென்மையான இலையுடைய சாமானியச் செடி. உறுதியாய் வளர்ந்து, மழைப் பருவத்தில் ஏராளமாய்ப் பூக்கும். இலைக்கணுத்தோறும் மிக நீண்ட காம்பில் தனிப்பூ உண்டாகும். செடி 4-6 அடி உயரம். பூ நிறங்கள் சாமானியமாய் மங்கலான சிவப்பு அல்லது ரோஜா நிறம்; வெள்ளை, சிவப்பு, ஊதா நிறங்களுமுண்டு.

மிகவும் சமீப காலத்தில் இதில் கெட்டி மஞ்சள் நிறத்தில் ஒரு புது ரகம் உண்டாகி எங்கும் பரவியிருக்கிறது. சில நாட்டுப் புறங்களில் இதை **மாம்பழ ரோஜா** என்கிறார்கள். யாவும் பெரும்பான்மை ஒற்றையிதழ். பெருஞ்செடியாகவும் வளர்வதுண்டு. அடியிலிருந்தே கிளைக்கும்.

2 மாதத்தில் பூக்கத் தொடங்கும். விதை $\frac{3}{4}$ அங்குல நீளத்தில் ஊசிபோல் கருநிறமாயிருக்கும். செடி வளரவேண்டிய இடத்தில் தரையிலேயே விதையைக் கலக்க விதைத்து, வளரவேண்டிய பருவத்தில் நெருக்கமாயுள்ளவற்றைக் கலைத்துப் பிடுங்கி வேறு இடத்தில் நட்டால் போதுமானது. பூக்கத் தொடங்குமுன் தலை கிள்ள வேண்டும். வருஷ முழுமையும்கூடப் பூக்கும்படிச் செய்யலாம். மஞ்சள்நிற வகை மிகவும் சிறப்பானது. நன்கு பூக்கும். மிக்க பிரகாசமான பூக்கள், செடிகளில் நிறைந்து தோன்

றும். மற்ற ரகங்களினும் இது பெரிய பூ. பூத்து முடிந்த வுடன் பிடுங்கிவிட்டு மறுபடியும் விதை போடலாம். ஒரு பருவத்தில் சற்று முன்பின்னகப் பூக்குமேயன்றி, மற்றக் காலங்களில் பூக்காது.

### சீமைக் காஸ்மாஸ்

முந்தியதைப் போன்றதே. ஆனல் இன்னும் மிகவும் மென்மையான அழகிய இலைகள். அதைவிட மென்மையான செடி. பூக்கள் யாவும் முன்போலவே வெள்ளை, சிவப்பு, ரோஜா, கருஊதா நிறங்களில் காணப்படும். அதைவிட அழகான பூக்கள். பயிரிடுவதில் சிரமமில்லை. காஸ்மாஸ் போலவே மற்றவை எல்லாம். விதையைத் தரையில் விதைக்காமல் தொட்டியில் விதைப்பது முக்கியம்.

### கோழிக்கொண்டை

சாமானிய முளைக்கீரை யினத்தைச் சேர்ந்த ஒரு சிறு செடி, எளிதில் பயிராகும். முறை முளைக்கீரைபோலவே. இதன் பூக்கள் ஒன்ருகத் திரண்டு ஒரு கொத்தாகத் தலையுச்சியில் நிற்பது கோழிக்கொண்டையை ஒத்திருப்பதால் இந்தப் பெயர். ஆழக் கொத்திய மண்ணில் நன்கு வளரும். ஓரங்களில் நட மிகவும் ஏற்றது. இரண்டு மாதத்துக்கு மேலும் பூத்திருக்கும். செடி 2 அடி உயரம். தொட்டியிலும் வளர்ப்பதற்கேற்றது. வெல்வெட்டுப்போன்ற பூங்கொத்து. நிறம் மஞ்சள், ஊதா, கருஞ்சிவப்பு. சிவப்பே மிகவும் அதிகமாயுள்ளது. இலைக்கு மேலே பூ உயர்ந்து தூக்கி நிற்கும். வருஷ முழுமையும்கூட இதைப் பயிரிட்டுப் பூக்கச் செய்யலாம். விதைத் தொட்டியில் விதைத்து 6 இலை விட்டதும் பெயர்த்து, 4 அங்குலத் தொட்டியில் நட்டு, நன்ருக வேர்விட்டபின் தரையில் நடலாம். குள்ள வகைக்கு முக்காலடித் தொட்டியும், நீண்டவகைக்கு ஓரடித் தொட்டியும் ஏற்றவை. பெரிய பூ உரித்த பெரிய

தேங்காயளவிருக்கும். 3-4 மாதம் வரையில் பூக்களிருக்கும். திட்டமான வகைகள் உள்ளன.

### சால்வியா

தரையில் பாத்தியாக வளர்க்கவும், ஓரங்களில் வளர்க்கவும், தொட்டியில் வளர்க்கவும் மிகவும் ஏற்றது. இதில் பல ரகங்கள், பல அளவு வளரும். 1 அடி முதல் 4 அடி வரை உண்டு. நிறங்கள் கருஞ்சிவப்பு, ஊதா, நீலம், வெள்ளை, மஞ்சள், ரோஜா நிறம் போல மிகப்பல; எனினும், நம் தோட்டத்தில் கருஞ்சிவப்பும் நீலமுமே நன்கு பூக்கும். பூக்களின் உருவ அமைப்பும், அனேக வேறுபாடுகளில் காணப்படுகிறது. சில பூக்கள் இதழ் விரிந்தும், சில மூடியபடி குழாய் போலவும் தோற்றும். சிவப்பு ரகத்தில் பூக்கள் பூத்திருக்கும் பகுதி, நடுவில் தண்டும், இருபுறமும் பூக்களுமாய்ப் பிரித்து வைத்த பட்டாஸ்கட்டுப் போலிருக்கும். எல்லா வகைகளும் உறுதியாய் வளரக் கூடியவை. பொதுவாக இங்கு இவற்றை ஒவ்வொரு வருஷமும் விதை போட்டு, புதுச் செடியாக உண்டாக்குவதே சரியான முறை. பதியன் போடுவதும், அடித்தாளிலிருந்து பிரித்தெடுத்துப் பயிரிடுவதும் உண்டு. நாற்றுப் பாத்தி அல்லது சட்டிகளில் விதைத்து அளவாய் நீர்விட்டுக் காத்து, 4 அங்குல உயரம் வளர்ந்ததும் பெயர்த்து நடுவது நலம். கொஞ்சம் தழைத்தவுடனே எடுத்து 6 அங்குலத் தொட்டியில் மாற்றவும். இவற்றில் வேர் நிறைந்தவுடன் 10" தொட்டிக்கு மாற்றவும். இப்படி மாற்றுதல் இச்செடிக்கு மிகவும் அவசியம். வளரும் பருவத்தில் தாராளமாய் நீர் விடலாம். நிரம்ப உரம் தேவை. வாரமொருமுறை திரவ உரம் விடுதல் நல்ல பலன் தரும். 6 வாரம் பூத்திருக்கும்; பின் காய்ந்துபோகும். பூத்து முடித்த கிளைகளைக் கத்தரித்து விட்டு, தொட்டியின் மேல்மண்ணைப் புதுப்பித்தால் இன்னும் ஒரு முறை பூத்து உயிரோடிருக்கும்.

சாதாரண வகை சிவப்பு. பிரகாசமான நிறம். பூ, செடியை விட்டுத் தனியே உயர்ந்து நிற்கும். சூரிய வெளிச்சத்தை இது அதிகம் தேடும். செடிக்குச் செடி 1 அடி போதும். உயரம் 2 அடி. 4 மாதம்வரை உயிர் வாழும்.

**நீலம் வெள்ளை** என இரு முக்கிய வகைகள் உள்ளன. இவை சிறிய பூக்கள், நிரம்பப் பூக்கும். இதழ்கள் விரிந்திருக்கும். இவற்றின் இலையுங்கூட, சிவப்பு வகையினும் வேறுபட்டிருக்கும். நாற்றுயிருக்கும்போது அதிக நீர் ஆகாது.

சில கலப்புச்சாதிகள் உள்ளன. பழக்கப்பட்டால் இவை நம்மிடம் முளைத்துப் பூக்கும்.

### சூரியகாந்தி

எல்லோருக்கும் நன்கு தெரிந்த செடி. இதன் பூவானது, சூரியன் உதயமாகும்போது, சூரியனை நோக்கித் திரும்பி, நெடுகிலும் சூரியனைத் தொடர்ந்து, மாலையில் மேற்கு நோக்கி நிற்கும் என்ற நம்பிக்கை காரணமாக வந்த பெயரே சூரியகாந்தி என்பது. சூரிய காந்தியில் குறிப்பிட்ட ஒருவகைதான் இந்த இயல்புடையதென்றும் மற்றவை இப்படி திரும்பமாட்டா என்றும் சொல்கிறார்கள். சாதாரணமாக நாம், தோட்டங்களில் பயிரிடும் பூவானது, ருஷ்ய ஜாதி. இது 8 அடி வரையில் வளரும். ஒரே தண்டாக வளர்ந்து தண்டின் நுனியில் ஒற்றைப் பூவாக நிற்கும். சில வகைகளில் பூ சிறிய சல்லடையளவு இருக்கும் என்றால் மிகையல்ல. ஒரே பூவில் பட்டணம் படி ¼ படிக்குமேலும் விதைகளிருக்கும். பெரிய விதைகள். விதைகள் வியாபார ரீதியில் விலைகொண்டவை. இவை மாட்டுத்தீவனமாகவும் பயன்படுகின்றன. இவற்றிலிருந்து எண்ணெய் எடுக்கிறார்கள். பூவானது ஒரே நாளில் முழுமையும் பூத்துவிடுவதில்லை. பலநாள் தொடர்ந்து மலர்ந்து கொண்டேயிருக்கும்.

செடி சுமார் 3 மாதத்தில் நன்கு பூக்கத் தொடங்கும். பூக்கள் வருஷ முழுமையும் தோன்றும்படியும் செய்ய முடியும். ஆழமாய்க் கொத்திய மண்ணில் விதை விதைத்து அங்கேயே வளர விடலாம். அல்லது கவனத்துடன் பெயர்த்து நடலாம். செடி சற்று ஆழமாய் வேர் விடுவது. ஆகவே ஆழக்கொத்தி எரு விடுவது மிகவும் முக்கியம். அதிக நீர் வேண்டும். காற்றில் தண்டு முறிந்து போகாதபடி கொம்பு அணைத்துக் கட்டுவது அவசியம். உச்சிப் பூ பூத்த பிறகு சில சமயம் பக்கத்தில் கிளை உண்டாகிப் பூக்கள் தோன்றும். இவை சிறிய பூக்கள். விதை முற்றியவுடனே செடி உலர ஆரம்பிக்கும். அப்போது பிடுங்கி எறிந்து விடவேண்டும். விதை முற்றியதற்கு அடையாளம் சல்லடைபோன்ற பூவின் பாகத்தை விரலால் நெருடினால் விதை உதிர ஆரம்பிக்கும். அப்போது ஒடித்து விதை எடுத்து விடலாம். இந்த வகைச் செடிகளை 3 அடிக்கொன்றாக நடலாம். நிறங்கள் கெட்டி மஞ்சளும் மங்கலான காவியும் என இருவகை.

### சீனச் சூரியகாந்தி

ஜப்பான் சூரிய காந்தி என்றும் சொல்வது. 3 – 5 அடி உயரம். ஆகவே, குள்ளச் சூரிய காந்தி என்பதும் பொருத்தம். பூ சூரியகாந்தி போலவே அகன்று, நடுவே கறுப்பு விதைகளுடையதாய் மஞ்சள் இதழ்களுடன் இருக்கும். பல கிளைகள் விட்டு ஏராளமாய்ப் பூக்கும். பருவம் கார்த்திகை—சித்திரை. விரைவாக வளரும், விதையிலிருந்து பயிராகிறது. விதை முளைத்து 6 இலை விட்டதும் பிடுங்கி இரண்டடிக் கொன்றாய் நடலாம். அடர்த்தியாய்த் தழைத்துப் பூக்கும். தூரத்தில் நட்டால் பார்க்க அழகாயிருக்கும். சூரிய காந்தியினும் இது மிக்க மென்மையானது. நெடு நாள் பூத்துக் கொண்டு இருக்கும்.

எந்தக் காலத்திலும் புதுச் செடி தயாரித்துப் பூக்கச் செய்யலாம்.

### சிவப்புச் சூரிய காந்தி

7—8 அடி உயரம் வளரக் கூடிய செடி. பல கிளைகளோடு கோணல் மாணலாய் வளரும். கிளை நுனியில் நீண்ட காம்பில் ஒற்றைப் பூவைத் தாங்கி நிற்கும். இலைக் கணுவிலும் பூ தோன்றும். பூ பட்டுப் போன்ற மிக்க ஒளியுடைய காவி நிறம். பார்வைக்குச் சூரிய காந்தி போலிருப்பதாலும் இப்பெயர் பெற்றது. பூ 3 அங்குலம். அமைப்பு சூரிய காந்திபோல். விரைவில் உயர்ந்து வளர்ந்து இடம் அடைக்கும். விதையிலிருந்து வளரும். இரண்டடி இடம் விட்டு நடவேண்டும். பூ உதிர்ந்து விதை முற்றி வரும் சமயம் விதை முள் போலக் குத்தும். ஆகவே நடப்பு ஓரம் ஏற்றதன்று. தூரத்தில் பெரிய பாத்தியாக நடுவதற்கேற்றது. தானே விதை விழுந்து ஏராளமாய் முளைக்கும்.

பூ முதிர்ந்ததும் கத்தரித்து விடவேண்டும். கத்தரிக்கா விட்டால் விகாரமாயிருக்கும். பூ தேன் தரக் கூடியது. தேனீக்குப் பெரு விருந்து. மெக்ஸிகோ நாட்டுக் குரியதாதலால் மெக்ஸிகன் சூரியகாந்தி எனவும் பெயர் பெறும்.

### துலுக்கச் சாமந்தி

ஆங்கிலத்தில் மேரிகோல்டு என்று சொல்லுகிற செடி. எல்லோரும் நன்கு அறிந்தது. தொகையாக அடர்ந்து பூப்பதற்குப் பெரிதும் ஏற்றது. எளிதில் பயிரிடமுடியும். நன்கு பூக்கும். பருவ காலத்தில் மட்டும் பூக்கும். பெரியதும் சிறியதுமான அனேக வகைகள். ஓரடி உயரம், 5 அடி உயரம் என இருவகைகள். ஒற்றை அடுக்கு என்றும் வேறு வகைகள்.

எல்லா வகைகளும், உரம் நிறைந்த வளமான மண்ணில் நல்ல பராமரிப்பில் சிறந்த பலன் தரும். நிரம்பத் தண்ணீர் தேவை. யாவும் மிக்க அழகான இலைகளுடையவை.

செடியும் பூவும் தனித்த செவ்வந்தி போன்ற மணம் உடையவை. வட இந்தியாவெங்கும் ஆலய வழிபாட்டுக்கும், மாலை கட்டவும் உபயோகமானது இந்த வகைச் செடியே. உதாரணமாக, காசி விசுவநாதர் கோயிலுக்கு இப்பூ டன்கணக்கில் செல்லும். சாமந்தி (செவ்வந்திச்) செடியில் இது தாழ்ந்த ரகம் என்ற காரணம் பற்றித் துலுக்கச்சாமந்தி என்ற பெயர் வந்தது போலும். வட இந்தியாவைப் பின் பற்றி நம் நாட்டிலும் கதம்பமாலை, செண்டு முதலியவற்றில் பிரகாசமான நிறத்துக்காக இப் பூவை அதிகம் உபயோகிக்கிறார்கள்.

### ஆப்பிரிக்கத் துலுக்கச்சாமந்தி

இதுவே பொதுவாக எங்கும் பயிராக நாம் காண்பது. இது மிகவும் உயர்ந்து நேராக வளரும். நிரம்பப் பூக்கும். ஒற்றையிதழ், அடுக்கிதழ் என இரு பிரிவுகள். அடுக்கிதழ் மட்டுமே பயிரிடத் தகுந்தது. மிகவும் பெரிய பூ. இதழ்கள் பல ரகங்களிலும் காணப்படும். நிறங்கள் பல : சாதாரண மஞ்சள் முதல் கெட்டிக்காவி வரை. பூ குறுக்களவு 4 அங்குலம் வரை உண்டு. விதையை நாற்றுப் பாத்தியில் வளர்த்துப் பெயர்த்து, முழத்துக் கொன்றாக நடவும். சாய்ந்து விடாமல் பற்றுக் கொம்பு நடவும். துலுக்க மல்லிகை எனவும் இதற்குப் பெயர் உண்டு.

### பிரெஞ்சுத் துலுக்கச்சாமந்தி

இது நேராக வளராமல் நாற்புறமும் படர்ந்து வளரும் இயல்புடையது. புதர் போல இருக்கும். கிளைகள் கவிந்து தரையோடொட்டியே கிடக்கும். நிறங்களும், இதழ்களும் முந்தியது போலவே மிகப் பலவகை. கொஞ்சம் சிவப்பு நிறம் கலந்த வகையுமுண்டு. பூக்காம்பு மற்றவற்றை விட மிகவும் குறுகியது. தழையும் பூவும், மிக அதிகமாய்க் கறுப்பு இலையும் பிரகாசமான மஞ்சள் - காவிப் பூவுமாகக் கவர்ச்சியுடையதாயிருக்கும். சீக்கிரம் பூக்காது, தாமத

மாகவே பூக்கும். பூத்திருக்கும் காலம் மிகவும் நீண்டது. தொட்டியில் நன்ருய் வளரும். கடும் வெயில் ஆகாது. சில செடிகள் குறுகியே வளரும். சில அடர்ந்திருந்தாலும், சாதாரணத் துலுக்கச் சாமந்திபோல நெடுகியும் வளரும். பூவின் நிறமும் சிலவற்றில் காவி அதிகமாயும் சிலவற்றில் காவி குறைவாயும் இருக்கும்.

### குள்ளத் துலுக்கச்சாமந்தி

பெயருக்கேற்றபடி குள்ளமான செடி. பொத்தான் அளவில் இது சிறு பூக்கள், ஏராளமாய்ப் பூக்கும். சிறு தொட்டியில் வளர்த்துத் தரையில் ஓரடிக்கொன்ருக நடலாம்.

### பிளாக்ஸ்

சிறிய பூண்டு போன்ற செடி. பருவ காலத்தில் பூக்கும் வகையும் வருஷ முழுமையும் இருந்து பூக்கும் வகையும் உள்ளன. தூறில் வெடிக்கும் சிறு கிளைகளைப் பெயர்த்தெடுத்தும், விதை போட்டும் பயிரிடலாம். வளர்ப்பது எளிது. பாத்தியாக வளர்க்கவும், தொட்டியில் வளர்க்கவும் பெரிதும் ஏற்றது. வெவ்வேறு வகைகள் வெவ்வேறு உயரம் வளர வல்லவை. 4 அங்குலத்திலிருந்து ஓரடி வரையில் வளர்பவை. பூக்கள் நீண்ட கதிர்போலச் செடியின் அடிப்பாகத்திலிருந்து உச்சி வரையில் நீண்டு காணப்படும். எல்லா நிறங்களும் உண்டு. தனி நிறம், கோடிட்டவை, கலப்பு, நடுவில் வேற்று நிறங்கள் உள்ளவை எனப் பல. பூவிதழ்கள் வட்டமானவை.

செடி வளர்வதற்குத் திறந்த இடம், சூரிய வெப்பம், சுமாரான அளவு நீர் - தேவை; அதிக நீர் ஆகாது. விதைத் தொட்டியில் விதைத்துப் பெயர்த்து நடவேண்டும். பாத்தியில் நடுவதானல் அரையடிக் கொன்ருகவும், தொட்டியானல் முக்காலடித் தொட்டியில் மூன்று கன்றுகளாகவும்

நடவும். தழைத்துப் பூக்கும் பொருட்டுத் தலையைக் கிள்ளி விடவும். ஒரு மாதத்துக்கு மேலும் பூக்களிருக்கும்.

### பூ வெண்டை (ஹாலிஹாக்)

வெண்டை போலவே உயர்ந்து வளர வல்ல செடி. பூவானது வெண்டையின் பூபோல் இருத்தலால் இந்தப் பெயர் பொருந்தும். இலைக்கணுத்தோறும் பெரிய ஒற்றை யிதழ்ப் பூ தோன்றும். பூ கிண்ணம்போல் அழகாய் விரிந்து நிற்கும். காலையில் மலர்ந்து மாலையில் வெடிவிடும். செடியின் நுனியில் கணுத்தோறும் பூ உண்டாகி, ஈட்டி போல் செடி மேல்நோக்கி நிற்கும். பூக்கும் பகுதி மட்டும் 2 அடி நீளமுள்ள நுனித்தண்டு.

வளமான மண்ணில் நன்கு பயிராகும். விதை விட்டு நாற்றுப் பிடுங்கி நடவும். முழத்துக்கொன்று நடலாம். 8 அடி உயரம் வளரும். தூரத்தில் நட்டுப் பார்க்க அழகானது. இலைகள் வெண்டை போலப் பெரியவை, சொர சொரப்பானவை. செடியின் ஆயுள் 6 மாதத்துக்கும் அதிகம். மாற்றி மாற்றிப் பயிரிட்டு வளர்க்கலாம். வேர்ப் பலம் அதிகம், நீர் அதிகம் தேவை. பெரும்பான்மையான வகைகள் இருநிறம். இதழ்கள் ஒரு நிறம், பூவின் மையம் வேறு நிறம். கருஞ் சிவப்பு, சிவப்பு, ஊதா, ரோஜா நிறம், சுத்த வெள்ளை எனப் பல நிறங்கள்.

கிளையின்றி உயரமாக வளர்வதால், காற்றிலும் மழையிலும், சாயாமலிருக்கும் பொருட்டுக் கொம்பு ஊன்றிக் கட்டுவது அவசியம்.

புதிய அடுக்கிதழ்ப் பூக்களுடைய வகைகளும் உள்ளன. இவை முளைக்கும் பருவத்தில் நீர் அளவாய் விடவேண்டும். கவனமாய்க் காப்பாற்ற வேண்டும். பொதுவாக இதில் அளவுக்கு அதிக விதை விடவேண்டும். முளைப்பது குறைவு. காற்று அதிகம் அழுகுவதுண்டு. அடுக்கிதழ் வகை மற்றதை

விட உயரம் குறைவானது; எங்கும் பிரசித்தமாய்ப் பயிராகி வருகிறது.

## ஜினியா

சுமார் 3 அடி உயரம் வளரத்தக்க சிறு செடி. வலிவாய் வளர வல்லது. விதை போட்டு எளிதில் வளரும். தொட்டி வேண்டியதில்லை: தரையிலேயே விதைக்கலாம். தண்ணீரால் கெடாது. நீண்ட நாள் பூத்திருக்கும். நிரம்பப் பூக்கும். பூவும் நீண்ட காலம் வாடாது. பல நிறங்கள். எல்லா நிறங்களும் கெட்டி நிறங்கள். ஒற்றையிதழ்கள், அழகில்லாதவை. அடுக்கிதழ்ச் செடிகள் மிக்க அழகுடையவை. இவற்றில் பூவின் இதழ்த் தோற்றத்தையொட்டிப் பல ரகங்கள் உள்ளன. பூக்கள் காகிதத்தால் செய்த பூவைப் போலத் தடிப்பாய் இருக்கும். பூவின் அடுக்கும் இதழும் அழகாயிருக்கும் என்பது தவிர, இலையும் பூவும் சேர்ந்து சிறிதும் மென்மை யுடையனவாயிரா. ஜினியாவைச் சிறந்த பூவினமாகப் பலர் கருதுகிறுர்கள்.

பெரிய பூக்கள் குறுக்கே 6 அங்குலம் இருக்கும். திறந்த வெயில் பாங்கான இடமும் வளம் மிக அதிகமாக உடைய மண்ணும் தேவை. இங்கேயே வளர்ந்து பழக்கமான செடிகளின் விதைபோட்டுப் பயிரிட்டால் விரைவில் பூவின் தரம் மிகவும் குறைகிறது. குளிர் நாட்டு விதைகளே எற்றவை. வருஷ முழுமையும் பயிரிட்டும் பூக்கச் செய்யலாம். ஓரடிக்கொன்ருக நடவும். முதலில் பூ வரும்போது செடியின் தலையைக் கிள்ளி விடுவது மிகவும் அவசியம். கிள்ளினல் தான் செடி தழைத்து அதிகமாய்ப் பூக்கும். முதற் பூ தரத்தில் மட்டமான பூவாகவும் இருக்கும். செடி, 6 இலை விட்டவுடனே வளர்ந்து பூத்து விடும் இயல்புடையது. ஆதலால் சில சமயம் கிளைகளின் தலையைக் கிள்ளிவிடுவதும் அவசியமாயிருக்கும். விதை எடுப்பதானல் மட்டமான கீழ்த்தரப் பூக்களைக் கத்தரித்து எறிந்து விட்டு, பெரிய

முழு வடிவமுடைய பூக்களை மட்டும் நிறுத்திக் கொள்ள வேண்டும். பூத்து உலரும் பூவைக் களைந்தெறிவது மிகவும் முக்கியமானது.

*ஜினியா லினியாரிஸ்* (சன்ன ஜினியா) என்பது மிகச் சிறியபூவுடைய ஒரு வகை. இச்செடிகள் மிகவும் மெலிந்தவை. 9 அங்குல உயரந்தான். பூக்கள் மங்கலான மஞ்சள், கெட்டி மஞ்சள் என இரு வேறு ரகம். ஏராளமாய்ப் பூக்கும். தொட்டியிலும், தரையிலும் நன்கு பயிராகும். நீண்டகாலம் பூத்துக்கொண்டே யிருக்கும். சில சமயம் தாமே விதை தூவி முளைப்பது முண்டு. தொட்டிக்கும் ஏற்றவை.

## 10

# குத்துச் செடிகள்

இந்தப் பெயரில் இங்குக் குறிப்பிடும் செடிகள், பூண்டுகளை யொத்த சிறு செடிகளுமல்ல, பன்னீர்போல மரமாக வளரும் பெரும் செடி அல்லது மரங்களும் அல்ல. புதராக வளரும் இயல்புடைய நடுத்தரச் செடிகளையே இங்கு இப்பெயரால் குறிப்பிட்டிருக்கிறோம்: இவை பெரும்பான்மையும் அடித் தூறிலிருந்து மரத்தன்மையுள்ள கிளைகள் உண்டாக்கி வளர்பவை. ஒற்றை மரமாய் நிற்பது அருமை. நம் நாட்டுக் குத்துச்செடிகள் பொதுவாய் இலை யுதிர்க்கமாட்டா. தூறு பெருத்துவருமாகையால் வளர்ந்த பின் பெயர்த்து நடுவது கஷ்டம். மழைக் காலத்தில் பெரிய கிடங்குபறித்து அடி மண்ணும் வேரும் கலையாமல் சுற்றிக் கீற்று வைத்துக் கட்டிப் பெயர்க்கலாம். குத்துச் செடிகள் பூவுக்காகப் பயிரிட்ட போதிலும்கூட, இவற்றில் அனேக வகைகள் தழையழகு நிரம்பியவை.

தோட்ட அமைப்பில் குத்துச் செடிகள் முக்கிய அங்கம் வகிக்கும். நிரந்தரமாய் இருப்பவையாதலால் வேனிற் காலத்தில் அல்லாமலும் வறண்டிருக்கும்பொழுதும் இவற்றின் பசுமை மிக்க இன்பம் அளிப்பதாயிருக்கும். பெரு மரங்களின் முன்னே பயிரிடும்போது அவற்றின் அடிமரப் பாகத்தை மறைத்துக் கவர்ச்சியான தோற்றம் தரும். அப்படிப் பருவகாலப் பூக்களுக்குப் பின் வரிசையாய் அமைந்து இருக்கும்போது, இவை தங்கள் இலையாலும், பூவாலும் நீண்டுயர்ந்து நின்று அழகு தரும். தனிச் செடிகள் பெருந் தோட்டங்களின் இடையில் தாமே அழகுதரும். பாதை யோரங்களில் வைத்துக் கத்தரித்து விடும்போது, வரிசை யழகு உண்டாகும், வேண்டாதவற்றை மறைக்கும்.

குத்துச் செடிகளை நடுவதற்குச் சாதாரணமாய்ப் பெருங்குழியும், வளமான மண்ணும், உரம் இடுவதும் மிகவும்

அவசியம். ஏனெனில் செடிகள் பல வருஷம் அதே இடத்தில் இருப்பவை. பெயர்த்து நடப்போவதில்லை, அழிக்கவும் போவதில்லை. ஆகவே நாம் பயிர் ஆக்கும் இடம் வளம் மிகுந்து இருக்க வேண்டும் என்பது தெளிவு. களை வரக்கூடாது. செடிகள் ஒன்றுக்கொன்று வகைக்குத் தக்கபடி போதுமான தூரம் விட்டு நடவேண்டும். நன்கு வளர்ந்த பின் அவை யொன்றை யொன்று தொடக்கூடாது. தொட்டால் ஒன்றுக்கு வரும் வெளிச்சத்தையும் காற்றையும் மற்ரென்று மறைத்துவிடும். இதற்குப் பரிகாரம் செய்ய வியலாது. பருவகாலப் பயிரானல் பிடுங்கிவிடலாம். நிரந்தரச் செடிகளைக் கலைக்க முடியாது. செடிகள் கோணல் மாணலாய் வளரும்படி விடக்கூடாது. தூறில் வெடிக்கும் களைகளைக் களைந்துவிட்டுச் சாத்தியமானவரை ஒற்றை அடிமரம் பெற்று வளரும்படி பக்குவப்படுத்த முயலவேண்டும். இதன் பயனய்ச் செடி பார்க்க நன்ருய் இருப்பதோடு, இது தழைப்பதைக் குறைத்துச் செடி பருக்க உதவும். செடிகளின் அடியில் மாத மொருமுறை கிளறிவிடுவதால் ஈரம் காக்கும்படி செய்யலாம். வருஷமொருமுறை மழைக் காலத்துக்கு முன் காரமான மட்கிய சாண உரத்தை மண்ணில் போட்டுக் கொத்திவிடுவது அவசியம்.

## சீமை அகத்தி

சரதாரணமாய் வண்டுகடி இலை என்றும் வழங்கும். 8 அடி உயரம். சொர சொரப்புள்ள கருநிற இலைகள், கிளை நுனியில் கதிர்போன்ற அடுக்குப் பூக்கள். கெட்டி மஞ்சள் நிறம். சில நாளில் பூ உதிர்ந்து நெற்று உண்டாகி வெடித்துக் கருநிற விதைகளைச் சிதறும். நீர் வசதி உள்ள இடங்களில் தானே மிக்க எளிதாகப் பயிராகும். விதைபோட்டே பயிரிட வேண்டும். பெரிய தோட்டமிருந்தால் நடுவில் வைக்கலாம். இல்லையானல் வேலிப் புறத்தில்தான் வைக்கத் தகுந்தது. பூக்கள் நெடுநாள் வாடாமலிருக்கும்.

## அலரி

அரளி எனவும் கஸ்தூரிப்பட்டை யெனவும் சொல்லப் பெறும். சங்க இலக்கியங்களில் இது அரலை என்று கூறப் பெறும்; அரலை அரளியாயிற்று. முருகனுக்குச் சிறந்த மலர். பராமரிப்பில்லாமலே நன்ருய்ச் செழித்து வளர்ந்து வருஷமுழுவதும் பூக்கவல்ல ஓர் அருமையான புராதனச் செடி. 15 அடி உயரம்வரை கூட வளரும். இலைகள் குறுகி நீண்டு கூராயும், தடிப்பாயுமிருக்கும். இது பாலுள்ள மரம். மரத்தடியில் செங்குத்தாய்க் கிளைகள் வெடித்து வளர்ந்து கொண்டேயிருக்கும். நுனிக் கிளையில் பெரிய கொத்தாக மலர்கள் தோன்றும். பலநாள் வரையில் வாடாமல் இருக்கும். எந்த நிலத்திலும் பயிராகும்; ஆற்றங்கரை, குளக்கரை முதலிய அதிகத் தண்ணீர் உள்ள இடம் மிகவும் பொருத்தம். பூக்கள் பூசைக்கும், மாலை கட்டவும் உபயோகிக்கிருேம். ரோஜாப்பூ மாலை என்று விற்பதில் முக்கால் பங்கு அலரிதான்.

அலரி அட்ட புஷ்பங்களில் ஒன்று. பட்டியும் அலரியும் சிலருக்கு இனம் விளங்காது. பால் உடையது அலரி; இல்லாதது பட்டி. மணல் பாங்கான அல்லது சிறு கற்களுள்ள நிலம் நல்லது. வெயில் பாங்கான இடமே எற்றது. நிழல் கூடாது. கிரமமாய் எருவிட்டு ஈரமும் காய்ச்சலும் மாறிமாறி இருந்தால் அளவின்றிப் பூக்கும். வருஷமொரு முறை கத்தரித்து வந்தால் செடி ஒழுங்காய்க் கிளைத்துப் பூத்துவரும். வளைப்புப் பதியனில் இருந்து எளிதில் பயிராகும். நறுக்குப் பதியனும் போடலாம்.

வேரும் இதன் மரத்திலுள்ள சாறும் கொடிய விஷமுள்ளவை; 'அலரி வேரும் நல்லெண்ணெயும்' என்னும் சொற்ருெடர் விஷமென்ற பொருளுடையது. பட்டையைத் தோல் வியாதிகளுக்கு மருந்தாக உபயோகிப்பதுண்டு.

பெரிய தோட்டங்களில் நடைபாதையோரம் நடத்தக்கது. 8 அடிக்கொன்ருக நடலாம்.

**வகைகள்** :—அலரியில் சுத்த வெள்ளை நிறத்திலிருந்து இரத்தச் சிவப்பு நிறம் வரையில் மிகப் பல்வேறு நிறமுள்ள பூக்களிருக்கின்றன. இந்த நிறங்களை ஒற்றையிதழ்ப் பூக்களிலும், அடுக்கிதழ்ப் பூக்களிலும் காணலாம்.

**வெள்ளை**:—தூய வெள்ளை. ஒற்றையில் நான்கு இதழ்கள். அடுக்கு வகையில் பல இதழ்கள். அவற்றின் ஓரங்கள் நெளிவுள்ளவை, வேலைப்பாடுடையவை.

வெண் சிவப்பு, மங்கலான சிவப்பு ரோஜா நிறம் முதலிய பல வகைகளில் ஒன்றைவிட மற்றொன்றில் சிவப்பு நிறம் அதிகரித்துக்கொண்டே போகும். இவற்றுளெல்லாம் ஒற்றை, அடுக்கு இரண்டும் அமைப்பால் மேற்சொன்ன வெள்ளைப் பூக்களைப் போன்றவை.

**சிவப்பு அல்லது ரோஜாநிறப் பூ** :—நல்ல அழகிய சிவப்பு நிறம். நுனிக் கிளைகளிலும் சிவப்பு நிறம் தெரியும். பெரிய பூக்கள் ஒற்றையும் அடுக்கும் மேற்சொன்னவை போன்றன. இவை பார்வைக்கு ரோஜாவைப் போலவே தோற்றும். அதைவிடப் பெரியதாயும், அழகாயுமிருப்பதுண்டு. இதுவே **அடுக்கலரி** என்றும் **செண்டலரி** என்றும் சொல்லப்பெறும்.

### கஸ்தூரி அலரி

சிறப்பான நறுமணமுடைய ஒரு தனிவகை. வெண்ணிறத்திலும், சிவப்பிலும் இந்த வகைகள் உள்ளன. இரண்டும் ஒற்றையிதழ்ப் பூக்கள். சாமானிய அலரியைவிடப் பார்க்க மென்மையாயும் அழகாயும் இருக்கும். தக்கபடி நீரும், உரமும் பராமரிப்பும் இருந்தால் நிரம்பப் பூக்கும். இதன் சிறப்பு மணம் அறிந்தே இதற்குக் கஸ்தூரி அலரி என்று பெயர் வந்தது.

### இரவு ராணி

இச் செடிக்குரிய தமிழ்ப் பெயர் தெரியவில்லை. இரவு ராணி என்ற பெயர் ஆங்கிலத்தின் மொழி பெயர்ப்பு. எளி

தில் காட்டுச் செடிபோல வளரக்கூடிய செடி. 8–10 அடி உயரம். கிளைகள் உயர்ந்து ஓடிக் கவிழ்ந்து தொங்கும். வெண் பசுமையான இலைகள். முக்கியமான சில வகைகள் உள்ளன.

உண்மையாகவே இரவு ராணி என்ற வகையானது மாலையில் ஏழேமுக்கால் மணிக்குப் பூக்கும். பூக்கிற சமயத்தில் செடியின் நுனிக்கொழுந்துகள் முழுமையும் அளவில்லாத பூக்கனத்தால் வளைந்து தொங்கும். பூ $\frac{1}{2}$ அங்குல நீளத்தில் மெல்லியதாய் மங்கலமான இளமஞ்சள் நிறம். இதழ் விரியும்போது இதனுடைய நறுமணம் அலை அலையாக வந்து மோதி, சுற்றியிருப்பவர்களைத் திக்குமுக்காடச் செய்துவிடும். மணம் வீசும்போது, இவ்வளவு அதிக மணம் வீசத்தக்க பூஞ்செடி இல்லையென்றே சொல்லலாம். இதன் இலை பின்னே கூறிய வகையைவிடச் சற்று நீட்டுப்போக்கானது. மெலிந்து சற்று வெளுத்த இலைகள். பூ மூன்றும் நாள் காலையில் உதிர்ந்துவிடும். வெண்ணிறப் பழம் உண்டாகும். பழத்தில் விதை பிடிப்பதில்லை. ஆதலால் வளைப்புப் பதியன்போட்டுப் பதியன் இடுவதே முறை. செடி மிக்க விரைவில்பயிராகும். விட்டுவிட்டுப் பூத்துக்கொண்டேயிருக்கும். பெரும் தோட்டத்தில் பல மூலைகளில், பல செடிகள் வைத்திருந்தால் தோட்டத்தில் எங்கும் நறுமணம் வீசும்.

இந்தப் பூவில் ஒரு விசித்திரம். இரவில் பூத்துக் காலையில் இதழ் கூம்பும். மறுபடி மாலையில் இதழ் விரிந்து மறுநாள் காலையில் குவியும். மறுபடியும் மாலையில் இதழ் விரிந்து, அடுத்த நாள் காலையில்தான் உதிரும். மூன்று நாள் இப்படி.

**சிவப்பு வகை** :—இது சிறப்பானதன்று. நன்றாய்ப் பயிராவதில்லை. ஐந்தடி உயரம். முந்தியதுபோலவே வளைப்புப் பதியன் பயிரிடும் முறை.

### பகல் ராணி

சாதாரண வகையானது. அதிகாலையில் பூக்கும். ஆதலால் **பகல் ராணி** என்றும் சொல்லுவார்கள். தோட்டங்

களில் சாதாரணமாய்க் காணப்பெறுவது இதுவே. சிறிய வெண்மையான குழாய்போன்ற அமைப்புடைய பூக்கள் உடையது. பூ நீளம் 1 அங்குலம். புதுப் போத்துக்களின் நுனியில் கிளைக் கணுவில் கொத்தாகப் பூ தோன்றும். கொத்தில் முப்பது பூக்களிருக்கும். பூக் கனத்தாலேயே பூ வளைந்து தொங்கும்.

மிகுந்த ரம்மியமான மணமுடையது. மணத்தை அறிந்தவர்கள் யாரும் இதை விரும்பாமலிருக்கமாட்டார்கள். இதையறிய ஆங்கிலப் பெயர் மிகவும் பொருத்தம் என்றே சொல்லத்தோன்றும்.

பூக்கள் உதிர்ந்தபின் காய் உண்டாகும். தனிப் பழம் நாவற் பழம்போன்ற நிறத்தில், பட்டாணியளவுள்ள பல பழங்களுள்ள சிறிய கொத்தாய் எலுமிச்சையளவில் கனத்துத் தொங்கும். காய் ஏராளமாய் இருக்கும். பழத்தை எடுத்து விதைபோட்டும் பயிரிடலாம். நறுக்குப் பதியனும் வளைப்புப் பதியனும் போடலாம். செடி ஒரு முறை தொடர்ச்சியாகப் பலநாள் பூத்துப் பின் காய்த்து முற்றிப் பழம் உதிர்ந்தபின் மறுபடியும் பூக்கும். ஆண்டு முழுமையும் பூத்துக் கொண்டிருக்கும். சிறிய தோட்டங்களிலும் பயிரிடத் தகுந்தது நடைபாதையோர வேலிக்கும் தகுந்தது. தொட்டியிலும் பயிரிடலாம். தரையில் பயிரிடும்போது இரண்டு ஆண்டில் 10 அடி உயரம் வளர்ந்து சாய்ந்துபோக ஆரம்பிக்கும். வெட்டிவிட்டுப் புதுச் செடிகள் நட்டுக் கொள்ளலாம். பழம் உதிர்ந்து தரையில் கன்றுகள் ஆயிரக் கணக்கில் தாமே முளைக்கும். இதற்கு இரவு மல்லிகை என்ற பெயரும் சொல்லுவதுண்டு.

### உண்ணிப் பூ

தமிழ் நாடெங்கும் சாதாரணமாய் வேலிக் கால்களில் காணப்படும் ஒரு காட்டுச் செடியின் பூ. செடி அடர்த்தியாய்க் கொடிபோல் கோணல் மணலாய் வளரும். முள்

ளடர்ந்தது. ரோஜாமுள் போன்ற சிறு முள் செடியின் கிளை நெடுகிலும் நெருங்கியிருக்கும்; ஆனால் முள் கூர்மையாய்க் குத்தாது. பராமரிப்பே தேவையில்லை. வறண்ட இடங்களில் தன்னிச்சையாய் வளரும். சொர சொரப்பான இலைகள். பூ துர் நாற்றமுடையது. நூறு பூக்களுக்கு மேலும் ஒரே கொத்தாகத் திரண்டு ஒவ்வொரு சிறு கிளையின் நுனியிலும் தோன்றும். ஒவ்வொரு தனிப் பூவும் சிறியது. பூங் கொத்துக்கள் சில நாள் வரை வாடாமல் இருக்கும். பிறகு ஒவ்வொரு பூவாக உதிரும். வருஷ முழுமையும் பூத்திருக்கும்; பருவமென்பது இல்லை.

கிளை வெட்டியும் வளைத்தும் பதியன் போடலாம். விதை போட்டு உற்பத்தி செய்வதுமுண்டு. வருஷமொரு முறை வெட்டிக் கழித்து விடுதல் அவசியம். அளவோடு ஒழுங்காக வளர வேண்டுமாயின் மூன்று மாதத்துக்கொரு முறையும் கத்தரித்து விடலாம். சிறிது ஈரம் இருக்கும்படி செய்தால் போதும். இதை யாரும் விரும்பிப் பயிரிடுவதில்லை.

தன்னிச்சையாகவே இந்தச் செடி பயிராகி வந்தமையால், கணக்கற்ற வகைகள் உண்டாகி யிருக்கின்றன. பெரும்பான்மையான வகைகளில் பூக்கும்போது உள்ள நிறம் மாறி மாறி, உதிரும்போது வேறு நிறமாகிவிடும்.

**வேலி உண்ணி :** மிகச் சாதாரணமானது. வேலிக்காகவே எங்கும் பயிராகிறது. 6 அடி உயரம்; வெள்ளையும் மஞ்சளும் கலந்த நிறமுடைய பூக்கள்; சில நாளில் சிவப்பு நிறமாகி உதிர்ந்துவிடும். வெகுதூரம் படரும், முள் அதிகம். துர் நாற்றமும் அதிகம்.

**வெள்ளுண்ணி :** மேற்சொன்னதைப் போன்றது. பெரிய செடி. பூக்கள் முழு வெள்ளை. தொட்டியில் பயிரிடலாம். தனிச்செடியாகப் பயிரிட்டுக் கத்தரித்துவிடுவதற்கேற்றது.

**சிறு உண்ணி :** நல்ல பசுமையான இலைகளுடைய சிறு செடி. 2, 3 அடி உயரத்திலேயே இருக்கும்படிச் செய்ய

லாம். மிக்க பிரகாசமான மஞ்சள் நிறப் பூவுடையது. தொட்டியில் வளர்த்துத் தாழ்வாரங்களில் தொங்க விடுவதற்கேற்றது, முள் குறைவு.

**நீல உண்ணி:** மஞ்சளைப் போலவே இன்னும் சிறியது. பூக்கள் மங்கலான நீல நிறம். தரையிலே கவிழ்ந்து படரும்.

**செவ்வுண்ணி:** மிகவும் பிரகாசமானது காவி நிறப் பூவுடையது. பெரிய செடி; பெரிய மரங்களைப் பற்றிக் கொடி போல 20 அடி உயரம் கூட படர்ந்துவிடும். தரையில் பயிரிட்டுக் கத்தரித்து விடுவதற்கேற்றது. பூக்கள் ஏராளம்.

**நல்லுண்ணி:** இவ்வகை அதிக முள்ளில்லாதது. இலைகள் துர் நாற்றமின்றி நல்ல மணம் உடையன.

இவையன்றி வெள்ளை, நீலம், மஞ்சள், சிவப்பு, காவி முதலிய நிறங்களில் சில சில கலந்துள்ளவையாய்ப் பல நிறம் உடைய வகைகள் இருக்கின்றன. எல்லாவற்றிலும் பூவின் மையம் வேறு நிறமுடையதாய்ப் புள்ளி போலத் தோன்றும்.

பூ உதிர்ந்தபின் கரு நிறமான சிறு காய் உண்டாகிறது. இது பார்வைக்கு மட்டும் உண்ணிபோல் தோற்றுவதால் செடிக்கு இப் பெயர் வந்ததென்று கருதலாம்.

இச் செடிகள் தாமே முளைத்துப் பல இடங்களில் ஒரு களை என்று சொல்லத்தக்க அளவுக்கு விருத்தியாகி யிருப்பதைக் காணலாம். இதைப் பூஞ்செடி என்றும் யாரும் சொல்ல மாட்டார்கள். ஆயினும் அடர்த்தியாய்ப் பூத்தல் பற்றியும், எண்ணற்ற அழகான நிற வேறுபாடுகள் இருத்தல் பற்றியும் இங்கு நாம் குறிப்பிடுகிறோம். மேற் கூறிய மஞ்சள், வெள்ளை, நீலம் சிறப்பானவை.

### எலிப் பச்சிலை

மெதுவாக வளரும் பெருஞ் செடி. அடர்த்தியான இலைகளுடையது. பசுமையான சிறிய இலைகள். கொழுந்து

களும், புதுத் தளிர்களும் சிவப்புக் கலந்த நிறம். பதியன் போட்டுச் செடி உண்டாக்கலாம். இலைகள் பசுமையாகவும், சிவப்பாகவும் இருப்பதால் அழகாயிருக்கும். வருஷ மொருமுறை ஒட்ட வெட்டி விடலாம். நன்ருய்த் தளிர்த்துப் பூக்கும். எந்த உருவத்துக்கு வேண்டுமானுலும் பொருத்தமாக வெட்டலாம். குழாய் போன்ற அமைப்புடைய சிறிய பூ. காவி கலந்த செந்நிறம். பருவத்தில் மட்டும் கொத்துக் கொத்தாக அதிகமாய்ப் பூக்கும். விதை உண்டாவதில்லை.

### கார்டேனியா

ஆறடி உயரம் வளரும் பசுமையான செடி. சில சமயம் இலையுதிர்த்து விட்டு, செடி முழுமையும் பூமயமாய்ப் பூத்திருக்கும். பெரிய அடுக்கிதழ்ப் பூக்கள், பாலாடை நிறமும், சிறந்த மணமும் உள்ளவை. நறுக்குப் பதியன், வளைப்புப் பதியன் போட்டு உண்டாக்கலாம். செடி தழைத்து வளரும். இரண்டு வருஷம் வளர்ந்தபின் பூக்க விடலாம். மேற் கூறியது இதில் சாதாரணமான வகை. மற்ருெரு வகை இதனிலும் சற்றே உயரம் குறைவான செடி. கொத்துக் கொத்தாய்ப் பூக்கும். கத்தரித்து விடுவதற்கும் ஏற்றது. இச் செடியின் அடியில் வேரிலிருந்து தனித் தனிக் கன்றுகள் உண்டாகி யிருக்கும். இவற்றைப் பிரித்தெடுத்து நடுவதே பயிரிடுவதற்கான எளிய முறை.

### கொக்கு மந்தாரை

ஆறடி வளரும் குத்துச் செடி. மந்தாரை திருவாத்தி முதலிய மரங்களின் இனத்தைச் சேர்ந்தது. இதன் பூக்கள் மிகப் பெரியவை. மிகத் தூய்மையான வெள்ளை நிறம். அதனுலேயே இதற்குக் கொக்கு என்ற அடைமொழி ஏற்பட்டது போலும். கொக்கிறகு, வெள்ளை மந்தாரை என்பன இதன் வேறு பெயர்கள். செடி அடர்த்தியாய்த் தழைத்துக் கருநிற இலைகளுடன் வளரும். மந்தாரை இனத்

தில் இதன் இலைகளே பெரிய அளவுள்ளவை. நன்ருய் விரியும் பூக்கள். புரட்டாசி முதல் மாசி - பங்குனி வரை அதிகமாய்ப் பூக்கும். மற்றக் காலங்களில் சுமாராய்ப் பூக்கும். ஆண்டு முழுவதும் இலைகளை உதிர்க்காமல் வளரும். பூ உதிர்ந்தவுடன் அவரைக்காய் போன்ற காய் உண்டாகும். பழுப்பு நிறமுள்ள விதைகள். புதிய விதை மட்டுமே முளைக்கும். விதை முளைத்து விரைவில் வளரும். முதல் வருஷத்தில் பூக்கும். பூத்து முடிந்தவுடன் இலைகளைக் கத்தரித்து விட வேண்டும். பூக்கள் பூசைக்கு உபயோகமானவை.

முன்புறத்தில் சிறு பூஞ் செடிகளை வைத்துக் கொக்கிறகைப் பின்னணியாக வைத்தால் பார்க்க அலங்காரமாயிருக்கும்.

## கொடிப் பட்டி

அலமாண்டா என்ற பெயரால் வழங்கும். எளிதில் பயிராகிற, என்றும் பசுமையான பெரிய செடி அல்லது கொடி; செடி மிக்க வலிவுடையது. உயரமான மெல்லிய நீண்ட கிளைகள்; புனல் வடிவமான மிகப் பெரிய பூக்கள். ஒரு சாண் குறுக்களவு. அடிக்கடிக் கத்தரித்து விடுவது நல்லது. பந்தல் முதலியவைகளிலாவது, பாதைகளின்மேல் வளைத்து விடப்பட்ட தட்டிகளின் மேலாவது படர விடுவதற் கேற்றது. கிளை நுனியில் வருஷ முழுவதும் ஏராளமாய்ப் பூக்கள் உண்டாகும். பதியன் வெட்டியும் வளைத்தும் போடலாம்.

குத்துச் செடியாகவும் இதைப் பயிரிட முடியும். 8 அடிக் கொன்ருக இருக்கலாம். நிரம்ப எரு விட்டுக் கொத்திய மண்ணில் வளர்த்து ஆரம்ப முதல் அடிக்கடிக் கத்தரித்து விடவேண்டும். வகைகள் பல உள்ளன.

**மஞ்சள்:** இதுவே மிகப் பெரியது. பெரிய பிரகாசமான இலைகள், மிகப் பெரிய பூக்கள். குறுக்கே பத்தங்

குலம் வரையிலும் இருக்கும். அழகிய மஞ்சள் நிறம். இலையும் பூவும் சேர்ந்து கவர்ச்சிகரமான தோற்றம் கொடுப்பது. மஞ்சள் நிறத்தில் மற்றொரு வகையும் உண்டு. அது மிகவும் சிறிய பூக்கள்.

**ஊதா:** அதனிலும் மென்மையான செடி. சிறிய இலைகள். சிறிய பூ. குத்துச் செடியாக வளர்ப்பதற்கு ஏற்றது. கவனத்தோடு வளர்த்துச் செடியாக்கிவிட்டால், பிறகு நன்றாகப் பூக்கும்.

### சீமைக் கொஞ்சி

மிக்க அடர்த்தியாய்த் தழைத்து 10 அடி உயரம் வரையில் கூட வளரும். கருமையான இலைகள். என்றும் பசுமை குன்றாமல் இலை யுதிராமல் வளரும். பராமரிப்பின்றியே செழிக்க வல்லது. அடிக்கடிக் கத்தரித்து விடலாம். வருஷ முழுதும் பூக்கும். கொத்துக் கொத்தான வெண்மையான இதழ்களையுடைய பூக்கள். சுகந்த வாசனை வீசிக்கொண்டேயிருக்கும். கறிவேப்பிலை இனத்தைச் சேர்ந்தது. சிறு மரமாகவும் கூட வளரும். வெட்டி அல்லது வளைத்துப் பதியன் போடவும். விதை எடுத்துப் பயிரிடுவது முண்டு. இது சற்று சிரமம். மறைவுக்காக உயரமான அடைப்புக்கள் வேண்டிய இடத்தில் இதைப் பயிரிட்டால் சௌகரியமாக இருக்கும்.

### செண்டு மல்லிகை

சாமானியமான காட்டுச் செடி; பெரிய இலைகளோடு அடர்த்தியாய்ப் புதராக வளர்ந்து பூக்கும். வைகாசியில் பூக்கும். மணமுடைய பெரிய பூக்கள். அடுக்குப் பருத்தி போல் தோன்றுவதால் செண்டுப் பருத்தி என்று சொல்வதும் உண்டு. உச்சிக்கிளைகளில் மட்டும் பூ தோன்றும். இதன் பொருட்டுச் செடி முழுமையும் இரண்டடி உயரமே இருக்கும்படிக் கத்தரித்து விடுவது அவசியம். பூத்து முடிந்தவுடன் கத்தரித்து விடலாம்.

ஐப்பசி கார்த்திகையில் நறுக்குப் பதியன் போட்டுச் செடி எளிதில் தயாரிக்கலாம். வெண்ணிறமாக இதழ் விரிந்து, பின் சிவப்பு நிறமாக மாறும்.

### சுகந்தி

மஞ்சள் நிறப் பூக்களையுடைய சிறு செடி. கோடைக் காலத் தொடக்கத்தில் பிரகாசமான பெரிய பூக்களுண்டாகும். மண முள்ளவை. அனேகமாய் அப்போது செடியில் இலையேயிராது. பலவாரம் வரையில் செடி முழுவதும் ஒரே மஞ்சள் நிறமாயிருக்கும். பூத்தபின் இதழ்கள் தனித் தனியாய் உதிரும். பூக்கும் காலம் தை - சித்திரை - ஆனியில். பிறகு காய் உண்டாகும். விதையிலிருந்தே செடி சாதாரணமாய் உற்பத்தியாகிறது. பதியனும் போடலாம். பராமரிப்பின்றிக் கடலோர இடங்களில் பயிராகும். சில இடங்களில் மரமாகவும் வளரும். 7 அடி உயரம். வருஷ மொருமுறை இலையுதிர்க்கும். புதுத் தளிர்கள் சிவப்பு நிறங் கலந்தவை.

### டர்னேரா

2 அடி உயரம் வளரவல்ல சிறு செடி. ஆண்டு முழுமையும் பசுமையான இலைகளோடு பூத்துக் கொண்டிருக்கும். தரையோடு வளரும். ஐந்து இதழ்களுடைய கவர்ச்சியான மஞ்சள் நிறங்கொண்ட பெரிய பூ. குறுக்களவு 8". பிற்பகலில் பூ வாடி விடும். பெரும்பாலும் இதைப்பயிரிடும் வழக்கமில்லை. தன்னிச்சையாய்த் தஞ்சைக் கோயிலைச் சூழ்ந்துள்ள அகழிக்கரையில் அடர்ந்திருக்கக் காணலாம். சில சாலை யோரங்களிலும் தானாய் முளைத்திருக்கும். காயிலிருந்து விதை விழுந்து எங்கும் செடி தானே உண்டாகும். செடியில் ஒரு அருவருப்பான மணம் உண்டு.

**வெள்ளை வகை:** இது சற்றே அபூர்வமானது. முந்தியதுபோன்ற சிறு செடி. வெளுத்த இலைகள். வெண்ணிறப் பூ ஏராளமாய்ப் பூத்துப் பிற்பகலில் குவிந்துவிடும். பூவின் மையம் கறுப்பாயும் அடுத்து மஞ்சளாயும் இதழ்

நுனி மட்டும் வெண்ணிறமாயும் இருக்கும். விதை உண்டாவதில்லை. பதியன்.

டுராண்டா (காசான்)

8 அடி உயரம் வளரக்கூடியது. கிளைகள் நீண்டு வளைந்து தொங்கும். சிறு இலைகள், மிகச்சிறிய கருநீல நிறப் பூக்கள். நுனிக்கிளை நெடுகிலும் பூக்கும். பூ உதிர்ந்தவுடன் மஞ்சள் நிறக் காய் தொங்கும். காயும் பூவுமாகப் பார்க்க அலங்காரமாயிருக்கும். நடைபாதையோரம் வேலியாக நடுவதற்கு எற்றது. பயிரிடுவதில் கஷ்டமில்லை. விதை போட்டும் பதியன் போட்டும் உண்டாக்கலாம்.

இதில் வெள்ளைப் பூவுடைய ரகம் ஒன்றும், நீலப் பூவும் வெள்ளைக் காயுமுடைய ரகம் ஒன்றும் உள்ளன.

தங்கப் பட்டி

பசுமையான தோற்றமுடைய குத்துச்செடி ; மரமென்றும் சொல்லலாம். சில 10 அடி உயரமும் சில இன்னும் குறைவான உயரமுமுள்ளவை. வருஷமுழுமையும் பூக்கும். சாதாரணமாய் எல்லா நிலத்திலும் பயிராகும். முதல் வருஷத்திலேயே பூக்க ஆரம்பிக்கும். கொத்துக் கொத்தான பூக்கள் இரண்டங்குலம் வரை நீண்டு குழாய்போன்ற அமைப்புடையவை. விதை போட்டும், பதியன் போட்டும் பயிரிட முடியும். பல நிறங்களுள்ளன.

**மஞ்சள் பட்டி:** இது நந்தவனமெங்கும் காணப்படுவது, பூசைக்கு உபயோகமான பூ. பெரிய நேர்த்தியான 'சிறு மரம், 15′ உயரம். சுவரோரம், வேலியோரம் முதலிய இடங்களில் சுவரையும், வேலியையும் மறைப்பதற்காகப் பயிரிடப்படும். அலகிட்ட இலைகள்: விரைவில் வளரும். வருஷமொருமுறை வேண்டிய உயரம் விட்டுக் கத்தரிப்பது அவசியம். தங்க நிறமுடைய கவர்ச்சி மிகுந்த பூ. புனல் போன்ற அமைப்புடையது. இதழ்கள் விரிந்தவை. பூக்கள் கிளைநுனியில் கொத்துக் கொத்தாக உண்டாகும். விதை போட்டுச்

செடி உண்டாக்கலாம்; ஆயினும் பதியனும் பிடிக்கும். நட்ட 4 மாதத்தில் பூக்கும். முந்தியது செடி, இது மரம் போல் வளரும் ரகம்.

### சொர்ணப் பட்டி

பிரகாசமான சிவப்பு நிறம். சுலபத்தில் பயிராகும். வருஷமுழுதும் பூக்கும். சிறிய செடி 5அடி உயரம். பதியன் போடலாம். தொட்டியிலும் பயிரிடலாம். கருநிறமுடைய இலைகள்; சுவர் போல அடர்ந்து நிற்கும். நடை பாதையோரம் பயிரிடத் தக்கது. அடிக்கடி வருஷ மொருமுறை கத்தரிப்பது அவசியம். நுனிக்கிளையில் மட்டுமே பூ. ஆதலால் புதுத் தளிர் வருவது மிகவும் முக்கியம். ஆண்டு முழுமையும் பூக்கும். இவ்வகையின் பூக்கள் முன்கூறிய தங்கப் பட்டியின் மஞ்சள்நிறப் பூப்போல் இதழ் விரிந்து தோன்ருமல், இதழ் குவிந்த மாதிரியே தோன்றும்.

**காவி:** பெரிய காவி நிறமுள்ள பூ. முந்திய வகை போன்றது. 2அங்குல நீளமுள்ளது. பசுமையான இலைகள். 4 அடி உயரம். பதியன் வெட்டியும் வளைத்தும் போடலாம். நிரம்பப் பூக்கும்.

**வெள்ளை வகை:** இது மிகப் பெரிய பூ. வெண்ணிறமும் அதில் கொஞ்சம் ரோஜாநிற ரேகைகளும் உடையது. சொற்ப மணமுடைய பூ. ஓரளவுக்குக் குத்துச் செடி என்ருலும், வலிவான பெருங் கொடிபோலவும் படர்ந்து பூக்க வல்லது. என்றும் பூக்கும்; விதை அருமை. வளைப்புப் பதியனே முறை.

**பெருங் காவிக் கொடி:** இதுவே இந்தச் சொர்ணப்பட்டி வகைகளில் மிகச் சிறப்பானது என்று சொல்லலாம். ஆனல் இது மிகப் பெரிய உறுதியான கொடியாகப் பந்தலில் ஏறி அடர்ந்து படரும். நீண்டு ஓடிய கொடிதான் பூக்கும். பூக்கள் பல சேர்ந்து கொத்தாகப் பந்தலில் குவிந்து தொங்கும். தனிப்பூ மிகவும் பெரியது, 5" குறுக்களவுடையது.

காவி, மஞ்சள் ரேகையுடையது. மிகவும் சிறப்பான கவர்ச்சியுடைய பூங்கொத்து. அபூர்வமானது. விளைப்புப் பதியனே இனப் பெருக்க முறை.

### தாழை

அன்னாசியினத்தைச் சேர்ந்த ஒரு பூஞ்செடி. மரமாக 20 அடி வரை கூட வளரும். மிருதுவான பசிய நீண்ட குறுகிய இலைகள்; ஓரங்களில் முள். வெப்ப நாட்டில் மட்டும் பயிராகும். அடியிலிருந்து புதுச்செடி கிளைத்து ஒரே காடாய்த் தோன்றும். உயரத்திலிருந்து கூட வேர் விழுது விட்டு, வேர் தரையை வந்து பிடிக்கும். சுத்த வெண்மையான அல்லது சிறிது மஞ்சள் நிறங்கலந்த நுனி இலைகள் அல்லது மடல்கள் வெண்மையான பூவை மூடியிருக்கும். இப்பூவுக்கும் இவ்விலைகளுக்கும் அதிகமான வாசனையுண்டு. பூவில் மகரந்தத்தூள் அதிகம். துணிப்பெட்டிகளில் பூச்சி வராதிருக்கும்பொருட்டு இத்தூளுடைய பூக்களைப் பெட்டியில் வைத்திருப்பது வழக்கம். பூ கனமான கதிர் போன்றது. ஓரடி நீளமிருக்கும். பூத்த பின் காயாக மாறுகிறது. ஒரு விதையுள்ள பழங்கள் நெருக்கமாய்ச் சேர்ந்து அன்னாசி யொத்த பிரகாசமான சிவப்பு நிறப் பழமாயிருக்கும். பழம் உண்ணத் தகுந்தது என்று சொல்வர். பூவின் மணம் மிக்க அதிகமானதால், மரத்தில் நல்ல பாம்பு வாசம் செய்யுமென்று சொல்வதுண்டு. காலையில் மலரும். விரும்பி அணிகிற பூ.

சிவபெருமானது சோதியுருவத்தின் முடியைக் காணப் பறந்துசென்ற பிரமனாகிய அன்னம் காணமுடியாது திரும்புங்கால், பெருமான் திருமுடியினின்றும் விழுந்த தாழம்பூ வொன்று, அவ்வன்னம் பெருமான் திருமுடியைக் கண்டதென்று விஷ்ணுவிடம் பொய்யாகச் சாட்சி கூறியமையால், அன்றுமுதல் அப்பூவைத் தமக்கு வேண்டாம் என்று சிவபெருமான் விலக்கிவிட்டாரென்பது புராணக் கதை.

ஆற்றங்கரை, குளக்கரை முதலிய அதிக நீர் வளமுள்ள இடத்தில் மட்டுமே விருத்தியாகும். மற்ற இடத்தில் பயிரானாலும் பூக்காது. அடியில் வெடிக்கும் கன்றுகளைப் பெயர்த்து நட்டுப் பயிரிடலாம். தாழை நாரும் ஓலையும் பல வேலைகளுக்குப் பயன்படுகின்றன.

தாழையில் வெள்ளைக்கோடு ஓடும் இலையுடைய வகையொன்று அலங்காரச் செடியாக இருக்கிறது. இதில் வெள்ளைக்கோடு (மஞ்சள் நிறம்) இலையில் அடியிலிருந்து நுனிவரையில் நீளமாக ஓடும்; இரு ஓரமும் பச்சையாக இருக்கும்.

## நந்தியாவர்த்தம்

6 அடி உயரம் அடர்த்தியாய் வளரக்கூடிய சிறு செடி. இலைகள் கரும் பச்சை நிறம். பளபளப்பானவை. வருஷ முழுவதும் பசுமையாகவே பூத்துக்கொண்டிருக்கும். பூக்கள் எல்லாம் தூய வெள்ளை நிறம். அடுக்குப் பூக்கள் ரோஜா அளவு அகன்றவை. அழகானவை. தனித்த ஒரு நறுமணமுண்டு. செடி பாலுடையது. கிளையை வெட்டிப் பதியன் போட்டுச் செடியுண்டாக்கலாம். வேர் வெட்டுப்பட்ட இடத்தில் தரையிலிருந்து கிளைகள் தளிர்த்து இலைவிட்டு வளரும். இக் கன்றுகளைப் பெயர்த்தும் பயிரிடலாம். கிரமமாகத் தண்ணீர் பாய்ச்சி வந்தால் செடி நன்ருய்த் தழைத்து அழகாயிருக்கும். பூக்கள் பூசைக்கு உபயோகமாகின்றன. பூவைப் பிழிந்து சாற்றைக் கண் நோய்க்கு மருந்தாக உபயோகிப்பதுண்டு. கரும்பச்சை நிறமாதலால் இதை வேலிபோல் வரிசையாக வளர்த்துப் பின்னணியாக வைத்து முன்புறம் பருவகாலப் பூஞ்செடிகள் பயிரிட அலங்காரமாயிருக்கும். நந்தி, கணவீரம் என இது இலக்கியத்தில் சொல்லப்பெறும். இது அட்ட புஷ்பங்களில் ஒன்று.

இதில் வகைகள் அனேகம் இருக்கின்றன. யாவும் எளிதில் பயிராகும்.

**ஒற்றையிதழ் :** 4-5 ஒற்றை இதழ்களுள்ள சிறிய பூ. அதிகம் பூக்கும். பருவத்தில் செடியின் மேற்புறம் முழுமையும் இலை இருப்பதே தெரியாமல் பூ மயமாக இருக்கும். இந்த வகையிலேயே பெரிய பூக்களுடையது, சிறிய பூக்களுடையது என இரு தனி ரகங்கள் உள்ளன.

**அடுக்கிதழ் :** 2-3 அடுக்கிதழ்களைக் கொண்ட பெரிய பூவுடையது. பூ ரோஜா அளவு இருக்கும், ஏராளமாய்ப் பூக்கும்.

**நெளிவு இதழ் : ஒற்றை :** இதன் பூக்கள் ஒற்றையிதழ். ஆனால் இதழ் ஓரங்கள் நெளிவாக இருக்கும். காம்பு சற்றே மஞ்சள் நிறமுடையது.

**நெளிவு இதழ் : அடுக்கு :** மிகவும் பெரிய அளவுள்ள பூ. பல அடுக்குள்ள இதழ்கள். எப்போதும் அதிகமாய்ப் பூக்கும். விரும்பிப் பயிரிடத் தக்க மிகச் சிறந்த வகை.

**வெள்ளை இலை :** இது ஒரு புது ரகம். இலைகள் பச்சை நிறமாயிராமல், பச்சை, வெள்ளை, மஞ்சள் ஆகிய மூன்று நிறங்களும் ஒவ்வோர் இலையிலும் திட்டுத் திட்டாய்க் காணப்படும். பார்க்கக் கவர்ச்சியானது. அடுக்கிதழ் கொண்ட இதன் பெரிய பூக்களுக்காகவும், இலை அலங்காரத்துக்காகவும் பயிரிடத்தக்கது.

### சிவப்பு நந்தியாவர்த்தம் (காப்ஸியா)

சாதாரண நந்தியாவர்த்தம் போலவே என்றும் பசுமையாய் வளரும் செடி. 5 அடி உயரம் கிளைகள் வளைந்து கவியும். ஆண்டு முழுமையும் பூக்கும். மங்கலான சிவப்புக் கலந்த நிறம், நடுவில் சிவப்பு ; பார்க்க ஒற்றை நந்தியாவர்த்தம் அல்லது நித்திய மல்லிகை போன்ற அமைப்பு. பூ சிலநாள் வாடாமல் இருக்கும். வெட்டுப்பதியன், வளைப்புப்பதியன் போடலாம். விரைவில் பூக்கத் தொடங்கும். வளமான மண்ணும் போதிய நீரும் தேவை. உறுதியாய் ஆனால் மெலிந்து வளரவல்லது.

### பட்டி

ஸ்படிக புஷ்பம் என்றும் இது சொல்லப்படும். என்றும் பசுமையான இலைகளோடு அடர்த்தியாய்த் தழைத்துப் புதராக வளரும் சிறு செடி. 4 அடி உயரம். நுனிக் கிளைகளில் எதிர் எதிராயுள்ள இலைக்கணுவில் பூ தோன்றும். அதிகாலையில் மலர்ந்து விரிந்து மாலையில் உதிர்ந்து போகும். மிக்க மிருதுவான பூ. குவளைபோன்ற அமைப்பு. மார்கழியில் பூக்க ஆரம்பிக்கும். மாசி வரையில் அளவில்லாமல் பூக்கும். சில வகைகள் மட்டும் காய்ந்து விதைகளைச் சிதறித் தாமே முளைப்பதுண்டு. பொதுவாக எல்லாம் பதியனிலிருந்தே உண்டாகும்.

மூன்று கணுக்களுள்ள பூவில்லாத நுனிக் கிளையை ஒடித்து மிருதுவான மண்ணில் ஊன்றினல் ஒரு வாரத்தில் வேர்விட்டுத் தளிர்க்கும். பயிரிடுவதற்குரிய காலம் ஆடி மாதம். பூசைக் குரிய பூ. செடி மிக்க விரைவில் வளரும். வருஷம் ஒரு முறை தவருமல் கத்தரித்து விடவேண்டும். இதில் இல்லாத நிறமே இல்லையென்று சொல்லும்படி அத்தனை நிறங்களிலும் பட்டிப் பூ காணப்படும். பூசைக்கேற்ற இப்பூவை சென்னைப்பட்டினம் தனக்கே உரிய அநாகரிகமான முறையில் லேடி கனகாம்பரம் என்று வழங்கும்.

**மங்கலான சிவப்பு நிறம்:** இதுவே சாதாரணமாக எங்கும் காணப்படுவது. அளவில்லாமல் பூக்கும், மிக்க அடர்த்தி.

**மாணிக்கப் பட்டி:** இது புது வகை. சிறிய செடி. பூக்களும் சிறியவை. நல்ல சிவப்பு நிறம். பதியனிலிருந்தே உண்டாகும். சிறியதாய் அடர்த்தியாய்த் தழைத்து வளரும்.

**வெள்ளை:** தூய வெள்ளை நிறப்பூ. செடிகளில் இரண்டு ரகங்கள் உண்டு. ஒன்று பதியனிலிருந்து உண்டாவது. முதல் வகையைப்போல அடர்த்தியாய்ப் பெரிதாய் வளரும். மற்ருென்று விதையிலிருந்து உண்டாவது. அதிகம் கிளைக்

காமல் குச்சியாய் உயர்ந்து வளர்ந்து பூக்கும். பூக்கள் உதிர்ந்தபின் காய் உண்டாகி வெடித்து விதைகளைச் சிதறும். விதை எங்கு பார்த்தாலும் தானே முளைக்கும்.

**வெள்ளையும் நீலக்கோடும்:** விதையிலிருந்து உண்டாகும் சிறு செடி. அதிகம் தழைக்காமல் பூத்துக் காய்க்கும். இதில் விதையில்லாத வகையும் உண்டு.

**வெள்ளையும் சிவப்புக்கோடும் :** முந்தியவகை போன்றதே. விதை உண்டாகாது.

**நீலம் :** சாதாரணப் பட்டியைப் போலவே பயிராகிப் பூக்கும். பதியனிலிருந்தே உண்டாகும். பூவின் இதழ்களும் உட்புறங்களும் மட்டுமே நீல நிறம். வெளிப்புறமெல்லாம் வெள்ளை.

**கரு நீலம் :** மிகச் சிறிய செடி. இலைகள் கரும் பச்சை. பூக்கள் மிகச் சிறியவை. கனகாம்பரம் அளவு. நிறம் கருமையான நீலம். விதையிலிருந்தும் பதியனிலிருந்தும் உண்டாகும்.

### பூ மருது

பொதுவாக இது பெரிய மரவகை. ஆனால் இங்குக் கூறுபவை, ஆறடி உயரம் வளரக்கூடிய சிறு செடிகள். இலை உதிர்க்கும் தன்மை உடையவை. இலைகள் சிறியவை. பதியன் போட்டும் வேர்ப் பதியன் பிரித்தும் இவற்றை உண்டாக்கலாம். எந்த மண்ணிலும் எளிதில் பயிராகி நன்கு பூக்கும். பூக்கும் பருவம் வைகாசி - ஆவணி. தனித் தனிக் குத்துச் செடியாகப் பயிரிடலாம். புதுத் தளிர்களில் மட்டுமே பூ உண்டாவதால் வருஷமொரு முறை இலையுதிர்த்த பருவத்தில் (மாசி, பங்குனி) கத்தரிப்பது அவசியம். கத்தரித்தபின் புதுத் தளிர்கள் உண்டாகி அரும்பு வைக்கும்.

**வகைகள் : சிவப்பு :** நிரம்பப் பூக்கும். உச்சிக் கிளையில் கொத்தான பூக்கள் தோன்றியிருப்பது போகன்வில்லா போலக் கவர்ச்சிகரமாய் இருக்கும்.

243/13539

**வெண் சிவப்பு:** செடி மெதுவாக வளரும். சுமாராகப் பூக்கும்.

**தூய வெள்ளை:** சிவப்பைப் போலச் செழுமையாக வளர்ந்து நன்கு பூக்கும்.

### பூ மாதுளை

12 அடி வளர்கிற புதர் போன்ற பெரிய செடி. பழ மாதுளை அனைவரும் அறிந்தது. பூ மாதுளை என்பது அதே போன்ற செடி; ஆனால் இது காய்ப்பதில்லை. அழகான இதன் பூவுக்காகத் தோட்டங்களில் பயிரிடலாம். நறுக்குப் பதியன் போட்டால் எளிதில் வேர் பிடித்துச் செடி உண்டாகும். அதிகக் கவனமில்லாமலே எந்த மண்ணிலும் வளரும். உறுதியான செடி. பல ஆண்டு வாழும். 8 அடிக்கொன்று இருக்கலாம். இரண்டு வருஷத்துக்கு ஒருமுறை கத்தரித்து விடுவது அவசியம். வேலிக் கால்களிலும், நடைபாதையோர வேலிகளிலும் வைக்கலாம். பூ கொத்துக் கொத்தாகப் பூத்துச் சிலநாளில் உதிர்ந்து விடுகிறது.

இரண்டு வகைகள் உள்ளன. ஒன்று மாதுளை போன்ற பிரகாசமான ரத்தச் சிவப்பு நிறம். பெரிய பூ; பல நாள் வாடாமலிருந்து பின் காய்ந்து உதிரும். உறுதியாக வளர்ந்து ஏராளமாய்ப் பூக்கும். மற்றது வெண்ணிறப் பூவுடையது.

### மயில் கொன்றை

கொன்றை வகையைச் சேர்ந்த சிறு மரம், அல்லது குத்துச் செடி. 10 அடி உயரம். கத்தரித்து விடுவதனால் பெரிய குத்துச் செடியாக மட்டுமே இருக்கும்படி செய்ய முடியும். பூவில் பல வகைகள் உள்ளன. சில மஞ்சளும் சிவப்பும் கலந்தவை, சில முழுதும் சிவப்பாயும், சில நடுவில் சிவப்பாயும், ஓரம் மஞ்சளாயும் இருக்கும். வருஷ முழுவதும் ஏராளமாய்ப் பூக்கும். பூத்த மலர்கள் இதழ் உதிர்த்த

பின் அவரை போன்ற பட்டையான பச்சைக் காய் காய்க்கும். முற்றிய காய்கள் கறுப்பு. விதை போட்டுப் பயிரிடலாம். செடியில் பூ பல நாள் வாடாமலிருக்கும்.

பயிரிடுவதில் அதிகக் கஷ்டமில்லை. எந்த மண்ணிலும் பயிராகும். முளைத்தபின் பெயர்த்து நடுவதும் உண்டு. செடிகள் பல வருஷ காலம் உயிரோடிருக்கும். வருஷ முழுமையும் பூக்கும். விரைவில் வளர்ந்து விடும். விரும்பிய விதமாய்க் கத்தரித்தும் வளர்க்க முடியும்.

### மருதோன்றி

சாதாரணமாக மருதாணி என வழங்குவது. மெல்லிய சிறு மரம். முள்ளுடையது. வேலியில் பயிரிடுவதற் கேற்றது. வளர வளரக் கத்தரித்துக்கொண்டு வந்தால் அடர்த்தியாய்த் தழைத்திருக்கும். இல்லாவிடில் கோணல் மாணலாய்ப் பார்வைக்கு விகாரமாய்ப் போய்விடும். நுண்மையான பசுமையும் மஞ்சளும் கலந்த நிறமுடைய பூ. அடுக்காய் நுனிக்கிளை எல்லாவற்றிலும் வருஷ முழுவதும் பூக்கும். அருமையான மணம் எப்போதும் வீசும். வாசனைக்காக இப்பூக்கள் அணிவதற்கும் பூசைக்கும் உபயோகமாகின்றன. பூ உதிர்ந்தவுடன் சிறு காய் உண்டாகிறது. காய் முற்றி நுண்ணிய விதைகளைச் சிதறுகிறது. இவை தாமே முளைத்து வளரும். கிளை வெட்டிப் பதியன் போட்டும் பயிரிடலாம். பராமரிப்பு அதிகம் வேண்டியதில்லை. தண்ணீரும் அதிகம் தேவையில்லை. இதன் தழையை அரைத்துப் பெண்கள் நகங்களிலும், உள்ளங்கை கால்களிலும் பூசிக் கொள்வர். பூசப்பட்ட பாகம் சிவப்பாக மாறி, சில வாரங்கள் சிவப்பு நிறம் இருந்து வரும்.

சாதாரண வகை மேற் கூறியபடி மங்கலான மஞ்சள் நிறமுடையது. மற்றொரு வகை சிவப்பு நிறமுடையது. பயிரிடும் முறை முந்தியது போலவே. மணம் சற்றுக் குறைவு.

### மனோரஞ்சிதம்

இதைவிடப் பொருத்தமான பெயர் இதற்கு அமைய முடியாது. மனத்துக்கு இதன் பூ அவ்வளவு ரஞ்சித மானது. பூவின் மணம் ஆச்சரியமானது. மணமானது மற்றப் பூக்களின் வாசனையைப் போலிராமல், முற்றிலும் பழங்களின் வாசனையையே ஒத்திருக்கிறது. எந்தப் பழத்தை நினைத்துக்கொண்டு இதை மோந்து பார்த்தாலும் அதன் வாசனை இப்பூவில் காணலாமென்று சொல்வதுண்டு; இது அவ்வளவும் உண்மை. வாழை, மா, பலா, அன்னசி, கொய்யா முதலிய மணமிக்க பழங்கள் எல்லாவற்றின் மணமும் ஒருசேரத் திரட்டி வைத்ததுபோன்ற வாச னையே இதன் வாசனை. ஆகவே, எந்தப் பழத்தின் மணத் தையும் இந்தப் பூவில் காண முடிவது ஆச்சரியமில்லை யல்லவா? இது மாலை 6 மணிக்கு மலரும். இரவு முழுவதும் மணம் வீசிக்கொண்டிருக்கும். மறுநாள் மாலையில் உதிரத் தொடங்கும்.

மிக்க அடர்த்தியாய் 15 அடி உயரம் வரையில் பெரும் புதராக வளரவல்லது. அடியிலிருந்து கிளைக்குக் கிளை புதிய போத்துக்கள் 20 அடி நீளங்கூட வளர்ந்து, வெகு தூரம் வரை கவிந்து தொங்கும். செடி என்றும் பசுமையாக இருக்கும். பளபளப்பான மிக்க பிரகாசமுடைய இலைகள். அடிக்கிளைகளில் நீண்ட கூர்மையான முட்கள். எந்த நிலத் திலும் பயிராகும். பராமரிப்பின்றித் தானே விருத்தியாகி வருஷ முழுதும் பூக்கும். சுவர்போல் அடர்த்தியாய் வளர்ப்பதற்கும், குடைபோன்ற சித்திர உருவங்கள் அமைப்பதற்கும் ஏற்றது. வெகு விரைவில் வளர்ந்துவிடும். தரையில் 20 அடி தூரம் இடம் அடைக்கும்.

இலைகளோடு கூடவே பூக்களும் உண்டாகும். அரும்பு கள் பச்சை நிறம். மலரும்போது மஞ்சள் நிறம். பூவும் அரும்பும் காம்பிலிருந்து காய் தொங்குவதுபோலத் தொங் கும். பூ மூன்று பெரிய இதழ்களும் உள்ளே மூன்று சிறிய

இதழ்களும் கொண்டது. இதழ்கள் தனித் தனியாக விலகி நிற்கும். பூத்து முடிந்ததும், இதழ்கள் முழு மஞ்சள் நிறத்தையடைந்து இரண்டு நாட்களில் உதிரும். இதழ்கள் தடிப்பானவை.

ஒரு பூ உதிர்ந்த இடத்தில் கொத்தாய்ப் பத்துப் பன்னிரண்டு காய்கள் உண்டாகும். கொட்டைப் பாக்களவு பசுமையான காய்கள் முற்றிப் பழுத்து மஞ்சள் நிறமாக மாறும். ஒவ்வொன்றிலும் ஒரு கொட்டை இருக்கும். இதை யெடுத்து உலர்த்தி, பிறகு விதைத்துச் செடி உண்டாக்கலாம். விதை முளைக்கப் பல நாள் ஆகும். இதைவிடக் கிளையை வளைத்துப் பதியன் போட்டும் சுலபத்தில் செடி தயாரிக்கலாம். முதல் வருஷமே பூக்க ஆரம்பிக்கும். வருஷந்தோறும் வேண்டியபடி கத்தரித்து விடலாம். பல வருஷங்கள் பூத்துக்கொண்டிருக்கும்.

ஹரசம்பகம், மனோரங்கினி என்றும் இதைச் சொல்வதுண்டு. இதன் மண மிகுதியைச் சிறப்பிக்கவேண்டி, இச்செடி உள்ள இடத்தில் நல்ல பாம்பு வருமென்றும் சொல்வார்கள்.

### வனஜாம்பரம்

மிக்க உபயோகமான சிறு செடி. இலையுதிர்க்காது. வெண்மையான சிறு இலைகள். வருஷ முழுவதும் விடாமல் பூக்கும். 4 அடி உயரம். முக்காலடி உயரத்திலிருக்கும்படிக் கூட இதைக் கத்தரித்துவிடலாம். சிறு நடைபாதை ஓரத்திலும், வரப்பு ஓரங்களிலும், வேலிபோலப் பயிரிட்டுக் கத்தரித்து விடுவதற்குத் தகுதியானது. கோணல் மாணலாய்ப் போகாமல் கத்தரித்து விட்டபடி ஒழுங்காயிருக்கும். மங்கலான நீல நிறமுள்ள அழகிய சிறு பூக்கள் கொத்துக் கொத்தாய்ப் பூக்கும். எந்த மண்ணிலும் நன்கு பயிராகும். அதிகத் தண்ணீரோ எருவோ தேவையில்லை. அதிகக் கவனம் செலுத்தவும் வேண்டியதில்லை. பதியன் போட்டும்

பயிரிடலாம். ஓரங்களில் வளர்ப்பதற்கு, சாணுக்கொன்ருய் நட்டு, வேண்டிய உயரத்தில் வெட்டி விடவும். அடியில் வெடிக்கும் கன்றுகளை வேரோடு பெயர்த்து நட்டும் பயிரிடலாம்.

### வகைகள்

**நீலம்:** இதுவே சாமானியமாய்க் காணப்படுவது. மேலே குறிப்பிட்டதும் இந்த வகையே. பூ ஆகாய வர்ணம்: மங்கலான நீல நிறம். மிக்க பிரகாசமானது.

**வெள்ளை:** வெள்ளைப் பூவுடைய ஒரு தனி வகை இதில் உண்டு. மற்றதைப்போல அவ்வளவு செழுமையாய் வளராவிட்டாலும் பூக்கள் ஏராளம். மிக அழகான ஒளிமிக்க தூய வெள்ளை நிறம். கவனமாய்ப் பயிரிடலாம்.

**சித்திரமூலம்:** இதன் பூக்கள் மட்டும் சிறிது சிவப்பு நிறம். நீல வனஜாம்பரத்தைச் சித்திரமூல மென்றும், இதைச் சிவப்புச் சித்திரமூலமென்றும் சொல்வதுண்டு. இது இரண்டடி உயரமுள்ள சிறு செடி. கிளைகள் படரும் இயல்புள்ளவை. மழைக் காலத்தில் பூக்கும். ரோஜா நிறங் கலந்த சிவப்பு நிறப்பூ. கிளைகளின் நுனியில் கொத்தாக உண்டாகும். இதன் இலை வனஜாம்பரத்தைவிடப் பெரியது. இதனடியில் வெடிக்கும் கன்றுகளை வேரோடு பெயர்த்து நட்டுப் பயிரிடலாம். பதியன் மழைக்காலத்தில் போட்டால்தான் வேர் பிடிக்கும்.

இவ்வகையில் அதிகப் பிரகாசமான இன்னும் பெரிய சிவப்புப் பூக்களையுடைய மற்ருெரு வகையும் உண்டு.

### செங் கொடி வேலி

வனஜாம்பரம்—சித்திரமூலம் வகையில் வெள்ளை நிறப் பூவுள்ள மற்ருெரு செடியுண்டு. இதன் வேர்கள் சதைப் பற்றுடையன; விஷமுடையன. செங் கொடிவேலி என்று இது வழக்கில் சொல்லப்படும். செங் கொடுவேரி என்று **பத்துப் பாட்டில்** இதைக் குறிப்பிடுகிறது. கொடி வேலி

என்பது வெட்டுக் காயத்திற்கு உபயோகமாகும் சாமானியமான ஒரு மூலிகை.

### வெட்சி

விருட்சி என்று சாதாரணமாய்ச் சொல்வார்கள். அதிக உயரமில்லாமல் அடர்த்தியாய்த் தழைத்து என்றும் பூத்துக்கொண்டிருக்கும் சிறப்பான ஒரு தனி வகைப் பூஞ்செடி. இதில் முக்கியமான அனேக ரகங்கள் இருக்கின்றன. நீலம், ஊதா தவிர பிறநிறங்களிலெல்லாம் உண்டாகியிருக்கின்றன. பொதுவாக வெட்சி பூசைக்கேற்ற பூ; கொத்தாய்ப் பூத்த பூ 10 நாளுக்குமேல் உதிராமல் இருக்கும். பின்னல் பூ உதிரும். அபூர்வமாய்க் காய் காணப்படுவதுண்டு. விதையும் முளைக்கும்.

**நந்தவன வெட்சி:** புராதனமான நந்தவனங்களில் காணப்படும் சிறு மரம். மற்ற வகைகளைவிடப் பெரியது. சிறிய மரம் என்று சொல்லத்தக்கது. கத்தரித்து வந்தால், சிறு செடியாகவே வளர்த்துவிடலாம். நாலைந்தடி உயரம் வரை மரமாகவே வளர்ந்துவரும். மெதுவாக வளரும். இரண்டங்குல நீளமுள்ள பூவின் உச்சியில் நான்கு இதழ்கள் இருக்கும். 50 பூக்கள் ஒன்ருய்ச் சேர்ந்து திரண்டிருக்கும். அழுத்தமான கருஞ் சிவப்பு நிறம். சில நாள் வரை வாடாமலிருக்கும். பூசைக்கும் உபயோகப்படுவது. நந்தவனங்களெங்கும் காணப்படும். இலைகள் கரும் பச்சை. பதியன் போட்டு உண்டாக்கலாம். 'வெட்சி புனையும் வேளே போற்றி' என்பது முருகன் துதி. இதிலும் ரகங்கள் பல.

**ருக்குமணி:** மேலே சொன்னது போல சிறிது காவி கலந்த சிவப்பு நிறமுள்ளது. சிறிய செடி. அதிக உயரம் 8 அடிதான். கொத்துக் கொத்தாய்ச் செடியில் இலையிருப்பதே தெரியாமல் அளவின்றிப் பூக்கும். கொத்து ஒன்றில் 100 முதல் 200 வரை பூக்களிருக்கும். பூங்கொத்துக்கள் பல

நாள் வாடாமலே இருக்கும். சிறு தோட்டங்களுக்கும், பெரிய தோட்டங்களுக்கும் இதைப்போல் அழகான பூஞ் செடி வேறு இல்லை. கிளை நறுக்கியும் வளைத்தும் பதியன் போட்டு எளிதில் செடி உண்டாக்கலாம். செடி விரைந்து வளரும். பெரிய புல் வெளியின் நடுவில் ஒரு செடியை மட்டும் பயிராக்கிப் பூக்கச் செய்தால் புல்வெளியின் அழகு பன்மடங்கு அதிகமாகும். தரையில் மட்டுமேயன்றிச் சிறிய தொட்டிகளிலும், பெரிய தொட்டிகளிலும் இதை எளிதில் பயிரிடலாம். தொட்டிகளில் இரண்டு பங்கு குதிரை எருவும், ஒரு பங்கு மணலும், ஒரு பங்கு செம்மண்ணும் கலந்து போட்டு, அதில் செடியைப் பயிரிட்டு, நிதானமாய்த் தண்ணீர் விட்டு வந்தால் எப்போதும் பூக்கும். மண்ணைக் கிளறி விட்டு வருஷம் மூன்று முறை எருவிட்டால் நல்லது. இரண்டடி குறுக்களவுடைய பெரிய தொட்டிகளில் நிரந்தரமாய்ப் பல வருஷங்கள் பயிராகும். தரையில் பயிராகும் செடிகளுக்கும், வருஷ மிருமுறையாவது கொத்திக் குதிரை எரு வைக்கவேண்டும். சிறு செடியாகப் பயிரிட ஆரம்பித்தது முதல் வருஷமொரு தடவை, கோடையில் பூத்து முடிந்ததும், கோணல் மாணலாயுள்ள கிளைகளைக் கத்தரித்துவிடவும். இதனால் செடிகள் ஒழுங்காக வளரும்.

இதன் இலைகள் சற்று வெளுத்தவை. பூக்கள் செடியின் மேற்புறம் முழுதும் மூடினாற்போல் நெருக்கமாய்ப் பூத்திருக்கும். பூங்கொத்து ஒன்று ஓரடி குறுக்களவுள்ளதாயிருக்கும். நன்கு பூத்த நிலையில் ஆறடி வளர்ந்த செடியில் 80 பூங்கொத்துக்களிருக்கும். அப்படியானால் பூத்திருக்கும் இச் செடியின் அழகு எவ்வளவு புகழ்ந்தாலும் சொல்லில் அடங்காது.

**மஞ்சள் வெட்சி :** 6 அடி உயரம் வளரக்கூடிய சிறு செடி. பூ காவி கலந்த மஞ்சள் நிறம். எப்பொழுதும் ஏராளமாய்ப் பூக்கும். கொத்தில் 60 பூ இருக்கும். ஓரடி வளர்ந்தவுடன் கூடப் பூக்கும். பூக்கள் ஒரு மாதம்வரையில்

கூட உதிராமல் இருக்கும். இந்த ரகத்தில் காவியே கலக்காமல் தனிமஞ்சள் ரகமொன்றும் உண்டு.

**ரோஜாநிற வெட்சி** :—எல்லாவற்றிலும் சிறியதான செடி. பூ ரோஜா நிறம். அபூர்வமானது. செடி உயரம் 5 அடி. மற்ற ரகங்களைவிட மெலிந்த செடி. நன்கு பூக்கும். மெதுவாக வளரும்.

**வெள்ளை வெட்சி** : மிகவும் பெரிய செடியாய் வளர வல்லது. 10 அடி வரை மரம்போலவே வளரும். ஒரு பருவத்தில் மிகவும் அதிகமாய்ப் பூக்கும். ஏராளமான தூவெண்ணிறப் பூக்கள் மற்றவை போலவே நுனிக்கிளையில் கொத்தாக இருக்கும். கொத்தில் 200 வரை பூக்களிருக்கும். இலை கரு நிறம். பிரகாசம் பொருந்திய பூக்கள். மிக்க நறுமணமுள்ளவை; மற்ற வெட்சிகளுக்கு மணமில்லை. பதியன் போட்டும் பயிரிடலாம். வேர் வெட்டுப்படும் இடந்தோறும் கிளைக்கும். அக்கிளைகளைப் பூபெயர்த்தெடுத்துப் பயிரிடுவது எளிது. விரைந்து வளரும். கத்தரித்து விடுவதற்கேற்றது.

வெட்சி, நிறத்தால் எரிபோலிருத்தலின், இதற்கு எரிநகை என்றொரு பெயரும் பரிபாடல் கூறும். வெட்சி மலர் முருகனுக்கன்றித் திருமாலுக்கும் விருப்பமானது.

## 11

# கொடி வகைகள்

**ப**ல வகையான இயல்புடைய செடிகளை இங்கு கொடி என்ற பொதுப் பெயரால் குறிப்பிடுகிறோம். சில பற்றுக் கம்பிகளாய் எதையேனும் பற்றிப் படரும். சில நுனிக் கொழுந்தாலேயே பற்றிப்படரும். சில, நீண்டு வளைந்துள்ள நுனிக்கிளைகளைப் பிடித்துப் பொருத்தவேண்டியிருப்பதால், படர்கின்றன என்று பாவித்துக் கொடி என்று குறிப்பிடுகிறோம். இப்படிப்பட்ட செடி கொடிகள் மிகப்பல உள்ளன. சில மட்டும் இப்பகுதியில் சொல்லப்பெறும். மல்லிகையினம் முழுமையுமே கொடிகள். தட்டியில் படர, சுவரை மறைக்க, பந்தலாக அமைக்க, நடைபாதையில் வளைவில் படர, தூண் அல்லது பெரு மரத்தின்மீது படர—இவை தேவைப்படும். இவற்றில் நிரந்தரமான கொடிகளும் உள்ளன, பருவகாலப் பூக்களும் உள்ளன. பெரிய மண் தொட்டியில் வளர்த்துக் கூண்டு கட்டிப் படரவிடத் தக்கனவாயும் சில உள்ளன.

இக் கொடி வகைகளைப் பெருங் கொடிகள், சிறு கொடிகள் என இரு பிரிவாகப் பிரிக்கலாம். இவற்றுள் மல்லிகை இனத்தைச் சேர்ந்த கொடிகள் யாவும் தனியே அந்தப் பகுதியில் கூறப் பெற்றுள்ளன.

**பெருங் கோடிகள் :** ஆண்டி கோனு, கொடிப் பாதிரி, சமுத்திர சோகம், ரங்கூன் மல்லிகை, நித்திய மல்லிகை, மஞ்சள் மல்லிகை.

**சிறு கோடிகள் :** காக்கணங் கொடி, சம்பங்கி, சிறு நெல்லிக் கொடி, பிச்சி, பூவள்ளி, மயிர் மாணிக்கம், மாதவி, மாலதி, வாத்துக் கொடி போன்றன.

பெருங்கொடி வகைகளைத் தரையில் நடவேண்டும். நடும் குழி 3 அடி நீள அகல ஆழமுள்ளதாய் நன்கு வளமான மண்ணும் உரமும் இட்டிருக்கவேண்டும். சிறு

கொடிகளுக்கு இவ்வளவு பெரிய குழி வேண்டியதில்லை. காக்கணங்கொடி, பூவள்ளி, மயிர் மாணிக்கம் போன்றவை தொட்டியில் பயிரிட்டுப் படரச் செய்யலாம்.

எரு, நீர் இரண்டும் முக்கியம். அடுத்தபடி கொடி வகைக்கு ஏற்றபடிக் கத்தரித்துப் பக்குவமாகப் படரச் செய்வது. பந்தல் அல்லது வளைவு இருந்தால் கொடிகளை மேலே கொண்டுபோய்ப் பந்தல் முழுமையும் அடைக்கும்படி கட்டிக்கொண்டே போகவேண்டும். பந்தலை அடைத்த பிறகே பூக்கவிடலாம். பந்தலைக் கொடி எட்டியவுடனே தலையைக் கிள்ளிவிட்டால் அந்த இடத்தில் நன்கு கிளைக்கும். ஒவ்வொரு கிளையாகப் பிரித்துக் கட்டிக்கொண்டு போகவேண்டும். வளர வளரக் கிளையின் நுனியையும் அதேபோல் கிள்ளிவிட்டுப் பின்னும் கிளைக்கச் செய்ய வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்துகொண்டு வந்தால் தான் பந்தல் முழுமையும் கொடி மயமாகும்.

பந்தலுக்கு மூங்கில், கம்பி, சிமிட்டித்தூண், மரத் தூண், மூங்கில் தட்டி, இரும்புக் கம்பி முதலியவை வசதி போல் போட்டுக்கொள்ளலாம். பெருங் கொடிகளுக்கு மிகவும் உறுதியான பந்தல் கால்களும், உறுதியான பந்தலும் வேண்டும். சிமிட்டித் தூண்கள் நிறுத்துவதுதான் சிறந்த முறை. இவை நெடுநாள் தாங்கி நிற்கவல்லவை.

ஆண்டிகோனு போன்ற சில கொடிகளை இரண்டு வருஷத்துக்கு ஒருமுறை அடியைக் கத்தரித்துவிட்டு மறு படியும் முழுமையும் புதிதாய்த் தளிர்க்கும்படி செய்யலாம். பூவள்ளி, மயிர் மாணிக்கம் போன்றவற்றைப் பருவகாலம் முடிந்தவுடன் முழுமையும் பிடுங்கி எறிந்துவிட்டுப் புது விதை போட்டு அடுத்த பருவத்தில் உண்டாக்கலாம்.

## ஆண்டிகோனு

மெல்லிய கொடி. விரைவில் வளரும். அதிகம் தழைத்துப் பந்தல் முழுமையும் அடைத்துவிடும். அடிக்கொடி

மரம் போன்ற உறுதிபெறும். கோணல் மாணலான் வளர்ச்சி. கொத்துக் கொத்தான பூக்கள். ஒவ்வொரு தனிப்பூவும் சிறியது, உருண்டையானது, சுண்டைக்கா யளவு. பெருங்கொத்து பல நாள்வரை உதிராதிருக்கும். பூத்திருக்கும்போது பார்த்தால் வெள்ளை அல்லது சிவப்புக் கம்பளி போர்த்தியது போலிருக்கும். அவ்வளவு அதிகம். மிக்க நெருக்கமுடைய பூக்கள்.

பூக்கள் பலநாள் வாடாமலும் உதிராமலும் இருக்கும். பூவில் தேன் நிரம்ப உண்டு. எனவே தேனீ வளர்ப்போர் வேலியில் ஆண்டிகோனு படர விட்டுவைப்பது மிக்க பயனுடையது. மற்றப் பூக்கள் பூக்காத பருவத்திலும் இது நிரம்பப் பூக்குமாதலால் தேனீக்குப் பெரிதும் ஏற்றதா யிருக்கும்.

கார்த்திகைக்குப் பின் இலைகள் உதிர்ந்துபோகும். அப்போது தண்ணீர் விடுவதை நிறுத்திவிட்டுச் சிறிது நாள் பொறுத்துக் கொடியை அடித்தூறுவரை வெட்டி விட்டுப் பிறகு தண்ணீர் பாய்ச்சவும். மாசி பங்குனியில் தளிர்த்துப் பிறகு பூக்கும். வருஷ முழுவதும் விடாமல் அதிகமாய்ப் பூக்கும். ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் தழை அடர்ந் திருக்கும். வளைவுகளில் படரச் செய்வதற்கும் மறைப்புச் சுவர்போல அமைப்பதற்கும் ஏற்றது. ஒழுங்கில் வாராத பகுதிகளை மட்டும் அவ்வப்போது கத்தரித்து விடவும்.

தண்ணீர் தேங்காத வளமான நிலம் வேண்டும். வேரில் நீர் நிறைந்த கிழங்குகள் கொத்துக் கொத்தாய் உண்டா கும். இவை சிறியன. உருண்டு, நீண்டு, இருபுறமும் குறுகி, சர்க்கரைவள்ளி போல் இருக்கும். உருண்டை யான, கூர்மையான சிறு விதை. விதைபோட்டும், வேரில் முளைக்கும் தளிர்களைப் பிரித்தெடுத்தும், பதியன் போட்டும் கொடி உண்டாக்கலாம். மிக்க உறுதியானது. வேலியில் படரச் செய்யலாம். ஆடுமாடு மேயாது என்பது இதன் சிறப்பியல்பு.

ஒரு முறை நன்ருகப் பயிரிட்ட இடத்தில் நிலத்தில் இதன் வேர் அல்லது கிழங்கு இருந்து எப்போதும் வளர்ந்து பூத்துக்கொண்டே யிருக்கும். பலவகைகள் உள்ளன.

**வெள்ளை:** பசுமை கலந்த வெண்ணிறப் பூக்கள் நிரம்பப் பூக்கும்.

**வெண் சிவப்பு:** ரோஜா நிறம். மங்கலானது. கொத்துக்களில் சில வெளிராகவும் சில பிரகாசமாயும் இருக்கும்.

**சிவப்பு:** மிக்க அழகான ரோஜா நிறம், பிரகாசமான தோற்றம்.

எல்லா வகைகளும் நன்ருய்ப் பூக்கும். இவையே யன்றிப் பலவிதச் சிவப்பு நிறச் சாயல்களுள்ள பல வகைகளுமுள்ளன. அருச்சுனன் கதையில் கூறப்படும் **பவழக் கொடி** இதுவே என்று கூறுவார்கள். இதற்குக் காரணம் சிவப்பு நிறப்பூவின் அழகில் ஏற்பட்ட ஈடுபாடு என்று கருதலாம்.

### காக்கணங் கொடி

சாமானியமாய்க் காக்கட்டான் என்று சொல்லும் கொடி. மெலிந்தது. விதைபோட்டால் பிறகு கவனிப் பின்றியே உண்டாய்விடும். வருஷ முழுவதும் பசுமையா யிருந்து, விடாமல் பூக்கும் சிறு செடிகள்; கிளுவை போன்ற மரங்களில் ஏற்றிப் படரவைத்து நுனிக் கொழுந்துகளை மட்டும் நறுக்கிவிட்டால் கொடியாகத் தழைத்துப் படர்ந்து பூத்துக் கொண்டேயிருக்கும்.

பூக்கள் சங்குபோன்ற ஏந்தலான அமைப்பு உடையன. உதிர்ந்தபின் அவரை போன்ற நீண்ட மெல்லிய காய் உண்டாகிறது. இது முற்றி விதை விழுந்து தோட்டத்தில் எப்போதும் இக் கொடி முளைத்துக் கொண்டேயிருக்கும். நந்தவனங்களில் பயிராகும். மற்றப்படி வயற்கரைகளில் தன்னிச்சையாகப் பயிராகியிருக்கும். பூ பூசைக்குப் பயன்படுவது; சங்கு புஷ்பம் என்றும் இது பெயர் பெறும்; ஓரளவுக்குச் சங்குபோல் சுழிந்து சுருண்டிருப்பதால்.

**வகைகள்:** பல வகைகள் உள்ளன. சுத்தமான வெள்ளை நிறமுடையது ஒரு வகை. மற்றொன்று கருநீல நிறம். இரண்டும் மிக உறுதியான கொடிகள். அதிகம் பூக்கும். இரண்டிலும் ஒற்றையிதழுள்ள வகையும், அடுக்கிதழுள்ள வகையும் உண்டு. மற்றொரு அபூர்வமான வகை, மங்கலான சிவப்பு நிறப்பூ. பண்டைத் தமிழ் இலக்கியங்களில் காக்கொன்றை என்றும், வெள்ளை வகை செருவிளை யென்றும், நீல வகை கருவிளை யென்றும் கூறப்பெறும்.

### கொடிப் பாதிரி

பாதிரி மரத்துக்கு இனமான ஒரு பெரிய கொடிக் குடும்பம். கம்பிவிட்டுப் பற்றிப்படர்வது. நுனிக் கொழுந்தில் தோன்றும். குழாயமைப்புடைய பூ. விரைவில் வளர்ந்து தட்டி முழுமையும் படர்ந்து மறைக்கவல்லது. எளிதில் வளரும். விதை மூலமும் வளைப்புப் பதியன் போட்டும் உண்டாக்கலாம்.

**வகைகள்:** எண்ணற்ற பல வகைகளிருப்பினும் சிறப்பானவை இரண்டு. **தங்கப் பூ** என்று வழங்கப் படுவது, தங்கமயமான தோற்றமுடைய கொத்துக் கொத்தான பூக்கள். இலைக்காம்புதோறும் உதிக்கும். விரல் போன்ற குழாய் வடிவம். மூன்றங்குல நீளம். வேனிற் காலத்தில் பூக்கும். அதிகம் படரக்கூடியது. பிரகாசமான இலைகள். சிறு கொடிகளைப் பெருச்சாளி தோண்டி விடாமல் பார்க்கவேண்டும். வேர் பிடித்தபின் உறுதியாய் வளர்ந்து விடும்.

**மஞ்சள்:** இதுவும் மஞ்சள் நிறமுடையது. வேனில் முடிந்ததும் பூக்கும். மிக்க கவர்ச்சிகரமான பூக்கள் ஏராளம். சற்றே காவியும் கலந்த நிறம். நுனிக் கொழுந்துகளில் விரல்களைப்போல் கொத்துக் கொத்தாய் வளைந்து கவியும். கொடி அதிகம் படரும்.

### சம்பங்கி

மெல்லிய கொடி. நறு மணமிக்க பூ. பிரசித்தி பெற்றது. கிண்ணம்போலமைந்த மிகச் சிறிய பூ. பசுமையான மஞ்சள் நிறம். மிகுந்த வாசனை. வாசனைக்காகவே இதனுள் சிற்றெறும்புகள் வாசஞ் செய்வன போலும். எறும்பில்லாத பூவைப் பார்க்கமுடியாது. கொத்துக் கொத்தாய்ப் பூக்கும். இலையும் பூவும் மங்கலான நிறமாய்ச் சிறு பூங்கொத்துக்கள் இருப்பதே தெரியாமல் இலைக்குள் மறைந்திருக்கும். பூ மாலையில் மலரும். வெகு தூரம் வரை இரவில் நீண்ட நேரம் இதன் இனிய மணம் பரவியிருக்கும். கொடி அடர்ந்து தழைக்கும். பூ பூசைக்கு உபயோகமாகிறது. அடி வேரில் தளிர்க்கும். கிளைகளைப் பிரித்து வேரோடு எடுத்துப் பயிரிடலாம். கொடியை வளைத்துப் பதியன் போடலாம். கொடி வளமான கலப்பு மண்ணில் செழிக்கும். நன்றாகப் படர்வதற்கு விசாலமான இடம் வேண்டும்.

### சமுத்திர சோகம்

எந்த நிலத்திலும் விரைவில் பயிராகும். சாதாரண மரங்களின்மேல் படரவிட்டால் அம்மரங்களையே இறுக்கி ஒழித்துவிடக்கூடிய அவ்வளவு உறுதிவாய்ந்த கொடி. திறந்த இடங்களில் பெரிய மரங்களின்மேல் படர விடலாம். பெரிய இலைகளுடையது. வெளிறிய ஊதா நிறங் கலந்த பூக்கள். இரண்டு வகையுண்டு. ஒன்றின் காய் பழுப்புள்ள மஞ்சள். உருண்டையானது. மற்றொன்று வேறு வகை. இலைகளின் கீழ்ப்புறம் வெண்மையானது. இதய வடிவம். உறுதியாய் வளருங்கொடி. கடல் பாலை என்றும் பெயர்.

### சிறு நெல்லிக்கொடி

மெல்லிய கொடி. அதிகமாய்ப் பூக்கும். ஒழுங்காய் வளரும் இயல்புள்ளது. பந்தல் மேலும் நடைபாதைகளின் மேல் கவிந்த வளைவுகளிலும் படரவிடுவதற்கு ஏற்றது.

மண் அல்லது மரத்தொட்டியில் வளர்த்து, அதில் கூண்டு கட்டி, கூண்டிலும் படரவிடலாம். சிறிய இலைகள். சிறிய குவளை போன்ற பூ. பிரகாசமான நீல நிறம். எல்லாப் பருவங்களிலும் பூக்கும். உஷ்ணப் பிரதேசத்துக்கேற்ற முக்கிய கொடிகளிலொன்று. நிதானமாகவே வளர்ந்து உச்சியை யடையும். அதனால் வளைவுகளில் அமைக்கப்பெறும் தட்டிகள் முதலியவற்றில் முழுதும் அடைத்துப் படரும்படிச் செய்யலாம். வெட்டியும் வளைத்தும் பதியன் போடலாம்.

### பூ வள்ளி

விரைவில் படரும் மெல்லிய கொடி. தட்டியின்மேல் படரவிட்டால் வெகு விரைவில் ஒரு திரைபோல் படர்ந்து தட்டியை நிறைத்துவிடும். கருநீலப் பூக்கள். காலையில் மலர்ந்து மாலையில் கூம்பிவிடும். தனித்தனியான பெரிய அகலமான பூ. சுருங்கும்போது ஊதா நிறமாக மாறும். வருஷ முழுவதும் பூக்கும். ஏராளமாய்ப் பூக்கும். மேலே படர்வதோடன்றித் தரையில் கொடிகளும் கிளைகளும் படர்ந்துகொண்டே போகும். போகுமிடந்தோறும் ஒவ்வொரு இலைக்கணுவிலும் வேர்விட்டுச் செழிப்பாய் வளரும். தழை அதிகம். வருஷ முடிவில் பிடுங்கிவிட்டுப் புதிதாய் வைப்பது நலம். வேர்விட்ட கணுக்கள் நாலைந்தைப் பிடுங்கி ஒன்றாய்ச் சேர்த்து நடவும். எளிதில் பயிராகும்.

இது சர்க்கரைவள்ளிக் கிழங்குக்கு இனமான கொடி. காட்டுக்கொடியாகவே உள்ளது. நாட்டுப்புறங்களில் யாரும் இதைப் பயிரிடுவதில்லை. ‘இப்போமியா’ என்பது இதன் ஆங்கிலப் பெயர். காலையில் மிக்க அழகுடன் பூத்திருப்பது பற்றிக் “ காலைப்புகழ் ” (மார்னிங் குளோரி) என்று சொல்வார்கள். வள்ளிக்கு இனமான பூங்கொடியாதலால் இதற்குப் பூ வள்ளி எனப் பெயரிடப் பெற்றது.

**வகைகள் :** மேலே கூறியதுதான் சாதாரணமான கொடி. கருநீலப் பூ. விதையிலிருந்தும் உண்டாகும். மற்

ஒரு பிரகாசமான செந்நிறப் பூ, தமிழ் நாட்டுக்குப் புதியது. எக்காலமும் பூக்கும். விதையிலிருந்து உண்டாகும். முந்தியதுபோல் அதிகம் தழைக்காது. விரைவில் படர்ந்து பூத்துக் காய்ந்துபோகிறது. ஒரு சிறு கொடி. வருஷமொரு முறை புதிதாய்ப் பயிரிடவேண்டும். பூவின் இதழ்கள் அடுக்கு. உடனே காய்த்து விதை சிதறும். கருநிற விதை.

### மயிர் மாணிக்கம்

கருநிறமான இறகுபோன்ற பலபின்ன இலைகளுடைய ஒரு சாமானியக் கொடி. மெலிந்து ஆனால் உறுதியாய் வளரும். கறுத்த விதையிலிருந்து வளர்வது. எளிதில் வளர்ந்து மூன்று மாதத்தில் பூக்கும். இரத்தச் சிவப்பு நிறமுடைய சிறிய பூ. தினமும் காலையில் பூத்து மாலையில் வாடிவிடும். பின் காய் உண்டாகி விதையைத் தூவும். சிறு பந்தல் அல்லது வளைவுகளில் விரைந்து படரும். பருவம் என்றில்லாதபடி ஆண்டு முழுமையும் மாறி மாறிப் பயிராகி வரக்கூடியது. கரிய சின்ன இலைகளுக்கிடையில் இரத்த நிறப்பூ தோன்றுவது மிக்க கவர்ச்சியாயிருக்கும். ஒன்பது பத்து மாதத்தில் கொடி காய்ந்து விடும். ஒரு கொடிய பச்சைப்புழு இதை அரித்து விரைவில் கொடியையே போக்கிவிடும். விட்டில் பூச்சியொன்று இரவில் வந்து முட்டையிடும். அடியில் நிலத்தில் ஏராளப் புழு - பச்சை - சாம்பல் கலந்த நிறங்கொண்டது - அடையாக வரும். விரைவில் படர்ந்து முழுமையும் அழிக்கும். டீ. டீ. டி. மருந்து நீர் தெளித்தால் ஒழியும்.

### மாதவி

பெரிய இலைகளையுடைய அழகான கொடி. ஆடிமுதல் தை வரையில் பூக்கும். சிறு காம்புகள். ஐந்து இதழுள்ள பூ. நான்கு இதழ்கள் வெண்மையாயும் ஒன்று மட்டும் தங்க நிறமாயுமிருக்கும். அருமையான தேன் மணமுள்ளவை. பெரிய பூக்கள். அதிகமாய்ப் பூக்கும். செடி

முழுவதுமே அழகாயிருக்கும். பூ உதிர்ந்ததும் மூன்று விதையுடைய காய் உண்டாகும். விதை எளிதில் முளைத்து வளரும். பதியன் போட்டும் உண்டாக்கலாம். பராமரிப் பில்லாமலே கொடி நன்ருகப் பயிராகும். பூத்திருந்தாலும் இல்லாவிட்டாலும் பார்க்க அழகானது. பற்றிக்கொண்டு படர மரமொன்றுங் கிடைக்காவிட்டால் அடர்த்தியான புதராக வளர்ந்துவிடும்.

வடமொழி நூல்களில் மாதவிக்கொடியும் அதன் பூவும் பலவகையாகப் பாராட்டப் பெற்றிருக்கின்றன. எள் பூவையொத்த மலர். வசந்த காலத்தில் மலரும் மல்லி கையை இதையொட்டி மாதவி மலர் எனச் சொல்வது முண்டு. தேனீக்குப் பயன்படும் பூ.

### மாலதி

வடமொழி நூல்களில் பெரிதும் பாராட்டப்பெற் றுள்ள ஒரு கொடி. வெண்மையான மணமிகுந்த பூ. இலை யுதிர்க்காமல் என்றும் பசுமையாயிருக்கும். உறுதியானது. பாலுள்ளது. கொடி வளைத்துப் பதியன்போட்டு உண் டாக்கலாம். அதிகத் தண்ணீர் வேண்டியதில்லை. வளமான நிலம் வேண்டும். உயரமான கால்களை நட்டுக் குறுக்கே சில கழிகளைக் கட்டி இதைப் படரவிடலாம். உறுதியான கொடி. விரைவில் வளரும். சிவந்த கொடி. நன்ருய்ப் பின்னிக்கொண்டு அடர்த்தியாய் தழைத்திருக்கும். பசுமை யான இலைகளிடையில் ஓடும் சிவப்புக்கொடிகள். அலங் காரமான தோற்றம். பூக்களும் ஏராளம். சுகந்த வாசனை யுள்ள சிறிய பூ; வெள்ளை. பெரிய புல்தரைகளின் நடுவில் வளர்த்துக் கத்தரித்துவிட்டால் அடர்த்தியான சிறு செடி யாகவுமிருக்கும்.

வகைகள் இரண்டு. முதலாவது, கிராம்பு வாசனை கொண்ட பூவுடையது. அதிகமாய்ப் படரும். பெரிய மரம் ஏதாயினும் கிடைத்தால் அதைப் பற்றி முழுதும் படரும்.

நட்சத்திரம் போலமைந்த இதழுள்ள சிறு பூக்கள். ஏராள மாய்ப் பூக்கும். வளைந்த இதழ்கள். பூக்கும் பருவம் ஆவணி ஐப்பசி.

இரண்டாவது, சிவந்த நரம்புள்ள பெரிய இலைகளை உடையது. அழகான கொடி. உயரமாக மறைப்புக்குச் செடி வளர்க்கவேண்டுமாயின் இது தகுந்தது.

### ரங்கூன் மல்லிகை

விரைவில் வளரும் உறுதியான பெரிய கொடி. கொடி யில் அடியெல்லாம் மரமாகவே ஆகிவிடும். பெரிய உறுதி யான கால்களையுடைய பந்தல் வேண்டும். வருஷ முழுவ தும் பூக்கும். இடைவிடாமல் கொடியில் உள்ள பல கிளை களும் அடுத்தடுத்துப் பூத்துக்கொண்டேயிருக்கும். பெரிய கனமான பூங்கொத்துக்கள். இவற்றின் கனந்தாங்காமலே கொடி வளைந்து தொங்கும். அழகான பூக்கள். நீண்ட காம்பு. நுனியில் நான்கு இதழ்கள் விரிந்திருக்கும். வெண் சிவப்பு, வெள்ளை என இரு நிறங்கள். பூத்த மறுநாள் பூக்கள் எல்லாம் ரத்தச் சிவப்பு நிறம் அடைகின்றன. பூ கொஞ்ச நாள் வரை விழாமல் கொடியிலேயே இருக்கும். மிக்க அடர்த்தியாய் விரைவில் வளர்ந்து விடுமாகையால் வருஷமொருமுறை கத்தரித்துவிடுவது அவசியம். புதர் போலவும் வளர்க்கலாம். எந்த நிலத்திலும் பயிராகும். வளைத்தும் வெட்டியும் பதியன் போடலாம். பூக்கள் ஓரளவுக்கு நறுமணமுடையன. அதனுல்தான் இவை மல்லிகை யென்ற பெயருடன் சம்பந்தப்படுத்தப்பட்டிருக் கின்றனபோலும்.

### வாத்துக்கொடி

அதிகமாய்ப் படரும். வலிவுள்ள கொடி. சாமானிய உத்தாமணிக்கு இனமானது. வருஷமொருமுறை இலை உதிர்க்கும். அதிக உயரம் படர்ந்து வளருகிறவரையில் பூக்கிறதில்லை. ஒரு துர்நாற்றம் உடையது. அதனுல் வீட்டை

விட்டுச் சிறிது தூரத்திலேயேதான் பயிரிடலாம். விதையி லிருந்து பயிராகும். பதியன் வெட்டி அல்லது வளைத்தும் போடலாம்.

இதன் பூக்கள், மிக்க விநோதமான அமைப்புடை யவை. எல்லா வகைகளிலும் பூ வாத்துப்போலிருக்கும். இதில் காணும் துர்நாற்றத்துக்காக ஈக்களும், வேறு சில பூச்சிகளும் பூவுக்கு வருகின்றன. பூ நடுவில் ஒரு பள்ளம் போலிருக்கிறது. இதனுள் நுழைந்த பூச்சி வெளிவர முடி யாதபடி இப்பள்ளத்தின் வாய் அமைந்திருக்கிறது. வாய்ப் புறத்தில் மயிர்போன்ற சில கம்பிகள் நீட்டிக்கொண்டிருக் கும். இதனால் பூச்சி சிறிதுநேரம் வெளிவர முடியாமல் தடைப்படுகிறது. மகரந்தத் தூள் இப்பூச்சிகள் மூலமாகக் கர்ப்பாசயத்தில் போய்ச் சேருவதற்காகவே இப்பூ இவ் விநோத அமைப்புடன் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறது. கொடி விரைவில் வளரும்.

**வகைகள்** :—பல வகைகள் உள்ளன.

**ஊதா** :—சாதாரண வகை. மிக்க அழகானது. பூ வாத்துப்போலவே யிருக்கும். ஊதா நிறம். மஞ்சள் அல்லது வெள்ளைப் புள்ளிகள். இந்த ஒரு வகையில்தான் துர்நாற்றமில்லை. அதிகமாய்ப் பூக்கும்.

**பழுப்பு** :—பெரிய இலைகளுடையது. பழுப்பு நிறப்பூ.

**அதிகப் பழுப்பு** :—இது அதிக விநோதமானது. பூவின் கடைசியில் இரண்டடி வரையில் நீண்ட வால் தொங்கும். எல்லாவற்றையும்விடப் பெரிய பூ. துர்நாற்றமும் மிக அதிகம். பூச்சி பிடிக்கும் செடி என்றே இது சொல்லப் படும். பசுமையான வெள்ளை நிறமுடைய பூ. பழுப்புப் புள்ளிகள் போட்டிருக்கும்.

## 12

# பூக்கும் மரங்கள்

சிறு பூஞ்செடிகளைப் பற்றிய இந்தப் புத்தகத்தில் மரங்களைப்பற்றிப் பேசவே இடமில்லை. பேசுவதானல் அழகாய்ப் பூக்கின்ற பெரு மரங்கள் அனேகம் உள்ளன.

அக்கினிக் கொன்றை, பலவகைக் கொன்றை மரங்கள், கலியாணமுருக்கு, கிளிமுருக்கு, கோங்கு, நாகசுரம், நாக லிங்கம், புன்னை, பாதிரி, மகிழ், மாவில்ங்கம், முருக்கிலவு என எண்ணற்றவை ஆயினும் எல்லோருக்கும் பழக்கமான சில பூ மரங்களை மட்டும் இதன் பின்னே காணலாம். இவற்றைக் குறிப்பிடுவதற்குக் காரணம் இவற்றில் பல மண முடைய பூக்கள் என்பதாகும் - கப்பல் அலரி, கனகா, சண் பகம், பவழ மல்லிகை, பன்னீர், மர மல்லிகை என்பன.

நடுத்தரத் தோட்டத்திலுங்கூட தக்க இடத்தில் இரண் டொரு பூ மரங்கள் இருப்பது தோற்றத்துக்கு மாற்று அளிக்கும்; நிழல் தரும். குளிர்ச்சி தரும். கொடிய வேனிலைக்கூட ஓரளவுக்குக் கண்ணுக்கு இன்பமாக்கும். இம்மர வகைகள் யாவும் தங்கள் கரும் பச்சை நிறமான தழையின் பிரகாசத்தால் கண்ணுக்கு விருந்தளிக்கின்றன என்பது மிகையன்று. அதிகக் கவனமின்றி நிரந்தரமாய் இருப்பவையாகையால், எந்தத் தோட்டத்துக்கும் இவற் ருல் அழகும் பயனும் உண்டு என்பது தெளிவு.

இடத்துக்கும், நிலத்துக்கும் ஏற்ற மரங்களை மட்டுமே பயிரிடவேண்டும். வளர்ந்த மரத்தைவெட்ட மனம் வராது. ஆகவே மரம் வைக்குமுன் மிக்க கவனமும் ஆராய்ச்சியும் வேண்டும். நடும் குழி பெரிதாயும் நல்ல மண் அல்லது எரு இடப்பெற்றதாயு மிருக்கவேண்டும். காற்ருல் வளர்ந்த மரங்கள் காயாதபடியும், இலைகள் ஒடிந்து விகாரப் படாத படியும், காக்கவேண்டும். இலையுதிர்க்கும் பழக்கமுடைய

சில மரங்கள் உள்ளன. இவை பெரும்பான்மையும் தை, ஆனியில் மிக நன்ருய்ப் பூக்கும். பூத்து முடிந்த பின்னரே, தளிர்க்கும். வேறு சில மரங்கள் எந்தப் பருவத்திலும் நிதானமாய்ப் பூக்கும். அல்லது ஆடி—ஆவணியில் அதிகமாய்ப் பூக்கும். மரங்களைப் பயிரிடும்போது இந்த இயல்புகளை நன்கு அறிந்து, பின் ஆராய்ந்து பயிரிடுதல் நன்று.

### கப்பல் அலரி

இது அலரி அல்லது பெருங்கள்ளி முதலியவற்றின் இனத்தைச் சேர்ந்த சிறுமரம். சீமையலரி, ஈழத்தலரி, காட்டலரி, துலுக்கரளி என்ற பெயர்கள் உள்ளன. நாலைந்து வகையான பூக்களுடைய வெவ்வேறு ரக மரங்களிருக்கின்றன. இலங்கையில் இவற்றைப் புத்தர் ஆலயங்களைச் சுற்றிப் பயிரிடுகிருர்கள். இது காரணமாக இவற்றுக்குப் **பகோடா** மரம் என்ற பெயரும் வழங்குகிறது. (பகோடா—கோயில்) 20 அடி வளரக்கூடியமரம் என்றும் சொல்லலாம். பெரிய செடி என்று சொன்ஞல் குற்றமில்லை. அடியிலிருந்தே கிளைத்துக் கிளைகள் விரிந்துநிற்கும். அடி மரமும் கிளைகளும் மரம் செறிந்திராமல் சதைப்பற்றுடையதா யிருக்கும். பாலுள்ளது. நீண்ட ஈட்டிபோல் கூர்மையான இலைகள். இலைகளின் நரம்புகள் புடைத்துக்கொண்டிருக்கும். இதில் இலை காண்பதே அபூர்வம். இலை இருந்தாலும் மிகக் குறைவாகவே இருக்கும். கிளை நுனியில் மட்டும் சில இலைகள். வருஷ முழுதும் கொத்துக் கொத்தாய்க் கிளை உச்சியில் பூக்கும். பூக்கள் மிகுந்த மணமுடையன, அழகானவை. சித்திரை, வைகாசி மாதங்களில் ஏராளமாய்ப் பூக்கும் பூத்த பிறகே இலைதோன்றும். சில நாள் வரையில் உதிராமலிருக்கும். ஐந்து இதழ். இதழ் உதிர்ந்து அபூர்வமாய்த்தான் காய்க்கும். கிளை நறுக்கிப் பதியன்போட்டே செடிகள் உற்பத்தியாகின்றன. எல்லா வகைகளும் வருஷமொருமுறை இலை யுதிர்த்தபின்,

சித்திரை வைகாசியில் பூத்து மறுபடியும் தளிர்க்கும். கடற் காற்றைத் தாங்கி நிற்கவல்லது; உப்பங்காற்றை விரும்புவது. கிளைகள் எல்லாமே சதைப்பற்று மட்டு முடையனவாகை யால் அதிகப் பருமனுள்ளவை. இலைகள் எப்போதும் ஒரே கணுவில் இரண்டு மூன்றாகப் பிரியும். தனி மரங்கள் பார்க்க அழகா யிராவிட்டாலுங்கூட, மரத்தினடியில் அதிக உயரம் வளராத பெண்டாஸ் முதலிய செடிகளை வளரவிட்டுப் பூக்கச் செய்தால் நடுவில் உள்ள இந்தப் பெரிய மரமும் சுற்றியுள்ள சிறு செடிகளும் சேர்ந்து அழகான தோற்றத்தைத் தரும்.

**வகைகள் :—வெள்ளை :—**மூன் றங்குல அகலப் பூ; நடுவில் தங்க நிறமுள்ள ஒரு கறை. சில சமயங்களில் 8 அங்குல நீளமும் 2 அங்குல அகலமுமுள்ள காய் காய்க்கும். மணம் அதிகம். இம்மரத்தைப் பூவில்லாமல் பார்க்க முடியாது. அவ்வளவு அதிகமாயும் இடைவிடாமலும் பூக்கும். பயிராக்கத்தக்க சிறந்த ரகம். உயர்ந்து, கருநிறமான இலைகளுக்கிடையில் பல பூக்கள் திரண்ட அழகிய வெண் ணிறப் பூங்கொத்து மிக்க கவர்ச்சி தரும்.

**மங்கலான சிவப்பு :—**இதழ்களின் ஓரமும் அடிப்புறமும் மங்கலான சிவப்பு நிறம். மற்ற இடங்களில் வெள்ளை நிறம். இது சிறு மரம். 15 அடி உயரந்தான் வளரும். உச்சியில் விரிந்து இலை விட்டுப் பூத்திருக்கும். பூக்கள் சற்றுப் பெரியவை.

**சிவப்பு :—**பிரகாசமான சிவப்பு நிறமுள்ள பூ ஏராள மாய்ப் பூக்கும். பல மாதங்கள் தொடர்ந்து பூத்துக் கொண்டேயிருக்கும். பெரிய அழகான இலைகள். மற்ற வகைகளைவிடச் சிறிய பூ. பூவின் மத்தியில் தங்க நிறமுள்ள கறை.

**கருஞ்சிவப்பு :—**இதழின் கீழ்ப்புறம் கறுப்பும், மேற் புறம் கருஞ்சிவப்பு நிறமுமுடைய ஒரு சிறந்த ரக மரம். நடுத்தர உயரம், 15 அடி. நன்கு பூக்க வல்லது.

இவையே யன்றி ஒவ்வொன்றும் சற்றுக் கெட்டியா யும் குறைந்து முள்ள நிறங்களையுடைய வேறு அனேக ரகங்களும் உள்ளன.

### கனகா

60 அடி வரை உயர்ந்து வளரக் கூடிய மெலிந்த மரம். அடர்த்தியாய் அடர்ந்து வளராது. குறுகலாய் நெடுகி வளரும். எளிதில் விரைவாய் வளரும். கிளைகள் ஒரே மட்டத்தில் கிளைத்துச் சுற்றிலும் அழகாய்ப் பரந்து தொங் கும். வருஷம் முழுவதும் பூத்துக் கொண்டிருக்கும். பூக்கள் முற்றிலும் மனோரஞ்சிதத்தைப் போன்றவை. அதனால் **மரமனோரஞ்சிதம்** என்றும் இதைச் சொல்வார்கள். ஆனால் பூ அதைவிட மெல்லியது. நீண்டு மெலிந்திருக்கும். அதைப் போன்ற மணம், சற்றுக் குறைவு, அவ்வளவுதான். பூத்துப் பல நாள் அப்படியே இருக்கும். பிறகு உதிரும். பசுமை நிறைந்த மஞ்சள் நிறமானது. பூத்து ஒன்றிரண்டு நாள் ஆனபிறகே பூவிதழில் மணம் உதிக்கிறது. கன்று விதையிலிருந்து உண்டாகிறது. இந்த மரத்துக்குத் தாய் நாடு ஜாவா என்பார்கள். ஜப்பானில் இதன் பூவிலிருந்து வாசனைத் தைலம் இறக்கி எற்றுமதி செய்கிறார்கள். இம்மரத்திற்கு அங்கே இலாங் – இலாங் என்றும், தைலத் துக்கு கனங்கா அல்லது இலாங் – இலாங் என்றும் பெயர். மரம் மிருதுவானது லேசனாது. சாமான்கள் அடக்கம் செய்வதற்குரிய பெட்டிக்கு வேண்டிய பலகை சட்டம் முதலியன இதன் மரத்திலிருந்தும் தயாரிக்கிறார்கள். மரம் எந்த மண்ணிலும் பயிராகும். பெரிய தோட்டங்களின் வெளிப்புறத்தில் பயிரிட இன்றியமையாத மரம்.

இதில் சிறிய குத்துச் செடிவகை யொன்றும் உண்டு. 5 அடி உயரம் வளரும். மற்றத் தன்மைகள் முந்திய மரம் போலவே. வளைப்புப் பதியன் போட்டுச் செடி உண்டாக் கலாம். வேர் இறங்கச் செய்வது சற்றே சிரமம். இது பெரிதும் பயிரிடத்தகுந்த செடி.

### சண்பகம்

30 அடிக்கு மேல் வளரக் கூடிய நடுத்தர மரம். பூசைக்குப் பயன்படுகிற பூத்தருகின்ற புராதனமான மர வகைகளில் இதுவுமொன்று. பழைய நந்தவனங்களில் இதைக் காணலாம். குற்ருல மலையில் சிறப்பு. இலக்கியங் களில் மிகுதியும் பாராட்டப் பெற்றுள்ளது. மரம் வளர்ச்சி யில் மாமரத்தை யொத்தது. சாமானியமாய் விதையி லிருந்து பயிராகும். இது எட்டு ஆண்டுகளில் பூக்கும். பதியன் போட்ட கன்று இன்னும் சீக்கிரத்தில் வளர்ந்து பூக்கும். ஆனல் இது சிறு மரமாயிருக்கும்.

பூக்கள் சித்திரை, வைகாசியில் அதிகம். மூன்று அங்குல அளவிருக்கும். மணத்துக்குப் பூ பிரசித்தமானது. இரு வகைகள் உள்ளன. பழமையான வகை, சற்றே சிவப்பு நிறங் கொண்டது. மணமும் மிகுந்தது. புதுவகை யொன்றுண்டு. இதன் பூ வெண்ணிறமானது.

பூக்கள் வாசனைத் தைல மெடுக்க உபயோகமாகும். மரம் மர வேலைக்கு ஏற்றது. பண்டைக்காலத்தில் புத்தர் சிலை செய்வதற்குச் சண்பக மரமே உபயோகமாகி வந்த தாம்.

### சரக்கொன்றை

கொன்றை போன்ற பூக்கள் மஞ்சள் நிறத்தில் சரமாகத் தொங்குவது போன்ற தோற்றமளிப்பதால் இப்பெயர் பெற்றது. மெதுவாக வளரக் கூடிய நடுத்தர மரம். சாதாரணமாக நந்தவனங்களிலும், காட்டுப் புறங்களிலும் காணப்படும். பூக்கிற பருவத்தில் – தை ஆனி மாதங்களில் - ஒப்பற்ற அழகுடையது. பூக்களுக்குச் சொற்ப மணமும் உண்டு. மரம் முதலில் பூத்துப் பூக்கள் உதிர்ந்து காயாக ஆன பிறகே தளிர்க்க ஆரம்பிக்கும். முருங்கை போல் நீண்டு உருண்டையான காய். விதை கொஞ்சம் மெதுவாகவே முளைக்கும். இளங்கன்றுகளை

மிக்க கவனத்துடன் பராமரிக்க வேண்டும். விதையும், மரப் பட்டையும் வைத்தியத்திற்கு உபயோகமாகின்றன.

### திருவாத்தி

மந்தாரை இனத்தைச் சேர்ந்த ஒரு சிறு மரம். குத்துச் செடியாக அல்லாமல் மரமாக வளர்வது. வன செண்பகம் என்றும் பெயருடையது. பத்து அடி உயர மிருந்தால் அதிகம். எப்போதும் நிரம்பப் பூக்கும். பூ அழகான மஞ்சள் நிறம். நடுவில் சிவப்புக் கண்ணுடையது. பூவரசம் பூப்போல் வாடியவுடன் சிறிது செந்நிற மடையும். பூசைக்கு உபயோகமாகிறது. "ஆத்தி சூடி அமர்ந்த தேவன்" என்று குறிப்பிடும் ஆத்தி இந்தத் திருவாத்தி. சிவபெருனுக்குப் பிரியமானது. சோழ மன்னருக்குரிய அடையாள மாலையாகிய ஆத்தியும் இதுவே. விதைபோட்டே பயிராக்க வேண்டும். எளிதில் வளர்ந்து, ஒரு வருஷத்தில் பூக்கத் தொடங்கிவிடும். மந்தாரைக்குடும்பத்தில் இதன் இலைகளே சிறியவை. சற்று வெளுத்த நிறமாய்க் காணப்படும். அவரைக்காய் போன்ற காயும் இலையும் மணமுமுடையது. அது பற்றி இதற்குக் கறிவேப்பிலை மந்தாரை என்ற பெயரும் உண்டு. திருவுள்ளக் கொன்றை என்பது வேறொரு பெயர். இலை கஷாயமிட உபயோகம்.

### பவழ மல்லிகை

இதன் பூ வெண்மையான மல்லிகை போன்ற ஐந்து இதழ்கள் உடையதாயும், காம்பு பவழம் போன்ற பிரகாசமுடைய சிவப்பு நிறமாயும் இருப்பதால் இதற்கு இப் பெயர் வந்தது. 20 அடி வளரக் கூடிய சிறு மரம்.

வருஷ முழுவதும் பூத்துக் கொண்டே இருக்கும். மிக்க அருமையான சுகந்த வாசனை. இரவு சரியாக 8 மணிக்குப் பூக்கள் மலரும். இரவு முழுவதும் வாசனை வீசிக் கொண்டிருந்து, காலையில் பூக்கள் உதிரும். உதிர்ந்த பூக்களைப் பொறுக்கிப் பூசைக்கு உபயோகிக்கிறோம்.

சாதாரணமாய் உதிர்ந்த பூக்கள் பூசைக்கு உரியவையல்ல என்றும், மரத்தினின்றும் எடுத்த பூக்கள் மட்டுமே பூசைச் குரியன என்றும் கருதுகிறோம். ஆனல் பவழ மல்லிகை மலர்கள் உதிர்ந்தவையே பூசைக்குரியனவாயின், இவை எவ்வளவு சிறப்பாகக் கருதப்பட்டு வந்திருக்கின்றன என்பது தெளிவு.

மரம் மெதுவாகவே வளரும். எந்த மண்ணும் ஏற்றது. நிழல் கூடாது. பெரிய மரம் கூடச் சிறிது தண்ணீர் வேரில் தேங்கினுலும் பட்டுப் போகும். இலை சொர சொரப் பானது. கவனமாய்த் தண்ணீர் விட்டுப் பாதுகாத்து, வருஷமொருமுறை கத்தரித்து வந்தால் தான், மரம் பார்க்க அழகாயிருக்கும். இல்லாவிடில் கோணல் மாணலாக வளர்ந்து விகாரமாய்ப் போய்விடும். அதிகமாய்ப் பூக்கும் காலம் ஆவணி—ஐப்பசி. இரவில் வெகுதூரம் வரை இதன் மணம் கமழும். வேனிற்காலத்தில் முசுக்கட்டை உபத்திரவம் அதிகம். அடி மரத்தில் பச்சைச் சாணத்தைப் பூசி வைப்பதனல் இதை ஓரளவுக்குத் தடுக்கலாம். கத்தரித்து விட்டு வருவதால், இது பெரிய மாமாகாமல் புதராகவே யிருக்கும். இதன் இயல்பு ஓரளவு புதராக வளர்வது தான்.

விதை மெல்லியதாய்க் காசு போல் தம்பிடி யளவில் இருக்கும். விதை போட்டும் பயிரிடலாம். நறுக்குப் பதியன் வெட்டுப் பதியனும் போடலாம்.

சத்தியபாமைக்காகக் கண்ணன் தேடிச் சென்று அரிதின் முயன்று கொணர்ந்த பாரிஜாதம் இப்பூவே என்பது ஆன்றோர் கருத்து. தமிழ் நூல்கள் இதைப் பவழக்கால் மல்லிகை எனவும் சேடல் எனவும் கூறும்.

### பன்னீர் மரம்

மிக்க சிரமத்தோடு பயிரிடத் தகுந்த தமிழ் நாட்டுப் புராதன மரம். சிறுமரம். மிகுந்த மணமுடைய வெண்ணிறப் பூ. 2 அங்குல நீளமுள்ள குழாயாக வந்து

நுனியில் 4 இதழ்களோடு இருக்கும். நுனிக் கிளையின் இலைக் கணுக்களில் உண்டாகும். அன்றுடம் பூத்து உதிரும். பூசைக்கேற்றது. கோயில் நந்தவனங்களில் மிகுதி. அதிகத் தண்ணீர் ஆகாது. பூ உதிர்ந்து, நாறுள்ள காயுண்டாகும். கன்று முளைப்பதும் ஆரம்ப காலத்தில் பயிரிடுவதும் கஷ்டம். நிழல் கூடாது. மிக மெதுவாக வளரும். எந்தப் பருவமும் பூக்கும்.

### பூ மருது

இந்தியாவின் புராதனமான பூ மரங்களில் மிகவும் முக்கியமானது. கதலி, குடலைமூக்கு, மலையாள வாணம் முதலியன இதற்கு வழங்கும் பெயர்கள். ஏராளமாய்ப் பூக்கும். வெண் சிவப்பு நிறமுடைய பூக்கள். சித்திரை ஆனியில் அதிகமாய்ப் பூக்கும். மரத்தின் மேல் புறம் முழுதும் பூ மயமாகவே இருக்கும். பார்த்தால் மரத்தில் தீப் பற்றி எரிகிறது என்று சொல்லத் தோன்றும். முதிர்ந்த மரங்கள் வருஷமொருமுறை கோடையில் சிறிது காலம் இலையுதிர்க்கும். பெரிய மரம் 40 அடி வளரும். 15 அடியிலிருந்து பூக்க ஆரம்பிக்கும். விதையிலிருந்து எளிதில் உண்டாகும். குளக்கரை, ஆற்றங்கரை முதலிய இடங்களில் செழிப்பாய் வளரும். சிவப்புப் பூக்களுடைய பூ மருதில் மற்ருெரு வகையுண்டு. இது சிறிய மரம். சித்திரையில் பூக்கும். ரோஜா நிறமுள்ள பூ.

வெள்ளைப் பூ மருது என்பது முக்கியமான தனி வகை. வருஷமிருமுறை, சித்திரையிலும், புரட்டாசியிலும் பூக்கும். மேற் சொன்னதைப் போலவே ஏராளமான பூக்கள். யாவும் வெள்ளை நிறம். பெரிய கொத்துக்கள். கிளைகளின் நுனியில் மேலே தூக்கிக்கொண்டு நிற்கும். மழைக்காலத் தொடக்கத்தில் பூக்கள் அதிகம். மணம் உடையவை.

பொதுவாக இவ்வகை மரங்களில் பூக்கள் இலைக்கு மேலாகத் தூக்கி நிற்பது மிக்க அழகான காட்சி. கிளைகள் தொங்கித் தரையில் நெடுந்தூரம் கவிந்து நிற்கும்.

### பொன்னலரி

சிறுமரம் அல்லது பெரிய குத்துச் செடி என்று சொல்லத் தக்கது. 12 அடி உயரம். மங்கலான பசும் நிறமுள்ள குறுகலான நீண்ட இலைகள். அலரி போன்றவை. பாலுடைய மரம். புனல் போன்ற அமைப்புடைய மஞ்சள் நிறப் பூ, புதிய நுனிக் கிளைகளில் தோன்றும். வேலிகளிலும் பாதை ஓரங்களிலும் எந்த இடத்திலும் இதைக் காணலாம். என்றும் பசுமையான மரம். ஒன்று விட்டு ஒரு வருஷம் கத்தரித்து விடுவது நல்லது. பூஉதிர்ந்த பிறகு பெரிய காய், அதில் பெரிய கொட்டை; கொடிய விஷம். விதையிலிருந்தே மரம் உண்டாகிறது.

மஞ்சள் நிறவகை சாதாரணமானது, ஆனால் பழமையான வகை. சந்தன நிறத்திலும் வெள்ளை நிறத்திலும் புது வகை மரங்கள் இப்போது உண்டாகியிருக்கின்றன. சந்தன நிறப் பூ மிக்க அழகானது.

### மந்தாரை

இந்தப் பெயருடைய மரங்கள் அனேகம் இருக்கின்றன. இந்தப் பகுதியில் முன்னமே கூறிய திருவாத்தி மரமும், குத்துச் செடிகள் என்ற பகுதியில் கூறப்பட்டுள்ள கொக்கு மந்தாரை என்ற செடியும் இந்த இனத்தைச் சேர்ந்தவை. சாதாரணமான மந்தாரை 20 அடி உயரம் வளரக்கூடிய பெருமரம். சாலை யோரங்களில் நிழலுக்காகவும் அலங்காரத்துக்காகவும் வைத்துப் பயிரிடத் தகுந்த நல்ல வகை, பெரிய பூக்கள். நிரம்பப் பூக்கும். வளமான மண்ணில் விதைபோட்டுக் கன்றைப் பெயர்த்து நட்டால், 3 வருஷத்தில் நன்கு வளர்ந்து பூக்கத் தொடங்கும். பன்னீர் மந்தாரை என்பது முதலான அனேக வகைகள் உள்ளன. யாவும் மரங்கள். அவற்றை இங்கு விரித்துக்கூற இடமில்லை. யாவும் விதையிலிருந்து எளிதில் பயிரிடலாம். பெரிய இலை உடையவை. யாவும் பூசைக் கேற்றவை.

மண் வளம் இல்லாதிருந்தால் ஒரே வருஷத்தில் 4 அடி உயரத்திலேயே பூத்துக் குறுகிவிடும்.

### மர மல்லிகை

மிக்க உயரமாகத் தழைத்து வளரும். அலங்காரமான மரம். இலைகள் கருமையானவை. மிகவும் அடர்த்தி. வெகு விரைவில் அதிக உயரம் வளர்ந்துவிடும். 60 அடி. பூக்கள் சுத்த வெள்ளை. தடித்த 4 இதழ்கள், 4 அங்குல நீளக் குழாய் நுனியில் பூ. மல்லிகை போன்ற இனிய மணம். மரம் முழுவதும் பூத்திருக்கும்போது, வெகுதூரம் வரை மணம் வீசும். வருஷமிரு முறை கார்த்திகையிலும், ஆனி ஆடியிலும் பூக்கும். பூக்கள், நுனிக் கிளைகள் எல்லாவற்றிலும் அடுக்கடுக்காக அடுக்குத் தீபம்போல் தோன்றும். மரத்தின் மேற்புறம் முழுவதும் பூ மயமாகக் காணப்படும். பூத்தவுடன் உதிர்ந்து தரை முழுவதும் பாய் போட்டதுபோல் பரவிக் கிடக்கும். பூக்கள் உதிர்வதால், உதிர் மல்லிகை உதிர்பன்னீர் என்றும் இதற்குப் பெயர் வழங்குவது உண்டு. இலக்கியம் இதைக் குளவி என்று கூறும்.

இதன் மரம் வெண்மையானது, லேசானது. அதனால் இதை இந்தியக் கார்க்கு மரம் என்றும் சொல்லுவதுண்டு. கட்டில் முதலிய மர வேலைகளுக்கு உபயோகப் படுகிறது. இதன் வேர் பூமியில் பரவுமிடமெல்லாம் வேரிலிருந்து தளிர் வெடித்து, எங்குப் பார்த்தாலும் தனித்தனிச் செடிகள் முளைக்கும். இந்தத் தளிர்களைப் பெயர்த்து வைத்துப் பயிரிடுவதே பெரும்பான்மையான வழக்கம். நட்ட ஒரு வருஷத்தில் 10 அடி உயரம் வளர்ந்து விடும். நிழலுக்காகச் சாலைகளில் பயிரிடுவதற்கேற்றது. எரு முதலியன வேண்டியதில்லை. பயிரிடுவதில் கவலை வேண்டியதில்லை. சிறு தோட்டங்களுக்குரியதன்று.

# 13

## பிற செடிகள்

முன்னுரையில் கூறியபடி மணத்துக்காகப் பயிரிடும் சில சிறு செடிகள் இங்கு சொல்லப்படும். சில செடிகள் வேருக்காகவே வளர்க்கிறோம்.

### மருவம், தவனம்

நன்கு தெரிந்த, யாரும் விரும்பும் மணமுடைய சிறு செடிகள். மருவத்தை மருவு அல்லது மருக்கொழுந்து எனவும் சொல்வதுண்டு. கொத்தாய்ப் பூக்கும். பூ மிகச் சிறியது, துளசியைப்போல கொத்தின் அடிப்பாகம் அகன்றும் நுனி கூர்மையாகவுமிருக்கும். இந்தச் செடி சிறிது வெண்ணிறம். தவனம் பச்சை நிறம். மிகச் சிறிய இலை. இவ்விரு செடிகளின் எல்லாப் பாகங்களும் சுகந்த வாசனையுடையன. செடிகளைப் பூமியிலிருந்து நான்கு அல்லது ஐந்து அங்குலம் வரையில் விட்டுவிட்டு மேலுள்ளதைக் கத்தரித் தெடுத்துப் பூவாக அணிகிறோம். வாசனைச் செண்டுகள் செய்ய இச்செடிகளின் இலையிலிருந்து தைலம் வடித்து உபயோகிக்கிறார்கள். இவ்விரு செடிகளும் சிறப்பாக மலைப்பகுதிகளில் செழிப்பாய் வளரும். ஆயினும் மற்ற இடங்களில் போதிய அளவு பயன் தருகின்றன. விதை மிகவும் நுண்ணியது. விதைக்கு முன்னர், ஒரு பலம் எடையுள்ள விதைகளை ஒரு சிறு துணியில் முடிந்து குளிர்ந்த நீரில் 12 மணி நேரம் ஊறப்போடவேண்டும். முதல் நாள் மாலையில் ஊறவைத்தால் மறுநாள் விதை முடிச்சை எடுத்து, லேசாகப் பிழிந்துவிடவேண்டும். விதைகளுக்கிடையிலுள்ள நீர்த்துளிகளை இயன்றவரை இழுத்து விடுதவற்காக விதைமுடிச்சை அவிழ்க்காமல் துணியோடு, மையொற்றும் காகிதம் அல்லது பொடி மணல் அல்லது சாம்பலின்மீது சிறிது நேரம் வைத்திருக்கலாம்.

விதைக்கச் சிறிது காலத்துக்குமுன், தோட்டத்தை மண் வெட்டியால் செவ்வையாகக் கொத்தி, மண்ணிலுள்ள களை, கோரைக் கிழங்கு, அறுகு, பூண்டு முதலியவற்றை அகற்றி விடவேண்டும். பிறகு கொத்திய நிலத்தை மிக நன்ருய்ச் சமமாக்கவேண்டும். 8 அடி நீளம், 4 அடி அகலமுடைய சிறு பாத்திகளாகப் பிரித்து வரப்புக் கோல வேண்டும். பின் ஊறவைத்த விதைகளை ஒரு பாத்தியில் ஒரே நிதானமாக விதைத்து, அதன்மேல் பொடி மணலைக் கொஞ்சமாகத் தூவி வைக்கோலால் மூட்டம் போட வேண்டும். ஐந்து நாள் வரையில் தினந்தோறும் இந்தப் பாத்திக்குப் பூவாளியினுல் மூடியிருக்கும் வைக்கோல்மீது நீர் விடவேண்டும். மருவம் ஐந்து நாளிலும் தவனம் மூன்று நாளிலும் முளைக்க ஆரம்பிக்கும். ஆகவே தவனத் துக்கு மூன்றுநாள் வரையில் இவ்வாறு தண்ணீர் விட்டால் போதும்.

முளைக்கத் தொடங்கியதும் வைக்கோலை நீக்கிவிட்டு, 25 நாள் வரையில் தினந்தோறும் பூவாளியால் தண்ணீர் விட்டுக் கொண்டே வரலாம். முளைத்த நாற்று ஆறங்குல உயரம் வளர்ந்திருக்கும். இவற்றைப் பிடுங்கி வேறிடத்தில் நட இது தகுந்த பருவம். மேற் சொன்ன பாத்தி ஒன்றி லிருந்து எடுத்த கன்றுகளை அதே அளவுள்ள பதினைந்து பாத்திகளில் நடவேண்டும். இவற்றில் நன்ருய் மடித்துப் போன மாட்டுச் சாணம் அல்லது குதிரைச் சாண எரு வைக் கலந்து தயாரித்து வைத்திருக்கவேண்டும். மருவத்தை இரண்டங்குலம் இடைவெளி விட்டும், தவனத்தை ஓரங்குலம் விட்டும் நடலாம். நட்டபின், பத்து நாள் வரை யில் தினந்தோறும் பாத்திகளுக்குத் தண்ணீர் விட வேண்டும். செடிகளை மிதியாமலும், வேர்களைப் பறித்து விடாமலும் பூவாளியால் லேசாய்த் தெளிக்கவேண்டுமே யொழிய, பாய்ச்சக்கூடாது.

மூன்று வாரமானதும், களை யெடுத்துக் கொத்த வேண்டும். உடனே ஒரு பாத்திக்கு ஒரு ராத்தல் வீதம் தூளான கடலைப் பிண்ணாக்கு எரு வைக்கலாம். நன்கு மட்கின பன்றிச் சாணத்தைத் தவனத்துக்கு மட்டும் எருவாக வைப்பதுண்டு. ஆனால் இது அதிக துர் நாற்றத்தைத் தரும். இதன் பின்னர் இரண்டு நாளைக் கொரு முறை தண்ணீர் ஊற்றலாம் அல்லது பாய்ச்சலாம். பின்னர் இரண்டு வாரங்கழித்து இரண்டாம் முறையாகக் களை எடுக்கவும். நட்டு ஏழு அல்லது எட்டு வாரம் ஆனவுடன் முதல் தடவை கத்தரிக்கலாம். பத்து நாள் கழித்து இரண்டாந் தடவையும், பின்னும் பதினைந்து நாளானதும் மூன்றாந் தடவையும், மருவம் அல்லது தவனம் கத்தரிக்கலாம்.

கார்த்திகை மாதத்தில் பயிர் செய்ய ஆரம்பித்தால் சித்திரையோடு இந்தப் பயிர் முடிவடையும். விற்பனைக்காகப் பயிர் செய்பவர்களுக்கு இதில் உழைப்புக்குத் தகுந்தவாறு மிக்க லாபங் கிடைக்கும்.

விதைகளை ஈரம் முதலியன அண்டாமல் கண்ணாடிப் புட்டிகளில் பத்திரமாக வைத்திருக்கவேண்டும்.

### மாசிப் பச்சை

மருக்கொழுந்தைப்போல் நறுமணமுள்ள செடிகளில் இதுவுமொன்று. கதிர்ப்பச்சை என்றும் சொல்வதுண்டு. பூ தோன்றும் இதன் கொழுந்து கதிர்போலிருப்பதால் அப்பெயர். கொழுந்துகள் தலையிலணிவதற்கும், பூசை செய்வதற்கும் உபயோகம். விதை இல்லை. வேர் பூமியிற் செல்லுமிடமெங்கும் புதிய செடிகள் கிளைக்கும். அக் கிளைகளைப் பிரித்தெடுத்தாவது செடியின் நுனிக் கிளைகளைப் பதியன்போட்டாவது பயிர் செய்யலாம். ஓரிடத்தில் பயிர் செய்தால், விரைவில் அவ்விடம் முழுதும் இந்தச் செடிமயமாய்விடும். பின்னர் தோட்டத்தைவிட்டு அழியவே

அழியாது. துணிக்கு வாசனை யுண்டாக்குவதற்காகத் துணிப் பெட்டியில் இதன் கொழுந்துகளை வைத்துவைப் பதும் உண்டு. எப் பருவத்திலும் பயிர் செய்யலாம்.

### துளசி

இந்து மதத்தவர் எல்லோரும் போற்றும் ஒரு சிறிய செடி. விஷ்ணுவுக்குச் சிறப்பானது. சிவ துளசி விஷ்ணு துளசி என இருவகை. சிவதுளசி வெண்ணிறம். இலை மற்றதைவிடக் காரம். விஷ்ணுதுளசி கறுப்பு; கருந்துளசி எனவும், ராமதுளசி எனவும் இதற்குப் பெயருண்டு.

இரண்டடி உயரம் வளரும். கதிர்போல் பூக்கும். பூவிலிருந்து விதை சிதறித் தானே எங்கும் முளைக்கும். நந்தவனங்களில் மட்டுமே இதைத் தண்ணீர்விட்டுப் பயிரிடுவார்கள். மற்ற இடங்களில், இது ஒரு செடியிருந்தால், தானே நூற்றுக்கணக்காகப் பல்கிவிடும். பூசை செய்வதற்காகப் பூசைமடம் எனச் சிறிய கல் தொட்டி அலங்கார மாகக் கட்டி அதில் இதை வைத்துப் பூசிப்பது தமிழ் நாடெங்கும் வழக்கம். காரமான மணமுடையது. சிறு குழந்தைகளுக்கு இலைச்சாறு மருந்தோடு கொடுப்பது வழக்கம். ஒரு வாசனைத் தைலம் இறக்கவும் துளசி உதவு கிறது. தமிழில் திருத்துழாயின் புகழ் பாடாத வைணவ நூல் இல்லை. ஒரு துளசி பத்திரம் கிருஷ்ணபகவானை விட எடை அதிகம் உடையது எனப் பாகவதத்தில் கிருஷ்ண துலாபாரக் கதை கூறும்.

### திருநீற்றுப் பச்சை

துளசிபோன்ற சிறு செடி. எங்கும் சாதாரணமாய் நன்றாய் வளரக்கூடியது. விபூதிப் பச்சை என்றும் சொல்லப்பெறும். சிறிது வெறுப்புண்டாகக்கூடிய வாசனை யுடையது. இலை காரமாகவும் கசப்பாகவும் இருக்கும். சாம்பல்நிறம். நாட்டு மருந்து செய்வதில் இலை உபயோகம். இதன் பூ துளசிபோன்றது. உலர்ந்த கொத்துக்களை உதிர்த்

தால், அவற்றினின்றும் பொடியான விதைகள் விழும். இவ்விதைகளிலிருந்தும் பதியன் போட்டும் செடி பயிரிடலாம். விதைகளைக் குளிர்ந்த நீரில் ஊறவைத்து சவ்வரிசிப் பாயசம் போன்ற பாயசம் செய்வதுண்டு. இது தேகத்துக்கு மிகவும் ஆரோக்கியமானது. சப்ஜாச் செடி என்றும் சொல்லப்படும்.

**எலுமிச்சந் துளசி :—**திருநீற்றுப் பச்சை போன்றது; எலுமிச்சை மணம். பயிரிடுவது முந்தியது போலவே.

### நன்னாரி

பாறையடர்ந்த மலைப் பிரதேசங்களில் தானே வளர்வது. தஞ்சை ஜில்லா எங்கும் திடல்களில் களையாகவே கிடக்கிறது. விதையிலிருந்தும் உற்பத்தியாகும். பதியன் போட்டும் பயிர் செய்யலாம். கொடியாக வளரும். குறுகி நீண்ட சிறு இலை. கரும்பச்சையில் குறுக்கே வெள்ளைக் கோடு. கொடி சிறுமுள்ளுடையது. இதில் இரண்டு மூன்று வகை. வேர் மண்ணின் மேற்பரப்பிலேயே எங்கும் பரவும். வேர் அல்லது கிழங்காக வெட்டியெடுத்து, அவற்றின் மேலுள்ள மண்ணைச் சுரண்டி நீக்கிவிட்டுச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கி உலர்த்தி, நன்னாரிவேர் கட்டுக்கட்டாக விற்பார்கள். நன்னாரிவேர் ஷர்பத் பிரசித்தமானது.

### விளாமிச்சை

நாணலைப்போன்ற ஒரு புல். செங்குத்தாய்க் குறுகிய இலைகளோடு நீண்டு வளரும். வேர் தடிப்பாகவும் கொத்துக் கொத்தாகவும் இருக்கும். அதைப் பிரித்தெடுத்துத் தனித் தனிச் செடிகள் பயிர் செய்யலாம். இலையில் மணமில்லை. வேர் சந்தனத்தின் வாசனையையொத்த சுகந்த மணம் உடையது. வேனிற் காலத்தில் மண் பானைகளில் வைத்திருக்கும் குளிர்ந்த நீர் நறுமணமுடையதா யிருக்கும் பொருட்டு, இவ்வேர்களைச் சுத்தமாய் அலம்பி சிறு கட்டாகக் கட்டித் தண்ணீரில் போட்டு வைப்பது வழக்கம்.

இதனால் விநோதமான பாய்களும் விசிறிகளும் செய்வார்கள். தாழ்வாரத்தில் வெயில் மறைக்கும் தட்டி தொங்க விட இது உபயோகமாகிறது. தைலம் வடிப்பதுமுண்டு.

### வெட்டிவேர்

கீரையிலும் மென்மையான மிகச் சிறு செடி. ஓமவல்லி போன்ற இலை. நுனிக்கொழுந்து பதியன் பிடிக்கும். கிள்ளிய அல்லது பெயர்த்தவுடன் நடவேண்டும். 4 அடி ஆழ மணலுள்ள நிலத்தில் நடவும். கோடை முழுமையும் இருந்து வேர்விடும். வேர் கெடாமல் எடுத்து உபயோகிக்கவும். வேரின் மணம் பிரசித்தம். தஞ்சை ஜில்லா கொள்ளிடத்தில் தான் இது மிகவும் சிறப்பான தொழிலாயிருக்கிறது.

### நீர் வாழ் பூக்கள்

சரசுவதிக்கும் லக்ஷ்மிக்கும் உறைவிடமாயுள்ள தாமரைப்பூவைக் கொண்டாடுகிற இந்த நாட்டில் யாரும் நீர் வாழ் பூக்களை அறிந்திருப்பது அவசியம். திணைகளில் ஒன்றான நெய்தல் ஒரு நீர் வாழ் பூவின் பெயரைக் கொண்டது. அல்லியும் குவளையும் நம் நாட்டின் பழம் பூக்கள்.

ஆழம் அதிகமில்லாத குட்டைகளில் இவை நன்கு பயிராகும். 3 அடி ஆழம் போதும். அதிகம் ஆழம் வேண்டாம். இயற்கையான குட்டை கிடையாதபோது, வெறும் செங்கல்லால் கட்டி, சிமிட்டி பூசிய பெருந் தொட்டியும் உபயோகிக்கலாம். அவரவர் வசதிக் கேற்றபடி தொட்டியின் அளவு. அதில் மண் 15"—24" ஆழம் வேண்டும். சத்துள்ள களிப்பு மண் நிரப்பி, மடித்த சாணத்தைக் கெட்டியாய் வைக்கோலில் சுற்றிச் சில இடங்களில் அதனுள் போட்டிருந்தால், போதிய சத்து இருக்கும். கட்டிய இச் செய் குளம் நடுவில் ஆழமாயும், கரையோரம் ஆழம் குறைவாயும் இருக்கலாம். எப்போதும் இதில் நீர் 3 அடி ஆழம் நிற்கவேண்டும்.

இச்செய் குளத்தின் முக்கிய அம்சம் நீர். நல்ல நீர் வருஷ முழுமையும் கிடைக்கவேண்டும். வாய்க்கால் மூலம் அல்லது குழாய்மூலம் பாய்ச்சுவது பொருத்தம். அல்லது மாதம் ஒரு முறை பழைய நீரை அகற்றிப் புதுநீர் மாற்றுவது அவசியம்.

செய் குளம் முழுமையும் வெயில் படுவது அவசியம். கடுங்காற்றுப் படாதபடி பாதுகாக்கப் பெற்றிருத்தல் வேண்டும். குளம் துப்புரவாயிருப்பதும் முக்கியம். வருஷமொருமுறையேனும் நீர் முழுமையும் எடுத்து விட்டு, 2 அடி மண்ணை நீக்கிப் புது மண் போட்டுப் புது நீர் விடுவது நல்லது. நெருக்கமாயுள்ள செடிகளைக் களைந்து குறைப்பதும் அவசியம். நீர் நத்தை போன்ற கெடுதல் செய்யும் பிராணிகளை நீக்க வேண்டும். நீரில் நல்ல மீன் விட்டு வைப்பது பல வகையிலும் பயனுடையது.

ஆடி, ஆவணி மாதங்களில் செய்குளம் பயிரிடத் தொடங்கலாம். ஆழமில்லாத மூங்கில் கூடையில், மணல் போட்டு, அதில் செடியை நட்டு, கயிறுகட்டிக் கூடையை நீரில் இறக்கவும். செடிகளாக வளர, இலைமட்டம், நீர் மட்டத்திலிருக்கும்படி இறக்கிக்கொண்டே போகவேண்டும். சில செடிகள் விதையிலிருந்து உண்டாகும். சில வேரிலிருந்தும், கிழங்கிலிருந்தும் உண்டாகும். இங்கு கருதத்தக்க நீர்வாழ் செடிகள் சிறப்பாக மூன்று வகை.

**தாமரை:** இந்தியாவின் சின்னமான பூ. இப்போது மிகவும் குறைந்து வருகிறது. பெருங் குளங்களில் பூக்கும். பெரிய பூ. கொடி அதிகம் ஓடிப் படர்ந்தால்தான் நிரம்பப் பூக்கும். தாமரை காலையில் மலரும். இலையில் நீர் ஒட்டாது என்பது பிரசித்தம். நீருக்குமேல் இலை தூக்கி நிற்கும். பூ உதிர்ந்தபின் காய், விதை. விதை தின்பதுண்டு. விதையிலிருந்தும் வேரிலிருந்தும் செடி.

**வெண் தாமரை:** தூய வெண்ணிறம். சரசுவதியின் இருப்பிடம்.

**செந்தாமரை:** சிறிது சிவந்த நிறமுடையது. லக்ஷ்மிக்கு இருப்பிடம்.

**அல்லி:** சாதாரணமாய்க் குளம் குட்டையில் காணப் படுவது. இலை நீரின்மேலேயே நிற்கும். அல்லி இருளில் மலரும். பூ இதழ் உதிர்ந்தபின் காய்க்கும் காயை உடைத் தால் அரிசிபோல் விதைகள். அல்லி அரிசி தின்பதுண்டு. சாதாரண அல்லி தூய வெண்ணிறம்.

**செவ்வல்லி:** கொஞ்சமான சிவப்பு நிறமுடையது.

**அரக்காம்பல்:** பெயருக்கேற்றபடி அரக்கு எனத்தக்க கருஞ்சிவப்பு நிறம். ஏராளமாய்ப் பூக்கும். அரக்காம்பல் பூத்திருப்பது வெள்ளம் தீப்பற்றியது எனத்தக்கதாயிருக் கும் என முத்தொள்ளாயிரம் கூறும்.

**குவளை:** சிறப்பான ஒரு செடி. முந்தியவற்றுள்ளும் சிறியது. பூவும் சிறியது. குவளைப்பூ பெண்களின் கண் ணுக்கு உவமை கூறப்படுவது.

**செங்குவளை:** செங்கழுநீர் எனப்பெறும். மணமுடைய இப்பூ, செவ்வல்லிபோல. அதனினும் மிகவும் சிறியது.

**கருங்குவளை:** நீலோத்பலம் எனப்பெறுவது. மங்க லான நீலநிறம். மணமுடையது. கருநெய்தல் எனவும் பெறும்.

# 14

# தொட்டியில் பயிரிடுதல்

முந்திய அத்தியாயங்களில் சில செடிகளைத் தொட்டியில் பயிரிட்டால் நன்றாயிருக்கும் என்று சொன்னோம். தொட்டியில் பயிரிடுவது யாருக்கும் ஆகக்கூடிய காரியம். தோட்டம் இல்லாதபோது கூட, பத்து, இருபது பூஞ்செடிகளை வைத்து அவற்றில் குறிப்பிட்ட சில செடிகள் நன்றாகப் பூக்கும்படி செய்தல் எளிது.

## தொட்டியின் அனுகூலம்

தொட்டியில் பயிரிடுதல் பல காரியங்களுக்கு அனுகூலமாகும். நினைத்த இடத்தில் செடிகளை மாற்றிவிடலாம். விழாக்களின்போது அலங்காரத்துக்கு உபயோகிக்கலாம். வீட்டுக்குள் அலங்கரிக்கப் பயன்படுத்தலாம். வீடு மாற்றுபவர்கள் கையோடு கொண்டு போகலாம். மிருதுவான செடிகளையும்கூட காலைவெயில் மட்டும் படும்படி வைத்துப் பிறகு வேறிடம் மாற்றி விடலாம். நிறபேதம் அமையும்படியாக அலங்கரிக்கலாம். ஜன்னல் போன்ற இடங்களில், மாடியில், கொண்டுபோய் வைக்கமுடியும். பெரிய தோட்டமிருந்தாலும்கூட, ஆங்காங்கு சட்டியில் சில செடிகள் வைத்திருப்பது முன் உள்ள கவர்ச்சியை அதிகப்படுத்தும்.

## தொட்டியின் அமைப்பு

அந்தந்த இடத்திலேயே சட்டிகள் வாங்குவது நல்லது. கூடுமானவரையில் கனமுள்ள மண் சட்டியாக இருக்க வேண்டும். நன்றாய் வெந்ததாகவும், ஊறினால் உடையாததாகவும் இருக்கவேண்டும். அலங்காரத்துக்காகப் பானை போன்ற சட்டி செய்து மிகவும் அழகுபடுத்தி விற்கிறார்கள். இப்படிப்பட்ட சட்டிகள் பூஞ்செடி வைக்கத் தகுதியற்றவை. நல்ல பூந்தொட்டி என்பது நிமிர்த்து வைத்த

சர்க்கரைப் பொட்டலம்போல் இருக்கவேண்டும். தொட்டிகளுக்கு 2, 4, 6, 9, 10, 12, 15 என்று அங்குலக் கணக்குண்டு. 3 அங்குலம் என்ற கணக்கின் பொருள், 3 அங்குல உயரம் என்பதே. 12 அங்குலத் தொட்டி என்றால் உயரம் ஓரடி, உச்சிக் குறுக்களவு ஓரடி என்று பொருள். உச்சியின் குறுக்களவு 3 அங்குலம் என்றால் அடிப்பகுதியின் குறுக்களவு $1\frac{1}{2}$ அங்குலம். அப்படியே 12 அங்குலத் தொட்டிக்கு உச்சியும் அடியும் முறையே 12 அங்குலம், 6 அங்குலம். எந்தத் தொட்டியிலும் உச்சியும் அடியும் வட்டமாக இருக்கவேண்டும். கீழிருந்து மேல்நோக்கி செங்குத்தாகக் கரைவு வேண்டும். பானைபோல் நடுவில் புடைத்துக்கொண்டு உப்பி இருக்கக்கூடாது. இதனுடைய நோக்கம் என்னவென்றால்,தொட்டியை எடுத்துக் கவிழ்த்தவுடனே, செடியும் மண்ணுமாக கொஞ்சங்கூடக் கலையாமல் கீழே கவிழ்ந்து விழவேண்டும். அப்படிக் கவிழ்ந்தால் தான் இந்தச் செடியை மாற்றுவதோ வேறு நடுவதோ எளிதாயிருக்கும்.

## செடி நடுதல்

தொட்டியில் செடிவாழ்ந்து பலன்தர வேண்டுமானால் அனேக விஷயங்கள் கவனிக்கவேண்டும். வேர் தன் போக்கில் போய் உணவு தேட முடியாது. அடைபட்டுக் கிடந்து சுருங்கிய இடத்திற்குள்ளேயே உணவைப் பெற வேண்டும். ஆகவே தொட்டிமண் உரம் நிறைந்ததாயிருக்க வேண்டும். தொட்டியில் தண்ணீர் தேங்கக் கூடாது. தேங்கினால் வேர் அழுகிவிடும். தண்ணீர் எளிதில் வடியத் தக்கவிதமாகத் தொட்டி அடிப்புறத்தின் பக்கத்தில் இரண்டு அல்லது மூன்று தொளைகள் இருக்கவேண்டும். விரல் நுழையக்கூடிய துவாரம் இருந்தால் போதும்.

தொட்டியை நிரப்பும்போது இந்தத் துவாரத்துக் கெதிரில் ஒரு ரூபா அளவுள்ள ஒரு மெல்லிய ஓட்டை

வைத்து மூடி, தொட்டியின் அளவுக்கேற்றபடி $\frac{1}{2}$ அங்குலத்திலிருந்து $1\frac{1}{2}$ அங்குல உயரம் வரையில் கோலிக்குண்டு அளவுள்ள உருண்டையான செங்கல் துண்டுகளைப் போட்டு நிரப்பவேண்டும். இதனுடைய நோக்கம், மேலுள்ள தண்ணீர் கற்களிடையில் இறங்கித் துவாரத்தின் வழியாக வெளியே போய் விடவேண்டும் என்பதே. கற்களின்மேல் $\frac{1}{2}$ அங்குல உயரம் பெருமணலைத் தூவி, அதன்மேல் உர மண்ணைப் போட்டுச் செடியை நடவேண்டும்.

செடியின் இயல்புக்குத் தகுந்தபடி சட்டி ஒன்றுக்கு ஒன்று அல்லது இரண்டு நாற்றுக்களை நடலாம். உதாரணமாக 12 அங்குலத் தொட்டியில் பெட்டூனியா அல்லது காசித்தும்பைச் செடி நடுவதாயிருந்தால் ஒன்று நட்டால் போதும். டுரீனியா நடுவதாயிருந்தால் 6 அங்குலச் சட்டி ஒன்றுக்கு ஒரு செடி போதும். இது செடியினுடைய பழக்க வழக்கத்தைத் தெரிந்துகொண்டு செய்வது நல்லது.

நாற்றுப் பெயர்த்து நடும்போது நாற்றுப் பாத்தியிலிருந்து பெயர்க்கும் கருவியால் ஒரு தனி நாற்றை நாற்புறமும் ஓரங்குலம் அல்லது 2 அங்குலம் மண்ணோடு, சிறிதும் மண்ணும் வேரும் கலையாமல், அப்படியே கட்டியாகப் பெயர்க்க வேணடும். இதற்குப் பாத்தியில் முதல் நாள் நீர் விட்டிருந்தால் போதும். நீர் விடாமலேயே காய்ந்த பாத்தியிலும் உடனே நீர் விட்ட பாத்தியிலும் கன்றைக் கட்டியாகப் பெயர்க்க முடியாது. இப்படிப் பெயர்த்த கட்டியை முன் தயாரித்த சட்டியில் நடவேண்டும். எந்தச் சட்டிக்கும் செம்மண்ணும், கம்போஸ்டு உரமும் கலப்பது சிறப்பு. பொதுவாக ஒரு கூடை செம்மண், ஒரு கூடை மணல், ஒரு கூடை நன்கு மட்கிப்போன குதிரைச் சாணம், இரண்டு கூடை கம்போஸ்டு உரம் அல்லது மட்கிய தழை உரம், அரைக் கூடை சென்ற வருஷத்துப் பொல பொலப்பான பழமண்—இந்த அளவுப்படி கலந்து கொள்ளலாம். காசித் தும்பை போன்ற சில செடிகளுக்குக்

கொஞ்சம் மணல் கலப்பு அதிகம் வேண்டும். முன் சொன்னபடி தயாரித்த தொட்டியின் அடியில் இந்தக் கலவையில் கொஞ்சம் போட்டு அதன் மேல் செடியை நடவேண்டும். கட்டியாகக் கொண்டுவந்த செடியின் வேரைச் சுற்றிக் கொஞ்சம் மணல் அல்லது பழ மண் போட்டு அதன் பிறகு நாற்புறமும் இந்தக் கலவை எருவைப் போட்டு மூடவேண்டும். 12 அங்குலத் தொட்டிக்கு, உச்சியிலிருந்து ஓரங்குலம் தாழ்வாயிருக்கும்படி மண் போட்டு மூடலாம். இந்த ஓரங்குல உயரமும், விடும் தண்ணீர் நிற்பதற்காகத் தேவை.

பெயர்த்தெடுக்கும் செடி நிரம்ப வேருடையதாகவோ, ஆரோக்கிய முடையதாகவோ இராவிட்டால், அதைப் பூரணமாக மணலிலேயே மாற்றி, நன்கு வேர் பிடித்து உறுதியாக வளர்ந்த பின் எருவுக்கு மாற்றலாம். சிறிய சட்டியிலிருந்து பெரிய சட்டிக்கு நல்ல வேரமைப்புடைய செடியை மாற்றும்போது, சுற்றி மணல் போடாமலேயே மாற்றலாம்.

தொட்டிப் பயிருக்குத் தண்ணீர் விடும்போது கவனம் வேண்டும். கொஞ்சம் தண்ணீர் குறைந்து போனலும் வேர் தொட்டியைச் சுற்றித் தாக்கும் காற்றினுல் உலர்ந்து போகும்; செடி சாகும். அதிக ஈரம் கட்டினுலும் அழுகும். ஆகவே தண்ணீரில் போதிய கவனம் கண்டிப்பாய் வேண்டும். தண்ணீர் விடும்போது பூவாளியால் தெளிக்கலாம். தோண்டியால் விடலாம். தகரக் குவளையால் மொண்டு ஊற்றலாம். இது செடிக்குத் தக்கபடி. எப்படி விட்டாலும், சட்டி முழுமையும் நனைந்து கீழுள்ள துவாரத்தின் வழியாகத் தண்ணீர் சிறிது கசிந்து வெளிப்படவேண்டும். அதிகம் கசிந்தால் சத்தைக் கரைத்து வெளியே கொண்டு போய்விடும். ஆரோக்கியமான செடிக்கு ஒன்றைவிட்டு ஒரு நாள் மாலையில் இப்படி விட வேண்டும். வெயில் நேரத்தில் தண்ணீர் விடக்கூடாது.

மாதம் ஒருமுறை மேல் மண்ணைக் கிளறி விடவேண்டும். மூன்று மாதத்துக்கொரு முறை ஓரங்குல மேல் மண்ணை அப்புறப்படுத்திவிட்டுக் காரமான உரமுள்ள புது மண் போடவேண்டும். ஆங்காங்குச் சொல்லியபடி ஒரு வாரம் இரண்டு வாரத்துக் கொரு தடவை சில பயிர்களுக்குத் திரவ உரம் விடுவது நல்லது.

பயிராகும் தொட்டியில்மேல் மண் ஆரோக்கியமாயிருக்கும்படி பார்க்கவேண்டும். உதிர்ந்த இலை, பூ முதலியவற்றை உடனுக்குடன் அகற்றிவிட வேண்டும். அகற்று விட்டால், பூஞ்சணம் ஏற்பட்டு, மேல் மண்ணில் பரவி, செடியையே தொலைத்துவிடும். முக்கியமாக, நன்கு வளர்கிற பெட்டுனியா, காசித்தும்பை முதலிய செடிகள் இவ்வாறு சாகக் காணலாம். மேல் மண்ணில் பாசி பிடிக்க விடக்கூடாது. பாசி பிடித்தால் தண்ணீர் வடியவில்லை என்பது பொருள். நன்கு வடியச் செய்து கிளறி விட வேண்டும். புதுநாற்றுக்கள் நடும்போது, பூஞ்சணம் பிடிக்காமலிருக்கத் தொட்டியின் உச்சியில் அரை அங்குல உயரத்துக்கு மணலாகவே நிரப்புவதும் நன்மையுடையது.

சில செடிகள் விரைந்து வளரும். சில அதிகமாய்ப் பூக்கும். சில நீண்டகாலம் பூத்திருக்கும். இவற்றைச் சட்டியில் வைப்பதும், எருவிட்டு நீர்விட்டுக் காப்பதும், நன்றாகப் பூக்கச் செய்வதும், வெவ்வேறு முறைகள். இவை அனுபவத்தால்தான் பழக்கமாகும்.

புதிதாக நாற்றைத் தொட்டியில் நடும்போதும், தொட்டி மாற்றும்போதும் கூடுமான வரை செடியைச் சூழ்ந்துள்ள மண்ணும் வேரும் பிடிப்புக் கலையாதபடி மாற்ற வேண்டும். மிகச் சிறிய நாற்றுக்களை விதைத் தொட்டியிலிருந்து எடுத்து, தரையிலேனும் மற்றொரு தொட்டியிலேனும் அதிக மணல்-மண்ணில் 2 அங்குலத்துக்கொன்றாக நட்டு வைத்து, கொஞ்சகாலம் இது நன்றாக வளர்ந்த பின் மீண்டும் பெயர்த்து உரிய அளவுள்ள

தொட்டியில் நடலாம். உதாரணம்: டுரீனியா பெட்டூ-னியா, கெய்லார்டியர, டயாந்தஸ், காலியாப்ஸிஸ்.

நிழலிலிருந்த சட்டியை உடனே தூக்கி முழுவெயிலில் வைக்கக் கூடாது. அதற்கு வெயிலை மெல்லப் பழக்க வேண்டும். ஒரு வாரம் கொஞ்சமான காலை வெயிலில் வைத்திருந்து பழகிய பிறகு தான் முழுவெயிலில் இருக்க விடலாம்.

வீட்டுக்குள் நிழலிலேயே எந்தச் செடியையும் தொடர்ந்து பல நாள் வைத்திருக்கக் கூடாது. ஒவ்வொரு செடியையும் இரவில் எடுத்து வெளியே வைத்திருந்து பகலில் வேண்டுமானால் அலங்காரத்துக்காக உள்ளே எடுத்து வைக்கலாம். இப்படி வைத்த செடிகளையும் வார மொரு முறை மாற்றிவிடவேண்டும். வேறு செடியை உள்ளே வைத்து இந்தச் செடியை வெளியே திறந்த இடத்தில் ஒரு வாரம் வைக்கவேண்டும்.

கடுங்கோடையில் செடிகளைத் தொட்டி மாற்றக் கூடாது.

முன்கூறியவாறு, மண்ணில் சில பூ இலை விழுந்து ஈரத்தால் பூஞ்சண நோய் பரவாதபடி, மழைக் காலத்தில் தொட்டியின் மேல் மட்டத்தில் காலங்குலம் நல்ல மணலைப் பரப்பி வைப்பது மிகவும் அவசியம்.

## கவனிப்பு

தொட்டியில் பயிரிடுவதில் கவனிக்கத்தக்க அம்சங்கள் பின் வருவன: தொட்டி பழையதாயிருந்தால் நன்கு அலம்பி வெயிலில் உலர்த்தி எடுக்கவேண்டும். போடும் கற்கள் அலம்பி மண்ணில்லாமல் சுத்தம் செய்யப்பட்டிருக்க வேண்டும். தூளான செம்மண்ணும், ஆற்று மண்ணில் பெருமணலையும் உபயோகிக்க வேண்டும். செடிக்கேற்ற எருவும் மண்ணுமே போடவேண்டும். தொட்டி செடிக்கேற்றதாயிருக்க வேண்டும். செடியின் அளவுக்கு மிஞ்சிப்

பெரிய தொட்டி கூடாது. எடுக்கும் செடியின் மண்ணும், நடும் மண்ணும் உலர்ந்திருக்கக் கூடாது, ஈரமாயிருக்க வேண்டும். நட்ட செடியைச் சுற்றி மண்ணைக் கெட்டியாக அமுக்கிவிடவேண்டும். காற்றுத் தங்க இடம் விட்டு வைக்கக் கூடாது; வேர் அழுகும். மண்ணுக்கு மேல் நீர் நிற்பதற்கு ஓரங்குல இடம் வேண்டும். சட்டியில் அதிக ஆழம் நடக்கூடாது. நட்டவுடன் என்னதான் வேரைக் கலைக்காதிருந்த போதிலும், அன்றைய வெயில் படாமல் நிழலில் வைப்பது மிகவும் அவசியம். நன்கு வளர்ந்து வரும் செடிக்கு மேலுரம் அல்லது திரவ உரம் உரிய காலத்தில் அளிக்க வேண்டும். வேரில் பல வகைப் புழுக்கள் உண்டாகக் கூடும். கவனித்துப் பார்த்துக் களைவதைத் தவிர வேறு வழியில்லை. அதிகத் தழையுள்ள செடிகளில் சட்டி மாற்றும்போது ஒருமுறை இலையுருவி விடுவது நல்லது. நீர் விடுவதில் கவனம் வேண்டும். பல செடிகளின்மேல் நீர் விடலாம். பெட்டூனியா போன்ற சில வற்றின் மேல் நீர் விடக்கூடாது. எப்போதும் அதிக ஈரம் இருப்பது கெடுதல், அரைக் காய்ச்சல் தருவது நல்லது. செடி வாடும் போலிருக்கும் சமயம் தான் நீர்விட வேண்டும். நீர்விடும்போது மண்ணைக் கரைத்துக் கொண்டு போய் விடாதபடி விட வேண்டும். வெயில் நேரத்தில் நீர் விடக்கூடாது. மாலையில் இலைகள் நனையும்படி நீர் தெளிக்கலாம்; இலையை அலம்பிவிட்டு நன்கு சுவாசிக்கச் செய்ய இது உதவும்.

### விதைத் தொட்டி

விதை தெளிப்பதற்காக உபயோகிக்கும் தொட்டியை விதைத் தொட்டி என்கிறோம். இது பார்வைக்குச் சல்லடைபோல் பெரிய வட்டமாய் ஆழம் குறைவாயிருக்கும். குறுக்களவு 15—18 அங்குலம், ஆழம் 4 அங்குலம், பக்கம் கரைவாயிருக்கும். அடி ஓரத்தில் நீர் வடிவதற்காக

இதில் மூன்று துவாரங்கள் இருக்கும். துவாரத்தை ஓர் ஓட்டுத் துண்டு கொண்டு மண் அரித்துக்கொண்டு போவதைத் தடுக்கும்படி மூடி, கீழே சில பொடிக் கற்கள் போட்டு, மேலே, மணல் கொஞ்சம் உரம் கலந்த மண், விதைக்கப் போகும் விதைக் கேற்ற மாதிரியாகப் போட்டு நிரப்பலாம். விதைத் தொட்டியின் அனுகூலம், முளைத்து வரும் நாற்றுக்களை நம் சௌகரியம்போல் நிழலிலே வைக்க லாம்; வெய்யில் படாமல், காற்றுப் படாமல், அதிக மழை படாமல், எறும்பு இழுக்காமல் காப்பாற்ற முடியும்.

### பிற தொட்டிகள்

தொட்டி என்று இங்கு குறிப்பிட்டது பொதுவாக மண்ணால் குயவன் செய்து சுட்டு விற்கிற பூஞ் சட்டியே ஆயினும், இதுபோல் பயன்படத் தக்க பொருள்கள் வேறு எத்தனையோ உள்ளன. பெரிய தகர டப்பிகள்—இவற்றில் நீர் வடிவதற்காக மட்டும் அடியில் துவாரங்கள் போட்டுத் தொட்டிபோல் உபயோகிக்கலாம். சிறு மரப் பெட்டிகள் அல்லது இரண்டாய் அறுத்த பீப்பாய்கள். தகரத்துக்கும், மரத்துக்கும் தார் அடித்து உபயோகிக்கலாம். பழைய மூங்கிற் கூடை முதலியன சொற்ப காலத்துக்குப் பயன் படும். சிமெண்டினால் வேண்டிய அளவுக்கு, தொட்டிகள் செய்து கொள்ளலாம்—6" முதல் 24" வரை. இன்னும் பெரிய அளவும் கம்பிகட்டிச் செய்யலாம். உறுதியாய் நீண்டகாலம் இருக்கும்; அலங்கார அமைப்புக்களும் சிமெண்டில் செய்யலாம்.

### தொங்கு தொட்டிகள்

தொங்கு தொட்டிக் கேற்ற பூஞ்செடிகள் : டுரினியா பூம்பசலை, பெட்டூனியா, சன்ன ஜினியா, வெர்பீனா.

தொங்கு தொட்டிகள் வசதியுள்ள இடங்களில் மிக்க அழகு தருபவை. இதற் கென்றே தனியான அமைப்

புடைய மண் சட்டிகளை வாங்கிக் கம்பி கட்டித் தொங்க விடலாம். அல்லது கம்பியில் வலை பின்னித் தொங்கவிட்டு, அதில் எந்தச் சிறு சட்டியையும் வைக்கலாம். பெரிய மூங்கில் கழிகள் கெட்டியாயிராமல் உட் கூடாயிருப்ப வற்றைத் தெரிந்தெடுத்து, இரண்டு புறமும் கணு அடைப்பை வைத்து அறுத்து எடுத்தால், ஓரடி நீளத்துக்குக் குறையாமல் இருக்கும். அதைக் குழாயாகப் பாவித்து அதில் 9 அங்குல நீளம் 2 அங்குல அகலம் வெட்டி எடுத்து, வெட்டிய இடத்துக்குக் கீழ்ப்புறம் சிறு துவாரங்கள் போட்டு, உட்புறம் முழுமையும், மண்ணிட்டு நிரப்பினல் இதுவும் ஒரு நீண்ட தொட்டி போலாகிறது. தாழ்வாரத்தில் கம்பி கட்டித் தொங்கவிட்டுத் தொங்கு தொட்டியாகச் சில செடிகள் வைத்துப் பயிரிடலாம். தாரடித்து உபயோகிக்கும் பட்சத்தில் ஒன்றிரண்டு வருஷங்கள் இருக்கும். ஓரளவுக்குப் படர்ந்து பூக்கும் செடிகளே இதற்கு ஏற்றவை.

தொங்க விடுவதில் ஈரம் உலர்ந்து போகாதபடி காப்பது முக்கியம். சட்டியைத் தொங்க விட்டால், சட்டி ஓரத்தில் தேங்காய் நார் அல்லது கோணிப் பையைப் பரப்பி உள் மண் போடுவது நல்லது. சிறந்த எருமண்ணைகப் போடவேண்டும். நன்கு வளர்ந்த நோயற்ற செடிகளையே நடவேண்டும். இடம் மிகச் சுருங்கியதாதலால், அதிக உரம் வேண்டும். திரவ உரம் இடுவது சிறப்பானது.

ஆஸ்பரகஸ், கோலியஸ், பெர்ன், பைலியா, போத்தாஸ், ஸெப்ரீனு போன்ற பல தழையலங்காரச் செடிகளும் தொங்கு தொட்டிக்கு ஏற்றவை.

# 15

## சில குறிப்புக்கள்

முன் பகுதிகளில் கூறப்பெறாத சில முக்கிய முறைகள் மட்டும் இங்கு கூறப்படுகின்றன.

### கத்தரிப்பு

கத்தரிப்பு, வெட்டுதல் கவாத்து செய்தல் என்றும் கூறப்பெறும். பழத் தோட்டத்தில் தான் இது இன்றியமையாதது. ஓரளவுக்குப் பூந்தோட்டத்திலும், ரோஜா, மல்லிகை, போகன்வில்லா போன்றவற்றுக்கும், அவசியமாயிருக்கும்.

கோணல் மாணலாய் வளரும் செடியின் தோற்றத்தை ஒழுங்கு படுத்துவதற்காகக் கத்தரிப்பு அவசியமாகிறது. பட்டுப்போகும் இலைகள், நோய் கண்ட பகுதிகள் இவற்றைக் கத்தரித்து விடவேண்டும். ஒருகத்தியால் தழைகளைக் கிள்ளவேண்டும், கிளைகளை நீக்க வேண்டும். பூத்து முடித்த கிளைகளைக் கத்தரித்து விடுவதுடன் புதுக் கிளைகள் உண்டாகிப் பூக்கும்படி செய்யவேண்டும்; செடி வளர்ச்சியைக் குறைத்துப் பூக்கும்படி செய்யவேண்டும்.

பெருஞ் செடிகளை, செம்பரத்தை போன்றவைகளைக் கத்தரிக்கும்போது தக்க பருவம் வேண்டும். கடும் கோடையிலும், பூக்கும் பருவத்திலும் கத்தரிக்கக் கூடாது. பூத்து முடிந்தவுடன் கத்தரிப்பது சிறப்பு.

கத்தரிக்கும்போது சுத்தமாக வெட்டவேண்டும், பட்டை பெயர்ந்து கிழியும்படியும் தொங்கும் படியும் விடக்கூடாது. கையால் ஒடிக்கக்கூடாது. கத்தி அல்லது கத்தரிக் கோலால் கத்தரித்து விடவேண்டும். செம்பரத்தையின் பெரிய கிளைக்கு வாளும் உபயோகிக்கலாம். கணுவில் கிளைக்கும் கொழுந்திலிருந்து மேலே சற்றுத்தூரம் விட்டுக் கத்தரிக்க வேண்டும். கணுவை ஒட்டிக் கத்தரிக்கக்

கூடாது. சாய்வாக வெட்டுவது மேல். கத்தரிக்கும்போது சாதாரணமாய் அதிகக் காயும், அதிகப் பூவும் வேண்டியிருந்தால் நடுமரத்தில் கத்தரித்து நடுவில் திறந்து விடுவதே நன்மை. இடையில் கூறியுள்ளபடி சில சமயம் நெருங்கியுள்ள பக்கக் கிளைகளை நீக்கி ஒற்றைத் தண்டுடைய சிறு மரம்போல் வளர்க்க எண்ணினல், பாக்கிக் கிளைகளைக் கழித்துவிட வேண்டியிருக்கும். செடி உச்சியில் மட்டும் கிளைகள் இருக்கும்படி விட நேரும். வேண்டிய இடத்தில் மொட்டைக் கட்டையோ பிசிரோ நிற்கக்கூடாது. நின்ருல் இதன் வழியே கிருமிகள், புழு பூச்சிகள், பூஞ்சணம் முதலியன உட்புகுந்து தீங்கு விளைவிக்கும்; இப்படிப்பட்ட இடத்தில் தார் பூசுவது அவசியம்.

### தலை கிள்ளல்

தலை கிள்ளல் கத்தரிப்பில் ஒரு வகை. குத்துச் செடிகளையும் பெரிய செடிகளையும் கத்தரிப்பதுபோல பருவகாலப் பூஞ்செடிகளுக்குத் தலை கிள்ளுதல் அல்லது கொழுந்து கிள்ளுதல் அவசியம். தலை கிள்ளுதலின் நோக்கங்கள் பல. சில செடிகள் ஒற்றைத்தண்டாக நெடுகி வளரும். அவற்றைக் குத்துச் செடியாகிக் கிளைக்கச்செய்வதற்குத் தண்டின் தலையைக் கிள்ள வேண்டியிருக்கும். கோணல் மாணலாக வளர்ந்து வருகிற செடியை நாம் நினைத்தபடி அமைப்பதற்குத் தலை கிள்ளல் அவசியம். சில சமயம் குறித்த செடிக்கு ஒத்த வளர்ச்சி ஏற்படுவதற்கு தலை கிள்ளல் அவசியமேற்படும். நல்ல வடிவமுடைய பெரிய அளவுள்ள சிறந்த பூக்கள் மலருவதற்காகத் தலை கிள்ள வேண்டியிருக்கும். சில சமயம் சீக்கிரத்தில் செடியில் பூக்கிற பருவம் முடிந்து போகக்கூடும். அப்போது தலை கிள்ளுவதனல் பூத்திருக்கும் காலம் நீடித்திருக்கும்படி செய்ய முடியும். பூக்காட்சி முதலியவற்றுக்குச் செடிகளைத் தயாரிக்கும்போது அனேக செடிகள் ஒரே சமயத்தில் பூக்கும்படி செய்வது

மிகவும் அவசியம். ஒரே சமயத்தில் பூத்தால்தான் பூக்க ளின் தராதரங்களை நிர்ணயிப்பது சாத்தியம். இதன் பொருட்டு ஒரே சமயத்தில் பூக்கச் செய்வதற்கும் தலை கிள்ளுவது அவசியம்.

கத்தரிப்புப்போல தலை கிள்ளுவதும், செடிகளைக் கிளைக் கச் செய்வதற்கும் நிரம்பப் பூ உண்டாகும்படி செய்வதற்கு மான சாமானிய வேலைமுறை. ஜினியா, செவ்வந்தி முதலான செடிகளைப் பார்த்தால் விதையிலிருந்து அல்லது தரையிலிருந்து முளைத்தது முதல் விடுவிடென்று மெலிந்து நெடுகி வளரக் காணலாம். இப்படி வளரும்போது உச்சியில் ஒரே பூதான் வரும். அந்தப்பூவும் முழுவடிவமுடைய சிறந்த பூவாயிராது. தவிர, ஒற்றைத் தண்டாயிருக்கிற செடி காற்றினால் சாய்ந்தும்போகும். இந்த நிலைமைகளைப் பரி கரிக்கும் பொருட்டுத் தலை கிள்ளுகிறோம். தலைகிள்ளுவ தென்றால் நுனிக்கொழுந்தை இரண்டு விரலால் அல்லது விரல் நகங்களால் திருகிவிடுதல். இரண்டு இலைகளோடு சேர்த்துக் கிள்ளிவிட வேண்டும். தக்க பருவத்தில் கிள்ளி விடவேண்டும். சில சமயம் வளரும் பருவத்திலும் சிலவற் றுக்குப் பூக்கும் பருவத்திலும் கிள்ளவேண்டி யிருக்கும், கிள்ளி விட்டபின் கிள்ளிய இடத்தின் கீழுள்ள நாலைந்து இலைக்கணுக்களின் புதிய கிளைகள் அல்லது அரும்புகள் உண் டாகி வளர்ந்து வரும். பெட்டூனியா போன்ற செடிகளுக் குக் கிளைகளையும் இவ்விதம் தலை கிள்ள வேண்டியிருக்கும்.

எந்தச் செடியை எந்தப் பருவத்தில் கிள்ளிவிடவேண்டு மென்பது அனுபவத்தால் அறியவேண்டுவதே. டூரீனியா, காசித்தும்பை போன்ற செடிகள் தாமே கணுத்தோறும் கிளைத்து, கணுத்தோறும் அரும்பு வைக்கும் இயல்புடை யவை. தவிர, இவை மிக்க விரைவில் வளர்ந்து பூத்து மடிபவை. ஆதலால் இவற்றைக் கிள்ளி விடவேண்டிய தில்லை. மற்றப்படி ஜினியா, துலுக்கச்சாமந்தி, காஸ்மாஸ், டெய்லார்டியா போன்ற செடிகளுக்கு ஒரிரு முறைகள்

தலை கிள்ள வேண்டியிருக்கும். பெட்டூனியா, செவ்வந்தி போன்றவற்றுக்குப் பல முறை கத்தரிக்க வேண்டியிருக்கும்.

### நோயும் புழு பூச்சிகளும்

பூஞ் செடிகளுக்கு நோயுமுண்டு, புழு பூச்சிகளால் சேதமுமுண்டு. நன்கு செழித்து வளரும் பெட்டூனியாச் செடி ஒருவகைப் பூஞ்சணத்தால் அப்படியே காய்ந்து போகும். பெரிய செம்பரத்தைச் செடிகளில் ஒரு வெள்ளை வண்டு விழுந்து இலைகள், பூ, மொக்கு யாவற்றையும் அரித்துத் தின்று விடுகிறது. பூ குறைந்து போவதோடு செடியும் விகாரமடைகிறது. ஆகவே ஓரளவு இவற்றுக்குப் பரிகாரம் சற்றேனும் அவசியம்.

எப்போதும் மிகவும் சுத்தமாக வைத்திருக்கும் தோட்டத்தில் நோயும், புழு, பூச்சிகளும் குறைவாகவேயிருக்கும். விழுந்த இலை, பூ, காம்பு முதலியவற்றை உடனுக்குடன் எடுத்து எருக்குவியலில் சேர்த்துவிட்டால் பூஞ்சண நோய் பரவுவது குறையும், வண்டுகள் முட்டையிடும் வசதியும் குறையும். ஆரோக்கியத்தோடு திடமாய் வாழும் செடிக்கு நோய் குறைவு. காற்று, வெளிச்சம் தாராளமாய் வேண்டும். தண்ணீரில்லாமல் காய்தல், அதிகத் தண்ணீர் கட்டித் தேங்குதல் இரண்டும் நோய்க்கு வசதி. மண்ணில் போதிய சுண்ணாம்புச் சத்து இருந்தால் நோய் வருவது குறைவு. கரித்தூள் மண்ணில் சேர்ப்பதும் நல்லது. பெரிய செடிகளில் வெட்டின இடத்திலும், அடிமரத்திலும் தார் பூசுவது நல்லது.

மயில்துத்தக் கலவை மருந்து நீர் தெளித்தல், மிகக் குறைவான பொட்டாசியம் பெர்மாங்கனெட் மருந்து நீர் தெளித்தல் என்பன பயன் தரும்.

இலையையும் பூவையும் அரிக்கும் சிறு வண்டுகள் அனேகம்; சுண்டைக்காய்ப் பருமன் இருக்கும். இரவில் பறந்து

வரும். மல்லிகை, ரோஜாவில் இருக்கும். இரவில் விளக்கு வைத்துக் கையால் பிடித்துக் கொல்லுவதே சரியான வழி. இது மண்ணில் முட்டையிட்டுப் பெருகும். முட்டை புழு வாகிச் செடியின் வேரைத் தின்றுவிடும். தொட்டிச் செடி களுக்கு இதனால் பேராபத்து. தொட்டி மாற்றும்போதும் கிளறும்போதும், முட்டை, புழு, கூட்டுப்புழு இவைகளைப் பார்த்து ஒழிக்கவேண்டும். பச்சாளை வண்டு என்று சிவப்பு நிறத்தில் கறும் புள்ளிகளை உடைய சிறு வண்டு, உளுந் தளவிருக்கும்—மருந்து நீரைத் தெளிப்பதனால் ஒழிக்க லாம். வெள்ளை நிறத்தில் மற்றொரு பறக்கும் வண்டு உண்டு. வெந்தயம் அளவிருக்கும். இது அரிக்காத இலையே இல்லை. இலையின் கீழ்ப்புறத்தில் ஒளிந்து இலைகள் அறவே இல்லாத படி அரித்துத் தின்றுவிடும். முற்றிய இலையிலும், கொழுந் திலும் இருக்காது. நடுத்தரமான இலையில்தான் இருக்கும். டீ. டீ. டி. மருந்து நீர் தெளித்துக் கொல்லவேண்டும். செம் பரத்தை, ரோஜா, பெட்டூனியா, செவ்வந்தி, காசித்தும்பை, ஜினியா, துலுக்கச்சாமந்தி முதலிய எல்லாவகைச் செடியை யும் இது தாக்கும். மாவுப்பூச்சி என்பது மிகவும் கொடுமை யானது. மாவு ஒட்டியதுபோல் செடியின் கொழுந்தில் அடையாய் வெண்ணிறத்தில் ஒட்டியிருக்கும். பஞ்சு போல் இருக்கும் என்றும் சொல்லலாம். அசைவதே தெரியாது. ஒரு பூச்சி சீரகம் போல இருக்கும். கூட்டமாய்த் திரண் டிருக்கும். சாற்றை உறிஞ்சி வாழும். படிக்காரநீர் போன்ற எண்ணெய் கலந்த மருந்துகள் கொஞ்சம் பயன் தரும். இவற்றைப் போக்குவது கஷ்டம். மிக்க கவனமாய்ப் பார்த்து இவை வராமலும், பரவாமலும் கவனிக்க வேண் டும். அதிகம் பரவிவிட்டால் பரவிய கிளை அல்லது செடி களைக்கூட முழுமையும் அகற்றி விடுவதைத் தவிர வேறு வழியில்லை. செடியில் இவற்றைத் தின்ன நெருப்பு எறும்பு கள் ஏராளமாய்க் கூடிவிடும்.

பச்சைப் புழுக்கள் பலவகை இலையின் கீழ் வருவனவும் மேலே வந்து இலையைச் சுருட்டுவனவும் உள்ளன. சாற்றை உறிஞ்சி வாழும் ரோமமுடைய பலவகைக் கம்பளிப் பூச்சிகளும் உள்ளன. மண்ணெண்ணெய்க் குழம்பு, சவுக்கார நீர் முதலியன தெளிப்பது பயன் தரும். தெள்ளுப் பூச்சி, பேன், எறும்பு முதலியன பிற கெடுதியான பூச்சிகள். டீ. டீ. டி. தெளித்து இவற்றை ஒழிக்க முடியும்.

வேர்க்கறையான் மிகவும் பொல்லாதது. 8-10 அடி வளர்ந்த பெரிய செடிகளைக்கூட வேரறுத்துச் சாகச்செய்து விடும். செடி வாடுவதைக்கொண்டு வேர்க்கறையான் என்று அனுபவத்தால் முடிவு செய்யலாம். பெரிய செடியாய் இருந்தால் ஆழக் கொத்தி, கறையானின் தாய்ப் பூச்சியை அகற்றி விட்டு டீ. டீ. டி. கரைத்துவிடுவது கறையானை ஒழிக்கும்.

ஓணன், அணில், காகம் முதலியன பிற விரோதிகள். ஓணனும், அணிலும் செடிகளைக் கத்தரித்துவிடும். காகம் புழு பூச்சிக்காக தொட்டியைக்கிளறிக்கொண்டேயிருக்கும் ஒன்றிரண்டு பிராணிகளைக் கொன்று மற்றவற்றுக்கு அச்ச மூட்டுவது தகுந்த வழி. நத்தை, அட்டை போன்றவை இளஞ் செடிகளைத் தின்றுவிடும். பூரான் மரவட்டை போன்ற சிறு பிராணிகள் தோட்டத்தில் பார்க்கலாம். பூரான் பூச்சிகளைத் தின்று வாழும்; செடிகளை ஒன்றும் செய்யாது. ஆனல் மரவட்டை கெடுதி, சிவப்பு மரவட்டை உயிருள்ள செடிகளைத் தான் தின்னும். கறுப்பு மரவட்டை பொதுவாய் அழுகிய பொருள்களையும், சில சமயம் உயிருள்ள செடிகளையும் தின்னும். மேல் மண்ணில் சாம்பல், கரித்தூள், தூவி வைத்தால் இவை வருவது குறையும். பார்த்துப் பிடித்தும் ஒழிக்கலாம்.

### பூக்காட்சி

சென்னையில் வருஷமொருமுறை பிப்ரவரி மாதத்தில் பூக்காட்சி நடைபெறுகிறது. நமக்குப் பழக்கமான

சாமானிய செடிகள் மிகப் பிரமாதமாகப் பூத்திருப்பதை அங்கு பார்க்கலாம். பூக்கள் அதிகம். அளவில் மிகப் பெரியவை. கவர்ச்சிகரமான நிறம். நாமும் இப்படிச் செய்ய முடியும். சில வழிகள் பின் வருபவன.

தகுந்த இடத்தில் உயர்தரமான விதைகள் வாங்கி விதைக்க வேண்டும். பழைய விதை கூடாது. கலக்க விதைக்கவும். ஒரே நாளில் விதைக்காமல் நான்கு முறையாக விதைக்கவும். சிறு நாற்ருகப் பெயர்த்து நடவும். எவ்வளவு தாங்குமோ அவ்வளவு வெயில்படச் செய்யவும். தக்க பருவத்தில் தலையைக் கிள்ளிவிட்டுச் செடி நெடுகி வளராமல் கிளைத்துக் குத்தாய் வளரச் செய்யவும்.

பெரிய பூ நாம் விரும்புவதால் சில கொழுந்துகளை மட்டும் நிறுத்தி மற்றவற்றைக் களைந்து எறியவும். ஜினியா போன்றவற்றில் பெரிய பூ வரவேண்டி மற்ற அரும்புகளைக் களைந்து ஒரு கொழுந்துக்கு ஒன்றிரண்டு பூ மட்டும் மலரும்படி விடவும். செடி நன்கு வளர்ந்த பிறகு பூக்கவிடவும். நாம் விரும்புகிற சமயத்துக்கு முன் பூக்கிற செடிகளைப் பூக்க விடக்கூடாது. ஒரு தொட்டியில் ஒரே விதப் பூவை வளர்க்கவும். ஒரு தொட்டியில் பல நிறங்களை வளர்க்க வேண்டாம். செடிக்கேற்ற அளவில் தான் தொட்டி இருப்பது முக்கியம்.

தொட்டிச் செடிக்குச் செய்வது போலத் தரையில் வளரும் செடிக்கும் செய்யவேண்டும். செடி சாயாதபடி கொம்பு ஊன்றிக் கட்டவேண்டும். பூக்காத கிளைகளைக் கத்தரித்து நீக்கவும். ஆரோக்கியமாக வளர்ந்து வரும் பொழுது இரு வாரங்களுக்கு ஒருமுறை திரவ உரம் விடவும். பீச்சுங்குழலால் நீர் அடித்துக் கிளைகளையும், இலைகளையும் தூசு படியாமல் அலம்பவும். புழு பூச்சி முட்டைகளைப் பார்த்து நீக்கவும். இவ்விதக் கவனிப்போடு பராமரித்து வந்தால் பொருட் காட்சியில் பார்க்கிற பூக்களைப்போல நம் தோட்டத்திலும் பூத்திருக்கக் காணலாம்.

## மேஜை அலங்காரப் பூக்கள்

வீட்டினுள்ளும், மேஜைமேலும் பூக் கத்தரித்து அலங்காரத்துக்காக எடுத்து வைப்பது மேலே நாட்டாரிடம் இருந்து நாம் கற்ற பழக்கம். நாம் பூ எடுத்தால் பூஜைக்காக எடுப்போம். அல்லது பெண்கள், குழந்தைகள் தலையில் அணிய; இவை மணமுள்ள பூக்கள். அலங்காரத்துக்கு என்று நாம் பூவைக் கத்தரித்து எடுப்பதில்லை. பூ எடுத்தல் என்ற சொல்லாட்சியே பூவை எவ்வளவு மென்மையாக நாம் கருதுகிறோம் என்று காட்டுகிறது.

ஆனால் மேலே நாட்டுச் சொல்லாட்சி பூவைக் கத்தரித்து எடுத்தல். இந்தப் பழக்கம் இப்போது ஏற்பட்டிருக்கிறபடியால் இதுபற்றியும் சில வார்த்தைகள் இங்குக் கூறலாம். அலங்கரிக்க எடுக்கும் பூ நல்ல வடிவமுடையதாய், பெரியதாய்ப் புதிதாய் இருக்கவேண்டும். அலங்கரிக்கும் பாத்திரத்தில் கொஞ்சம் நீர்வைத்து அதில் பூவை நீண்ட காம்புடைய கொத்தாக அரிந்து எடுத்து வைத்தல் சிறப்பு. நீரில் ஒரு கல் உப்பும் போட்டிருப்பது மேல். இம்முறைகள் பூ நீண்ட நேரம் வாடாதிருக்கச் செய்ய உதவும்.

எந்தப் பூவுடனும் அதனதன் இலை ஒன்றிரண்டு கூட இருப்பது இயற்கையாயிருக்கும். குரோட்டன் இலை பெர்ன் இலை இரண்டும் எதனோடும் சேர்ந்து இருக்கமுடியும். கானு போன்ற பெருங் கொத்துப் பூக்களுக்கு இலை வேண்டியதில்லை. எடுத்தவுடன் வாடிவிடும் பூக்கள் எவ்வளவு அழகாயிருந்தாலும், எடுத்துவைக்கத் தகுதியற்றவை. பூவை எடுத்து வைப்பதானால், காலையில் எடுக்கவும். அரிந்த பாகத்தில் காற்றுப்படாமல் மூடுவது முக்கியம். நீரில் காம்பைச் செருகுவதும், பூவின்மேல் படும் காற்று ஈரமாகவே இருக்கும்படி செய்வதும் பயனுடையன.

மேஜை அலங்காரத்துக்கும், வீட்டினுள் ஜன்னல், பலகை முதலிய இடங்களில் கிண்ணத்தில் வைத்து அலங்

கரிப்பதற்கும் கத்தரித்து வைக்கக்கூடிய பூக்தரும் செடிகளுட் சில பின்வருவன : ஆண்டிகோனே, காலியாப்ஸிஸ், காணுவாழை, காஸ்மாஸ், கெய்லார்டியா, செம்பரத்தை, செவ்வந்தி வகை, சொர்ணப்பட்டி, டயாந்தஸ், துலுக்கச் சாமந்தி, பூவெண்டை, போகன்வில்லா, மலம்போடியம், வனஜாம்பர வகைகள், வெட்சி, வெர்பீனு, ஜினியா.

## சிறு தோட்டங்களுக்கு ஏற்றவை

முந்திய பகுதிகளிற் கூறிய எல்லாச் செடி கொடிகளும் எல்லாத் தோட்டங்களுக்கும் பொருத்தம் என்று கருத முடியாது. முக்கியமாகச் சிறு தோட்டங்களுக்குச் சிறு செடிகளே பொருத்தமாயிருக்கும். பெரும்பான்மை பருவ காலப் பூக்களைப் பயிரிடுவது வசதியாயும் பயனுடையதாயுமிருக்கும். நிரந்தரக் குத்துச் செடிகள் இடம் அடைத்துவிடுமாதலால், அவை சிறு தோட்டங்களுக்குப் பொதுவாக வேண்டாமென்றே சொல்லலாம். எனினும், சிறு தோட்டங்களுக்கு ஒவ்வொரு பகுதியிலும் எந்தச் செடிகள் ஏற்றவை என்று கீழே ஒரு பட்டியலாகவே குறிப்பிடுவோம்.

பகுதி 3. மல்லிகை—முல்லை : நித்திய மல்லிகை, பிச்சி, குண்டு மல்லிகை, ராயபாணம்.

4. செம்பரத்தை : ஒற்றை ரோஜா நிறம், பட்டுச் செம்பரத்தை, அடுக்குச் செம்பரத்தை, பழ மஞ்சள், காவி அடுக்கு.

5. ரோஜா : சாதாரணத் தஞ்சாவூர் ரோஜா, பட்டு ரோஜா.

6. சிறிய செடிகள் : காசித்தும்பை, கெய்லார்டியா, காணுவாழை, ஜப்பான் செவ்வந்தி, பெட்டூனியா, பெண்டாஸ், மலம்போடியம்.

7. சிறு பூண்டுகள் : ரோசாம்பரம், மஞ்சாம்பரம், டுரீனியா, பூம்பசலை—ஊதா அடுக்கு, ஒற்றை ; மைக்கேல்மஸ் டெய்ஸி, வெர்பீனு.

8. பருவகாலப் பூக்கள் : காஸ்மாஸ் மஞ்சள், சீமைக் காஸ்மாஸ், துலுக்கச்சாமந்தி, பிளாக்ஸ், பூ வெண்டை, ஜினியா, சன்னஜினியா.
9. குத்துச்செடிகள் : அலரி, இரவுராணி, பகல்ராணி, கொடிப்பட்டி, சொர்ணப்பட்டி, பெரிய நெளிவு அடுக்கிதழ் நந்தியாவர்த்தம், பட்டி, போகன் வில்லா—பார்மோஸா ரோஜா நிறம் மஜெண்டா, வனஜாம்பரம், வெட்சி - ருக்குமணி (காவி).
10. கொடி வகைகள் : ஆண்டிகோனு, ரங்கூன் மல்லிகை, பூவள்ளி சிவப்பு, மயிர்மாணிக்கம்.
11. பூக்கும் மரங்கள் : பவழமல்லிகை, பன்னீர்.

### பிற குறிப்புக்கள்

1. **பூசைக்குரியவை :** அலரி, காசித்தும்பை, கொக்கு மந்தாரை, கொன்றை, சண்பகம், செம்பரத்தை, செவ்வந்தி, தங்கப்பட்டி, திருவாத்தி, துளசி, நந்தியாவர்த்தம், பட்டி, பவழமல்லிகை, பன்னீர், பாதிரி, மந்தாரை, மருவம், மல்லிகை முல்லை வகைகள் யாவும், வெட்சி.

2. **அட்ட புஷ்பம் :** எட்டு மலர்களால் இறைவனை வழி படுதல் ஒரு சம்பிரதாயமெனத் தெரிகிறது. அப்பர் சுவாமிகள் திருவதிகை வீரட்டத்துத் திருக்குறுந்தொகைப் பதிகமொன்றில் பத்துப் பாட்டுக்களிலும், "எட்டு நாண் மலர் கொண்டு அவன்சேவடி, மட்டலர் இடுவார் வினை மாயுமால்" என்று பாடுகிறார். கடைசிப் பாட்டில் "அட்ட புட்பம்" என்று கூறுகிறார். அட்டபுட்பமாவன : புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை என்பன. இவற்றுள் புன்னையும் பாதிரியும் பெருமரங்களாதலால் இந் நூலுள் கூறப்பெற வில்லை. வெள்ளெருக்கு, சிவபெருமானுக்கு விருப்பமானது; அற்பக் களையாதலால் இங்குக் கூறப்பெறவில்லை. ஏனைய உரிய இடங்களில் சொல்லப்பெற்றுள்ளன.

*

இவ்வட்ட புஷ்பங்கள் புறவழிபாட்டுக்கு. அகவழி பாட்டுக்குரிய அட்டபுஷ்பங்கள்: கொல்லாமை, ஐம்பொறி யடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு.

3. **மணமுள்ளவை :** செடி : அலரி, இரவுராணி வகை, கார்டேனியா, குண்டுமல்லிகை, சீமைக்கொஞ்சி, சுகந்தி, செண்டுமல்லிகை, செவ்வந்தி, தாழை, நரிவெங்காயம், நிலச்சம்பங்கி, பெட்டூனியா, மருதோன்றி, மருவம் தவனம், மனோரஞ்சிதம், ரோஜா, வெள்ளை வெட்சி.

கொடி : சம்பங்கி, மல்லிகை முல்லை வகை யாவும், மாதவி, மாலதி.

மரம் : கப்பல் அலரி, கனகா, சண்பகம், பவழ மல்லிகை, பன்னீர், மகிழ், மரமல்லிகை.

4. **தலையில் அணியத்தக்கவை :** சண்பகம், சம்பங்கி, செவ்வந்தி, தாழை, நிலச்சம்பங்கி, மகிழ், மரமல்லிகை, மருதோன்றி, மருவம் தவனம் (பெரியாழ்வார் தமனகம் என்பார்), மல்லிகை முல்லை வகை யாவும், ரோஜா.

கனகா, மனோரஞ்சிதம் இரண்டும் மிகவும் அதிகமான மணமுடையதால் தலையில் அணியப் பொருத்தமன்று. பன்னீர், பவழமல்லிகை போன்ற சில, பூஜைக்குமட்டும் பயன் படும், தலையிலணியும் பழக்கமில்லை. கனகாம்பரம் போன்ற பூக்கள் துர் நாற்றம் உடையவை; தலையில் அணிதல் கூடாது.

5. **கிழங்குப் பயிர்கள் :** அந்தி மல்லிகை, காந்தள், காஞ வாழை, நரிவெங்காயம், நிலச் சம்பங்கி, லில்லி.

6. **ஐந்திணை மலர்கள் :** குறிஞ்சி - மலை ; முல்லை - காடு ; மருதம் - வயல் ; நெய்தல் - கடற்கரை; பாலை - பாலைவனம்.

**போருக்கான அடையாள மலர்கள் 8 :** வெட்சி - நிரை கவர்தல். கரந்தை - நிரை மீட்டல். வஞ்சி - படை எடுத்துச் செல்லுதல். காஞ்சி - எதிர்த்து நிற்றல். நொச்சி - கோட்டையை உள்ளிருந்து காத்தல். உழிஞை - அதை முற்றுகை யிடுதல். தும்பை-போரிடுதல். வாகை - வெற்றி.

7. **தொட்டியில் பயிரிட்டு நன்கு பூக்கச் செய்யத்தக்க செடிகள் :** உண்ணிப்பூ (மஞ்சள்), காசித்தும்பை, காஸ்மாஸ், கெய்லார்டியா, கோழிக்கொண்டை, சன்னஜினியா, காப்ஸியா, சீமைக்காஸ்மாஸ், நீலச்செம்பரத்தை, செம்முல்லை, டயாந்தஸ், டர்னேரா, டுரீனியா, தங்கக்கம்பி, வெட்சி (ருக்குமணி), நிலச்சம்பங்கி, துலுக்கச்சாமந்தி, பட்டுச்செம்பரத்தை, பட்டு ரோஜா, பிரெஞ்சுத் துலுக்கச்சாமந்தி, பூம்பசலை வகைகள், பூ மாதுளை, பூ வள்ளி, பூ வெண்டை, பொத்தான் ரோஜா, போகன்வில்லா சிலவகைகள், பெட்டூனியா, பெண்டாஸ், மஞ்சாம்பரம், மயிர்மாணிக்கம், ராமபாணம், வில்லி, வனஜாம்பரம், வெர்பீனு, ஜினியா.

8. **மண்தொட்டிக்கு வர்ணமடித்தல் :** தகரத்தொட்டி, மரத்தொட்டி போன்றவற்றுக்கு எண்ணெய் வர்ணம் பூசி வைப்பது பயனுடையது. மண்தொட்டிக்கு எண்ணெய் வர்ணம் வீண். ஆயினும் தாழ்வாரம் போன்ற இடங்களில் அலங்கரிக்க உபயோகிக்கும் மண்சட்டிகள் கவர்ச்சியாயிருந்தால்தான் பார்க்க நன்றாய் இருக்கும். இதற்குச் சுலபமான வழிகள் உள்ளன. தொட்டிகளின் வெளிப்புறத்தைத் தேங்காய் நாரால் நன்கு சுரண்டிச் சுத்தம் செய்து உலர்த்தவும். பின் சாதாரணச் செம்மண்ணைக் கரைத்து அதில் கொஞ்சம் கோந்து நீரையும் சேர்த்துக் கொண்டு தர்ழை மட்டையால் பூசி வைத்தால் சிவந்த நிறம் அழகாயிருக்கும். இதற்குச் செலவுமில்லை. பூச்சி வராமலிருக்க மண்ணெண்ணெயில் இப்படிச் செம்மண்ணைக் குழைத்துப் பூசுவதும் நல்லது. சுவருக்கு அடிக்கும் வெள்ளைச் சுண்ணும்பையும் அபூர்வமாய்ச் சட்டிகளுக்கு இதே மாதிரிப் பூசிவைக்கலாம்.

# பொருள் அகராதி


அசோகு 10
அட்டபுஷ்பம் 115, 128, 187
அடுக்கலரி 116
அடுக்கு மல்லிகை 34
அடையாளப் பூக்கள் 52, 79, 167, 188
அந்திமல்லிகை 18, 86
வகை 88
அப்பர் பதிகம் 185
அரக்காம்பல் 168
அரபுமல்லிகை 36
அரலே 115
அரும்பின்பெயர் 11
அல்லி 14, 168
அலங்காரச்செடிகள் 14
அலமாண்டா 122
அலரி 115
ஆங்கிலப் பெயர்கள் 16
அறுகு 9, 10
ஆட்டுச்சாணம் 25
ஆண்டிகோனு 141
ஆத்தி 10, 56
ஆப்பிரிக்கத் துலுக்கச் சாமந்தி 108
ஆப்பிள் என்ற பெயர் 18
ஆவிரை 19
ஆறுமுகக்கள்ளி 18
இப்போமியா 146
இரட்டை மல்லிகை 34
இரண்டு வருஷப்பயிர் 78, 83
இரவு மல்லிகை 118
இரவுராணி 17, 116
இருவாட்சி 17, 34
ஈர்க்கு மல்லிகை 37
உண்ணிப்பூ 119
உதிர்பன்னீர்,
உதிர்மல்லிகை 160
உரம் 25
உருவம் அமைத்தல் 64
உழிஞை 10, 188
ஊசிமல்லிகை 37
ஊமத்கை 18
எட்வர்ட்ரோஜா 58, 59
எரு இடுதல் 23
எருக்கு 9, 10, 14
எருமைமுல்லே 41
எலிப்பச்சிலே 120
எலும்புத்தூள் 26, 29
எலுமிச்சந்துளசி 165
எழிலேம்பாலே 10
எழு சுற்று மல்லிகை 35
ஐந்திணே 10. மலர் 188
கடம்பு 10
கடல்பாலே 145
கத்தரிக்கும் பருவம் 23
கத்தரிப்பு 54, 178
கதிர்ப்பச்சை 163
கப்பல் அலரி 119
கபிலர் 6, 12, 20
காந்தை 9, 188
கருங்குவளே 168
கருமுகை 38
கருவண்டு 47
கருவிகள் 27, 31

கருவிளை 144
கல்கத்தாமல்லிகை 37
கவாத்து செய்தல் 178
கள்ளியும் நீரும் 25
களை 28, 162
கற்புக்குழல்லை 32, 40
கனகா 154
கனகாம்பரவகை 89
கஸ்தூரி அலரி 116
கஸ்தூரிப்பட்டை 115
கஸ்தூரி மல்லிகை 35
காக்கணங்கொடி 143
கார்க்கொன்றை 144
காசான் 125
காசித்தும்பை (அடுக்குத் தும்பை) 22, 28, 69
 வகை 71
காஞ்சி 10, 188
காட்டலரி 152
காட்டுமல்லிகை 34
காந்தள் (கலப்பைக் கிழங்கு) 73
காப்வியா 129
கார்டேனியா 121
கார்த்திகைக்கிழங்கு 73
காலியாப்விஸ் 22, 74
 வகை 74
காணுவாழை 75
காஸ்மாஸ் 22, 102
கிழங்குப்பயிர்கள் 188
குடமல்லிகை 35
குண்டுமல்லிகை 35
குத்துச் செடிகள் 113
குதிரைக்குளம்பு 18
குதிரைச்சாணம் 25
குப்பை உரம் 24, 29
குரவம் 10
குருக்கத்தி 10
குவளை 12, 168
குழாய்ச்செம்பரத்தை 46
குள்ளத்துலுக்கச்சாமந்தி 109
குளவி 160
குறிஞ்சி 10
குறிஞ்சிப்பாட்டு 6, 12, 20, 34
குறுந்தொகை 37, 38
கெய்லார்டியா 28, 77
கொக்கிறகு 121
கொக்கு மந்தாரை 121
கொகுடி 37
கொட்டை வாழை 75
கொடிப்பட்டி 125
கொடிப்பாதிரி 144
கொடிப்பூ 10
கொடிவகை 140, 150
கொம்பு ஊன்றல் 184
கொழுந்து கிள்ளல்179
கொன்றை 10
கோட்டுப்பூ 10
கோழி எச்சம் 26
கோழிக்கொண்டை 22, 103
சங்குபுஷ்பம் 143
சண்பகம் 155
சப்பாத்திக்கள்ளி 18
சப்பாத்திப்பூ 42
சம்பங்கி 145
சமுத்திரசோகம் 145
சரக்கொன்றை 155
சன்னஜினியா 112
சாதிமல்லிகை 146
சாமந்தி 108
சால்வியா 104
சித்திரமூலம் 136
சிமிக்கிச்செம்பரத்தை 43

சிலப்பதிகாரம் 35
சிவதுளசி 164
சிவப்புச்சூரியகாந்தி 107
சிவப்பு நந்தியாவர்த்தம் 129
சிறுதோட்டத்துக் கேற்றவை 185
சிறுநெல்லிக்கொடி 145
சிறுமல்லிகை 37
சீமை அகத்தி 114
சீமை அலரி 152
சீமைக்காஸ்மாஸ் 22, 29, 103
சீமைக்கொஞ்சி 123
சீனச்சூரியகாந்தி 22, 106
சுகந்தராஜா 93
சுகந்தி 124
சுடுகாட்டுமல்லிகை 19
சுண்ணும்பு 30
சுருள்செம்பரத்தை 51
சூரியகாந்தி 105
செங்கழுநீர் 14, 168
செங்காந்தள் 73
செங்குவளை 168
செங்கொடுவேலி 136
செண்டலரி 116
செண்டுப்பருத்தி 123
செண்டுமல்லிகை 18, 35, 123
செந்தாமரை 10, 168
செப்புமல்லிகை 37
செம்பரத்தை 42. 51. பூ 43. பூச்சி 50. வகை 43. விதை 43.
செம்பருத்தி 42
செம்மண் 29
செம்முல்லை 36
செய்குளம் 166-7
செருவிளை 144
செவ்வகத்தி 19
செவ்வந்தி 78 வெள்ளை வகை 79
செவ்வந்திப்புராணம் 78
செவ்வந்திப் பூக்காட்சி 80
செவ்வல்லி 168
சேடல் 157
சொர்ணப்பட்டி 126
டயாந்தஸ் 82
டர்னேரா 124
டிஸம்பர்பூ 90
டி. கே. சி. 16
டீ.டீ.டி. 50, 55, 56, 147, 183
டுராண்டா 125
டுரீனியா 22, 91
டேபிள்ரோஸ் 94
தங்கக்கம்பி 82
தங்கப்பட்டி 125
தங்கப்பூ 144
தங்கமல்லிகை 37
தஞ்சாவூர் ரோஜா 52, 58, 59
தட்பவெப்பநிலை 21
தலவிருட்சம் 9
தலைகிள்ளல் 179
தலையில் அணியும் பூக்கள் 188
தவனம் 161, 188
தழையுரம் 26, 30
தளவு 36
தாமரை 10, 14, 167
தாயுமானவர் 9
தார் பூசுதல் 179, 181
தாழை 127
தாளிஅறுகு 9
திரவஉரம் 26, 70
திருக்குறள் 11
திருநீற்றுப்பச்சை 164

திருமுல்லைவாயில் 32
திருவாசகம் 9
திருவாத்தி 156
திருவுள்ளக்கொன்றை 156
தினக்குறிப்பு 30
தும்பை 10, 188
துர்நாற்றம் தரும் பூ 150
துலுக்கச்சாமந்தி 22, 107
துலுக்கரளி 152
துளசி, துளவம் 10, 161, 164
தெய்வங்களுக்குரிய மரம் 10
தேசிகவிநாயகம்பிள்ளைபாடல் 12
தேனீ 107, 142, 148
தொங்கு தொட்டி 176
தொட்டி அமைப்பு 169. அனுகூலம் 169. கவனிப்பு 174. நடுதல் 170.
தொட்டிக்கு வர்ணமடித்தல் 189
தொட்டிக்கேற்ற செடிகள் 189
தொட்டியில் பயிரிடுதல் 63, 76, 169
தொண்டை 10
தோட்டவேலை வகை 14
நடைமுறை வேலைகள் 29, 30
நண்டுத்தெறுக்கால் விஷம் 41
நந்தவனம் 9, 42
நந்தவனவெட்சி 137
நந்தியாவர்த்தம் 128
சிவப்பு 129
நரிவெங்காயம் 92 (விஷமூங்கில்)
நரிமல்லிகை 35
நள்ளிருள்நாறி 17, 34
நளவெண்பா 32
நன்னாரி 14, 165
நாகமல்லிகை 18
நாலுமணிப்பூ 88
நித்திய கல்யாணி 19, 93
நித்தியமல்லிகை 37
நிலச்சம்பங்கி 93
நிலப்பூ 10
நிழல் 21
நீர்ப்பூ 10, 166
நீர்முள்ளி 90
நீர்விடுதல் 24, 31
நீலம் 10
நீலாம்பரம் 90
நீலோத்பலம் 14, 168
நுணா 19
நெய்த்தாமரை 18
நெய்தல் 10
நொச்சி 9, 10, 188
நோயும் புழுபூச்சியும் 181
பகல்ராணி 117
பகோடாமரம் 152
பட்டி 130
பட்டினத்தார் 9
பட்டுச்செம்பரத்தை 47, 49
பட்டுரோஜா 59
படர்மல்லிகை 39
பத்துப்பாட்டு 136
பத்ராட்சி 88
பதியன்போடும் பருவம் 22
பந்தல் அமைப்பு 141
பம்பாய்மல்லிகை 37
பரிபாடல் 11, 139
பருவகாலப்பூக்கள் 101
பருவகாலம் 12
பவழக்கொடி 143
பவழமல்லிகை 156
பன்னீர் 157
பன்னீர் மந்தாரை 159
பனை 10

பாசிவெர்பீனு 99
பாத்தி அமைப்பு 27
பாதிரி 10
பாரிசாதம் 157
பாரிவள்ளல் 32, 40
பாலே 10
பாற்சோற்றி 19
பிச்சி, பித்தகம் 38
பிண்ணுக்கு எரு 53, 163
பிரெஞ்சுத் துலுக்கச் சாமந்தி 108
பிளாக்ஸ் 22, 109
பீர்க்கு 19
புதர்ப்பூ 10
புழுபூச்சி 31, 50, 55, 147, 181
புள்ளிக்கனகாம்பரம் 91
புன்னே 10
புஷ்பவிதி 7, 10
பூ அமைப்பின் விசித்திரம் 62, 150
பூக்காட்சி 61, 81, 183
பூக்கும் நேரம் 34
பூக்கும் பருவம் 22, 33
பூ கத்தரித்தல் 77, 185
பூசைக்குரிய பூ 187
பூஞ்சணம் 56, 70, 84, 181
பூம்பசலே 94
வகைகள் 95
பூமருதுசெடி 131, மரம் 158
பூமாதுளே 132
பூவகை 4–10
பூவள்ளி 146
பூவின்பெயர் 11
பூவெண்டை 22, 110
பெட்டுனியா 29, 83
பெண்களும் மலரும் 10
பெண்டாஸ் 85
பெயர்கள் 16
பெருங்கள்ளி 152
பேராமல்லிகை 36
பொத்தான் ரோஜா 60
பொன்னலரி 159
போகன்வில்லா 16, 61 - 68
அபூர்வவகைகள் 68. குத்துச்செடி 66. சிறுசெடி 65. தொட்டியில் பயிரிடுதல் 63. படர்கொடிகள் 67. பூவின் அமைப்பு 62. வகைகள் 64.
போரின் அடையாள மலர் 188
மகரந்தச்சேர்க்கை 29, 76
மகரந்தமல்லிகை 35
மகிழ் 10
மஞ்சள்பட்டி 125
மஞ்சள் மல்லிகை 39
மஞ்சாம்பரம் 90
மண்சாரம் 23, 29, 52
மண்ணே வளப்படுத்தல் 23
மணமுள்ள பூக்கள் 188
மந்தாரை 156, 159
மயிர்மாணிக்கம் 147
மயில் கொன்றை 132
மயில்துத்தக்கலவை 70, 181
மயிலே 35
மாகதாம்பரம் 90
மாமல்லிகை 10, 160
மாமனோஞ்சிதம் 154
மரவம் 10
மருக்கொழுந்து 14, 161
மருதம் 10
மருதோன்றி 133
மருவம் 161

மல்லிகை 17, 32, 44 அடுக்கு 34. அரபு ம. 36. இரட்டை 34. இருவாட்சி 34. ஊசி 37. ஈர்க்கு 37. எருமைமுல்லை 41. கல்கத்தா ம. 37. கஸ்தூரி ம. 35. காட்டு ம. 34. குட ம. 35. குண்டு ம. 35. சாதி 146. சிறு ம. 37. செப்பு ம. 37. செம்முல்லை 36. தங்க ம. 37. தளவு 36. நவ ம. 35. நித்திய ம. 37. பம்பாய் ம. 37. போர ம. 96. மகந்த ம. 35. மஞ்சள் ம. 39. மயிலை 35. படர் ம. 39. முல்லை. 40. மௌவல் 34. வன ம. 40.
மல்லிகை என்ற பெயர் 18
மல்லிகையைக்கொளுத்தல் 33
மலம்போடியம் 22, 29, 85
மன்மதபாணம் 39
மனோரஞ்சிதம் 134
மா 10
மாசிப்பச்சை 163
மாட்டுச்சாணம் 25
மாணிக்கப்பட்டி 130
மாதவி 147
மார்னிங் குளோரி 146
மாலதி 148
மாம்பழரோஜா 102
மாலைவகை 11
மிளகாய்ப்பூ 51
மீன்எரு 26
முசுக்கட்டை 157
முத்தொள்ளாயிரம் 168
முல்லை 10, 40
முல்லைநிலம் 32
மெக்சிகன் சூரியகாந்தி 107
மேரிகோல்டு 107
மேஜை அலங்காரப் பூக்கள் 77, 185
மைக்கேல்மஸ் டெய்ஸி 96
மௌவல் 34
ரங்கூன்மல்லிகை 18, 149
ரசஞம்பரம் 90
ரசாயன உரம் 27, 30, 54, 57, 72
ராமதுளசி 164
ராமபாணம் 39
ராஜமல்லிகை 17
ருக்குமணி 137
ரோசாம்பரம் 90
ரோஜா 52 - 60. அடையாளப் பூ 52. எருவிடுதல் 54. கத்தரிப்பு 54. தொட்டியில் பயிரிடுதல் 56. நீர் 54. நோய் 55. பதியன் 53. பராமரிப்பு 53. பூச்சி 55. மண்சாரம் 52. வகைகள் 57.
லில்லி 97
லேடி கனகாம்பரம் 130
வசந்தி 35
வஞ்சி 188
வண்டு 55
வண்டுகடி இலை 114
வரலாறுகள்: அடிமுடி தேடியது 127. அருச்சுனன் - பவழக்கொடி 143. பாரிவள்ளல் 124. பாரிசாதம் - சத்தியபாமை 157.
வருஷக்காசித்தும்பை 72
வனசெண்பகம் 156
வனமல்லிகை, வனமுல்லை 40

வனஜாம்பரம் 135
  வகைகள் 136
வாகை 10, 188
வாடாமல்லிகை 18, 98
வாத்துக்கொடி 149
விதை எடுத்தல் 72
விதைக்கும் பருவம் 22
விதைத்தல் 70, 74, 76, 83, 102, 161
விதைத்தொட்டி 175
விருட்சி 137
விரோதிகள் 183
விளாமிச்சை 165
விஷ்ணு துளசி 164
விஷம் 73, 88, 115, 136, 159
வெட்சி 10, 137, 188
வெட்டிவேர் 166
வெண்காந்தள் 73
வெண்தாமரை 10, 167
வெர்பீனு 98
வெள்ளை மந்தாரை 121
வெள்ளை ரோஜா 60
வேம்பு 10
ஹரசம்பகம் 135
ஹாலிஹாக் 110
ஸ்படிகபுஷ்பம் 130
ஸிரியாச் செம்பரத்தை 46
ஜப்பான் சூரியகாந்தி 106
ஜப்பான் செவ்வந்தி 79
  வகை 81
ஜினியா 111
  சன்னஜினியா 112
ஜெபகுசுமம் 42

## பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 9 | 14 | காந்தை | கரந்தை |
| 24 | 13 | ஏதைவும் | எதையும் |
| 10 | 13 | எழு | எட்டு |
| | 14 | காஞ்சி, | வஞ்சி, காஞ்சி, |
| 53 | 24 | வளர்ப்பு | வளைப்பு |
| | 27 | குறுத்தொட்டு | குருத்தொட்டு |

TAMIL NADU ARCHIVES LIBRARY EGMORE, MADRAS-600 008
108938

24B
13-39